Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# சமூகவழி இலக்கிய தரிசனம்

சஃப்ராபேகம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

aj Foundation C

n. Gurukul Kang

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# சமுகவழி இலக்கிய தரிசனம்

8383

8383
DONATION

முனைவர் மு. இரா. சஃப்ராபேகம்

"Forwarded free of Cost,
and with the Compliments of
the Department of Education,
Goverment of India, New Delhi"

14, கற்பக விநாயகர் தெரு,
மீனாட்சி நகர்,
மதுரை-625 018.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| *Title of the Book* | : | **Samugavazhi Ilakkiya Tharisanam** |
| *Author* | : | **Dr. M. R. Safra Begum**<br>M-A. (Tamil) M.A., (English) M.Phil; Ph D.<br>Selection Grade Lecturer,<br>Tamil Department<br>M.V.M. Govt. Arts College for Women. Dindigul-624008.<br>Senate Member, M.K. University, Madurai.<br>Academic Council Member, M. K. University, Madurai. |
| *Publisher* | : | **Dr. M. R. Safra Begum**<br>Madurai-625018. |
| *Language* | : | Tamil |
| *Date of Publication* | : | Nov. 1992. |
| *Edition* | : | First |
| *Paper Used* | : | 16.5 Kg. D/Dy Maplitho White Printing |
| *Size of the book* | : | 21 X 14 |
| *Printing Type Used* | : | 10 Point |
| *Number of Copies* | : | 1000 |
| *Number of Pages* | : | 10 + 216 |
| *Price* | : | Rs. 35/- |
| *Printers* | : | Aruna Achagam,<br>45A, Lakshmipuram 1st Street,<br>MADURAI-625001. |
| *Binding* | : | Card Board |


CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# சமூகவழி இலக்கிய தரிசனம்

DONATION


1. உழைப்பு — அதற்கென்ன மதிப்பு? 1
2. தாய்மை — ஒரு கோட்பாட்டுத் தவறு 11
3. நீதி நூல்களில் ஓர் அநீதி 24
4. பழமொழி — பழமொழி 39
5. புதுக்கவிதை — புதிய விதை 47
6. வர்க்க எதிர்ப்பு — கவிதை உயிர்ப்பு 68
7. அடக்குமுறை — அது அடங்கும் வரை 107
8. 'தனிமனிதம்' — தனி மனிதமா? 139
9. புதிய உத்திகள் — புதிய சக்திகள் 159
10. மக்கள் தொகை — ஒரு கணக்கீடு 201


CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# என்னுரை

'சமூகவழி இலக்கிய தரிசனம்' என்ற இந்நூல் எனது முதல் நூலாகும். பல்வேறு சமயங்களில் நான் எழுதிய சில கட்டுரைகளின் தொகுப்பு இது. யாவர்க்கும் நன்மை பயக்கும் ஒரு சமூக அமைப்பிற்கு உரிய ஒரு சிந்தனையை நல்குவதில் நமது இலக்கியங்களின் பங்கும் பணியும் பற்றிய விமர்சனங்களாக இக்கட்டுரைகள் அமைந்துள்ளன என்று நினைக்கிறேன். அப்படி அமைக்கவே விரும்பினேன்.

இத்தொகுப்பில் பெண்மை பற்றியும், புதுக்கவிதை பற்றியும் கட்டுரைகள் உள்ளன. பொதுவான செய்தி பற்றியும் ஒரு கட்டுரை உள்ளது. கட்டுரை எதைப் பற்றியதாக இருந்தாலும் சமூகப் பயன்பாட்டு நோக்கில் கருத்தைச் சொல்ல வேண்டும் என்பதே என்னுடைய விருப்பம். 'பயன்பாடு' என்பதில் என் கண்ணோட்டத்தினின்று மாறுபடுவோர் இருக்கலாம். இருப்பினும் நான் சொல்ல விரும்புவது சமூகப் பயன்பாடு உடையது என்பதில் இப்போது எனக்குக் கருத்து மயக்கம் இல்லை. பல யோசிப்புகளுக்கும் தயக்கங்களுக்கும் பின்னரே என் எழுத்துக்கள் அச்சில் வருகின்றன.

இந்தக் கட்டுரை நூல் அமைவதற்குத் தூண்டுகோலகா இருந்தவர்கள் பலர். நண்பர்கள், ஆர்வலர்கள் என்ற முறையில் அவர்களை நினைவில் கொள்கிறேன். எனினும் இந்நூல் அச்சில் வருவதற்குப் பக்க பலமாக இருந்து உதவியவர்கள் என்ற முறையில் முனைவர் மீனாட்சி முருகரத்தனம் (திருக்குறள் ஆய்வகம், மதுரை காமராசர் பல்கலைக்சழகம்) முனைவர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

[illegible]

[illegible] தி. முருகரத்தனம் (தமிழியல் ம. கா. பல்கலைக்கழகம்), முனைவர் இரா. காசிராசன் (தமிழியல், ம. கா. பல்கலைக்கழகம், முனைவர் ந. முத்துமோகன் (குருநானக் தேவ்ஜி ஆய்வகம் ம கா. பல்கலைக் கழகம்) தோழி ம. கம்லி (தமிழ்த்துறை எம். வி. எம். அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல்) ஆகியோர் எனது மனமார்ந்த நன்றிக்கு உரியவர்கள்.

அறிமுகமான நாளிலிருந்தே கருத்துப் பரிமாற்றம் கருத்து உருவாக்கம் இரண்டிற்குமே நட்பு முறையில் உடன் இருந்து உதவிய தோழியர் டாக்டர் வே வசந்திதேவி அவர்கள் என் நன்றிக்கு உரியவர்கள்.

என் நூலுக்கு மனமுவந்து அணிந்துரை வழங்கி உள்ள டாக்டர் மீனாட்சி முருகரத்தனம் அவர்கள் என்னை அறிந்தவர்கள். இவர்கள் இவ்வுரையை வழங்கியதில் நான் பெருமைப்படுகிறேன்.

இறுதியாக இத்துணையும் அச்சாகி நூலாகி வெளிவர முழு ஒத்துழைப்பும் நல்கிய அருணா அச்சகத்தின் தொழிலாளர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி.

சஃப்ரா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# அணிந்துரை

— திருமதி மீனாட்சி முருகரத்தினம்
பேராசிரியர் & துறைத்தலைவர்
திருக்குறள் ஆய்வகம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

அறிவொளி இயக்கம் தீவிரயாகச் செயற்பட்டு வரும் இந்த நாளில் கல்வியின் தேவைபற்றி யாரும் எடுத்துரைக்கத் தேவையில்லை. ஆனால் காந்தியடிகள் வலியுறுத்தியதைப் போல எழுத்தறிவு வேறு; வாழ்க்கை அறிவு வேறு. இன்றைய கல்வி எழுத்தறிவைத் தரலாம். ஆனால் வாழ்க்கை அறிவைத் தரும் என்ற உத்திரவாதம் கிடையாது. பேச்சு வழக்கில் 'வாச்சான் — போச்சான் கேஸ்' என்று சொல்வது போல வாய்த்தாலும் வாய்க்கலாம்; வாய்க்காமல் போனாலும் போகலாம்.

''பள்ளிக்கூடத்தில் உன்னை சேர்ப்பதுபற்றி
நான் சிந்திக்கவில்லை
அங்கே உனக்கு நிகழ்வது எழுத்துக்களின்
கட்டாய அறிமுகம் தான்
வாழ்க்கையை வாசிக்க
நீ தெருவுக்குத்தானே திரும்பி வரவேண்டும்.''

என்று வைரமுத்து பாடுவது எவ்வளவு உண்மை! அது சரி: இந்த வாழ்க்கைக் கல்வியைப் பெறுவது எப்படி? வாழ்ந்து பெறலாம். ஆனால் அனுபவத்தாலேயே அத்தனையையும் கற்பதென்றால் நூறாண்டு வாழ்ந்தாலும் போதாது. அத்துடன் அனுபவப் பள்ளியில் கல்விக்கு நாம் கட்டும் சம்பளம் மிக அதிகம்! அனைத்திற்கும் மேலாக அனுபவக் கடையில் அறிவுச் சீப்பை வாங்குமுன் வாழ்க்கைத் தலை வழுக்கையே ஆகிவிடும். எனவே தக்க தருணத்தில் காலம் கடக்குமுன், இளமையின் தலைவாயிலில் நிற்கையில் வாழ்க்கை அறிவைப் பெறவேண்டும். கலை இலக்கியங்கள் ஒரு நல்ல வழி. ஆனால் அந்த வழியில் நடந்து செல்லும் எண்ணமும் ஆற்றலும் வேண்டும். இலக்கியங்களை எப்படி அணுகுவது, எப்படிப் பொருள் கொள்வது என்று தெரிய வேண்டும். சமூக நோக்கில் இலக்கியங்களை அணுகினால்தான் வாழ்க்கை அறிவை அது வழங்கும். அதைச் சொல்லிக் கொடுக்கிறது இந்நூல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



நூலின் பெயரில் இடம்பெறும் 'தரிசனம்' என்ற சொல் தமிழ்ப் பற்றாளர்களை முகஞ்சுளிக்க வைக்கலாம். 'காட்சி' என்ற சொல் இல்லையா? அதைப் பயன்படுத்தினால் பொருள் வெளியாகாதா? என்று கேட்கலாம். வெளியாகும்தான். யார் இல்லை என்கிறார்கள்? ஆனால் வேறொரு கோணத்திலிருந்து இதைப் பார்க்க வேண்டும்.

மொழி என்பது முதன்மையாக ஒரு கருத்துப் பரிமாற்றக் கருவி. சொற்களுக்குத் தனியே ஆற்றல் இல்லை. அதைப் பயன்படுத்துவோரின் ஆற்றலே அதன் ஆற்றல். பழக்கம் காரணமாகச் சில சொற்களைச் சில உணர்வுகள் சூழ்ந்து பின்னிக்கிடக்கும். அந்த உணர்வுகளை வெளியிட அந்தச் சொல்லே பொருத்தம் என மனம் அடம்பிடிக்கும். உணர்ச்சி அடிப்படைக்கு மாற்று ஏது?

வாத்ஸல்யம் என்ற சொல், கன்றைக் குறிப்பதான 'வஸ்த' என்ற வடசொல்லிலிருந்து பிறந்தது. ஆவுக்கும் கன்றுக்கும் உள்ள அன்புப் பிணைப்பு அனைவரும் அறிந்து போற்றும் ஒன்று. எனவே அன்பைச் சுட்ட ஆயிரம் சொற்கள் இருந்தாலும் தாயன்பையும் இறையன்பையும் எட்ட வாத்ஸல்யம் என்ற சொல்லே பொருத்தம் என ஒரு மனம் எண்ணினால் அந்தப் பிடிவாதத்திற்கு இணங்குவது அந்த மனத்தின் உணர்ச்சியை மதிப்பதன்றி வேறில்லை. காட்சி என்ற சொல்லில் கிடைக்காத கூடுதலான ஒரு பொருட்காட்சி (a shade of meaning) தரிசனம் என்ற சொல்லில் இந்நூலாசிரியர்களுக்கு கிட்டுகிறது. அதைப் புரிந்து கொள்ள முயல்வது ஓர் அறிஞர்க்கு நாம் தரும் அங்கீகாரம்.

இத்தரை கொய்யாப் பிஞ்சு; நீ அதிலோர் சிற்றெறும்பு? என்பார் பாரதிதாசன். இந்த உணர்வு இருந்தால் நம் அறிவுக் கண்கள் நம் விருப்பு வெறுப்புக்களையும் பூதக்கண்ணாடியில் பார்ப்பதை நிறுத்திக் கொள்ளும். வடசொல் ஆட்சி ஒரு சின்ன விஷயம் அதன் ஆள்கையில் ஆசிரியர்க்கு ஒரு நிறைவு — ஒரு பொருத்தம் — தோன்றியது என்றால் அதை விட்டுவிட்டு அதனினும் முதன்மை சான்ற செய்திகளுக்குத் தொடர்ந்து செல்வதே மானுடத்திற்கு அழகு செல்வோமா?.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



முதல் நான்கு கட்டுரைகளும் பெண்கள் தொடர்பானவை அப்படிச் சொல்வது கூடத் தவறு. சமூகத்தில் ஒடுக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட அநீதி இழைக்கப்பட்ட ஒரு கூட்டத்தைப் பற்றியது என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் பெண்ணியம் என்பது உண்மையில் பெண்கள் தொடர்பானது அன்று; மானுடம் தொடர்பானது. பெண்ணுக்குத் தனிநீதி பேசுதல் பெண்ணியம் அன்று; மனிதர்க்குப் பொதுநீதி வலியுறுத்துவதே பெண்ணியம் எனவே மானுடப் பொதுமை இல்லாத சமூக நியதிகளால் ஈரினத்தில் ஓரினத்திற்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை எடுத்துரைத்தும் நிகழ வேண்டிய மாற்றங்களைச் சுட்டியும் அமைகின்றன அக்கட்டுரைகள்.

விரல் நகத்தில் அழுக்குப்படாத நோகாத வாழ்க்கையே உயர்வென்று கருதுவது இன்றைய சமூகத்தின் வாழ்வியல் மதிப்பீடு. ஆனால் உழைக்கும் பெண்களால்தான் பெண் விடுதலையும் அதன் வாயிலாகச் சமூகப் பொதுமையும் மலர முடியும் என்று முடிவுரைக்கிறது, 'உழைப்பு அதற்கென்ன மதிப்பு?' என்ற முதற்கட்டுரை. சமூகத்தின் அடித்தளத்தில் - பொருளாதார ரீதியாக — வாழ்கின்ற உழைக்கும் வர்க்கத்து மகளிரிடம் உரிமையும் சமத்துவமும் சுதந்திர மனப்போக்கும் அவர்களது பொருளாதாரச் சுதந்திரமும் சமத்துவமும் காரணமாகப் பொருள் உற்பத்தியில் அவர்களது கணிசமான பங்கின் காரணமாக இயல்பாகவே அவர்களுக்கு வருவதையும் அந்த மகளிர் பற்றிய சித்திரிப்பு இடைக்காலத்திலேயே இலக்கியத்தில் இடம் பெற்றதையும் உழைக்கும் மகளிர்க்கு உழைப்பால் வரும் சிக்கல்கள் தவிரப் பெண்கள் என்பதாலேயே வருகின்ற தனிப்பட்ட சிக்கல்களையும் முதற்கட்டுரை விவரிக்கிறது. ஆனால் பிரச்னைகளைக் கண்டு பின்னடைந்து மீண்டும் வீட்டுக்குள் பெண்ணைப் பூட்டி வைக்கச் சொல்லவில்லை ஆசிரியர். விட்டு விடுதலையாகி வெட்ட வெளிதன்னில் பட்டுச் சிறகடித்துச் சிட்டுக் குருவி போல பறந்து திரியவே சொல்கிறார் ஆனால் அது சோம்பலின் வெளியீடாக இல்லாமல் உழைப்பால் வந்த சுதந்திரமாக இருக்க வேண்டும் என்கிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



அடுத்த கட்டுரை 'தாய்மை — கோட்பாட்டுத் தவறு என்பது, பாராட்டிப் பாராட்டியே வீழ்த்தும் நகாசு வேலையை விளக்கித் தாய்மைக் கோட்பாட்டுப் பொன்னின் உண்மையான மாற்றை அறிவென்னும் உரைகல்லில் உணர்த்திக் காட்டுகிறது

பெண் என்பவள் ஒரு மனிதப்பிறவி. ஒரு மனுஷி அதற்கு மேல் எதுவும் இல்லை. தாயாக, தாரமாக, மகளாக, தோழியாக ... இப்படி அவளுக்குப் பல நிலைகள் வாய்ப்பது உறவுமுறை பொறுத்த விஷயம். அவ்வளவுதான். இந்த உறவுமுறை விஷ-யங்களைப் பெரிதுபடுத்தி அவளது நிலைமைகளை தெய்வீக மாக்குவது அவளை மதிப்பது என்பதைவிட அவளை ஒடுக்கு-வது, அந்நியப்படுத்துவது ஆகும்.

[பக். 11]

வேலியே பயிரை மேய்ந்த கதையாக நீதி நூல்களின் கருத்துக்களில் உள்ள அநீதியை எடுத்துக் காட்டுகிறது. 'நீதி நூல்களில் ஓர் அநீதி' என்ற மூன்றாம் கட்டுரை.

அறநூழியில் பெண்டிரைப் பற்றிய செய்திகள் பல இருப்-பினும் அவை யாவும் இல்லறத்தோடு மட்டுமே அவர்களைத் தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ளன. பொதுவாழ்வில் மகளிர் பங்கேற்கும் கருத்துக்கள் இல்லை இல்லறம் அமைதியாக இனிது நடைபெறப் பெண்ணே பெரிதும் பொறுப்பேற்க வேண்டும் என்ற நியதி அறநூழிப் பெண்கள் மேல் சுமத்தப்பட்டிருக்கிறது இதற்காக அஞ்சுவதும் அடக்குவதுமாய் ஓர் வாழ்க்கை மட்டுமே பெண்ணுக்குரியதென்று காட்டப்படுவது, காலங்காலமாய் இருக்-கும் பெண்ணடிமைத்தனத்தைக் காட்டுவதாகும். நீதி நூல்-களுக்கு இது ஓர் அநீதி ஆகும்.

(பக். 38)

என்ற விளக்கம் ஆசிரியரின் ஆழமான சிந்தனைக்கும் உண்-மையை வெளியிடும் துணிவுக்கும் பதச்சோற சமூகச் சிந்தனை-களின் செறிவான வெளிப்பாடுகளான பழமொழிகளிலும் பெண்ணடிமைக் கருத்துக்களே இருப்பதைச் சுட்டிக்காட்டி அவை பழ — மொழிகள் என ஒதுக்கிப் புதிய பார்வையின் தேவையைக் குறிப்பால் உணர்த்துகிறது நான்காம் கட்டுரை.

குறிக்கோள் நிலை சித்திரிப்புடன் அமைந்த இலக்கியப் போக்கினின்றும் மாறிச் சமூகச் சிக்கல்கள், அதன் காரணங்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



தீர்வுகள் எனத் தீவிரமான சமூக உணர்வு வெளிப்பாடாக அமையும் கருப்பொருள்களைப் 'புதுக்கவிதைகள — புதிய விதைகள்' என விளக்குவதுடன் மனிதநேயம், பொதுவுடைமை வாதம், சமத்துவ நோக்கு, இயக்கச் சார்பு எனச் சிந்தனை வித்துக்களை இனம் பிரித்துக் காட்டுகிறது. உழைக்கும் சாதியும் உழைப்பைச் சுரண்டிப் பிழைக்கும் — 'பிழை'க்கும் — சாதியும் எனச் 'சாதி இரண்டொழிய வேறில்லாச் சமூகத்தில் பல கோடிகளும் சில கோடிகளும் துணையாக எந்தப் பயமும் இன்றி அநீதிகளைச் செய்யும் பெரிய மனிதர்களை உணர்த்தும்] அடையாளம் காட்டி 'வாழ்வின்' முரண்பாட்டுக்கு வரலாற்றுத் தீர்வு' காண விழையும் நம்பிக்கை வாசகங்களையும் தரும் புதுக்கவிதைக் குரல்களை அறிமுகம் செய்து, 'வர்க்க எதிர்ப்பு — கவிதை உயிர்ப்பு' என அறிவிக்கிறது. அடுத்த கட்டுரை. 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என அறிவிக்கப் பட்டாலும் உண்மையில் 'எல்லோரும் இந்நாட்டில் அடிமைகள்' என்று கூறுவதே பொருத்தம் என்று சொல்லும் வகையில் அரசியல், காவல்துறை, முதலாளி வர்க்கம், அதிகார வர்க்கம், சாதீயம், ஆண் — பெண் வேறுபாடு, தேசிய இனமொழி வேறுபாடுகள் என்று' அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் அல்லல் நெருப்பாகி அண்டத்தை ஆட்டிப் படைக்கும் அடக்குமுறைகளின் விவரிப்பும் அதற்கு எத்தனை சிந்தனைகளும் புதுக்கவிதைகளில் புலனாகுமாற்றை எடுத்துரைக்கிறது. 'அடக்குமுறை — அது அடங்கும் வரை' என்ற கட்டுரை. உயிர் அடங்கும் வரை தொடரும் அடக்குமுறையை அது அடங்கும் வரை பாடுவது புதுக்கவிதை என்று பொருள் கொள்ள இடம் தருவதாக அமைவது இத்தலைப்பின் சிறப்பு.

தனிமனிதனின் உணர்வுகளில் சமூகச் சூழலின் செல்வாக்கை விவரித்து, மனிதன் மகத்தானவன் என்பது எவ்வளவு உண்மையோ அதே அளவிற்கு அவன் நிர்க்கதியானவன் என்பதும் உண்மை' என்று எடுத்துரைத்து, "எந்தச் சமுதாயப் பிரச்சினையும் பிரச்சினை எனும்போது பொதுவாகத் தோன்றும் எனினும் பாதிப்பு எனும்போது தனிமனிதத் தாக்குதலாகப் போய்ச் சேர்கிறது? என விளக்கப்படுகிறது 'தனிமனிதம்' தனிமனிதமா என்ற கட்டுரையில்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



புதுக்கவிதையின் பொருட்புலப்பாட்டு நெறிகளை விளக்கு கிறது. 'புதிய உத்திகள் — புதிய சக்திகள்' என்ற கட்டுரை படைப்பின் நோக்கமே பரிமாற்றம் தான். அதற்கு உதவுவன. உத்திகள். எனவே தன் பொருள் வெளிப்பாட்டிற்குப் பொருத்த- மான புலப்பாட்டு நெறியை — உத்திகளைத் — தேர்ந்தெடுத்த புலவனின் கவித்துவ ஆற்றலும், கற்பவர் மனத்தில் கவிதையின் கருப்பொருளைச் சுருக்கெனத் தைக்குமாறு செய்யும் உத்திகளின் ஆற்றலும் இக்கட்டுரையில் ஒரு சேரப் புலனாகின்றன

அது சரி — இந்த நூலைப் பற்றி நானே எல்லாம் சொல்ல வேண்டும் என்பதில்லை — இது பாயிரம் மட்டுமே. உள்ளடக்- கத்தையும் ஆசிரியர் சிந்தனைப் போக்கையும் கோடிக் காட்டு- வதே இதன் நோக்கம். வழிகாட்டி மரம் வழியைக் காட்டிக் கொண்டு இருந்த இடத்தில்தான் நிற்கும். ஊர்வரை கொண்டு விடாது; எட்டுக் கட்டுரைகளைப் பற்றி எடுத்துரைத்தாயிற்று. எஞ்சிய இரண்டையும் நீங்களே தான் படித்துப் பாருங்களேன்.

செறிவான நடையும் ஆணித்தரமான கேள்விகளும் சிந்திக்க வைக்கும் உண்மைகளின் வெளிப்பீடும் இந்நூலில் என் மனம் கவர்ந்த அம்சங்கள்.

இந்நூலை வெளியிடுவதில் — இதன் கருத்துக்கள் பரவு- வதில் — நூல் ஆசிரியர்க்கு நேரக்கூடிய ஆபத்தை இப்போதே சொல்லி விடுகிறேன். இத்தனை நாள் எங்கே ஒளிந்திருந்தீர்கள் என்று திட்டி இன்னும் நிறைய எழுதுங்கள் என விரட்டி மூச்சு விட நேரமில்லாமல் வேலை வாங்கப் போகிறது அறிஞர் உலகம். நான் சந்தோஷமாக வேடிக்கை பார்க்கப் போகிறேன். ஏனென்றால்,

"தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

மீனாட்சி முருகரத்தினம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

## உழைப்பு - அதற்கென்ன மதிப்பு?

உழைப்பு என்பது எல்லா உயிரினங்களுக்கும் உரிய ஒரு தேடல் முறை. தனிச் சொத்துடைமைச் சமுதாய அமைப்பில் இந்தத் தேடல்முறை என்பது உடல் உழைப்புச் சார்ந்ததாகப் பலருக்கும், ஆளுமை, அதிகாரம், கல்வி, கௌரவம் இவை சார்ந்ததாகச் சிலருக்கும் அமைகிறது. நமது சமுதாய அமைப்பு அன்று முதல் இன்று வரை தனிச் சொத்துடைமைச் சமுதாய அமைப்பு தான். அதனால் 'உழைப்பு' என்ற சொல்லைக் கரத்தால் உழைக்கும் உழைப்பாளர்களைச் சார்ந்த ஒரு சொல்லாக மட்டுமே கணக்கில் கொள்ள முடியும்.

பொதுவாக நேரடி உழைப்பு என்பது என்றைக்கும் விலை மதிப்போ, சமுதாய மதிப்போ பெற்றதாக நமது இலக்கியங்கள் நமக்குத் தெரிவிககவில்லை. பொற்காலம் என்று கருதப்பட்ட சங்க காலத்திலும் **கட்டில் நிணப்பவன் இழிசினன்**[1] என்று கருதப்பட்டான். மேற்பால் கீழ்ப்பால் என்று முத்திரை குத்தப் பட்ட வர்க்க அமைப்பில் கீழ்ப்பால் என்பவன் உடல் உழைப்புச் சார்ந்தவனாக இருந்தான். அதனால் தான்

> "கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
> மேற்பால் ஒருவனும் அவன்கட்படுமே"[2]

என்ற வரிகளும்,

---

1.
2. } — புறநானூறு — கழகப் பதிப்பு — 1970.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



"கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவர்க்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே"[3]

என்ற வரிகளும் தோன்றின. இயலாத நிலையிலே இருந்த கீழ்ப் பால் மக்களுக்கு வழங்கப்பட்ட சலுகை மதிப்புகளைத் தான் இந்த வரிகள் நமக்கு உணர்த்துகின்றன. ('கற்பின் ஒருவர்க்கும்' என்ற சொற்கள் இவற்றை நன்கு எடுத்துரைக்கின்றன.) இதே போலத்தான் எந்தக் காலத்திலும் விலைமதிப்பும் சமுதாய மதிப்பும் மறுக்கப்பட்ட இனம், உழைப்பாளர் இனம் என்பதை நமது பலகாலகட்ட இலக்கியங்களும் தெளிவுபடுத்துகின்றன. ஒரு நந்தனுக்கு அந்தணனாகும் நிலை திணிக்கப்பட்டது எப்படி?

தனிச் சொத்துடைமையை அங்கீகரிக்கும் ஒரு சமுதாயத்தில், உழைப்பின் மதிப்பு மறுக்கப்படும் ஒரு சமுதாயத்தில், உழைப்புச் சுரண்டல் வேர்கொள்ளும். அதன் விளைவாக உழைப்பாளி அந்நியப்படுதலும் நசுக்கப்படுதலும் நிகழ்கின்றன. இவற்றையெல்லாம் இயல்பு என்றோ அல்லது இறைச்செயல் என்றோ ஏற்றுக் கொண்டு, ஒத்துப்போகப் பழகிய ஒரு சமுதாய அமைப்பில் பெண்களின் உழைப்புப் பற்றிய கணிப்பை, ஒரு சீற்றுக் கோணத்தில் ஆய்ந்து பார்த்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஏனென்றால் எல்லா வகையிலும் சுரண்டப்படும் தனிச் சொத்துடைமையற்ற மிகப்பெரிய இனம் உழைக்கும் பெண் இனம் தான்.[4] இக்கட்டுரை ஒரு முயற்சியேயன்றி முடிவு அன்று!

பொதுவாக உலகெங்கிலும் ஆடவர்கள் வீட்டிற்கு வெளியே உழைப்பவராகவும் பெண்கள் வீட்டிற்கு உள்ளே உழைப்பவராகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். இருப்பினும், இதனையும் மீறி வீட்டிற்கு வெளியேயும் சென்று உழைக்கும் பெண்கள் எல்லா இடத்திலும் எல்லாக் காலத்திலும் இருந்திருக்கின்றனர். இவர்களையே உழைக்கும் மகளிர் என்று குறிப்பிட்டு உரைக்கின்றோம். இதனால் வீட்டிற்கு உள்ளே தன் வீட்டு வேலைகளைச் செய்பவர்கள் உழைக்கவில்லை என்பது பொரு-

3. புறநானூறு — கழகப் பதிப்பு — 1970
4. கணேசலிங்கம் செ. 'பெண்ணடிமை தீர' (பக். 6) குமரன் பதிப்பகம் - சென்னை. முதற்பதிப்பு - 1983.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



ளன்று. அவர்கள் பொருள் உற்பத்தியில் பங்கு கொள்ளவில்லை என்பது பொருள்.

பண்டைய இலக்கியங்களை நோக்கும் போது, சொத்து உடைமையில்லா மக்களிடையே, பெண்களின் நேரடி உழைப்பு பயன்பாட்டில் இருந்திருக்கிறது என்று அறிய முடிகிறது. மீன் விலையாட்டி, உப்பு விலையாட்டி, பருத்திப் பெண்டிர் என்ற குறிப்புகள் இதனை உணர்த்துகின்றன. அத்துடன் இதற்கு முன்னர் தொல்காப்பியம் கூறும் ஐவகை நிலத்துக் கருப்பொருள் களில், மக்கள் என்பதில் (நிலமக்கள்) தலைமக்கள், இழிந்தோர் என்று பாகுபாடு குறிக்கப்படுகிறது. தலைமக்கள் என்போர் உழைப்பிற்குரிய கருவியும் களமும் உடைய ஆளும் வர்க்கத்து மேட்டுக்குடியினர். இவர்களுக்குச் சொத்தும், சமூக மதிப்பும் இருந்தது. இழிந்தோர் என்பவர் சொத்துடைமையில்லாத, உழைப்பதற்குரிய களமும் கருவியும் சொந்தமாக இல்லாத, அதனால் சமூக மதிப்பும் சமவாய்ப்பும் இல்லாத உழைக்கும் இனமக்கள். தலைமக்கள் என்று முத்திரை குத்தப்பட்ட வர்க்கத் தில் நாடன், வெற்பன், மீளி, விடலை, ஊரன், மகிழ்நன், துறைவன், சேர்ப்பன் என்ற பெயர்கள் குறிக்கப்படுகின்றன. இவர்கள் அனைவரும் ஆடவர்களே. இவர்களுக்கு ஏற்ற பெண்-பாற் பெயர்கள் குறிக்கப்படவில்லை. ஆனால் தாழ்ந்தோர்-களிலே குறவன், குறத்தி, வேடன், வேட்டுவச்சி, எயினர் எயிற்றியர், உழவர் உழத்தியர், நுளையர், நுளைச்சியர் என்று ஆடவர்க்கேற்ற பெண்பாற் சொல்லும் உண்டு.[5] கீழோரில் மட்டும் பெண்களின் பெயர் குறிக்கப்பட்டமைக்குக் காரணம் அவர்களும் பொருள் உற்பத்தியில் பங்கு கொண்டமையாக இருக்கலாம். அதனால் உழைக்கும் பெண்களுக்கு ஒரு சமமதிப்பு கிடைத்தது என்று கருதலாம். 'சமமதிப்பு' என்பது ஆடவரைப் போல உழைப்பவர்கள் சம்பாதிப்பவர்கள் என்ற அறிமுகம் அல்லது அங்கீகாரம் (recognition) என்று கொள்ளலாம். ஆனால் அது சமுதாய மதிப்பு ஆகுமா என்பது கேள்விக்குரியது. ஏன் என்றால், சமூகச் செயல்பாடுகளும், மதிப்புகளும், இலக்கியமும்

5. தொல்காப்பியம் - இளம்பூரணர் உரை - அகத்திணையியல், (நூற்பா 22, 23, 24) கழகப்பதிப்பு - 1961.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



தொகுப்பிக்கும் உரிமையும் இவையெல்லாம் மேட்டுக்குடியின-ரின் கையிலே புதைந்து கிடந்த ஒரு காலகட்டத்தில் தலைமக்கள் என்போர் தம் பெண்களை 'மனையுறை மகளிராக' வைத்தலே பெருமை என்று கருதினர். மகளிர் ஆடவர்க்காக அசையும் அலங்காரப் பதுமைகள், ஈன்று புறந்தரும் எந்திரங்கள் என்ற அளவிலே நிறுத்தப்பட்டிருந்தனர். அதனால் பெண்களைத் தனியாகக் குறிப்பிடாமையே சமூக மதிப்பு என்று கருதியும், மேட்டுக் குடியினர் பெண்களுக்கு ஓர் அறிமுகமே இல்லாமற் செய்திருக்கலாம். இவற்றையெல்லாம் நோக்க, உழைக்கும் பெண்கள்தான் சமுதாயத்தில் பெண்களின் இருப்பினையும் இன்றியமையாமை-யினையும் உணர்த்தியவர்கள் எனலாம். அவர்களுக்குத்தான் முகமும் அறிமுகமும் இருந்திருக்கிறது. பிற பெண்கள் ஆடவரைச் சார்ந்த சார்புப் பொருளாகவும், இயக்கமில்லாப் பதுமைகளாகவும் இருந்திருக்கின்றனர். பெண்ணடிமைத்தனம் என்ற விஷவிருட்சமே இந்த உடைமையாளர்களின் உடைமையுணர்வு என்னும் ஆணிவேரிலிருந்து கிளைத்தது என்று தெரிகிறது.

இத்தகைய மேட்டுக் குடித்தன அடிமைத்தனம் தான் கண்ணகியைக் காலம் முழுவதும் கண்கலங்க வைத்தது. ஒரு மன்னன் முன் வழக்காடிய பெண் தன் சொந்தக் கணவன்முன் வாதாட முடியவில்லை. கண்ணகியைப் போல மாதவியும், குலம் வேறாயினும் ஒரு மேட்டுக்குடிச் சீமாட்டி என்பதால் அவளாலும் கோவலனின் வரவையோ பிரிவையோ தடுக்க முடியவில்லை. ஆனால் பள்ளியர் இருவரும் பள்ளனோடு உழைக்கிறார்கள். உரிமை கொண்டாடுகிறார்கள். சாடுகிறார்கள், சண்டையிடுகிறார்கள், காப்பாற்றுகிறார்கள், அனைத்தும் செய்கிறார்கள். இவர்கள் இயங்குகிறார்கள், இயக்குகிறார்கள். இவர்கள் உயிர்த்துவத்தோடு வாழுகிறார்கள். உழைக்கும் பெண்களுக்குரிய உரம் இது. குறவஞ்சியும் இதற்கொரு சான்று. 'எதிர்நின்று பேசும் மனையாளின் பேய்நன்று' என்று பழமொழி பேசிய சமுதாயத்தில் உழைக்கும் பெண்கள்தான் பேச்சுரிமை பெற்றிருந்தனர்.

பொதுவாகவே பெண்களுக்குக் கிடைத்த இலக்கிய அறி-முகம் என்பது உழைக்கும் பெண்களைத் தவிர்த்ததாக இருந்தது. இலக்கியம் என்பதே மேட்டுக் குடியினரின் சொத்தாகவும் சுக-மாகவும் இருந்திருக்கிறது உழைக்கும் பெண்களைப் பாட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



வேண்டும் என்ற உணர்வே சிற்றிலக்கிய கால உதயம் என்று கூறலாம். அதனால் தான் அவை 'சிற்றிலக்கியங்க'ளாயின போலும்!

உழைக்கும் மகளிர் பிரச்சனைகள் பல்வேறு திறத்தவை! அவர்கள், உழைப்பாளர்கள் என்பதனால் விளையும் பிரச்சனைகள், பெண்கள் என்பதனால் விளையும் பிரச்சனைகள் என்று இரு வகைப் பிரச்சனைகளை நேர்கொள்கின்றனர். வீட்டுப் பொறுப்பு, குழந்தைப் பாதுகாப்பு போன்ற வீட்டுப் பணிகளும் செய்து, பொருளீட்டுப் பணியும் செய்ய வேண்டியிருப்பதால் இவர்களுக்கு இரட்டைச் சுமையாகிறது. இந்நிலையில் இவர்களின் உழைப்பும் உணர்வுகளும் சுரண்டப்பட்டு இவர்கள் தவிக்க நேர்கிறது. ஓர் எளிய நாட்டுப்புறப் பாடல் வரிகள் இதனை நன்கு சித்திரிக்கின்றன.

''தண்ணி கறுத்திருச்சு தவளச்சத்தம் கேட்டுருச்சு
பிள்ளை அழுதிருக்குப் புண்ணியரே போகவிடு''[6]

என்ற பாடலில், இருட்டிய பிறகும் வேலை வாங்கும் முதலாளியின் கொடுமை, வீட்டில் குழந்தை அழுதிருக்குமே என்று தவிக்கும் தாயின் மனவுணர்வு இரண்டுமே சித்திரிக்கப்படுகிறது. பெண்களின் உழைப்பு சுரண்டப்படுவதையும், அவர்களின் உணர்வுகள் அலட்சியப்படுத்தப்படுவதையும் இப்பாடல் காட்டுகிறது.

உழைக்கும் பெண்களின் பிரச்சனைகளைப் பிரச்சனைகளாகப் பார்க்கும் கண்ணோட்டம் பாரதிக்கும் பாரதிதாசனுக்கும உருவாகி விட்டது. என்றாலும் இவர்கள் கொடுத்த அழுத்தம் குறைவு தான். சரியான முறையிலே இந்தப் பிரச்சனைகளைப் பார்க்கும் பார்வை முதன்முதலில் முகிழ்த்தது பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்திடம் தான். உழைக்கும் வர்க்கத்துக் கவிஞரிடம் தான் இது சுயம்புவாக உருவாகியுள்ளது.

''காடு வெளஞ்சென்ன மச்சான் நமக்குக்
கையும் காலுந்தானே மிச்சம்''[7]

---

6. சண்முகசுந்தரம் – தமிழில் நாட்டுப்புறப்பாடல்கள் (பக்.120)
7. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் - 1980.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்று உழைப்பாளி, தன் உழைப்பின் பயன்களிலிருந்து அந்நியப்படும் அவலத்தைச் சிந்திக்கிற பெண்,

"பஞ்சப் பரம்பரை வாழ்வதற்கு இனி
பண்ண வேண்டியது என்ன"[7]

என்று கேள்வி கேட்கும் பெண்,

"ஒற்றுமையோடு அத்தனை நூலும்
ஒழுங்கா வந்தா வளரும் — இதில்
ஒரு நூலறுந்தா குளறும் — இதை
ஒட்டும் ஏழை கூட்டுறவாலே
உலகில் தொழில்வளம் உயரும்"[7]

என்று தொழிலாளர் ஒற்றுமையைச் சிந்திக்கும் பெண் - இந்த மாறுதலான இலக்கணத்தை முதன்முதலில் தந்தவர் பட்டுக்கோட்டையே. உழைக்கும் பெண்களின் சக்தியை ஓர் இயக்கமாகக் கவிதையில் உண்டாக்கினார். ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்பது வேதம் படைப்பதிலும் சாதம் படைப்பதிலும் மட்டுமன்று, பட்டங்கள் ஆள்வதிலும் சட்டங்கள் செய்வதிலும் மட்டுமன்று, உழைப்பதிலும், உழைப்பின் மேன்மையை உரக்க உரைப்பதிலும் உழைப்பாளர் பிரச்சனையைத் தீர்ப்பதிலும் அனைத்திலும் பெண்கள் ஆண்களுக்குச் சமம் என்று உணர வைத்த கவிஞர் பட்டுக்கோட்டையே.

ஈராயிரம் ஆண்டுக்காலப் பாரம்பரியம் கொண்ட தமிழ் இலக்கிய வரலாற்றிலே இந்த இருபதாம் நூற்றாண்டில் ஒரு தனித்த சிந்தனைப் பொறி தோன்றியுள்ளது. உள்ளதையும் சொல்லிவிட்டு உணர்ந்ததையும் சொல்லிவிட்டு ஒரு சமூக மாற்றச் சிந்தனையைக் கிளப்பிவிடும் நோக்கும் போக்கும் இன்றைய கவிதைகளில் தோன்றியுள்ளது. விடுதலைப் போராட்டத்தின் விழிப்புணர்வுடனும், உலகளாவிய இயக்கச் சிந்தனைகளின் தாக்கங்களாலும் இந்த மாற்றம் இயல்பாக நடந்திருக்கிறது. இதில் புதுக்கவிதைச் சிந்தனைகள் தனி இடம் பெறுகின்றன.

7. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் - 1980.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



மெல்லியல் கோட்பாடும், கற்புக் கருத்தியலும் உழைக்கும் பெண்களை உதாசீனப்படுத்தும் அடித்தளங்கள் ஆயின. உழைப்பை மதிக்காத சமுதாயம் பெண்ணடிமைத்தனத்திற்குக் கால்கோள் இட்டது. உடல்கூறு தொடர்பாகவோ, உள்ள உணர்வு தொடர்பாகவோ இழப்புகளின்றிக் காப்பாற்றிக் கொள்ளும் பொறுப்பு தான் கற்பு என்றால் அந்தப் பொறுப்பு இருபாலார்க்கும் உரிய ஓர் சமுதாயப் பொறுப்பு அல்லவா? ஒரு தீமையைப் பற்றிய அறிவு இருபாலார்க்கும் அறிவுறுத்தப்பட்டால் தானே அந்தத் தீமையிலிருந்து இருபாலாரும் காப்பாற்றப்பட முடியும். ஆனால் நமது இலக்கியங்கள் கற்பு என்பது பெண்களுக்கு உரியது என்று தான் கதைத்தன. இதனால் கற்பு பற்றிய கருத்தியல் பெண்களுக்கு அச்சத்தைக் கொடுத்து வரலாற்றின் பக்கங்களில் அவர்களை வரவே விடாமல் செய்து விட்டது. இந்தக் கருத்தியல் பெண்களின் அத்தனை அடிமைத்தனத்திற்கும் ஆணிவேராகி அவளை ஒரு போகப் பொருளாக ஆக்கிவிட்டது. இந்த அழகுப் பொருளிலே மென்மையும் வெண்மையும் எதிர்பார்க்கப்பட்டது, ஏற்றப்பட்டது. இந்த மேட்டுக்குடித்தனச் சிந்தனை உழைப்புக்கு எதிரானதாக இருந்தது. அதனால் தான்,

> ''உழைத்துன்மேனி கறுத்திருக்கும் சொற்கள்
> ஒவ்வொன்றும் தேனாய் இனித்திருக்கும்''[8]

என்ற வரிகள் வரும்வரை உழைக்கும் மேனிக்கு அங்கீகாரமே கிடைக்கவில்லை. இட்டஅடிநோக எடுத்த அடி கொப்புளிக்கும் மென்மையும் காந்தனை நிகர்க்கும் கைச் செம்மையும் இலக்கிய வர்ணனைக்கு ஏற்றதாகக் கருதப்பட்டு வந்துள்ளது. உடல் உறுதிக் கருத்தியல் பெண்களுக்கு வலியுறுத்தப்படவில்லை என்பது மட்டுமின்றி, உணவுக்குறைப்பு உடல் குறைப்பு என்பவை அழகியல் என்ற போலித்தனத்தோடு திணிக்கப்பெற்று அவர்களை மேலும் அடிமைப்படுத்தியது ஆனால் இதற்கு மாறாக உழைக்கும் பெண்களின் உடல் உறுதியும் உள்ள உறுதியும் அவர்களை

8. கே.சி.எஸ். அருணாசலம் 'பாதை தெரியுது பார்' (திரைப்படம்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



வீராங்கனைகளாக்குகிறது. இன்றைய கவிதை ஒன்று இதனைச் சித்திரிக்கிறது.

தலைகோதி நடக்கின்ற கோதையைக் கவர சீதைக்கு நேர்ந்தது போல் ஓர் இராவணன் முளைக்கிறான். அப்போது அவள்

"பீமனை உசுப்பிவிட்டு
பாஞ்சாலி போல் தலையவிழ்த்து
பார்த்தனை அழைக்கவில்லை
தலைமுடிந்தாள்
முந்தானை இறுக்கினாள்
கைகள்
செங்கல் பிளக்கத் தயாரானபின்
வழி மறித்தவன் என்ன ஆவான்
புது தேவி ருத்ர மூர்த்தம்
இரவிலும் சாலையில்
தனி நடந்தாள்"[9]

மெல்லியல் கோட்பாடு மழுங்கடிக்கப்படும் வரை பிரச்சனைகளின் முனைமுகத்து நிற்கும் வலிமையும் நெஞ்சுரமும் பெண்களுக்கு வராது. எவனோ ஓர் ஆடவன் வந்து தன்னைக் காப்பாற்றுவான் என்ற எதிர்பார்ப்பையே இதுவரை நமது இலக்கியங்களும் திரைப்படங்களும் எடுத்தியம்பி வந்துள்ளன.

உழைக்கும் பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகளில் இன்றியமையாதது அவர்கள் பெண்கள் என்பதால் நேரும் உணர்வுத் தாக்குதல் (barressment). இதைச் சிறப்பாகச் சித்திரிக்கிறார் கவிஞர் பரிணாமன். பண்ணைக் களத்திலே உழைக்கும் ஒருபெண்! அவளது உள்ளத்தில் மண்டும் கவலைகளைக் காண்பார் இல்லை. கருவேல மரத்தடியில் அவள் பிள்ளை கதறி அழுகிறது. இவளுக்கு அதன் குரல் கேட்கிறது. ஆனால் பசித்தழும் குழந்தைக்குப் பாலூட்ட முடியாத சூழ்நிலை

"கரையில் நிமிரும் பண்ணை மிருகக்
கண்களுக்குப் பயந்துகிட்டு

9. இரா மீனாட்சி - 'தீபாவளிப்பகல்' (பக். 8)
அன்னம் வெளியீடு, சிவகங்கை முதற்பதிப்பு 1981

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



பால் சுரந்த தனமிரண்டைப்
பயிர் வருடத் தலைகுனிந்தே
மகவுதான் உறிஞ்சு துண்ணு
மண்ணு றிஞ்சக் களையெடுக்கிறாள்''[10]

இந்தத் தாய் மடியோ கசிகிறது. பாலோ வீணாகி மண்ணில் வடிகிறது. அழுகின்ற குழந்தைக்குப் பால் கொடுக்கும் நேரத்தை-யும் கணக்கிலெடுக்கும் அற்பத்தனம், கைக்குழந்தைக்குப் பால் கொடுக்கும் நேரத்தில் காமப் பார்வை பார்க்கும் மிருகத்தனம், இவை கொண்ட பண்ணையின் ஆதிக்கத்தனம், களத்துப் பெண்ணின் உணர்வைத் தாக்கும் கொடுமை துல்லியமாக விளக்கப் படுகிறது.

அதற்காக, பெண்மை தாய்மை இவை பெரிதுபடுத்தப்பட்டு, அழுகைக்குரியதாக்கப்பட வேண்டாம். தேம்புகின்ற கவிதைகளைத் தீயிட்டுப் பொசுக்கி உழைப்பால் அவளை வான் நிமிர வைக்க வேண்டும் என்று இந்தக் கவிதையில் உணர வைக்கிறார் கவிஞர். அதனால்தான் கவிதைக்குத் 'தேம்பலல்ல' என்ற தலைப்பு தருகிறார்.

உழைக்கும் பெண்களின் சக்திதான் உண்மையான சக்தி என்று இன்றைய இலக்கியங்கள் இயம்பத் தொடங்கியுள்ளன. இவர்களின் வலிமையால்தான் சமுதாய மாற்றங்கள் சாத்தியப் படும் என்ற நம்பிக்கை வெளிப்படத் தொடங்கி விட்டது.

"புதுயுகத்தைப் படைப்பதெல்லாம் புரட்சிக் கைகளே
- அந்தப்
புரட்சிக் கைக்கு இன்னொருகை நமது பெண்களே''[11]

என்று கூறும் கவிஞர் தணிகைச் செல்வன்,

---

10. பரிணாமன் - ஆகஸ்டும் அக்டோபரும் (பக். 75) தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மதுரை மாவட்டக் கிளை - மதுரை முதற்பதிப்பு 1974.
11. தணிகைச்செல்வன் - 'சமூக சேவகி சேரிக்கு வந்தாள்' (பக். 43) - பாட்டாளிகள் வெளியீடு, சென்னை-20. முதற்பதிப்பு 1978.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



"தினம் உழைக்கும் பெண்களுக்கு அவர்கள் கைகளே—வர
தட்சணை என்றறிந்தவர்கள் கூலிமக்களே
மணம்முடிக்க அவர்கள்தருவ தில்லைதட்சணை—எனவே
மணமுறிவும் அவர்களுக்கு எளிய பிரச்சனை
மறுமணமும் அந்தப் பெண்கள் வர்க்கசாதனை"[12]

என்று பாடி, நடுத்தர மேல்மட்டப் பெண்களைவிட உழைக்கும் மகளிர்தான் அடிமை விலங்கை உடைப்பதில் சாதனை மிக்கவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். இழப்பதற்கு எதுவும் இல்லாத மக்கள்தான் போலித்தனமின்றி வாழ்க்கையை நேரடியாகச் சந்திக்கின்றனர்.

உழைப்பு என்பது விலைக்கு வாங்கப்படும் ஒரு பொருளாகி விடும் போது உழைப்பதற்குக் கருவியும் களனும் தருபவன் உழைப்பாளனின் நிலையை நிர்ணயிப்பவன் ஆகின்றான். இந்நிலையில் உழைப்பு என்பதையே இவர்கள் விலைகொடுத்து வாங்க வேண்டியுள்ளது. அதுதான் உழைப்புச் சுரண்டலாக ஆகிறது. இதனால் உழைப்பாளிகள் உழைப்பின் பயனையும் அதனால் உலகத்தையும் இழக்கும் அவலத்தை அடைகின்றார்கள். உழைப்பாளிகளில் பெண்களும் அடங்குவர். "உலகில் பாதிப் பங்கினரான பெண்கள் ஆண்களைவிட இருமடங்கு உழைக்கிறார்கள். ... உலகில் மூன்றில் இரண்டு பங்கு வேலையைச் செய்கின்றனர். உலகில் பாதி உணவைப் பெண்களே உற்பத்தி செய்கின்றனர். ஆனால் கிடைப்பதோ உலகில் பத்தில் ஒரு பங்கு வருமானம். சொத்துடைமையில் நூற்றில் ஒரு பங்கிற்கும் குறைவானது" என்று உலகப் பெண்கள் பற்றிய ஐ. நா. சபையின் 1985-ஆம் ஆண்டறிக்கை கூறுகிறது.[13] இருப்பினும் உழைப்பு, உழைப்பாளி என்ற சொற்கள் ஆடவரைச் சார்ந்த சொற்களாகவே சமுதாயத்தில் கருதப்படுகின்றன. அதனால்தான் பெண்களின் உழைப்பு மேலும் விலை குறைக்கப்படுகிறது கேவலப்படுத்தப்படுகிறது. இந்நிலையில் உழைக்கும் பெண்களால்தான் பெண் விடுதலையும், அதன் வாயிலாகவே சமூகப் பொதுமையும் - மலர முடியும்.

---

12. தணிகைச்செல்வன் - சமூக சேவகி சேரிக்கு வந்தாள்' (பக். 43) - பாட்டாளிகள் வெளியீடு, சென்னை-20. முதற்பதிப்பு 1978.
13. கணேசலிங்கம் - 'பெண்ணடிமை தீர' (பக். 6) குமரன் பதிப்பகம் - சென்னை. முதற்பதிப்பு 1985.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# தாய்மை - ஒரு கோட்பாட்டுத் தவறு

பெண் என்பவள் ஒரு மனிதப்பிறவி. ஒரு மனுஷி. அதற்கு மேல் எதுவும் இல்லை. தாயாக, தாரமாக, மகளாக, தோழியாக .. இப்படி அவளுக்குப் பல நிலைகள் வாய்ப்பது... உறவுமுறை பொறுத்த விஷயம். அவ்வளவுதான். இந்த உறவுமுறை விஷயங்களைப் பெரிதுபடுத்தி அவளது நிலைமைகளை தெய்வீகமாக்குவது அவளை மதிப்பது என்பதை விட அவளை ஒடுக்குவது, அந்நியப்படுத்துவது, அசைவுகளற்ற பாவையாக்கி பலி கொடுப்பது என்பது ஆகும். தாய்மை என்ற உறவுநிலை இங்கு ஒரு தவறான கோட்பாடாகக் கையாளப்படுகிறது. தாய்மை என்ற உறவிற்கு அதிகப்படியான மேம்பாடு தருவதாகக் காட்டும் போக்கு அவளை ஏமாற்றுவதற்கும் எச்சரிக்கை செய்வதற்கும், அச்சுறுத்துவதற்கும், அடிமைப்படுத்துவதற்கும் பயன்படுத்தப் படுகிறது.

'தாய்மை' என்பதற்கு இங்குத் திணிக்கப்படும் அர்த்தங்களுக்கிடையே ஒரு பெண் தாயாக, நடைமுறையில் முகமற்றவள் மூளையற்றவள் என்பதே நிரூபிக்கப்படுகிறது. தாய்க்கும் அறிவு தொடர்பான செய்திகளுக்கும் சந்பந்தமில்லை. சான்றோனாக்குதலும் சான்றோனாகுதலும் தந்தைக்குக் கடன். தாய்- சடங்கு சம்பிராதய மூடத்தனங்களைப் பிடித்துக் காக்கும் ஒரு பிராணி. இங்கே இது தான ஒரு தாயின் தரம். இங்கே ஒரு பெண் பெரியார் தோன்றவே முடியாது. அறிவு ரீதியாக ஒருத்தி இருந்தாலும் அவள் வெளிப்பாடு இயக்கம் இவற்றால் வளர், வதும் வளர்ப்பதும் இயலுவதில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



எல்லோருக்காகவும் சமைப்பது, இயங்குவது, பிரார்த்திப்பது, காத்திருப்பது, எல்லோருக்காகவும் உண்ணாதிருப்பது' உறங்காதிருப்பது . இவையெல்லாம் தாய்மை இலக்கணங்கள். அவளுக்காக என்று அவள் எதனையும் எதிர்பார்க்க முடியாது. கணவனுக்கோ, மகனுக்கோ, மகளுக்கோ உடல் நலம் குன்றின் அவள் விழித்தும் பசித்தும் பார்க்க வேண்டும். அதில் அவள் உள்பட அனைவருக்கும் திருப்தி. ஆனால் அவள் தனது உடல் நலக்குறைவில் தனக்காக யாரும் சிரமப்பட வேண்டாம் என்று கூறுவது அவளது பெருமை அல்லது கடமை என்று கூடக் கருதப்படுகிறது.

இதனால் பொறுப்பு, பொறுமை, பெருமை என்ற அளவுகோல்களில் தாய் என்பவள் தனது சுகவீனத்திலும் மற்றவர்களின் சுகவீனத்திலும் எப்போதுமே சிரமப்படுகிறாள். இயல்பான மனித சக்திக்கு மீறி அவள் வருத்திக் கொள்ள நேர்கிறது. தாய்மை பற்றிய மற்றவரின் எதிர்பார்ப்பு அப்படி! எதிர்பார்ப்புகளை ஈடு செய்வதிலேயே அவள் நலிகிறாள்.

தாய்! அவளுடைய பணிகளும் பொறுப்புகளும் வீடு சார்ந்தவை. இதனால் அவள் 24 மணி நேர வீட்டு ஊழியராகப் பணிபுரிகிறாள். இதனால் வீட்டிலேயே முடக்கப்படுகிறாள். சமையலறை உணவு இவையே இவள் புழக்கம். தாயொடு அறுசுவைபோம் என்றார்கள். வீட்டின் மூலையில் ஒரு சமையலறை: அதில் அவளது முழுமுயற்சிகளும் பயிற்சிகளும் முடக்கம்.

ஈன்று புறந்தருதல் பெண்ணின் தலையாய கடன். இது இவளுக்கு மட்டுமே உரிய கடன் என்பதாலேயே குழந்தை இன்மையும் இவளது குறைபாடாகவே சமுதாயம் கருதுகிறது. அவன் தனது தந்தைமைத் தகுதியை வேறு ஒரு பெண்ணின் வாயிலாக நிரூபிக்கக்கூடும். ஒரு பெண் தன் தாய்மைத் தகுதியை அங்ஙனம் நிரூபிக்க முடியாது மலடிக்கு ஏற்ற ஆண்பாற் சொல்லும் இல்லை.

பொதுவாக 20 வயது முதல் 60 வயது வரையிலும் ஒரு பெண் தாயாக இருக்கிறாள். ஆனால் எந்த வயதிலும் எந்தச் சூழலிலும் அவள் மனந்திறப்பி விடக்கூடாது. அவளுக்குப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



பயிர்ப்பு அவசியம். ஆனால் ஒரு தந்தை சின்னவீடு வைத்துக் கொண்டாலும் அங்கு அவனது சும்பீரமும், இரண்டு வீட்டையும் தன் ஆணைக்குள் வைத்திருக்கும் ஆற்றல்களுமே சிலாகிக்கப்படுகின்றன. ஒரு பெண், தாய் என்பதனால் எத்தகைய உணர்ச்சிச் சிக்கல்களிலும் ஒரு ஜடம்'.

தாய்மை என்பது பெண்களுக்கு வரம் என்றால், விலை மகளிர் இனம் என்ற ஒன்று ஏன்? கருப்பையைச் சாத்திவிட்டுக் காமத்துக்குக் கட்டாய இடங்கொடுக்கும் நிலையில் அவள் காலமெல்லாம் வாழும் நிலை ஏன்? அப்படித் தாயாக நேர்ந்தாலும் அவளது தாய்மை போற்றப்பட்டதா? அந்தச் சேய் தான் சாதாரண வாழ்வு வாழமுடிகிறதா?

கண்ணகிக்குக் குழந்தை தராதவன், மாதவிக்கு மகப்பேறு தருகிறான் கண்ணகியைத் தாயாக்கவில்லை. மாதவியின் தாய்மையை மதிக்கவில்லை. எவ்வளவு எளிதாக ஒரு தாயையும் சேயையும் தவிக்க விட்டு விட்டுச் சென்று விடுகிறான். வான் பொருட்குன்றம் தொலைத்ததற்கு வருத்தப்படுகிறான். ஒரு தாயையும் சேயையும் உதறிவிட்டு வந்தது பற்றி வருத்தப்படவில்லை. ஒரு குழந்தை இல்லை என்ற குறை கண்ணகியைப் பேசா மடந்தையாக்கி முடக்கியது. ஒரு குழந்தை இருக்கிறது என்ற நிலை மாதவியைக் கோவலனை விட முடியாமல் வீழ்த்தியது. கண்ணகி, மாதவி இருவருமே அடிநாளில் கோவலன் மீது கொண்ட அன்பு, காதல் இவற்றையும் மீறி, கோவலனிடத்து முறையே தாய்மை இன்மை, தாய்மை உடைமை என்ற காரணச் சூழலில் மாட்டிக் கொண்டவர்களாகின்றனர்!

தாய்மை என்பது ஒரு natural process ஓர் இயல்பான நிலை அவ்வளவுதான். ஒரு கெட்ட தாய் இருக்க முடியாது என்று கூற முடியாது. ஒரு கெட்ட பெண் இருக்க முடியாதா? 20 வயதுக்கு மேல் ஒவ்வொரு பெண்ணும் தாயாக இருக்கிறாள். 20 வயதுக்கு மேற்பட்ட எல்லாப் பெண்களும் தெய்வீகயானவர்களா? அப்படி இருக்க வேண்டும் என்பது ஓர் எதிர்பார்ப்பு என்றால், ஆணிடம் ஏன் அந்த எதிர்பார்ப்பு இல்லை. ஒவ்வொரு தந்தையும் நல்லவனாக, தூய்மையானவனாக இருக்க வேண்டாமா? ஆண் ஆதிக்கச் சமுதாய எதிர்பார்ப்பு பெண்ணைச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



சம்மட்டி கொண்டு தட்டித்தட்டி அவளை தெய்வீகமாக்கும் சாக்கில் உருக்குலைகிறது.

தாய்! அவள் வீட்டிலுள்ள அனைவரின் அனைத்து எதிர் பார்ப்புகளுக்கும் தீர்வாக இருக்கிறாள். அவளுக்கென்று ஒரு முகம். நேரம், முடிவு, சமூகத் தொடர்பு எதுவும் இல்லை. கணவன் மகன் என்ற உறவுச் சன்னல்களின் வழியாகத்தான் அவள் அகன்ற உலகத்தைப் பார்க்க வேண்டும். இதிலேயே அவள் ஆத்ம திருப்தியும் அடைந்து கொண்டு தனது பாக்கியம் என்று கருதிக் கொண்டு காலந்தள்ளுவாள்.

அதிகப்படியான உழைப்பையும் உதவியையும் தாயிடம் இருந்தே பெறும் பெண் குழந்தைகள்கூட 15 வயதில் தாயி-னிடத்துப் பெருங்குறை காணும் மனநிலையை எய்தி விடுகின்-றனர் தாயைத் தன் எதிரியாகவும் உரிமைகளைப் பறிக்கும் அராஜகர்களாகவும் கருதத் தொடங்கி விடுகின்றனர். இந்தத் தாய் எந்தச் சமுதாயத்தின் உருவாக்கம் என்பதைச் சிந்திக்க மறந்து விடுகின்றனர். ஆனால் அதே சமயம் தாயே, சுதந்திர உணர்வுகளும் செயல்பாடுகளும் கொண்டவளாக, சமுதாய நடவடிக்கைகளில் பங்கு கொள்பவளாக இருந்தால் எத்தனைப் பிள்ளைகள் (குறிப்பாகப் பெண் பிள்ளைகள்) வரவேற்கின்றனர்? தாய் என்றால் அவள் வீட்டிலிருந்து பணிவிடை செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பே மேலோங்குகிறது இதனாலேயே சமுதாயக் கடமைகளில் விருப்பமுள்ள பெண்கள்கூட வீட்டில் இருந்து வெளியேற முடிவதில்லை. அப்படியும் செய்ய வேண்டும் என்ற ஆர்வமுடையவர்களை வீட்டினர் மதித்தாலும் அனுமதித் தாலும் வீட்டைக் கவனிக்காதவர்கள் என்ற முத்திரை குத்து கிறார்கள் மற்றவர்கள் இதனாலேயே இத்தகைய பெண்கள் வீட்டுக் கடமைகளிலும் குறை வைக்காமல் சமூகக் கடமைகளிலும் அக்கறை காட்டுவதற்குள் பெரும் பாடுபட வேண்டியுள்ளது.

தொழிற்சங்கம் என்பது எல்லாத் தொழிலுக்கும், பதவிக்-கும் உரிய ஒரு நடவடிக்கையாக உள்ளது. பெரும்பாலும் ஆட வர்கள் அனைவரும் அவர்கள் கரத்தால் உழைப்பவரேனும் கருத்தால் உழைப்பவரேனும் சங்கம் சார்ந்தவர்களாக உள்ளனர் ஆனால் சுயமாகச் சம்பாதிக்கின்ற, சுயமாகச் சிந்திக்கும் திறன் - படைத்த எத்தனைப் பெண்கள் தொழிற்சங்க ஈடுபாடு உடையவர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



களாக உள்ளனர்? சங்கம் என்ற நடவடிக்கையே தவறானதானால் ஆடவரும் அல்லவா அகன்றிருப்பார்கள்? அதுஆண்களுக்கு ஏற்றது பெண்களுக்கு ஏற்றதல்ல என்ற கருத்து எத்தனை அபத்தமானது! ஆடவர்கள் தங்கள் நிலையைத் (stand) தாங்களே நிச்சயிக்-கின்றனர். பெண்கள் தங்கள் தொழில் சார்ந்த நலன்களைப் பற்றி, உரிமைகள் பற்றிக் கவலைப்படுவதற்குக்கூட அதற்-கென்று உள்ள அமைப்புகளை நாடாமல் இந்த ஆடவர்களையே நம்பி வாழ வேண்டியுள்ளது. எல்லா நிலைகளிலும் ஆடவர்களே இவர்களுக்கு ரட்சகர்கள். சங்க நடவடிக்கைகளில் பெண்களுக்கே ஈடுபாடில்லை, விருப்பமில்லை என்ற காரணங்கள் வெறும் சப்பைக்கட்டுகள், கோவிலுக்கும், சினிமாவுக்கும் செல்லும் விருப்பங்களும், நகை புடவைக் கடைகளுக்குச் செல்லும் இயல்பு களும் மட்டுமே பெண்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன அந்த மரபுகளை மீறிய நடவடிக்கைகள் இங்கு வித்தியாசமான தாகவும், அநாவசியமானதாகவும் கருதப்பட்டுப் பின்னர் ஏசு-தலுக்கும் இளக்காரத்திற்கும் உரியதாக்கப்படுகிறது.

ஒரு பெண், அவள் தாய் என்ற நிலையிலும் தனது ஒவ்-வொரு செயல்பாட்டிற்கும் வீட்டிலுள்ள ஆடவர்களிடம் அனுமதி கேட்க வேண்டும். இவளது செயல்பாடுகளை அவன் நிர்ணயிக்கிறான். அவன் விருப்பப்படி அவள் இயக்கம். ஆனால் ஓர் ஆண் தனது எந்தச் செயல்பாட்டிற்கும் அனுமதி கேட்க வேண்டியதில்லை. கருத்துக் கேட்பது சில சமயங்களில் நடக்க-லாம். அவ்வளவே ஆனால் பெண் நாலு பிள்ளைகளைப் பெற்ற வளாயினும், நாற்பது வயதென்ன அறுபது வயதானாலும் அனுமதி இன்றிச் செயல்பட முடியாது. அதிகப்படியான அவளது உரிமை என்பது 'சொல்லி விட்டுப்போ' என்று கணவன் உரைப்பதே ஆகும். சொல்லிவிட்டு என்கின்ற போதே அவனது ஆதிக்க உணர்வு தலைதூக்கி விடுகிறது அதனால், பெண் என-பவள் எந்த நிலையிலும் அடிமை தான்! இந்தப் 'permission கேட்பது' என்பதே. அவளை அடித்து நொறுக்கி விடுகிறது. புழுங்க வைக்கிறது. அவளுடைய தேவைகளை. உள்ள உணர்வு, உணர்ச்சித் தேவைகளை நிர்ணயிப்பவன் இவன். ஒரு தாயாகிய நிலையிலும் இன்னொரு ஆடவனின் கண்படாமல் இருக்க அவள் திரைக்குள் மறைவாள். பாதுகாப்பு நல்லது என்ற மனப்பான்மை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



அவளை முடக்குகிறது. கணவனின் அக்கினிப் பரீட்சைகளில் அவள் தேறி வர வேண்டும். அவள் நெருப்பு என்பதில் அவனுக்குப் பெருமை. நெருப்பு எரிய வேண்டும், எங்கும் பற்றி விடக்கூடாது! அதனால்தான் குத்துவிளக்குக்கும் அகல்விளக்குக்கும் உதாரணமாக்கினார்கள்!

புரட்சியிலோ, புலமையிலோ, எந்தத் தன்மையிலும் இந்தச் சமுதாய எதிர்பார்ப்பிற்கு மீறிய திறம் வாய்ந்தவர்களை நமது சமுதாயம் சாதாரணப் பெண்களைப் போல் இயல்பான வாழ்க்கை வாழ விடுவதில்லை. எதிர்ப்புக்குரல் எழுப்பியபின் கண்ணகி வானவீதியில் காணாமற் போனாள். புலமையிற் சிறந்த ஔவை இளமையைத் துறந்தாள். பக்தியில் சிறந்த காரைக்காலம்மையார் கணவனால் கைவிடப்பட்டார். இவர்களெல்லாம் பின்னர் தெய்வமாக்கப்பட்டார்களேயொழிய சாதாரண குடும்பவாழ்க்கை வாழ இயலாமற் தவித்தவர்கள் இவர்கள்! இவர்களின் தவிப்புகள் நல்ல படிப்பினைகள்.

ஒரு குடும்பத்தின் வாரிசு ஆண், குடும்பத்தின் ஆஸ்தி, அதிகாரம், பாரம்பரியம் எல்லாம் அவனால் தொடர்கிறது. அப்படியிருந்தும் குலத்தின் மானத்தைக் காக்கும் ஒழுக்கம் என்பது மட்டும் அந்தக் குடும்பத்துப் பெண்களுக்கு உரியது. இந்த ஆண் எத்தனை ஒழுக்கக் கேடுகளைக் கொண்டவனாக இருந்தாலும் அவனால் குலத்துக்கு இழுக்கு இல்லை. குல மானத்தைக் காக்க வேண்டியவள் மனைவி தான். கற்பையும் கருப்பையையும் காப்பாற்றிக் கொள்ளும் பொறுப்பு மட்டுமே பெண்களுக்குக் காலம் முழுவதற்கும் உரிய கடமையாகிறது.

வளர்ச்சியடைந்த நமது சமுதாயத்தில் இந்த 20-ஆம் நூற்றாண்டிலும் நமது பெண்களின் நிலையிலும், அவர்களைப் பற்றிய சமுதாய மனநிலையிலும் இத்தனை முடக்கங்கள் என்றால் இது எத்தனை நூற்றாண்டுகள் பலிந்து பரவிய களவுகளின் வெளிப்பாடு என்பதை நீதி என்று முத்திரை குத்தப்பட்ட சில அநீதிகளின் சான்றுகளோடு நிறுவலாம்.

"Manu can hardly be said to be more tender to women than he was to the sudras"—என்று ஒரு வரியிலேயே டாக்டர் அம்பேத்கார் பெண்களின் அவல நிலைப்பாட்டின் சாரண

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



கர்த்தா யார் என்பதைச் சுட்டிக்காட்டி விடுகிறார். ஆம்! சமுதாயத்தில் இருந்த கொடுமைகளை, ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்தி அதனை விதிகளாக்கிய மனு, ஒரு சமுதாயச் சீர்கேட்டிற்குப் பொறுப்பேற்க வேண்டியவர் ஆகிறார். வர்ணாசிரம தர்மத்தை வரித்துக் கொண்டு சமூகத்தைப் பாழ்படுத்திய தர்ம வான்களின் அநீதியே பெண்களின் அவல நிலைக்கும் காரண மாகியது. பாதுகாப்பு என்ற பெயரில் விலங்காக மாறியது.

'பெண் என்பவள் ஆடவனைச் சார்ந்த ஒரு சார்புப் பொருள். அவள் இளமையில் தந்தையையும், திருமணத்திற்குப் பின் கணவனையும் கணவனின் மரணத்திற்குப் பின் முதுமையில் தன் மகனையும் சார்ந்து வாழ வேண்டியவள்' என்று மனு நீதியுரைக்கிறார். எந்த ஆண்மகனும் எந்தப் பெண்ணையும் சார்ந்தோ அல்லது எந்தப் பெண்ணின் உதவியுடனோ காலந் தள்ள வேண்டியவனாக வரிக்கப்படுவதில்லை. ஆடவனைச் சார்ந்து வாழ்வதும், ஆடவனுக்குத் தொண்டு புரிவதுமான வாழ்க்கை பெண்ணுக்கு உரியது என்ற மனு, பெண்ணை ஒரு தீய சக்தியைப் போல் அடக்குவதும் ஒடுக்குவதும் அவளிடம் இருந்து பணிவிடைகளைப் பெறுவதும் ஓர் ஆடவனின் திறமை என்று இயம்புகிறார்.

பெண். ஒரு மகளாக, மனைவியாக, தாயாக எந்த நிலையிலும் வீட்டிற்குள் கூட தனித்தியங்க முடியாது. அது மட்டுமல்ல, அவள் ஆண்களை மயக்கும், ஆண்களை வசியமாக்கும், தடம் புரளச் செய்யும் ஒரு தீய சக்தி என்பதும் மனுவின் சட்டமாகும்.

'It is the nature of woman to seduce men, in this world for that the wise are never unguarded in the company of female'.

'For women are able to lead astray in this world not only a fool, but even a learned man, and to make him a slave of desire and anger'.

'ஆண்களே பெண்களிடம் மயங்காதீர்கள் உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள் என்று எச்சரிக்கைப் பறை சாற்றுகிறார் மனு' மேலும், பெண்ணுக்குக் காமப்பசி தவிர எதுவும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இல்லை. அவள் ஒரு sex symbol, அவளது காமப்பசிக்கு முன்னால் அவளுக்கு வயது, உறவு, அழகு என்ற எதுவும் கண்ணுக்குத் தெரியாது என்கின்றார் மனு.

இந்தக் கோட்பாடுகள் தான் பெண்ணை நம்பத்தகாதவளாகவும், ஒரு மூலையில் அடக்கி ஒடுக்கி வைத்துக் கண்காணிக்க வேண்டியவளாகவும் நியாயப்படுத்தின. அதனால் அவள் நின்றால், நடந்தால், சிரித்தால், உண்டால் அத்தனைக்கும் கட்டுப்பாடும் காவல்களும் மிகுந்தன. சமுதாயச் சிந்தனையில் பெண்ணின் இயக்கம் என்பதே மறுதலிக்கப்படும் வகையில் பழமொழிகளும் நீதிகளும் மலியத் தொடங்கின. "பொம்பளை சிரிச்சா போச்சு' 'பேதமை என்பது மாதர்க்கு அணிகலன்' உண்டி சுருங்கல் பெண்டிர்க்கழகு என்று காற்றிலே மிதந்து வந்தவை மட்டுமல்ல நமது அரும்பெரும் நீதி மான்கள் கூட 'தையல் சொல் கேளேல்' என்றும் 'பெண்ணேவல் செய் தொழுகும் ஆண்மையின், நாணுடைய பெண்மையே பெருமையுடைத்து' என்றும் கூறியுள்ளனர். வள்ளுவரிடம் குறை காண விரும்பாத நாம் சில காரணங்களைத் தேடலாம். இருப்பினும்

"தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்று பெண்ணுக்கு நீதி உரைத்தவர்' பெண்ணின் பேச்சைக் கேட்காதே என்று ஒரு ஆணுக்கு உரைக்கிறார் என்றால், அது பெண்ணடிமைச் சமுதாயத்தில் உதித்த ஓர் ஆணின் சிந்தனை என்பதில் தவறில்லை.

இன்னும் நீதி இலக்கியங்கள் என்று பெயர் பெற்ற, நீதிகளைச் சொல்வதையே உள்ளடக்கமாகக் கொண்டு யாக்கப் பெற்ற நமது அறவூழி இலக்கியங்கள் பலவும் ஏறத்தாழ மனுவைப் போலவே பெண்ணைச் சித்திரிக்கின்றன. மேலும் ஆசாரக் கோவையார்,

'ஈன்றாள் மகள் தம் உடன் பிறந்தாள் ஆயினும்
சான்றோர் தமித்தா உறையற்க ஐம்புலனும்
தாங்கற் கரிதாக லான். (65)

என்ற பாடலில் பெற்றதாய், தான் பெற்றமகள், தன் உடன் பிறந்தாள் இவர்களானாலும் இவர்களோடு தனியாக உறை. ச

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



சான்றோர்கள் ஒவ்வார் ஏனென்றால் ஐம்புலனும் தாங்குவதற்கரியது என்கிறார். இதையேதான் மனுவும்,

'One should not sit in a lonely place with one's mother sister or daughter for the senses are powerful and master even a learned man' என்கிறார்.

இத்தகைய மனப்பான்மை ஊறிய நாட்டில் ஒரு பெண் அடிக்கடி தீக்குளித்துக் கரையேற வேண்டித்தான் இருக்கும் அதனால் தான் அம்பேத்கார் மனுவைச் சாடுகிறார். தென்னகத்துப் பெரியாரைப் போல் வட நாட்டு அம்பேத்காரும் பல்வேறு விடுதலைக்கும் வித்தூன்றியிருக்கிறார். களைகளைக் சுட்டிக் காட்டிய சமூகச் சிந்தனைவாதியாகத் திகழ்ந்துள்ளார். தெய்வமென்று போற்றப்படும் இராமனையும் அம்பேத்கார் விட்டு வைக்கவில்லை. 'இராவணனிடமிருந்து மீட்கப்பட்டபின் இராமன் சீதையைச் சந்திக்க வரவில்லை. அவனுக்குச் சீதையை மீட்டும் நோக்கமில்லை இராவணனைக் கொல்லும் நோக்கம் தான் இருந்தது. 'இராவணனைக் கொன்றிடவும் அவனால் ஏற்பட்ட அவமானத்தைத் துடைத்திடவும் தான் நான் இங்கு வந்தேனேயொழிய உனக்காக நான் இப்பெருந்தொல்லையை மேற்கொள்ளவில்லை. உன் நடத்தையை நான் சந்தேகிக்கிறேன். இராவணன் உன்னைக் களங்கப்படுத்தியிருக்க வேண்டும். உன்னைப் பார்க்கிறதே எனக்குப் பெரும் எரிச்சலூட்டுகிறது. சகிக்கவில்லை ஓ ஜனகனின் மகளே உனக்கு விருப்பமுள்ள இடத்திற்கு எங்காவது நீ போய்ச் சேரலாம். உனக்கு எந்த விவகாரமுமில்லை. உன்னைப் போன்ற அழகிய பெண்ணொருத்தியை இராவணன் சும்மா விட்டிருப்பானா என்று என்னால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை' என்கிறான். அதற்குச் சீதை 'சிறைப்பட்டிருந்தபோதே அனுமான் வாயிலாகச் சொல்லியிருந்தால் நான் தற்கொலை செய்து என்னைமாய்த்துக் கொண்டிருப்பேனே' என்கிறார். இவை வால்மீகி இராமாயணச் செய்திகள். இதைப்பற்றி அம்பேத்கார் 'மனிதமனம் படைத்த பாமர மனிசன் கூட துயரம் கவ்விய நிலையிலுள்ள மனைவியிடம் இராமன் சீதையிடம் நடந்து கொண்டதுபோல் நீர் மனைவியை நடத்தியிருப்பானா என்பது நினைத்துக்கூடப்பார்க்க முடியாத நிகழ்ச்சியாய்த் தோன்றுகிறது என்று விமர்சிக்கிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இந்த இராமன் இப்படித்தான் பேச முடியும். இந்தச் சீதையும் இப்படித்தான் பதிலிறுக்க முடியும். ஒருவன் சிறைப் படுத்தி அவமானப்படுத்துகிறான். ஒருவன் அவள் அன்பைக் கறைப்படுத்தி அவமானப்படுத்துகிறான். இதில் இராவணன் என்ன இராமன் என்ன? இருவருமே ஆண் ஆதிக்கப் படிமங்கள். இந்தச் சீதையும் இந்தச் சமுதாய வளர்ப்புத்தான்! பெண்ணுக்குச் சுயமரியாதையை யார் போதித்தார்கள்? அனைத்து வகையிலும் குரல் வளையை நெறிக்கும் ஆதிக்கத்தனத்தில் மிகுதியாகத் தாக்கப்படும் இனம் பெண் இனம் தான்.

ஆண் ஆதிக்க சமுதாயத்தில் சூத்திரதாரிகள் ஆண்கள். குழப்பங்களில் மனிதத்தன்மை இழந்து மயங்குகிறவர்கள் பெண்கள்' இதனைப் பெண்ணுக்குப் பெண்ணே எதிரி என்று சாடுகிறோம். மாமியார் அவளும் ஒரு பெண் தானே. ஒரு தாய் தானே, மருமகளாகிய தாயை ஏன் மிரட்டுகிறாள் மருமகள். அவளும் ஒரு தாய் தானே, மாமியாராகிய தாயை ஏன் விரட்டு-கிறாள்? தாய்மை என்பது தெய்வீகம் என்பது எப்படி அடிபட்டுப் போகிறது. தாயும் ஒரு மனுஷி! அதனால் இங்கு எந்தத் தாயிடம் அதிகாரத்துவமும் வாய்ப்பும் இருக்கிறதோ அவள் இன்னொரு தாயை ஒடுக்குகிறாள்!

வீட்டில் மட்டுமென்ன தாய்மை என்பது தெய்வீகம் என்பது அவளுடைய பல்வேறு நிலைகளிலும் அடிபட்டுப் போகிறது. ஓர் அதிகாரப் பதவியிலிருக்கும் பெண்களிடம் பணிபுரிவது பெண் களுக்குச் சிரமமாகிறது! காரணம் (1) ஒரு பெண் அதிகாரம் செய்வதைப் பெண்களால் தாங்க முடிவதில்லை. அதிகாரம் செய் வதற்குத் தகுதியும் தோரணையும் வாய்ந்தவன் ஆண் என்று பெண்கள் மனதிலே பதிந்ததோர் மனப்பான்மை இதற்கு ஓர் காரணம் அவர்கள் கருதும் குட்டுப்படத்தக்க மோதிரக்கை ஓர் ஆணின் கை! (2) அதிகாரி என்ற நிலையிலே அதிகாரம் செல்லு படியாகத் தகுந்த இடம் என்பதால் தமது பதவியில் அதி-காரத்தை நிலைநிறுத்த விரும்பும் மனப்பான்மையைப் பெண்கள் எய்துகின்றனர். இங்கு அதிகாரி, அலுவலர் இருவருமே தாய் தான். இவர்களிடையே இந்தத் தடுமாற்றம் ஏன்?

ஏன்? லஞ்சம், சுரண்டல் இவற்றிலும் அதிகாரத்தில் உள்ள பெண்களின் பெயரும் தான் அடிபடுகிறது! இவர்களும் பிள்ளைகளைப் பெற்ற தாய்கள் தானே!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


உசிலம்பட்டியிலும், சேலத்திலும் இன்னும் பல இடங்களிலும் சிசுவதை செய்பவர்கள் தாய் இல்லையா? பெண் இல்லையா? மனம் மரத்துப் போவது எதனால்? மற்ற எல்லாப் பாதிப்புகளிலும் தற்கொலைக்கு மனங்கொள்ளும் பெண்கள், பெண் குழந்தை பெற்றால் ஏன் தான் தற்கொலை செய்து கொள்ளாமல், பெண் சிசுவைக் கொல்கின்றனர்! இங்கு எதிர்க்கத் தெரியாத குழந்தைகள் சாகின்றன. ஒரு புறம் குழந்தை. ஒரு புறம் பெண். இயலாத இருவரில் சிறிய ஜீவன் சாகிறது? இதற்கு ஆண் தான் காரணமா? ஆண் ஆதிக்க அமைப்பில் உருவான பெண்ணும் காரணம் அதற்குப் பரிந்து கொண்டு பேசும் அனைவரும் காரணம். பெண் சிசுக் கொலை புரிபவர்கள் பெண்கள். ஆனால் அதற்காக எந்த ஆணும் தண்டிப்பதாகவோ கண்டிப்பதாகவோ தெரியவில்லை. ஓர் ஆண் குழந்தையைத் தாய் கொன்றால் இந்த ஆடவர்கள் விட்டுவிடுவார்களா? செய்பவர்கள் பெண்களாயினும் அதை ஏற்றுக் கொள்ளும் சமூகச் சூழலை ஆண்களும் அங்கீகரிக்கின்றனர். பெண்ணைச் சாட்சியாக எதிர்க்காதிருக்கின்றனர்.

திருமணம் என்பதே பெண்களுக்குத் தாய்மையளிக்கும் திருவிழாவாகத் தானே இங்கு நடக்கிறது. ஓர் ஆண் மகனின் மீசை முளைக்கும் பருவத்தைக் கணிப்பதில்லை. ஆனால் ஒரு பெண் வயதுக்கு வரும் நேரம் சாதகத்தில் கணிக்கப்படுகிறது. இவையெல்லாம் அவளது தாய்மைத் தகுதியையும் கற்புத் தகுதியையும் கணிப்பதாகத் தான் கூறப்படுகிறது.

'பஞ்சாங்கத்தில் கொடுக்கப்பட்ட
ருதுக்கால பலனில்
நடுராத்திரியில் பூத்தால்
விதவையாவாளாம்
திரியோதமி கற்புடையவள்
பூரம் — மலடி
கிழக்குப் பக்கம்

8383

வெள்ளைப் புடவையில் சோரம் போவாள்... இங்ஙனம் பெண்ணைக் கணிக்கும் ஏடுகளை என்ன செய்யலாம்?

"பெண் என்பவள் யார்?
இவளது நிலைகளுக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இலக்கணம் வகுக்கும்
பழைய ஏடுகளை
எரித்தே ஆக வேண்டும்''

என்று கொதித்தெழுகிறார் கவிஞர் ரோகிணி ஒரு பெண்ணுக்குத்தான் இந்த உணர்ச்சிக் கொந்தளிப்பு வரமுடியும்?

ஒரு புறம் தாய்மை தெய்வீகம் என்ற உயர்வு நவிற்சி, ஒரு புறம் பெண்மை, பேய்மை, மாயப்பிசாசு என்ற இழிவு நவிற்சி. இவை தவிர அவளை அவளாக உரைக்கும் உறுதிப் பாடுதான் சமுதாயத்தின் தேவை ஆகும். ஒன்று பெண்ணின் உழைப்பைச் சுரண்டுதல் அல்லது பெண்ணை உட்கார வைத்துச் சோறு போட விரும்புதல். ஒன்று வீதியில் வைத்து விலைபேசுதல் அல்லது வீட்டிற்குள் பூட்டி வைத்துப் பத்தினித்தனம் காத்தல். ஒன்று பிச்சைக்காரியாக்கிக் கந்தலுடையில் வெளிச்சம் போடுதல் அல்லது பட்டுடைகள் சார்த்தி தெய்வீகம் பேசுதல்—இந்த இரு வேறுபட்ட நிலைகளின் நடுவே, பெண்ணைச் சமுதாயப் பங்கு கொள்ளும் மனித குலப் பிரதிநிதியாக, உழைக்கவும் பிழைக்கவும் உரிமையும் கடமையும் கொண்டவளாகக் கணிக்கும் நிலை வர வேண்டும். பட்டாடையும் வைரங்களும் தெய்வீகக்களை தருபவை என நினைக்கும் மேட்டுக்குடித்தன மனப்பான்மை மாற வேண்டும். 'பூனைகளால் எலிகளுக்கு விடுதலை கிடைக்காது என்று பெரியார் உரைக்கும் கருத்து இருபாலார்க்கும் உறைக்க வேண்டும்.

பெண் என்பவள் வீடுசார்ந்தவள் மட்டுமல்ல. சமுதாயம்; நாடு, உலகம் என்ற விரிந்த வட்டங்களையும், சார்ந்தவள்.

''மன்னனுக்குப் பணிவிடை
மாமிக்குத் தாங்கல்
பிள்ளைக்குத் தாதி
சமூகத்துக்கு
சமூகத்துக்கு
வேற என்ன சொல்லி வளர்த்து விட்டார்
சமூகத்துக்கு தோழி எனலாமே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



சமூகத்துக்கு தோழி
சமூகத்துக்கு தோழி
துணிந்து சொல்''

என்கிறார் கவிஞர் பொன்மணி. ஆம்! தோழமை உணர்வு ஒன்றே அத்துணை வேறுபாடுகளையும் நீக்கும் சக்தி ஆகும். அது தவிர்த்துப் பெண்ணைத் தூக்கி வைத்துத் தாய்மை என்றும் தெய்வீகம் என்றும் பெயரிட்டுப் போற்றுவதாகச் சொல்வது தாழ்த்தப்பட்டவர்களைக் 'கடவுளின் பிள்ளைகள்' என்று 'தனி யொரு முத்திரை குத்திப் பிரிப்பதற்கு ஒப்பதாகும். நாலு வர்ணத்தில் நாடு நாகரிகம் இழப்பதையும் நாலு குணத்தில் பெண் நாசமாய்ப் போவதையும் எதிர்க்கும் சமூக நீதிக் குரல்கள் ஓங்க வேண்டும்.

தாய் அவளும் நன்மை தீமை ஆசை பாசம் அனைத்துக்கும் உட்படக்கூடிய மனிதப் பிறவி. பெண் என்பதால் தாய்மை என்ற பதவி குறித்து மேன்மை தியாகம் என்ற எதிர்பார்ப்புகளையும் அளவிற்கு மீறிய பொறுப்புகளையும் திணிப்பது அவளை ஒடுக்கு கிற முறைகளில் ஒன்று (குறுக்கு வழி) ஆகும்.

நமது இன்றைய வளர்ச்சிகள் எல்லாம் அசமத்துவ வளர்ச்சிகளே.

''மாதர் ஜனநாயகம் என்கின்ற நீதி
மக்கள் ஜனநாயகம் என்பதில் பாதி''

(தணிகைச்செல்வன்)

என்பதை மறந்தால் எந்த வகையிலும் மீட்பு இல்லை!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# நீதி நூல்களில் ஓர் அநீதி

சமுதாய உணர்வும் இலக்கியமும் ஒன்றோடு ஒன்று தொடர்பு மிக்கவை. சமுதாய உணர்வினை முற்றிலும் தள்ளி விட்டு ஓர் சிறந்த இலக்கியம் முகிழ்க்க முடியாது. கற்பனை என்பதும் ஓர் உண்மையின் விசாலமான சிறகு விரிப்பே ஆகும். உண்மையைத் துறந்த கற்பனையை உருவாக்குவதென்பது மனித குலத்துக்கு முரணானது. அதனால் இலக்கியங்கள் அவை எந்தக்காலம் நாடு, மொழி, இனம் சார்ந்தவையேனும் உண்மைக்கும் அவ்வக்கால நடப்பியலுக்கும் முற்றிலும் மாறாக எழுதப்பட இயலாது. இவ்வகையில், அற ஊழியில் எழுந்த இலக்கியங்கள் அக்காலச் சமுதாயத்தை எதிரொலிப்பன. சமுதாயத்தின் பாதியாம் மகளிர்தம் நிலையையும், சிந்தனைப் போக்கையும் அவை எங்ஙனம் எதிரொலித்தன என்று ஆய்தல் அந்தக் காலகட்ட மகளிர் நிலையோடு, முழுச்சமுதாய உணர்வையும் வெளிப்படுத்த உதவும்.

## அற ஊழி என்பது எது?

தமிழ் இலக்கியக்கால ஆராய்ச்சிகள் சில அற ஊழி எது என்பதை அறிய நமக்குத் துணைபுரிகின்றன. அகப்புறச் சான்றுகளின் துணை கொண்டு, ''நீதி நூல்களின காலம் கி.பி 600—850''[1] என்று திரு. வையாபுரிப்பிள்ளை கணிக்கின்றார். மேலும்

1. அ.கா. பெருமாள் — தமிழ் இலக்கியங்களின் காலம் பற்றி வையாபுரியாரின் கணிப்பு பக் : 2

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



திருக்குறள் கி.பி. 600-இல் தோன்றியது எனவும் பிற கீழ்க் கணக்கு நூல்கள் அதை ஒட்டிய காலத்தவை எனவும் குறிப் பிடுகின்றார். ஆனால் பொதுவாக இலக்கிய வரலாற்று ஆசிரியர்களும் ஆராய்ச்சியாளர்களும் நீதி நூல்காலம் சங்கம் மருவிய காலம் எனவும், அஃது கி.பி. 2-ஆம் நூற்றாண்டுக்குப் பிந்தையது எனவும் குறிப்பிடுவர். எங்ஙனமேனும் சங்க இலக்-கியங்களாகிய வீரயுகப் பாடல்களுக்குப் பிற்பட்ட கால இலக்-கியப் பாடல்கள் அறவியல் பாடல்கள் என்பது திண்ணம். தமிழகத்தின் இலக்கியக் காலங்களின் இலக்கியக் கொள்கைகளைக் காண்போமாயின், "வீரயுகப் பாடல்காலம் போலச் செய்தல் கொள்கையும் (Minetic Theory), அறவியல் பாடல் காலம்—அற வியல் கொள்கை (Pragmatic Theory)-யும் கொண்டது"[2] என்று திரு. சி கனகசபாபதி கூறுகிறார். இதனால் சங்கம் மருவிய காலப் பின்னணியில் செயல்பட்டதே அறவாழ்வியல் கொள்கை என்பது தெளிவு.

"பொதுவாக அனைவராலும் ஒப்புக் கொள்ளப் பெற்ற வடிவத்தாலும் கருத்தாலும் ஒப்புமைகளையுடைய நூல்களின் தொகுதிக்கு ஓர் இலக்கிய வகை எனப் பெயரிடலாம்" என்பர் ஆல்பர்ட் ஜெரால்டு.[3] அவ்வகையில் அகம் புறம் எனும் இரு வகைப் பாடல்களையும் கொண்ட பதினெண்கீழ்க்கணக்கு நூல் களை அறவழி நூல்கள் எனக் கொள்ளலாம். அவையாவன,

"நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி — மாமூலம்
இன்னிலை காஞ்சியுட னேலாதியென்பவே
கைந்நிலையோ டாங்கீழ்க் கணக்கு".

---

2. சி. கனக சபாபதி — 'இலக்கியக் காலங்களும் கொள்கைகளும்' வையை-மலர் ஒன்று.

3. மேற்கோள் எடுத்தாளப்பட்டது — இராம. பெரிய கருப்பன் 'தமிழ் இலக்கியவகைகள்' பக். 11?. வையை மலர் ஒன்று.

Albert Gerald — Preface to World Literature New work 1948. p. 189.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்ற பழைய வெண்பாவிற் கூறப்பட்ட பதினெட்டு நூல்களும் ஆகும். இந்நூல்களின் வாயிலாகவே அறஊழிக் கால மகளிர் நிலையும், அவர்களைப் பற்றிய சமுதாயக் கணிப்பும் காணலாம்.

**பெண்ணறிவென்பது ..**

பொதுவாகவே பெண், சமுதாய வீதியில் சமத்துவப் பங்கேற்ற நிலையில் அறஊழியில் காணப்படவில்லை. கற்பினைக் காத்தல், மக்கட்பெறுதல், உணவு ஆக்கல் விருந்தோம்பல், மடனோடு இருத்தல் ஆகிய இல்லிருப்புப் பணிகளே அவளுக்கு உரிய பணிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பெண்ணறிவென்பது பேதைமைத்து என்னும் ஒரு உணர்வே சமுதாயத்து இருந்திருக்கிறது.

"மக்கட்பெறுதல் மடனுடைமை மாதுடைமை
ஒக்க உடனுறைதல் ஊணமைவு தொக்க
அலவலை அல்லாமை பெண் மகளிர்க்கு ஐந்து
தலை மகனைத் தாழ்க்கும் மருந்து" (சிறு. 53)

தலைமகனாகிய கணவனை வசியமாக்கும் மருந்தாக இப்பாடலில் பிள்ளை பெறுதலும் அறியாமையும், அழகும், அவன் விரும்பிய போதெல்லாம் அவனோடு உறைதலும், உணவு சமைத்தலும் கூறப்படுகிறது. இங்ஙனம் அவனுக்காக அவள் பிள்ளை பெறும் எந்திரமாகவும், அழகுப் பதுமையாகவும், அறியாமை எனும் அணிகலனைப் பூண்டவளாகவும் செயல்பட வேண்டிய நிலை கூறப்படுகிறது. நான்கு சுவர்களுக்குள் செயல்படும் இல்லறக் கடமைகளே வலியுறுத்தப்படுகின்றன. அவளுக்கென்று தனி மனித நிமிர்வு குறிக்கப்படவில்லை. அவளுடைய இல்லறக் கடமைகளும் சமுதாய வளர்ச்சியின் மறைமுகப் பங்குதான் எனினும் வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்த சமுதாயப் பிரதிபலிப்புதான் காட்சி தருகிறது. இதனாலேயே கல்வியோடு பெண் தொடர்பு படுத்தப்பட்டு யாங்ஙணும் பேசப்படவில்லை. பெண் கல்வி மறுக்கப்பட்டே இருந்திருக்க வேண்டும். கற்றான், கல்லாதவன் என்ற இரண்டுமே ஆணோடு தொடர்புடையதாகத்தான் கூறப்படுகிறது.

"தாயொடு அறுசுவைபோம்
தந்தையோடு கல்விபோம்"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



ன்று தான் பழஞ்செய்யுளொன்றும் கூறும். ஈன்று புறந்தருதல் ய்க்குக் கடன் என்றும் சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடன் ன்றும் புறநானூறு கூறுகிறது. அதனால் தான்,

"தந்தை மகற்காற்றும் உதவி அவையகத்து
முந்தி இருப்பச் செயல்" (குறள் 67)

ன்றும்

"மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லெனும் சொல்" (குறள் 70)

ன்றும் கூறப்படுகிறது. ஈன்ற பொழுதை விடப் பெரிதுவப். ளாம் தாய் எப்போதெனின் 'சான்றோன் எனக் கேட்ட ாது', குழந்தையின் உணவுத் தேவைக்குத் தாயும், உள்ள ளர்ச்சிக்குத் தந்தையும், அவனது உடல் வளர்ச்சிக்குத் தாயும், றிவு வளர்ச்சிக்குத் தந்தையுமாகவே யாண்டும் கூறப்பட்டு ள்ளது. அவளுக்கே கல்வி மறுக்கப்பட்டதொன்று என்பது வளிப்படை.

"கல்லாதான் தான்காணும் நுட்பமும் காதிரண்டும்
இல்லாதாள் ஏக்கழுத்தம் செய்தலும்".

னுமிடத்துக் கல்வி என்பது ஆணொடும், தோற்றம் அழகு ன்பது பெண்ணொடும் தொடர்புபடுத்தப்படுகிறது.

"விளங்கிழைக்குக் கற்புடைமை"
கற்புடைய பெண்ணமிர்து
கற்றடங்கினான் அமிர்து

னுமிடத்துப் பெண் கற்புக்கும் அணிகலனுக்கும் உரிமை ண்டவளாகவும், ஆண் கல்விக்கு உரிமை பூண்டவனாகவும் ாட்டப்படுகிறது. கற்பும் கல்வியும் இரண்டும் இருபாலார்க்கும் ன்மை பயக்கும் எனினும், ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாலார்க்கு ன்று வகைப்படுத்திய சமுதாயமே அன்று இருந்திருக்கிறது.

## பெண்ணே ஒரு பண்டமா

"திருவிற் றிறலுடைய தில்லை" (நான்)
"வளமை யோடொக்கும் வனப்பில்லை" (நான்)
"கைத்துடை யான்காமுற்ற துண்டாகும் (நான்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்றெல்லாம் அறவூழியில் செல்வத்தின் சிறப்பு கூறப்படுகிறது "பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை" என்று குறளும் கூறும் ஆனால் இந்தச் செல்வத்தை ஈட்டும் வாய்ப்பும் வசதியும் உரிமையும் பெண்களுக்குக் கொடுக்கப்படவில்லை. பெண்ணே ஒரு பொருள் ஒரு பண்டம் போலத்தான் கருதப்பட்டிருக்கிறாள். "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" எனும் குறளடிக்குப் பரிமேலழகர் "ஒருவன் எய்தும் பொருள்களுள் இல்லாளின் மேம்பட்ட பொருள்கள் யாவையுள" என்று பொருளுரைக்கிறார். மேலும் "பெண்டிர், பொருள், உண்டி இவை காப்பாற்றும் முறையில் காப்பாற்றப்படாமற் போனால் கெட்டுப்போம்" என்கிறது திரிகடுகம் (47). உணவோடு, பொருளோடு ஒத்து எண்ணத்தக்க, பிறரால் காப்பாற்றப்பட வேண்டிய ஒரு பண்டமாகக் கருதப்படுவதைக் காணலாம்.

பெண்களுக்குப் பொருளாதார உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. அதனால் ஒரு கணவனின் வருவாயைப் பொறுத்தே ஒரு குடும்பச் செல்வ நிலை அமைந்திருக்க வேண்டும். அதனால் தான்

"மனத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்று குறள் கூறுகிறது. ஆனால் "இல்லானை இல்லாளும் வேண்டாள்" என்றும் ஓரிடத்து வள்ளுவர் கூறுகிறார். அப்படியாயின், ஒரு கணவனின் வருமானம் என்பது, பெண்களின் ஏன் ஆடவர்களின் ஏன் குடும்ப அமைப்பையுமே நிர்ணயிக்கும் ஒன்றாக இருந்திருக்கும். இந்தச் சூழ்நிலையில், ஒரு பெண் தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற சொல்லையும் காத்துச் சோர்விலாது திகழ வேண்டும். அதாவது தானும் சாகாமல் தன்னைக் காத்துக் கொண்டு, தன்னைக் கொண்டவனும் சரியாமல் காத்து, தகுதி வாய்ந்தவள் என்ற நற்பெயர் கெட்டு ஊர் சிரிக்காமல் காத்து, வறுமையிலும் செம்மையாய்ச், சோர்விலாது இல்லறக் கடமையாற்றுபவளே பெண் என்று இலக்கணம் வகுக்கிறார் வள்ளுவர். பெண்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டுக் கடமைகள் திணிக்கப்பட்டுள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



## தொழுவதும் தொண்டு புரிவதும் :

ஒருவனுக்கு வாழ்க்கையில் நல்ல மனைவி அமையப் பெறுதல் இன்றியமையாப்பேறு. அவன் வாழ்பவன். அவனுக்குத் துணையாக அவன் நலம் பேணும் துணையாக அவள் அமைபவள். இதில் அவள் என்பதே அவனுள் அடக்கம். அவளுக்கென்று தனித்துவம் இல்லை. அவன் எல்லையிலே தொழுவதும் தொண்டு புரிவதுமே அவள் பணி. அதுவே அவளின் மிகப்பெரிய பெருமைக் குரிய உருவகத் தோற்றம். இதனையே 'வாழ்க்கைத் துணை நலம்' முற்றிலும் எடுத்துரைக்கிறது. ஆனால் ஒரு நல்ல கணவன் ஒரு பெண்ணுக்கு அமையப் பெறுதல் பற்றி யாங்ஙணும் கூறப் படவில்லை. எந்த நிலையிலும் அடங்கிப் போதலும், எதிர் பேசாதிருத்தலும் பூமியைப் போல் பொறுத்தலும் வணங்கலும் அவனை வணங்கும் சாகசங் கற்றலுமாகத் தனக்கென ஓர் முகமற்ற உருவகமாகவே பெண் சித்திரிக்கப் படுகிறாள்.

> "தெய்வம் தொழாஅள் தொழுநன் தொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் மழை"

என்ற குறளில் "கடவுளை வணங்காதவளாகிக் கணவனை வணங்கிப் படுக்கையை விட்டு எழுகின்றவள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும்" என்றும்

> "பெற்றாற் பெறின் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
> புத்தேளிர் வாழும் உலகு"

என்ற குறளில் மகளிர், தம்மை மனைவியாகக் கொண்டவனைத் தனது குண நலன்களால் ஆட்கொள்ளப் பெறின், வானவர் வாழும் உலகுக்கொப்பான பெரிய சிறப்பினை அடைவர் என்றும் கூறப்பட்டுள்ளது. பெண்ணுக்குச் சில தனி இலக்கண விலங்குகளை மாட்டி, அதனின்று அவள் மீள முடியாத நிலையே அவளுக்குப் பெருமையெனப் பறைசாற்றி, தெய்வமென்றும் சொர்க்கமென்றும் தூக்கி வைத்துப் புகழ்ந்து போதையுறச் செய்து, அவளின் மனிதவுணர்வுகளை, மனவேதனைகளைப் பாடாமல் கழித்துள்ளனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



"கண்ணை மூடிக் கொண்டதனாலே
பெண்கள் தெய்வமா -- வீட்டில்
கல்லைப் போல இருப்பதனாலே
பெண்கள் தெய்வமா — ஒரு
ஜீவனில்லாமல் வாழ்வதனாலே
தெய்வம் பெண் என்றார் — அவரே
செல்வம் பெண் என்றார்".

என்றதோர் திரைப்பாடல் நமது பெண்களின் நிலையை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது. யாரையும் யாரும் தெய்வமாகக் கருதும் உயர்வு நவிற்சி, உள்ளபடி நிலையை உணர்த்தத் தவறி விடும் என்பது தெளிவு.

**கற்புநிலையென்று சொல்ல வந்தார்:**

இருபாலார்க்கும் பொதுவில் வைக்கும் கற்பு நிலை அறவூழிக் காலத்து இல்லை. கற்பு பெண்ணுக்கு மட்டும் தான் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் கற்பு என்பது ஒரு பாலரால் மட்டும் போற்றிப் பாதுகாத்தற்குரியதன்று. கற்பென்னும் திண்மை உண்டாகப்பெறின் "பெண்ணிற் பெருந்தக யாவுள" என்கின்றார் வள்ளுவர். ஆனால் ஓர் ஆணுக்குக் கற்புதான் கவசமென்றோ, அவன் நிறைகாக்கும் காப்பும், சிறைகாக்கும் காப்பும் உடையவனாக இருக்க வேண்டுமென்றோ எதிர்பார்க்கப் படவில்லை. அவன் பெருமை அவனது கற்புத்திறத்தைப் பொறுத்துக் கணக்கிடப்படவில்லை. 'ஆணின அருந்தக்க யாவுள' எனத் திருவள்ளுவர் கூறவில்லையே எனின், வாழ்வியலில் காலப் போக்கில் ஆணுக்கே தலைமை ஏற்பட்டுவிட்டமையின் ஆணைத் தலைமையாக வைத்து அறநெறி கூறுவது எல்லா நாட்டிலும் இயல்பாகி விட்டது[4] என்று டாக்டர் சி. இலக்குவனார் கூறுகிறார். இது ஓர் சமாதான விளக்கம் ஆகும்.

"கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி"
'கற்புடையாள் பூண்ட கடன்"

4. டாக்டர் சி. இலக்குவனார் — 'வள்ளுவர் கண்ட இல்லறம்' ப. 76.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



"கற்புடைய பெண் அமிர்து"
"மங்கலம் என்ப மனைமாட்சி"

என்று அனைத்து நீதி நூல்களிலும் பெண்ணுக்குக் கற்பு வலியுறுத்தப்படுகிறது. ஒரு பெண்ணின் கற்புக்கு அழிவு வராமல் காப்பவர்கள் கணவன், கணவனுடன் பிறந்தான், பெண்ணின் மாமன், மகன், தந்தை ஆகியோர் என்று சிறுபஞ்சமூலம்பட்டியல் தருகிறது. மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை' என்பது இங்கு மறுதலிக்கப்படுகிறது. ஒரு பெண்ணின் கற்புக்கு அவள் மனம் வரிக்கும் முடிவு முக்கியமானது.

"ஈன்றாள் மகள்தம் உடன்பிறந்தாள் ஆயினும்
சான்றோர் தமித்தா உறையற்க ஐம்புலனும்
தாங்கள் கரிதாக லான்"

என்ற பாடலில் பெற்ற தாய் தான் பெற்ற மகள் தன் உடன் பிறந்தாள் இவர்களானாலும் இவர்களோடு சான்றோர்கள் தனித்து உறைய இணங்க மாட்டாராம். ஏனெனில் ஐம்புலனும் தாங்கற்கரியதாம். இவ்விடத்து பெண்ணின் கற்பின் காவலர்களே இங்கு எச்சரிக்கப்படுகிறார்கள். உறவுகள் எல்லாம் களங்கப் படுத்தப்பட்டுள்ளன.

'தாயிற் சிறந்த உறவில்லை'
'தாயிற் சிறந்த தமரில்லை'

என்று போற்றப்படும் உறவுகூட 'தமித்து உறைய' இடந்தராத உறவாகக் காட்டப்படுவது எந்த உளவியல் அடிப்படையில் இருக்கலாம் என்று எண்ணி மருக வேண்டியுள்ளது.

## பிறனில் விழையாப் பேராண்மை

பிறனில் விழையாமை என்பது ஓர் ஆடவன் பிறிதொருவனுக்கு உடைமையான மனையாளை விரும்பாமை ஆகும். இது ஆடவர்க்கு மட்டுமே உரைக்கப்பட்டுள்ளது. வாழ்க்கைத் துணை நலம் என்பது முற்றிலும் பெண்ணுக்கே உரைத்து, பிறனில் விழையாமையை முற்றும் ஆடவர்க்கே அற இலக்கியங்கள் உரைப்பது அக்காலச் சமுதாயத்தை நன்கு எடுத்துக்காட்டுகிறது. பெண்களுக்கு இது போதிக்கத் தகுந்த பொருளாகவே நினைக்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



வில்லைபோலும்! சிறை செய்யும் காப்பும் நிறை செய்யும் காப்பும் பெண்களுக்கு இருந்தது. அது மட்டுமின்றி, ஆடவர்க்கு இயல்பாக இருந்த அவரவர் உடைமைப் பாதுகாப்பு உணர்ச்சியின் விளைவாகவே 'பிறனில் விழையாமை' தோன்றியிருக்க வேண்டும். மனைவி என்பவள் பத்திரப்படுத்துதற்குரிய ஒரு பொருள். ஒவ்வொரு ஆடவனும் பிறனில் விழையாமல் இருந்தால் தான் அவரவர் மனைவி தன்னை நீங்காதிருக்க முடியும் என்ற உணர்வும் ஒரு காரணம். களவு போகாது காப்பாற்றப்படும் பொருள் இங்கு மனையாள். அதனால் தான்

''பிறன்மனை பின்நோக்காப் பீடு இனிது
(இனியவை—15)
''உரிமையில் பெண்டிரைக் காமுற்று வாழ்தல் இன்னாதது''

என்று கூறப்படுகிறது. அது மட்டுமின்றி, இப்பிறனில் விழைதல் சமுதாயத்துக்குப் பெருங்கேடு பயக்கும், பெருங்கலகம் விளைவிக்கும் தன்மையது என்று நீதிநூல்கள் வலியுறுத்துகின்றன.

''பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்'' (கு-148)
''பிறன்மனை நோக்காப் பேராண்மை'' (கு-148)
''அறன் வரையான் அவல செயினும் பிறன் வரையான்
பெண்மை நயவாமை நன்று''

என்ற குறள்களில் வேறெந்த அறத்துக்குப் புறம்பான செயலைச் செய்பவனை விடவும் பிறனில் விழைவானே கொடியவன் எனவும், அதனால் அதனை நயவாமை நன்று எனவும் கூறப்படுகிறது.

''அச்சம் பெரிதால் அதற்கின்பஞ் சிற்றளவால்
நிச்ச நினையுங்கால் கோக் கொலையால்'' (-நாலடி)

எனும் வரிகளில் பிறன்மனை விரும்பும் போது உண்டாகும் அச்சம் பெரிது, அதைவிட அவனால் நுகரப்படும் இன்பம் சிறிது. அரசனால் கொலைத் தண்டனை கூட வழங்கப்படலாம் என்று அச்சுறுத்தல் கொடுக்கப்படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



"புக்கவிடத்தச்சம் போதரும் போதச்சம்
துய்க்கு மிடத்தச்சம் தோன்றாமற் காப்பச்சம்
எக்காலு மச்சம்" (நாலடி)

என்று எப்போதும் நிம்மதியற்ற அச்சத்தைத் தரும் தீவினையை ஏன் ஒருவன் விரும்பவேண்டும் என்று கேட்கின்றார் நாலடியார்.

"பின் மனையாள் பின்னோக்கும் பேதமை இன்னா"

என்கிறது இன்னா நாற்பது. இத்துணை வகைகளில் அச்சுறுத்தி, கொலைக்குற்றம் சாற்றிப் பிறனில் விழையாமை அறம் போதிக்கப் படுகிறது. அப்படியும் பிறனில் விழையும் கணவனைப் பொறுத்தல் பெண்ணிற்குக் கடன். அதனால்தான் பிறனில் விழையாமைக்குப் பின் 'பொறையுடைமை' வைத்தார் வள்ளுவர் என்று அவ்வதிகார முன்னுரையில் பரிமேலழகர் விளக்கம் தருகிறார்.[5]

'பிறனில் விழையாமை'யில் பிறனில் விழைந்தால் அச்சம் வரும். அடிகிடைக்கும் கை போகும், உயிர் நீங்கும், பாவமும் பழியும் வந்து சேரும் என்ற காரணங்கள் காட்டி அது வேண்டாம் என வலியுறுத்தப்படுகிறதேயன்றி, அது இரண்டு பெண்கள் தொடர்பான ஒரு செய்தியாகக் கூறப்படவேயில்லை.

## பொருளுக்குப் பெண்டிரா?

கற்பினைப் பெண்ணுக்கு அணிகலனாகப் பூட்டி மகிழும் தமிழ்ச் சமுதாயத்தில் கற்பினை விலைபேசும் ஒரு குலமும் எப்போதும் இலக்கியத்தில் காட்டப்படுகிறது. இப்பொருட்பெண்டிரின் பின்னணி எதுவாகவும் இருக்கலாம். அவசியத் தேவைக்காக, பசித்தழும் குழந்தைகளின் பட்டினி போக்குவதற்காக, பணமுதலைகளின் உடற்பசிக்கு ஆளாகும் குலத்திலே பிறந்த பாவத்திற்காக இங்ஙனம் ஏதோ ஒரு பின்னணியில் இந்த தர்மத்திற்கு ஆளாகும் மகளிர் இருந்திருப்பர். பிணத்தைத் தழுவுதல் போல் பல்வேறு ஆடவரைப் பணத்திற்காய்த் தழுவச் சம்மதிக்க

5. திருக்குறள் — 'பொறையுடைமை' - உரைக்கொத்து — அறத்துப்பால் — பதிப்பாசிரியர் வித்துவான் பட்டிச்சாமி ஓதுவார்-ப. 137.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



எந்தப் பெண் தான் இசைந்து முன் வருவாள்? அவளது உடல், உள்ள ரணத்தைத்தான் யார் புரிந்து கொள்வார்? பிறனில் விழையாமை போதிக்கப்பட்ட ஆடவர்க்கு விலை மகளிரை அணுகாதிருக்கும் போதனை கூறப்படவில்லை.

> "தீண்டாநாள் முந்நாளும் நோக்கார் நீராடியபின்
> ஈராறுநாளும் இகவற்க என்பதே
> பேரறிவாளர் துணிபு' (ஆசாரக்கோவை 42)

என்பதில் மனைவியைத் தீண்டாத நாட்களாகிய மூன்று நாட்களும் மனைவியை நோக்காதிருந்து, அதன் பின்னர் வரும் பன்னிரண்டு நாட்களும் தலைவன் உடனுறைய வேண்டும் என்று அறிவுரை கூறப்படுகிறது.

> "பூப்பின் புறப்பாடீராறு நாளும்
> நீத்தகன் றுறையாரென்மனார் புலவர்
> பரத்தையிற் பிரிந்த காலையான"

என்று தொல்காப்பியரும் உரைக்கிறார். பரத்தையிற் பிரிவு என்பது மிக இயல்பாகவும் கருவுயிர்க்கும் காலமாதலின் அப் பன்னிரண்டு நாட்களும் தலைவன் மனைவியைப் பிரியான் என்றும் கூறப்படுகிறது. பிள்ளை பெறும் பயன்பாடு குறித்து ஒரு கணவன் வீட்டில் உறைதலும், அதன் பின்னர் அவன் பரத்தையிற் பிரிதலும் நியாயப்படுத்தப்படுகிறது. பொதுவாகவே பெண்கள் இருவகையினராகக் காட்டப்படுகின்றார். ஒருவகைப் பெண்கள் கற்பும் விருந்தோம்பலும் புதல்வரைப் பெறுதலும் கடமையாகக் கொண்ட இல்லறப் பெண்டிர். மற்றொருவகை எப்போதும் யாருக்காகவோ தன்னை அலங்கரித்துக் கொண்டு, பொருள் கவரும நோக்கத்துடனேயே வாழ்வது போலக் காட்டப்படுகின்றனர். இவ்விலை மகளிரின் மனப்பாங்குகள், அவர்களின் பிரச்சனைகளாகப் பேசப்படுவதில்லை. இவர்களுக்கென்று ஒரு மனமும், குணமும் எதுவுமின்றி, இவர்கள் வார்க்கப்பட்டதாகத் தான் பேசப்படுகிறார்கள். ஆடவர்கள் இவர்களை அணுகக் கூடாது என்று கூறப்படுவதெல்லாம இம்மகளிடம் ஆடவர்கள் பொருள் இழக்க நேர்கின்ற காரணத்துக்காகத்தான். இச்சமுதாயப் பெண்களின் ஒரு பகுதியினரை மனிதாபிமானத்தோடு நோக்க மறுத்ததையே இது காட்டுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



"காண்டகு மென்தோள் கணிகை வாயின் சொல்
ஆழ்ச்சிப்படுக்கும் அளறு" (திரி 24)
"நிறை மாண்பில் பெண்டிரை நீக்கல் இனிதே"
(இனியவை 10)
"வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளது" (குறள் 919)

இவ்விலை மகளிர் பொருட்பெண்டிர், வரைவின் மகளிர், பொதுப் பெண்டிர், பரத்தையர் என்னும் பல சொற்களால் குறிக்கப் படுகின்றனர். விலைமகளிரால் சமுதாயம் தீங்குறும் கருத்து எடுத்தியம்பப்படுகிறது. ஆனால் அம்மகளிர் தம் மனம், உணர்வு, வாழ்க்கை இவை ஒரு மனிதாபிமான நோக்கில் கூறப்படவில்லை.

தையல் சொல் ...

குடும்பப் பெண்களைப் பொறுத்தவரை கொண்டான் குறிப்பறிந்து ஒழுகலும், அவன்தாள் தொழுதெழலும், மனைத் தக்க மாண்புடையாளாகத் திகழ்தலும், விருந்தோம்பலும், புதல்வரைப் பெறுதலும் ஆற்ற வேண்டும் என்பது எல்லா நீதி நூல்களிலும் வரிந்து வரிந்து கூறப்படுகிறது. ஆனால் இயல்-பிலேயே ஆண் என்பது ஆதிக்கப் பிறப்பென்றும் பெண் என்பவள் அடிமைப் பிறப்பென்றும் உணர்வு ஊறியிருப்பதால் வள்ளுவரும்,

"மனை விழைவார் மாண்பயன் எய்தார்" (கு-901)
"பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைய
பெண்ணே பெருமை உடைத்து" (கு-906)

என்று கூறுகிறார் 'பெண்ணே' என்னும் ஏகாரத்தில் பெண் என்பவள் ஏளனப் பிறப்பென்னும் சமுதாயக் கணிப்பு தொனிக் கிறது.

"இல்லஞ்சி வாழும் எருதும் ..
நெல்லுண்டல் நெஞ்சிற்கோர் நோய்" (திரி 79)

இதில் மனையாள் சொல் கேட்டு அஞ்சி வாழ்பவன் உணவுண்டு வாழ்வதற்கே தகுதியற்றவன் என்று கூறப்படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



"மனைக்குப் பாழ் வாள் நுதலின்மை" (நான் 22)
"என் செயினும் தாயிற் சிறந்த தமரில்லை
"மனைக்கு விளக்கம் மடவார்"

என்றெல்லாம் இல்லறத்துக்குப் பெண்ணே பெருஞ்சிறப்பு சேர்ப்பவள் என்று ஒரு புறம் உயர்த்திப் பேசுதலும், அந்த மனையாளின் சொல் கேட்கலாகாது என்று ஒரு புறம் ஆடவர்க்கு அறிவுரை பகர்தலும் நோக்க பெண் ஒரு பதுமையாக எந்திரமாக, முற்றிலும் ஆணைச் சார்ந்த, அதிகம் சிந்திக்கச், செயல் பட, சம்பாதிக்கத் தேவையில்லாத ஒரு ஜடப் பொருளாக நினைக்கப்பட்ட போக்கையே தெளிந்தறிய முடியும்.

## இருட்பார்வையில் ஓர் அருட்பார்வை

பெண்களைப் பற்றிய மேற்கண்ட கண்ணோட்டங்களுக்கிடையில், பொதுவாக பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுக்கபடும் கருணைக் கொடையில் பெண்களும் பயன்பெறுகின்றனர்.

அநாதைக்குழந்தை, சூலுற்றகன்னி கணவனை இழந்தோர் இவர்களைப் பாதுகாக்கும் பரந்த மனப்பான்மை பேணப்படுகிறது

"ஈன்றெடுத்த சூல் புறஞ்செய்தல் குழவியை
ஏன்றெடுத்தல் சூலேற்ற கன்னியை ஆன்ற
அழிந்தாளை இல்வைத்தல்"

இவற்றைப் பேரறமாகப் போற்றுகின்றது திரிகடுகம். அத்துடன் மனைவியை அடித்து நொறுக்கும் ஆண்களைப் பேடியராகச் சாடுகிறது அறஇலக்கியம்.

"கல்லார்க் கினனாய் ஒழுகலும் காழ்கொண்ட
இல்லாளைக் கோலார் புடைத்தலும்
......
அறியாமையான் வருங்கேடு"

ஆடவன் தன் உடல் வலிமையைப் பயன்படுத்தி மனைவியை அடக்கி ஆள எண்ணுதல் ஓர் அறியாமை என்ற கருத்து இங்கு நன்கு தெளிவாக்கப்படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



''கற்புடையாளைத் துளத்தலும்
நற்புடையிலாளர் தொழில்'' (திரி 97)

எனுமிடத்து ஆதிக்க மனப்பான்மையில் மனைவியை வீட்டை விட்டுத் துரத்தும் ஆடவரைச் சாடுகிறார் ஆசிரியர். மேலும்

''பெண்டிர் ......
தொடுத் தாண்டவைப் போர் புகலும்
காண அரிய'' (திரி 71)

என்பதனால் பொதுவாகப் பெண்கள் அவையிற் புகுந்து நீதி கேட்டல் வழக்கமில்லை எனக் கூறப்படுகிறது. எனினும் இவ் வழக்கு அருகியது என்றே கொள்ள வேண்டும். பொறுத்தாலும் முற்றிலும் பொங்கியெழாப் பெண்மையை எக்காலத்தும் காண-வியலாது. இவ்வழக்கு இருந்தமை குறித்தே அருகிய வழக்கு என்றார். விலங்கினைத் தகர்த்த வீரங்கனைகளும், அடிபட்டுச் சிலிர்த்த பெண்புலிகளும் இல்லாதிருப்பரோ?

**அகப்பாடல்களே அகப்-பாடல்கள்:**

அறவூழிப் பாடல்கள் யாவற்றிலும் நூலாசிரியர்களே பேசினர். வாழ்க்கை அறம், நெறி, செய்வது, செய்யத்தகாதது என்றே பேசினர். இதில் பெண்களைப் பற்றிய செய்திகளைக் கூறினார்களே தவிர, பெண்களின் அகவுணர்வுகள், அனிச்ச இதயங்கள், ஆக்ரோஷ சிலிர்ப்புகள் இவற்றைக் காட்ட இயல-வில்லை. ஆனால் அகப்பாடல்கள் அனைத்தும் பெண்ணின் மன-வுணர்வுகளைப் பேசுகின்றன.

பரத்தையிற் திரியும் தலைவனைத் தலைவி நன்கு அறிந்-திருக்கிறாள். ''மாணிழை நல்லார் இள நல முண்டவள் மேனி-யொழிய விடும் பண்டு போல'' (திணை மாலை ஐம்பது-35)

''கரும்பின் கோதாயினேம் யாம்'' என்று சக்கையாய்ப் பிழியப்பட்டு அவனால் தூக்கியெறியப்பட்ட நலமிழந்ததன் மேனியின் மனத்தின் நிலையை உரைக்கிறார்கள் பெண்கள். தோழியின் மறுமொழியொன்று எதார்த்தப் பேச்சாக அமைந்-துள்ளது.

''நொந்தால் மற்றுன்னைச் செயப்படுவதென்னுண்டாம்'
(தி. மா. நா. 36

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்கிறாள் தோழி. நலமிழந்த பின் நீ நொந்து கொள்வதில் பயனென்ன? ஆகப் போவதென்ன? என்று வேதனையுடன் கூறு கிறாள் தோழி.

''பெண்ணென்று பூமிதனில் பிறந்துவிட்டால் மிகப்
பீழையிருக்குதடி தங்கமே தங்கம்''

என்னும் பாரதிக் கண்ணம்மாவின் ஆதங்கம் இந்தத் தோழியிடம் காணப்படுகிறது. ஆனால் ''தூற்றி நகர் முரசு சாற்றும்'' ஆக்ரோஷப் பெண்ணின் புரட்சிச் சித்திரிப்பு இதிலும் காணப்படவில்லை.

அறவூழியில் பெண்டிரைப் பற்றிய செய்திகள் பல இருப்பினும் அவை யாவும் இல்லறத்தோடு மட்டுமே அவர்களைத் தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ளன. பொதுவாழ்வில் மகளிர் பங்கேற்கும் கருத்துக்கள் இல்லை. இல்லறம் அமைதியாக இனிது நடைபெறப் பெண்ணே பெரிதும் பொறுப்பேற்க வேண்டும் என்ற நியதி அறவூழிப் பெண்கள் மேல் சுமத்தப்பட்டிருக்கிறது. அறவூழிக்கு முந்தைய போரும் பொழுதுபோக்குகளும் மிகுதியாகப் பாடப்பட்ட அனுபவம்; அவற்றின் விளைவுகளைச் சுமந்த வேதனை இவற்றின் காரணமாக, அமைதியை நாடும் வாழ்க்கை, பிரச்சனைகளற்று வாழும் ஓர் ஆசை இவற்றைப் பாடும் மனநிலையை இந்த அறவூழிக்காலப் புலவர்கள் வெளிப்படுத்தி இருக்கலாம். ஆனால் இதற்காக அஞ்சுவதும் அடக்குவதுமாய் ஓர் வாழ்க்கை மட்டுமே பெண்ணுக்குரியதென்று காட்டப்படுவது, காலங்காலமாய் இருக்கும் பெண்ணடிமைத் தனத்தைக் காட்டுவதாகும். நீதி நூல்களுக்கு இது ஓர் அநீதி ஆகும்.

பொதுவாகவே பல பாடல்கள் அணியிழாய், விளங்கிழை என்று பெண்களை விளித்துக் கருத்துக் கூறுவதாக அமைந்துள்ளன. சொல்லப்படும் கருத்துக்கும் பெண்களுக்கும் பாடலில் ஒரு தொடர்பும் இல்லையெனினும் பெண்களை விளித்துப் பாடல்கள் கூறப்பட்டதன் நோக்கம் விளங்கவில்லை. எந்தக் கருத்தையும் பெண்கள்தான் கேட்பார்கள் என்ற நினைப்போ அல்லது சந்தநயம் கருதியோ இந்த விளைச் சொற்கள் பரவலாக வருகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# பழமொழி - பழ மொழி

## பழமொழி — ஒரு விளக்கம் :

பழமொழிகள் என்பவை பல காலந்தொட்டுப் பேச்சில் வழிவழியாக வழங்குபவை. இவை கால, இடச்சூழல் பொருத்துப் புதிது புதிதாகத் தோன்றுபவை. இவற்றை ஆக்கியோர் இலக்கிய வாதிகளோ பண்டிதர்களோ அல்லர். பாமர மக்கள். எந்தப் பொய்ம்மைச் சேர்க்கையும் இல்லாமல் இயல்பாகப் பிறக்கும் இவை, பழமைக் கருக்கு மாறாமல் யதார்த்த நிலையின் வெளிப் பாடாகத் திகழ்கின்றன.

## பழமொழிகளும் பெண்களும் :

பழமொழிகளில் பெண்ணடிமைக் கருத்துக்களின் வெளிப் பாட்டை விவரிப்பதே இக்கட்டுரையின் மைய நோக்கமாகும். அதற்குத் துணைபோகும் அளவிலே மற்றொரு வாய்மொழி இலக்கியமாகிய நாட்டுப் புறப்பாடல்கள் கையாளப்பட்டுள்ளன.[1] பழமொழிகளும் நாட்டுப்புறப் பாடல்களும் தொகுப்பாக அச்சில் வந்துள்ளன. அவற்றில் ஆறு நூல்கள் மட்டும் ஆய்வுக்குப் பயன் படுத்தப் பெற்றுள்ளன. நமது சமுதாயத்தில் வேரூன்றிப் போய் இருக்கும் பெண்ணடிமைத்தனத்தை நமது இலக்கியங்கள் யாவும் நமக்கு உணர்த்துகின்றன. பழமொழிகளும் இதற்கு விதிவிலக்கல்ல என்பதைக் காணலாம்.

---

1. பூவை எஸ். ஆறுமுகம் — பகுத்தறிவுப் பழமொழிகள் அழகுப் பதிப்பகம் காரைக்குடி—நவ. 1967

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



**பெண்களும் - சொத்துரிமையும் :**

'தாயிற் சிறந்த கோயில் இல்லை', 'தொட்டிலாட்டும் கை தொல்லுலகை ஆளும் கை' என்ற பழமொழிகளில் 'தாய்மை' என்றும் தெய்வம் என்றும் பெண்மை ஒரு புறம் போற்றப் பட்டாலும், பிறப்பிலேயே உயர்வு தாழ்வு கருதும் சாதிப்பாகு பாடு போல பிறப்பிலேயே பெண்பிறவி இழிவென்று கருதும் மனப்பான்மையும் வேரூன்றி உள்ளது. வரவுக்கு ஆண் செலவுக்கு பெண் என்பதே இங்கு உணரப்படுகிறது.

"களங்கா பள்ளத்திலே காசை வெதச்சாலும்
காசெடுக்கப் பிள்ளையுண்டு
கருமம் தீர்க்கப் பிள்ளையில்லை"[2]

என்கிறது நாட்டுப்புறப்பாடல். (தொகுப்பு நா. வா.)

"ஆஸ்திக்கொரு ஆண் குழந்தை
ஆசைக்கொரு பெண் குழந்தை"[3]

என்ற பழமொழி பரவலாக இருக்கிறது சொத்துக்கு வாரிசு ஆண் குழந்தையே என்பதே மனமறிந்த உண்மையாக இங்கு நிலவுகிறது. சட்டப்படி இப்போது பெண்களும் சொத்துரிமை உடையவர்கள் எனினும் பெற்றோர் செய்த சீர் மட்டுமே பல பெண்களுக்குப் போய்ச் சேருகிறது. சொத்துரிமை பெண்களுக்கும் உண்டு என்ற பிரக்ஞையே பலரிடம் இல்லை.

"ஆணாகப் பொறந்திருந்தா
அப்பன் வீட்டு அரண்மனையில் பங்கெடுப்போம்
பொண்ணாப் பொறந்த குறை

கோட்டையிலே பொண் பொறந்தாலும்
போட்ட புள்ளி தவறாது"[4]

---

2. தங்கவியல் லோகிதாசன் — உலகப் பழமொழிகள் தங்கவயல் பதிப்பகம் சென்னை-35 முதற்பதிப்பு—1982
3. நா. வானமாமலை — தமிழர் நாட்டுப்புறப்பாடல்கள் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பதிப்பு—2 1977
4. டாக்டர் சு. சண்முகசுந்தரம் — தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



எவ்வளவு செல்வம் இருந்தாலும் பெண்ணுக்குப் பிறந்த வீட்டில் உரிமை இல்லாத நிலையைத்தான் நாட்டுப் புறப் பாடலும் உணர்த்துகிறது.

### கல்வி மறுப்பு

'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்ற பழமொழி கல்வியை மறுத்துப் பெண்ணைச் சமையற்கட்டுக்கும், கணவன் பணிக்கும், பிள்ளைப் பேற்றிற்கும் மட்டுமே உரியவளாக்கியது. "பெண் சந்ததி தேடும் பண்ணை" என்று கருதப்பட்டு 'பேதமை என்பது மாதர்க்கணிகலன் என்று நினைக்கப்பட்டபின் பெண்ணுக்குக் கல்வியறிவு தரும் சிந்தனை எங்கே முளைக்கும்'?

### பெண் அலங்காரப் பொருள்

"மகள் வருவதற்குள் போட்டுப்பாரு
மருமகன் வருவதற்குள் தின்று பாரு'
"பெண்ணுக்குப் பொன் இட்டுப்பார்
சுவருக்கு மண் இட்டுப்பார்"
'பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும்'[5]

இவையாவும் பெண் என்றால் நகை, துணி இவற்றைத் துய்ப்பதற்குரியவர்கள் என்பதையும் தங்கத்தினால் பெண்ணின் தரத்தை உயர்த்தலாம்என்ற நினைப்பையும் காட்டுகிறது.

"பெண்கள் வெறும் அலங்காரத்தோடு திருப்தியடைந்து விடுகிறார்கள் அல்லது திருப்தி செய்யப்பட்டு விடுகிறார்கள். எனவே இவர்களுக்கு விடுதலை வேட்கை பிறப்பது அரிதாயிருக்கிறது"[6] என்று பெரியார் கூறுவது உண்மையே. பெண்களை ஒப்பனை விரும்பிகளாக வளர்ப்பதோடு, வீட்டுக்கு அலங்காரம் என்றும் விற்பனைக்குரிய பொருள் என்றும் தான் கருதுகிறோம்

5. சா. வளவன் — ஒப்பாரிப்பாடல்கள்
6. ஈ. வே. ரா. பெரியார் — பெரியார் பொன்மொழிகள் பக். 50

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



## கட்டில்லாக் கட்டுப்பாடு

பெண்கள் அழுதாலும், சிரித்தாலும் குற்றம் பார்க்கப் படுகிறது. பேசினால் வாயாடி, பேசாவிட்டால் ராங்கிக்காரி, சிரித்தால் 'பொம்பளை சிரிச்சாப் போச்சு', அழுதால் 'நீலிக்குக் கண்ணீர் நிமையிலே' என்ற ஏச்சு. உணவில் கூட ஒரு பாகு பாடு. 'உண்டி சுருங்கல் பெண்டிர்க்கழகு' என்ற போதனை. நோன்பும் பசிவருத்தமும் காலமெல்லாம் பெண்களுக்கே. பெண்ணின் உடல் வளர்ச்சியில் அறிவு வளர்ச்சியில் அக்கறை காட்டாத சமூக அமைப்பைக் காண்கிறோம். இவை வெறும் உணவுப் பிரச்சனை அல்ல. உணவுப் பிரச்சனை, உளவியல் பிரச்சனை, சமூகப் பிரச்சனை.

## பெண்ணும் — எதிர்பேச்சும்

பெண் எதிர்வழக்காடுதல் விரும்பப்படுவதில்லை.

''பேசுவது என்பது பெண்களின் வழக்கம்''.

கோணல் இல்லாத தென்னை மரத்தையும் விவாதத்தில் சளைக்கும் பெண்ணையும் காண்பது அரிது.

'பெண்ணுக்கழகு எதிர்பேசாதிருத்தல்'
'பேதமை என்பது மாதர்க்கணிகலன்'

இப்படிப் பல பழமொழிகள். 'பெட்டைக் கோழி என்றால் தட்டிக் கூவுமா' அதனால் விதியே என்று வீழ்ந்து கிடக்க வேண்டுமேயன்றி, எந்தக் கொடுமைக்கும் எதிர்ப்புக்குரல் கொடுக்கக் கூடாது என்பதே எதிர்பார்ப்பு.

''ஊமையான மனைவி அடிபடுவதே இல்லை' என்று எதிர்த்துப் பேசாமைக்கு ஒரு நன்கொடை. எதிர்த்துப் பேசாத வரைக்கும், தன்னுடைய 'self' தான் என்ற தனித்துவத்தைக் காட்டாதவரைக்கும் உரக்கச் சிந்திக்காத வரைக்கும் பெண்ணுக்கு அடிமைச் சுகம் கிடைக்கும் என்று இப்பழமொழிகள் உணர்த்து கின்றன.

## கற்புக்கோட்பாடு

ஆணுக்கு அல்லாமல் பெண்ணுக்கு மட்டும் கற்பு நிலை குறித்துப் பத்தினி, பரத்தை போன்ற வகைப்பாடுகளும், வழக்கி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



விழுந்தவள், எச்சில் பழம், சரக்கு போன்ற தொடர்களும் வழக்கில் உள்ளன. இவற்றிற்கு நேரான ஆண்பாற் சொற்கள் இல்லை

''பத்து வராகனுக்கு மிஞ்சிய பதிவிரதை இல்லை
தேளுக்குக் கொடுக்கில் விஷம் தேவடியாளுக்கு
உடலெல்லாம் விஷம்''

''தேவடியாள் மகன் திவசம் செய்தானாம்'' போன்ற எத்தனையோ பழமொழிகள்! பரத்தையர் வீதியில் பல திறத்து ஆடவரும் 'உலா' வருபவர். ஆனால் பழியெல்லாம் பெண்களுக்கே. 'எத்தனை பேர் பற்றி இழுத்த இதழ்' என்ற பட்டினத்தார் வரிக்கு இலக்காகும் எந்தப் பெண்ணுக்கும் உடலாலும் உள்ளத்தாலும் புண்படச் சம்மதமிருக்காது. சகதியிலிருந்து எழச் சமூக அங்கீகாரம் கிடைக்காது அழும் பெண்களே மிகுதி. இன்றைக்கும் குலமகளிர் பாதுகாப்பாக வாழச் சிவப்பு விளக்குப் பகுதிகள் வேண்டும் என்று வாதிடுவோர் உண்டு. இது யாருடைய வசதிக்காக? சகதியிலே ஒரு சமூகம் அமுங்கி அழிய வேண்டும் என்பது என்ன நியாயம்? அவளுக்கென்று ஒரு மனமோ, மார்க்கமோ கூடாதென்ற எதிர்பார்ப்பு எவ்வளவு கொடுமையானது.

## கணவனை இழந்த பெண்ணின் நிலை

''ஆளன் இல்லாத மங்கைக்கு அழகு பாழ்'' என்கிறது பழமொழி. ஆளனில்லாத மங்கைக்கு அழகு பாழானது என்பதை விட பாழடிக்கப்பட்டது என்பதே உண்மை.

'கொண்டவரைத் தோத்தேன் எனக்குக்
கொழுந்துமேல் ஆசையுண்டோ.'
'சீமானைத் தோத்தேன் — எனக்குச்
செவந்திமேல் ஆசையுண்டோ' (தொகுப்பு. நா. வா.)

என்கிறாள் ஒப்பாரிப் பாடலில் ஒரு பெண். கணவன் இறந்தவுடன் அவளுடைய சின்னச் சின்ன ஆசைகளும் இறந்துவிட வேண்டியது தான் என்ற சமூகச் சட்டத்தைக் காண்கிறோம்.

'பட்டுக் கழட்டி வச்சேன்
பாதம் வரை வெள்ளையிட்டேன்
சிகப்பு கழட்டி வச்சேன் — என்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



தேகமெல்லாம் வெள்ளையிட்டேன்'
(தொகுப்பு. நா. வா)

என்று புறக்கோலம் சிதைக்கப்பட்டதை ஆற்றாது ஒரு பெண் உரைக்கின்றாள். ஒரு மரணத்தைப் பெரிதுபடுத்திக் கருதிக் கருதிக் கவலைப்படும் சூழலைப் பெண்களுக்கு மட்டும் உண்டாக்கி விட்டிருக்கின்றனர்.

'தாயிலே கெட்டவருமில்லை
சாவிலே நல்லதுமில்லை'

என்பதற்கேற்ப எந்தச் சாவும் கொடியது தான். ஆனால் ஆளன் இல்லாத துக்கம் அழுதாலும் புரண்டாலும் ஆறாது என்று கூறப்பட்டதற்குக் காரணம். பெண்ணுக்கு வேறு பற்றுக்கோடு. பொருளாதாரப் பாதுகாப்பு ஆகியவை இல்லாமற் போகின்ற நிலையைக் குறித்தே ஆதம். "கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்" என்றார்கள். கணவனை இழந்த பெண்ணுக்குத் தான் மூன்று வகைக் கற்பும் முந்தானையில் முடியப்பட்டது. இதனை அடித்துப் புரட்ட

'கற்பு நிலையென்று சொல்ல வந்தார் இரு
கட்சிக்கு அது பொதுவில் வைப்போம்'

என்று ஒரு பாரதி குரல் கொடுக்கத் துணிய வேண்டியிருந்தது

'தாலியறுத்தவளுக்கு மருத்துவச்சி தயவேன்'

என்பது ஒரு கொடுமையான பழமொழி. அவளுக்கு வாழ்வு தேவையில்லை என்ற சமுதாய நினைப்பையே இது எதிரொலிக்கிறது. அந்த நினைப்பிற்கேற்பவே கைம்மை நோன்பு நோற்றும், கணவனது ஈமத்தீயில் வீழ்ந்தும் இறந்துபட்டிருக்கின்றனர் மகளிர். ஒரு சமுதாய மதிப்புக் கருதியும், சந்திக்க வேண்டி இருக்கும் அவலங்களை விலக்கக் கருதியும்தான் மகளிர் இந் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

கைம்பெண்களின் அவலம் அவர்களின் பெண் குழந்தைகளையும் தாக்கியுள்ளது.

'விதவையிடம் பெண் கொள்ளாதே' என்று ஒரு பழமொழி. 'தையல் சொல் கேளேல்' என்பதே வேதவாக்காக இருந்த சமுதா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



யத்தில் ஒரு தையலால் வளர்க்கப்பட்ட பெண் எங்ஙனம் மதிப்புப்பெற முடியும்? ஒரு தந்தைக்கு அடிமையாக வளரும் வாய்ப்பு இல்லாத பெண், கணவனுக்கு அடங்கி இருக்கமாட்டாள் என்ற தயக்கமும், பெண்ணோடு நிறைய பொருள் சீதனமாகக் கிடைக்காது என்ற மனக்குறையும் காரணமாக இருக்கலாம்.

## பிற செய்திகள்

பழமொழிகளில் உழைக்கும் பெண்கள் பற்றிய குறிப்பு இல்லை. சொத்துரிமையும் வருமானமும் இவர்களுக்குக் குறிக்கப் பெறவில்லை.

'தண்ணி கருத்திடிச்சு தவளச்சத்தம் கேட்டிருக்கு
புள்ளை அழுதிருக்கு புண்ணியரே போகவிடு'
(தொகுப்பு. சு. சண்முகசுந்தரம்)

என்கிறாள் நாட்டுப்புறப் பாடலில் ஒரு பெண். கைக்குழந்தையை விட்டு விட்டு வேலைக்கு வந்திருக்கும் பெண்ணுக்குக் கூலி கொடுத்து அனுப்பாமல் காலந்தாழ்த்துகிறான் முதலாளி. உழைப்புச் சுரண்டல் இங்கு நன்கு சித்திரிக்கப்படுகிறது.

பெண் தலைதூக்குவதைப் பெண்களே விரும்பாத நிலையைக் காண்கிறோம். அடிமை நிலையிலுள்ள பெண்களுக்கு இந்த மனத்தத்துவம்தான் பொருந்துவது எதனாலோ? மகன் செத்தாலும் பரவாயில்லை. மருமகள் கொட்டம் அடங்கினால் சரி என்றி கருதியுள்ளனர். 'மனைவி சற்று ஏறுக்கு மாறாக இருந்தாலும் கூறாமல் சந்யாசம் கொள்' என்று உரைத்தவர்கள், அதே போல் மனைவிக்கு ஓர் அறிவுரை கூறவில்லை.

பெண்களுக்கு உரிமை மறுக்கப்பட்டுப்பல துறைகளில் அவர்களை வாழ விடாமல் ஒதுக்கிவிட்டு, 'பெண்ணென்றால் பேயும் இரங்கும்' என்ற கழிவிரக்கம் காட்டப்படுகிறது.

'சேலை கட்டிய மாதரை நம்பாதே'
'பெண் மனிதனின் குழப்பம்'
'பெண்கள் சாத்தானின் சாட்டைகள்
ஆலதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இதுபோல் பெண்களை மட்டந்தட்டும் பழமொழிகள் பல உள்ளன. இவையெல்லாம் பெண்ணை ஆபத்தானவள் என்று நிருபித்து மேலும் அடக்குவதற்குத் தூண்டுபவை ஆகும்.

முடிவுரை

பெண்களின் நாவிலேயே மிகுதியாகப் புறளும் பழமொழிகள் பெண்களின் நிலையை மனநிலையை அதனால் சமூக நிலையைப் போலித்தனமின்றி, மறைத்தலின்றி வெளியிட்டு உள்ளன. பெண்ணடிமைத்தனம், பெண்களுக்கு மட்டும் அல்ல, ஆண்களுக்கும் சாபக்கேடு, அது சமுதாயச் சாபக்கேடு. இன்றைய நாளிலும் இந்தப் பழமொழிகள் வழக்கில் உள்ளன. எனினும் சமுதாயத்தில் ஓர் சிந்தனை மாற்றம் தோன்றத் தொடங்கி உள்ளதையும் மறுக்க முடியாது. கேளிக்கைக்காக மட்டுமின்றிக் கோரிக்கைக்காகவும் பெண்கள் மேடையேறத் தொடங்கி உள்ளனர். சமுதாய நிந்தனையை நிராகரித்து விட்டுக் கைவிடப் பட்ட மகளிரும், கொடுமைக்கு ஆளாகும் மகளிரும் சட்டத்தின் துணை தேடத் தொடங்கியுள்ளனர். இயக்கங்கள் பல தோன்றி வழிகாட்டத் தொடங்கியுள்ளன. பெண்ணுக்கும் பொருள் உற்பத்தியில், நிர்வாகத்தில், நிர்ணயத்தில், பங்கு வந்து, அவளும் மதிக்கப்படும் சுரண்டலற்ற சமுதாயத்தில்தான் பெண்ணடிமைத் தனம் நீங்கும். இவை வெறுமனே எடுத்தியம்பல்களாக (Statement) வெளிவந்திருக்க முடியாது. இவை அந்தச் சமுதாயத்தின் துக்கம், ஏக்கம் அத்துறையின் வெளிப்பாடும் தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# புதுக்கவிதை — புதிய விதை

## தமிழ் இலக்கியப் போக்கு

இலக்கியம் என்பது காலங்காலமாகக் கலாச்சாரத்தின், வாழ்க்கை முறையின், வாழ்நிலைகளின், சமூக எதிர்பார்ப்புகளின், கட்டுக்களின் பிரதிபலிப்பாக இருந்திருக்கிறது. அதனால் தான் இதனைக் 'காலங்காட்டும் கண்ணாடி' என்று திறனாய்வாளர்கள் விளக்கியுள்ளனர். இருப்பினும், வாழ்க்கை வேறு, இலக்கியம் வேறு. வாழ்க்கை உருவம் என்றால், இலக்கியம் பிம்பம் எனலாம்.

உலகில் தோன்றிய எந்த மொழி இலக்கியத்திலும் தொன்மையான இலக்கிய வகையாகப் பெரும்பாலும் கவிதையே இருந்திருக்கிறது. இலக்கிய வளர்ச்சி என்பதே, கவிதை வளர்ச்சியாகத் தான் பெரும்பாலும் அனைத்து மொழியிலும் இருந்திருக்கிறது.

தமிழ் இலக்கியமும், ஈராயிரம் ஆண்டுக்காலப் பாரம்பரியம் கொண்டது. இதனாலேயே இது மரபில் ஊறிய பழைமையும் மிகுந்தது. மரபு என்பதனால் இலக்கிய வகைகளிலோ, பாடு பொருளிலோ மாற்றமே காணாதது என்று கூற இயலாது. தமிழில் சங்க இலக்கியம், நீதி இலக்கியம், காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், நாட்டுப்புற இலக்கியம் என்று இருபதாம் நூற்றாண்டு வரை இலக்கிய வரலாறு தொடர்ந்தது. இவை யாவும் கவிதைப் போக்கிலே வளர்ந்த செய்யுள்களே. இருப்பினும் இருபதாம் நூற்றாண்டில் தான் இலக்கிய வரலாற்றில் ஒரு சிந்தனைப் பொறி தோன்றியுள்ளது. உள்ளதையும் சொல்லி விட்டு, உணர்ந்ததையும் சொல்லிவிட்டு ஒரு சமூக மாற்றச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



சிந்தனையையும் கிளப்பி விடும் நோக்கமும் போக்கும் இன்றைய கவிதைகளில்தான் தோன்றியுள்ளது. விடுதலைப் போராட்டத்தின் விழிப்புணர்வுடன் தான், தமிழ் இலக்கியத்திலும் இந்த மாற்றம் நிகழ்ந்தது.

## இருபதாம் நூற்றாண்டுக்கு முந்தைய இலக்கியங்களில் சமுதாயப் பிரச்சினைகள்

முந்தைய இலக்கியங்களில் சமுதாயப் பிரச்சினைகள் கூறப்பட்டனவா என்ற வினாவிற்கு இடமில்லை. வறுமை, சாதீயம், அரசியல் நிலை, போர், அழிவு இவை யாவும் இயம்பப்பட்டன. நேரடியாகவோ மறைமுகமாகவோ இவற்றின் சித்திரிப்புகள் இருந்தன. ஆனால் அவை பிரச்சினைகளாகக் கருதப்பட்டதற்கான சான்றாதாரங்கள் இல்லை. பிரச்சினை என்பது பாதிப்பு உடையது. தீர்க்க வேண்டியது வெறும் தோற்றமாக இல்லாமல் காரணம் அடிப்படையில் வேறெங்கோ ஆழத்தில் கொண்டது. ஆணி வேரை அசைக்காமல் அகலாதது. இந்த அசைப்பிற்கு ஒரு பெரும் சக்தி தேவை. இந்தச் சக்தியைத் திரட்டும் விழிப்புணர்வுப் பணியைத்தான் இலக்கியம் செய்ய வேண்டும். இந்தப் பணியைப் பண்டைய இலக்கியங்கள் செய்தன என்று கூற இயலாது. அவை அன்றைய எதிர்பார்ப்பிற்கேற்ற இலக்கியமாகத் திகழ்ந்தன. அதில் நிறைவடைந்தன. மன்னனுக்கும் மகேசனுக்கும் பாட வேண்டிய சூழலில் அவை தோன்றின. அந்தச் சூழலின் தாக்கம்தான் பிரச்சினைகளின் ஆணி வேரை அலச முடியாமல், உணர்த்த முடியாமல், அவர்களைக் கட்டிப் போட்டிருக்கலாம். வள்ளுவர் மட்டும் மரபுப் பார்வையிலிருந்து மாறுபடுகிறார். சுய சிந்தனையும், உலகளாவிய பார்வையும், வாழ்க்கை பற்றிய பரந்த கண்ணோட்டமும் வள்ளுவமாகத் திகழ்ந்தது. மனிதத் தன்மைகளைக் கூர்ந்து நோக்கிப் பாடும் திறனும், மக்களைச் சார்ந்ததாக இலக்கியத்தை உணர்த்தும் எண்ணமும் வள்ளுவரிடம் இருந்தன. வள்ளுவரையும் திறனாய்ந்தால் இன்றைய சிந்தனை மட்டத்தில் பிற்போக்குக் கருத்துக்கள் சில தெரியலாம். ஆனால் அடிப்படையில் வள்ளுவர் மானிடம் பாடும் மனப்பான்மை உடையவராக இருந்தார். சமுதாய நோக்கமும் பிரச்சினைத் தீர்வுச் சிந்தனையும் உடையவராகத் திகழ்ந்தார்.

கம்பரின் கவித்துவம் மகத்தானது. ஆனால் அவரின் கருத்தியலோ வடமொழிக் கவிதையைத் தமிழாக்கம் செய்வதில்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



பண்பாட்டைக் காக்கும். எண்ணத்தில் விரயமானது. எதார்த்-தத்திற்கு வர முடியாத எல்லையிலேயே இலக்கியத்தை நிறுத்தி விட்டவர் கம்பர்.

முந்தைய இலக்கியங்களின் தன்மையிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தது நாட்டுப்புற இலக்கியம். இது பாமரர் சார்ந்த இலக்கியம். பொதுமக்கள் சார்ந்த இலக்கியம் என்பது இத்தன்-மைத்து என்றுரைக்கப்பட்ட எதிர்பார்ப்புகளின் மிச்சங்கள் உள்ளன. பிரச்சினைகளைப் பேசும் எண்ணம் எழுந்திருக்கிறதே தவிரத் தீர்க்கும் உணர்வு வெளிப்பாட்டை இவ்விலக்கிய வகையில் மிகுதியாகக் காண இயலாது.

## இருபதாம் நூற்றாண்டு இலக்கியத்தில் சமூகப் பிரச்சினைகள்

இருபது நூற்றாண்டுகளின் இத்தகைய மரபுப் போக்கிலிருந்து முற்றிலும் மாறுபட்ட முதல் இலக்கியவாதி பாரதிதான். பாரதி மகாகவி. நமது நூற்றாண்டின் கோபாக்கினி. சோதி மிக்க நவகவிதை யாத்ததால் மட்டுமின்றிப் பாட்டுத் திறத்தால் வையத்தைப் பாலித்திட விழைந்த விருப்பத்தாலும், பறையருக்கும் புலையருக்கும் விடுதலையை வேண்டிய புதிய கண்ணோட்டத்தாலும், மண்ணில் யார்க்கும் யாரும் அடிமை-யாகாத நிலையை விரும்பிய நோக்கத்தாலும், மானுடம் பயனுற வாழ்வதற்கே வாழ விரும்பிய மனித உணர்வாலும், பாரதி மாறுபட்டுத் திகழ்ந்தான். சொல்லும் சுவையும் மட்டுமின்றிக் கவிதையின் பாடுபொருளே புதிதாகச் செய்தவன் பாரதி. விடுதலை என்ற சொல்லின் விளக்கத்தை உணர்வாக வடித்தவன் பாரதி.

சமுதாயப் பிரச்சினைச் சித்திரிப்பில் பாரதியைப் போலவே பாரதிதாசனும் முதலிடம் பெறுகின்றார். மக்கள் எழுச்சியைப் பற்றிய கண்ணோட்டம் மட்டுமன்றித் தொழி-லாளர் எழுச்சி பற்றிய சிந்தனை முதன்முதலில் கனன்றது இவரிடம்தான். ஓடப்பராயிருப்பவர் உதையப்பராகும் எண்-ணத்தை விதைத்தவர் இவரே. ஒப்பொப்பராகும் நிலையைச் சிந்தித்தவரும் இவரே.

எந்தக் கவிஞனின் எழுத்திலும் பழுதிருக்க வாய்ப்புண்டு. அந்த வகையில் பாரதியும் பாரதிதாசனும் கூட விமர்சிக்கப் பட்டிருக்கலாம். ஆனால், இன்றைய கவிதையுலகம், இவ்விரு-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



வரின் அடிச்சுவடு பற்றித் தொடர்ந்ததும், அதனின்று கிளைத்ததுமே ஆகும்.

### புதுக்கவிதைத் தோற்றச் சூழல் — உலக அரங்கில்

மரபுக் கவிதையிலிருந்து பிரித்தெடுத்து, வசன கவிதை என்றொரு வகையினைத் தமிழுக்கு முதன்முதலில் அறிமுகப் படுத்தினார் பாரதியார். கவியரசர் தாகூர், இக்பால் ஆகிய இந்தியக் கவிஞர்கள் பாரதியின் இந்தப் புது முயற்சிக்கு வித்திட்டவர் புதுக்கவிதையின் முதல் நிலையே வசனகவிதை.

இந்திய மண்ணிலும், தமிழ்நாட்டிலும் புதுக்கவிதை தோன்றுவதற்கு, உலகச் சூழலின் மாற்றமும் ஒரு காரணம் பிரெஞ்சுப் புரட்சியின் பாதிப்பு உலகெலாம் ஒரு சிந்தனைத் தாக்கமாக உருவாகியது. ருஷ்யப் புரட்சியின் மக்கள் எழுச்சி உலகிற்கெல்லாம் ஒரு பாடமானது. அப்போது எல்லாத் தேசியக் கவிஞர்களுக்கும் புதிய செய்திகளைப் புதிய வடிவத்திலே தர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்த மாற்றத்தைத் தமிழில் முதலில் வாங்கி வழங்கியவர் பாரதியார்தான். அதனால்தான் புதுக்கவிதையின் தோற்றம் ஒரு சமுதாயத் தேவையால், மாற்றத்தால் முகிழ்ந்தது என்கின்றோம். “உலக இலக்கிய அரங்கில் புதுக்கவியின் தோற்றம் தொழிற்புரட்சியையும், அறிவியல் வளர்ச்சியையும், பின்னணியாகக் கொண்டது”[1] என்பதை டாக்டர். இ. மறைமலை தெளிவுறுத்துகிறார். முதலாளித்துவ எதிர்ப்பு உணர்வு, உலகளாவியும் நமது மண்ணிலும் பரவத் தொடங்கிய போது, ‘சோசலிஸ்ட் யதார்த்தவாதம்’ (Socialist Realism) முற்போக்கு எழுத்தாளர்களிடையே வேர் விடத் தொடங்கியது.

நிலவுடமைச் சமுதாய எதிர்ப்பு, முதலாளித்துவ எதிர்ப்பு என்ற கொள்கைகள் உலக அளவிலே பரவத் தொடங்கியபோது, அவை உலக இலக்கியங்களிலும் எதிரொலித்தன. அதனால் கலைப்படைப்புக் கொள்கைகளில் தோற்றமே வரலாற்று மாற்-

---

1. மறைமலை, சி.இ., புதுக்கவிதையின் தேக்க நிலை, ப. 19.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



றங்களோடுதான் நிகழ்ந்திருக்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டில் இது உச்ச நிலை அடைந்தது. உலக அளவில் இலக்கியக் கொள்கை மாற்றங்களைக் கொண்டு வந்தவர்களில் குறிப்பிடத் தகுந்த முன்னவர்கள், பெட்ரார்க், ஷேக்ஸ்பியர், தாந்தே, பேக்கன் போன்ற இலக்கியவாதிகள் ஆவர். பின்னவர்கள் தாமஸ்மூர், காம்பனெல்லா, ராபர்ட் ஓவன், செயின்ட் ஸைமன் முதலியோராவர்[2] என்று பேராசிரியர் நா. வானமாமலை சுட்டிக் காட்டுகிறார்.

1789-இல் நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சி ஐரோப்பாவிலும், இன்னும் பல நாடுகளிலும் விடுதலைப் போராட்ட உணர்வினைக் கிளப்பியது. பிரெஞ்சுப் புரட்சியின் வெற்றி இருவகை இலக்கியவாதிகளை உருவாக்கியது. நிலவுடைமைச் சமுதாயத்தையும் தனிமனித ஆக்கிரமிப்பையும் எதிர்த்த புரட்சியாகிய பிரெஞ்சுப்புரட்சியின் விளைவு, ஒரு முதலாளித்துவ அமைப்பில் முடிந்தபோது, அது அவநம்பிக்கைவாதிகள், புரட்சிகரக் கற்பனாவாதிகள் என இருவகைக் கவிஞர்களை உருவாக்கியது. மக்களைக் கண்டு அஞ்சி, மக்களை விட்டே விலகி ஓடி, எதிர்கால நம்பிக்கையற்றுத் தோல்வி மனப்பான்மையில் துவண்டு போனவர்கள் முதல் வகையினர். இரண்டாம் வகையினரோ[3] விடுதலையில் நம்பிக்கையுடையவர்கள். இவர்கள் பழமைப் போக்கைத் தகர்த்தெறியும் உருவகப் படைப்புகளைப் படைத்தவர்கள். இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் பைரன், ஷெல்லி, விக்டர் ஹிகோ, ஜார்ஜ் ஸாண்டு, சோபின் முதலியோராவர், என்றும் நா. வானமாமலை சுட்டுகிறார்.

உலக வரலாற்றுச் சூழலில் சமூக மாற்றத்தை விரும்பியவர்களிலும் கூட, மக்களின் புரட்சியாலும் அனைத்துத் தொழிலாளர் கூட்டு முயற்சியாலும் பல்வேறு நிலையில் உழலும் மனிதர்களின் விழிப்புணர்வாலும் ஒரு மாற்றம் சாத்தியம் என்று நம்பிய நம்பிக்கைவாதிகள் ஒரு புறமும், 'நாளை மற்று

2. வானமாமலை, நா., புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும், ப. 17
3. மேலது, ப. 18

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



மொரு நாளே' என்று இன்றைப் போலவே நாளையும் ஒரு கொடுமையானது என்று கருதிய, நம்பிக்கையிழந்த, விரக்தி மனப்பான்மை கொண்டவர்கள் ஒரு புறமுமாக இரு பிரிவு கிளைத்தது. வாழ்க்கை என்பது துன்பம் நிறைந்தது அதனை மாற்றி அமைத்துக் காண வேண்டிய உலகம் இனிமையானது. இந்த இனிய உலகம் ஒரு கற்பனை. இந்தக் கற்பனையை வெறும் கற்பனையே என்று கண்டவர்கள் இந்த அவநம்பிக்கை வாதிகள். அது எட்டமுடியாத உலகம் என்ற விரக்தியில் மனித நம்பிக்கை இழந்ததொடு அதற்கான போராட்டத்திலும் இவர்கள் நம்பிக்கை இழந்தனர். இவர்களின் தன்னலமே Existentialism' எனப்படும், இருத்தல்வாதக் கொள்கையாகும். ஆனால் மற்றொரு பிரிவினரோ சோகம் என்ற உண்மைக்கும், இனிமை என்ற எட்டவேண்டிய கற்பனை உலகிற்கும் இடையே உள்ள இடைவெளியைத் தீர்ப்பது எப்படி என்று ஆராய்ந்தனர். உழைக்கும் மக்களின் விடுதலையில்தான் இந்த முழுமையான விடுதலையை எட்ட முடியும் என்றும் முடிவு கண்டனர். இந்த முடிவுக் கொள்கையே மார்க்சியம் என்ற பெயரில் உலகம் எங்கும் நம்பிக்கை வளர்க்கும் இயக்கமாகத் துளிர்த்தது. இக் கொள்கையின் முதல் இலக்கியவாதி என்று மாக்ஸிம் கார்க்கியையும், முதல் இலக்கியம் என்று அவரது 'தாய்' என்ற புதினத்தையும் குறிப்பிடுகிறார்[4] பேராசிரியர் நா. வானமாமலை.

## தமிழக அரங்கில் புதுக்கவிதைத் தொடக்கம்

இத்தகைய உலக இலக்கியச் சூழலில் தோன்றிய இக்காலத் தமிழ்க் கவிதைகளின் வீரர்களான பாரதியும் பாரதிதாசனும் உலகளாவிய பார்வை, புரட்சிக் கருத்து வெளிப்பாடு ஆகியவற்றைத் தம்முட் கொண்டு விளங்கினர். பாரதிதாசன் புதுக் கவிதைத் துறையைத் தொடவில்லை. பாரதியின் வசன கவிதைக்குப் பின்னர் ந. பிச்சமூர்த்தி, கு.ப. ராசகோபாலன், க நா. சுப்பிரமணியன், சி.சு. செல்லப்பா, வல்லிக்கண்ணன் முதலானோர் புதுக்கவிதைத் துறையில் ஈடுபட்டனர். இந்தத் தொடக்க காலக் கவிஞர்களின் புதுக்கவிதைகள் பெரும்பாலும் அகவய நோக்கு

4. மேலது, ப. 22

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


கொண்டவையாக இருந்தன. பிறநாட்டுச் சாத்திர சரித்திர அறிவும், அதன் தாக்குதலும் இவர்களை எதார்த்தவாதிகளாகவும், தனிமனிதச் சிந்தனாவாதிகளாகவும் அப்போது உருவாக்கின. அமெரிக்கக் கவிஞர்களான எஸ்ராபவுண்டு (Ezrapound), டி.எஸ். எலியட் (T.S. Eliot) ஆகியோரின் கவித்துவக் கவர்ச்சியும், ஃபிராய்டின் உளவியல் கோட்பாட்டுக் கவர்ச்சியும் இவர்களிடம் தாக்கம் கொண்டிருந்தது. இவர்களைச் சார்ந்த ஒரு நெறி இவர்களைத் தொடர்ந்து புதுக்கவிதையுலகில் உருவாகிவிட்டது. இந்த நெறியில் மிக்குத் தெரிந்த விரக்தி, மனமுறிவு, வெறுமை ஆகியவற்றால் க.நா. சுப்பிரமணியன், ந. பிச்சமூர்த்தி, சி.சு. செல்லப்பா ஆகியோரே அதிர்ச்சியுற்றதையுப் காணலாம். நமது சூழலுக்கும், காலகட்டத்துக்கும் இந்த நெறி பயனற்றது என்று இவர்களே எடுத்துரைத்துள்ளனர்.

''நவீன பட்டினத்தார்களாகவும் பத்திரகிரியார்களாகவும் திருமூலர்களாகவும் திகம்பர சித்தர்களாகவும் சில புதுக்கவிஞர்கள் மாயாவாதம் பேசுவது, அதுவும் இந்திய வரலாற்றின் முக்கியமான இக்கால கட்டத்தில் அழுது புலம்பிக் கையறு நிலையில் கைவிரல்களைச் சொடுக்குவது, எனக்கு மிகவும் பிடிபடாத சங்கதி''.[5] என்று க.நா. சுப்பிரமணியன் உரைப்பதை வல்லிக்கண்ணன் தமது ஆய்வு நூலில் எடுத்துக் காட்டுகிறார். இருப்பினும் இந்நெறி வளர்ச்சியும் கண்டது என்பதை மறுக்க முடியாது.

இந்த நெறியின் வளர்ச்சியினூடே, இதற்கு எதிரான ஒரு நெறியும் மார்க்சியம் என்ற நெறியாகக் கவிதையுலகில் முளைக்கவும் செழிக்கவும் தொடங்கியது. பாரதி, பாரதிதாசன் ஆகியோரிடமே முகிழ்த்துவிட்ட இந்நெறி பின்னர் வந்த புதுக்கவிதைகளில் தீவிரமாகவும் பரவலாகவும் மிகுதியாகவும் நிலைத்துவிட்டதென்றே கூறலாம்.

## புதுக்கவிதை வளர்ச்சிப் படிகள்

புதுக்கவிதை வளர்ச்சியில் இன்றியமையாப் பங்கு கொள் பவை இதழ்கள். 'மணிக்கொடி', 'மயன்', 'இலக்கிய வட்டம்',

5. சுப்பிரமணியன், க. நா. கருத்து, ஆளுமை நூல்: வல்லிக்கண்ணன், புதுக்கவிதை தோற்றமும் வளர்ச்சியும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



'எழுத்து', 'கசடதபற' ஆகியவை தொடக்க காலத்தில் புதுக் கவிதையை அங்கீகரித்து ஆதரவு நல்கியவை. இவற்றோடு 'நடை', 'கணையாழி', 'தாமரை', 'தீபம்', 'கண்ணதாசன்' ஆகியவையும் துனணபுரிந்தன. 1934- ஆம் ஆண்டுதான் முதல் புதுக்கவிதை தமிழ் இலக்கிய உலகில் அச்சேறியது. அது 'மணிக் கொடி'யில் வெளியான ந. பிச்சமூர்த்தியின் கவிதையே. உலக வரலாற்றுச் சூழலிலே, அதன் மாற்றத்திலே உருவான ஒரு வகையாகப் புதுக்கவிதை இங்கும் தொடங்கப்பட்டபோதும், நமது பாரம்பரிய இலக்கியவாதிகளிடையே அது எளிதில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பலவகை எதிர்ப்புகளுக்கும் வரவேற்பு-களுக்கும் இடையேதான் புதுக்கவிதை இங்கு காலூன்றியது.

"புதுக்கவிதை என்பது உருவ அழிப்பு முயற்சி. ஊசிவழி நூல் போல, ஓசைவழிச் செல்வதே கவிதை. இலக்கணம் என்பது அழகு, கட்டுப்பாடு, சட்டங்களே இல்லாத சமுதாயம் போல் புதுக்கவிதை எங்கோ போய்க் கொண்டிருக்கிறது"[6]

"நான் பார்த்த புதுக்கவிதை எழுதியவர்களுக்குக் கவிதை-யைப் பற்றி மட்டுமல்ல பொதுவாக இலக்கியததைப் பற்றிக் கூட எதுவும் தெரியாது என்பேன்"[7]

இது போலவும், இதற்கு மேலும் சாடப்பட்டது புதுக் கவிதை. எழுத்து நிற்கும் உரைநடை என்றும், மோசமான சொல்லடுக்கு என்றும் இழிந்துரைக்கப்பட்டது. எனினும், "சமூக ஆய்வின் அடிப்படையில் சமூக வர்க்கப் பிரிவுகளின் உறவுகளில், மாற்றங்களில், சமூகத்தை மாற்றுகிற மானுட சக்தி-யின் பெருமையைப் புதுக்கவிதை பறை சாற்றுகிறது"[8] என்று பேரா. நா. வானமாமலை கூறுவது போல் பெரும் நம்பிக்கையை-யும் புதுக்கவிதை அளித்திருக்கிறது.

---

6. கல்பனாதாசன், இதயம் பேசுகிறது, நவம். 1982
7. அழகிரிசாமி, கு. கருத்து, ஆளுமை நூல், வல்லிக்கண்ணன். புதுக்கவிதை தோற்றமும் வளர்ச்சியும், ப. 143
8. வானமாமலை, நா., முந்தையது, ப. 44

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



## புதுக்கவிதையின் நிலைப்பாடு

இன்று புதுக்கவிதையின் போக்குப் பற்றிப் பல விமர்சனங்கள் இருந்தாலும், அதன் நிலைப்பாடு பற்றிய ஐயப்பாடு இல்லை. ஏனென்றால், மத்தியதர வர்க்கத்தின் கண் விழிப்பில், சமுதாயப் புதிய வளர்ச்சியின் தாக்கத்தில் தோன்றிய துறை இது. ஆக்கரீதியான இலக்கிய வளர்ச்சியாகவும் இது உள்ளது. மரபு வழிப்பட்ட மனங்களின் சொத்தாக இருந்த கவிதை புதிய எழுச்சிமிக்க சிந்தனையாளர்களின் வெளிப்பாட்டு உருவாக மாறியுள்ளது. புலவர் குரலாக ஒலித்தது, மக்கள் குரலாக மாறியுள்ளது. இதுவே இதன் இருப்பிற்கு நியாயம் கற்பித்துள்ளது என்பதை மறுக்க முடியாது.

''நிகழ்காலச் சமூகத்தின் நடைமுறை வாழ்வில் முழுமையாகப் பங்கேற்றுச் சமுதாயத்தின் சிக்கலான அமைப்பினையும், மனித மனத்தின் சிக்கலான அமைப்பினையும், இன்றைய புதுக் கவிதைகள் படம்பிடித்துக் காட்டுகின்றன''[9] என்று செ. பிரியம் குமார் எடுத்துரைக்கின்றார். இந்தச் செயலாக்கமே இதன் நிலைப்பாட்டை உறுதிப்படுத்துகிறது என்று துணியலாம்.

புதுக்கவிதை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க செயலாற்றியது 'வானம்பாடி' அமைப்பாகும். தொடக்க கால விரக்திக் கவிதைகளின் போக்கிலிருந்து புதுக்கவிதையைத் திசை திருப்பிய அமைப்பு இதுவே. 'எழுபதுகளின் கவிதையில் நிகழ்ந்த ஒரு உரத்த நிஜம் வானம்பாடிகள்'[10] என்று என். ஆல்பர்ட் இவர்களைக் குறிப்பிடுகிறார். சமூக, அரசியல், பொருளாதார மாற்றத்தைப் புதுக்கவிதையால் கொண்டு வரமுடியும் என்ற நம்பிக்கையை விதைக்க முற்பட்டது இவ்வமைப்பு. ''கூட்டுறவு செயல்பாடுகளால் தமிழின் இலக்கியத் தரத்தை சர்வதேச இலக்கியத்திற்கு உயர்த்தக்கூடிய பின்னணிகளை உருவாக்க முற்-

9. பிரியம்குமார், செ. கருத்து, ஆளுமை நூல், தற்கால இலக்கியத்தின் முற்போக்குப் பார்வைகள், ப. 106, பதிப். பாக்கியமுத்து, தி.

10. ஆல்பர்ட் என். கருத்து, ஆளுமை நூல், மேலது, 44

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பட்டனர்''[11] என்று இவ்வமைப்பின் செயல்பாட்டினைப் பற்றி எழுதுகிறார் எஸ்.பி.எஸ். சுப்ரபாரதிமணியன். வால்ட் விட்மனின் சாயல் வானம்பாடி அமைப்பில் இருந்தது. இவ்வமைப்பு ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகள் மிகச் சிறந்து பணியாற்றியது. இவ்வமைப்பில் பல கவிஞர்கள் இடமும் ஏற்றமும் பெற்றனர். புவியரசு, கங்கை கொண்டான், சிற்பி, தமிழ்நாடன், அக்கினிபுத்திரன், மு. மேத்தா, சி.ஆர். ரவீந்திரன், தமிழன்பன், பிரபஞ்சன், ஞானி, அப்துல் ரகுமான், கல்யாண்ஜி, கலாப்ரியா, மீரா, சக்திக்கனல், ப. வேலுசாமி, இன்குலாப், பா. செயப்பிரகாசம், பாலா, நா. காமராசன் போன்றோர் பலரும் இருந்திருக்கின்றனர். இவ்வியக்கம் மிகச் சிறந்த பணியாற்றியும் எழுபதுகளின் இறுதியில் இது சிதறிப்போனது. இதன் சிதைவிற்குக் காரணம் 'தனிமனித மனிதர்கள்' என்று தமது ஆய்வு நூலில் காரணங் காட்டுகிறார் சுப்ரபாரதிமணியன்.[12] கவிஞர் புவியரசும், 'மிகச் சிலருக்கு விளங்கக்கூடிய பூடகமான புதுக் கவிதையிலிருந்தும், கவிதைக்கு விடுதலை தந்து விசாலமானதொரு களத்தைத் தேடித் தந்தது வானம்பாடி இயக்கம்[13] என்று பாராட்டுகின்றார். அவரும் ''வானம்பாடி இயக்கத்தின் தோற்றத்தைப் போலவே அதன் சிதைவும், சீர்குலைவும் ஒரு வரலாற்று உண்மைதான். கசப்பான உண்மை. அதற்கான காரணங்களை விருப்பு வெறுப்பில்லாமல், ஒளிவு மறைவில்லாமல் சொல்வதற்கான நேரம் இன்னும் வரவில்லை'' என்று காரணம் கூறாமல் தப்பித்துக் கொள்கிறார். இவ்வமைப்பு உடைந்ததற்கான காரணங்கள் சரியாக, வெளிப்படையாகக் கூறப்படவில்லை எனினும், இன்றும் புதுக்கவிதையுலகில் நிலைத்திருப்பவர்கள் இவ்வமைப்பில் இருந்தவர்கள் பலருமே எனலாம். அது மட்டுமின்றி, இவர்களால் உருவாக்கப்பட்ட இளையதலை முறையினரும் கிளைத்து வந்துள்ளனர் அந்த வகையில் இவ்வமைப்பின் பணியும் பங்கும் நிலையானது எனலாம்.

---

11. சுப்ரபாரதிமணியின் எஸ்.பி.எஸ். வானம்பாடிகளுக்குப் பின் புதுக்கவிதை, ப. 10.
12. மேலது.
13. மேலது, முன்னுரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



சமகாலம் என்ற கருத்தில் எடுத்துக் கொள்ளப்படும், 1974 85 வரையிலான, கவிதைகளில் வானம்பாடி இயக்கத் தாக்கம் இருப்பது போலவே, அதற்கு முந்தைய 'எழுத்து'வின் தாக்கமும் உண்டு. எழுத்துவும் வானம்பாடியும் வேறுபட்ட போக்கு உடையவை. எழுத்துவில் கவியாக்கப் புதுமை மிகுதி. வானம்பாடியில் பொருளடக்கப் புதுமை மிகுதி. எழுத்து ஒரு வகைச் செறிவை வலியுறுத்தியது. வானம்பாடி எளிமையினை வலியுறுத்தியது. எழுத்து அகவய நோக்கை அதிகம் உடையது. வானம்பாடி சமுதாய நோக்கை மிகுதியாகக் கொண்டது. இந்த இருவகை அமைப்பின் தாக்கத்தையும் இன்றும் நாம் காண முடிகிறது. அதற்குக் காரணம் புதுக்கவிதையின் வாழ்நாளே இதுவரை ஏறக்குறைய அரை நூற்றாண்டுதான் ஆகின்றது. அந்த அமைப்புவாதிகள் இன்னும் இலக்கியவுலகில் உள்ளவர்களே. தொடக்க கால அமைப்புவாதிகளில் ந. பிச்சமூர்த்தி மட்டுமே இன்று உயிருடன் இல்லை எனலாம்.

## இன்றைய புதுக்கவிதைகளின் உள்ளடக்க உணர்வுகள்

**நம்பிக்கை வித்துக்கள்** இன்றைய கவிஞர்களின் கவிதைகளில் ஒருமுகமாக, மிகுதியாக நாம் காணத் தகுந்த ஒரு பண்பு அவர்களின் நம்பிக்கையே ஆகும். இவர்கள் தமது கவிதைப் பண்பின்மீது நம்பிக்கை உடையவர்களாக உள்ளனர். அதே பொழுதில் நம்பிக்கையை விதைக்கும் நோக்கம் உள்ளவர்களாகவும் உள்ளனர்.

> "நானே பாரதி
> என் காலத்தில் கவிச்சக்கரவர்த்தினி
> முன் எப்போதும் போலவே் பேசுகிறேன்
> என் கவிதை சோதி மிக்க நவகவிதை
> இந்த விதை களர் நிலங்களிலும்
> கிளர்ச்சி செய்யும்
> மண் கீறும்
> ஊற்றடைப்புகளை
> வெடியெனத் தகர்க்கும்"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இவை கவிஞர் மீனாட்சியின் வரிகள்.[14] புதுக்கவிதை அமைப்புகளில், துறையில் முதல் பெண் என்று கூட இரா. மீனாட்சியைக் கூறலாம். அவரின் நம்பிக்கை நமது இலக்கிய உலகுக்கே வியப்பளிக்க வல்லது.

இதே போல், 'காலடிச்சுவடுகள் மதிப்பேன்'[15] என்று கவிஞர் குத்தாலமும்,

"இந்த பூமியின்
விளிம்பையே
தீண்டிவிடும் அளவிற்கு
என் விரல்கள்
நீளமானவை
ஏனென்றால்
என் கைகள்
வெறும் கைகளல்ல... ... ...
கவிதைகள்"[16]

என்று மு. மேத்தாவும்,

"என்னை அழிக்க யாருண்டு
எழுத்தில் வாழ்பவன் அன்றோ யான்"[17]

என்று பசுவய்யாவும்,

"வானோடும் தேன் சிந்தும்
மலரோடும் வந்திருக்கும்
நானோர் கோபாக்கினி
நானோர் இளவேனில்"[18]

என்று இளவேனிலும் அறிமுகப்படுத்திக் கொள்கின்றனர்.

14. மீனாட்சி, இரா., தீபாவளிப் பகல், ப. 5
15. குத்தாலம், வசந்தத்தின் வீணைகள், ப. 73
16. மேத்தா, மு., கண்ணீர்ப்பூக்கள், ப. 88
17. பசுவய்யா, நடுநிசி நாய்கள், 'என் எழுத்து'
18. இளவேனில், இளவேனில் கவிதைகள், ப. 25

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



**பயன்பாட்டு நோக்கம்** நம்பிக்கை வாதிகளாகிய இக் கவிஞர்கள் தமது கவிதையின் நோக்கத்தையும் உரைக்கின்றனர்.

"கிளிமூக்குத் தீநாக்குக் கவிதைகளால்
கிளர்ச்சிகளை வளர்ப்பவன் நான்"[19]

என்பார் நா. காமராசன். இவர் சோசலிசக் கவிதைகள் என்ற பாரம்பரியத்தைத் தொடங்கியவர்களில் குறிப்பிடத்தக்கவராகக் கருதப்படுகின்றார்.

கவிதையைச் சமூக மாற்றச் சக்தியாகப் பயன்படுத்திடும் நோக்கமும் நம்பிக்கையும் கொண்டவர்கள் பலரும் இங்ஙனம் தங்களைப் பற்றிய பிரகடனம் செய்து கொள்கின்றனர். தங்களுடைய காலம் தந்த பரிசாகவும் நிர்ப்பந்தமாகவும், அதுவே நமக்குப் பணி என்றும் இத்தகைய கவிதைகளை அவர்கள் கருதுகின்றனர்.

கவிஞர் ஏ.தே. சுப்பையயன் தனது முன்னுரையில் "மகா கவிகளின் காலம் எதனையும் விட எனது காலம் மகத்தானது. காவிய நாயகர்கள் எவரையும் விட எனது காலத்து மனிதர்கள் மகத்தானவர்கள் ......... தங்கள் உரிமைகளையும் உடைமைகளையும் மீட்பதற்காகத் தொழிலாளிகள் வர்க்கப் போராட்டம் நிகழ்த்துகிற காலத்தைச் சேர்ந்தவன் நான்"[20]. இந்தக் காலக் களம் பற்றிய கர்வம் இன்றைய கவிஞனுக்கே கிடைத்துள்ளது. இங்குக் கவிஞர் எ.தே. சுப்பையன், கவிதை சர்வ வியாபகத் தன்மையை நோக்கிச் செல்வதாகவும் நம்புகிறார்.

இதேபோல் தணிகைச் செல்வனும்,

"நான் காலங்களின் தாய்
ஆனால் காலம்தான் எனக்குத் தாய்"[21]

19. காமராசன், நா., காமராசன் கவிதைகள், ப. 25
20. சுப்பையன், ஏ.தெ., அறைகூவல், முன்னுரை, ப. 7
21. தணிகைச்செல்வன், தணிகைச்செல்வன் கவிதைகள், ப. 19

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்று காலச்சூழல் கவிஞனை உருவாக்கும் தன்மையை ஒப்புக் கொள்கிறார். அதனாலேயே சமகால இலக்கியங்கள் சம காலத்தைப் பிரதிபலிப்பவையாகத் திகழ்கின்றன. இவர்கள் தமது காலத்தைத் தமக்குள் வார்த்துக் கொண்ட காரணத்தினாலேயே, தமது காலத்துப் போக்கின் தன்மையை வரவேற்பது போலத் தீமையைப் போக்கடிக்கும் நோக்கத்தையும் தீவிரமாகக் கருத்தில் கொண்டுள்ளனர். இதனை அவர்களின் கவிதைகளிலே நாம் உணரலாம். தமது கவிதைப் போக்கு ஒரு பழைமை வாதத்தின் எதிர்ப்பாக அமைய வேண்டும் என்றே விரும்புகின்றனர். "போற்றுவார் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுவார் தூற்றட்டும்" என்று முரணிக்கொண்டு தொடர்ந்து செல்லும் வலிமையைக் காட்டும் கவிஞர்களாகவும் தம்மைத் தாமே இனங் காட்டுகின்றனர் பலர்.

"வெறும்
உருவ அலங்காரம்
பருவ சிங்கார
உயர்குடிக் கவிஞனல்ல நான்
... ... ..
கண்கெட்டுப் போனதால்
உலகமே இருட்டென்று
கதறுவோர் குழுவிலை நான்"[22] (பொன்னீலன்)

"இந்தக் கவிதைகள்
கல்லறைக்கான வழியல்ல
கல்லறைகளையே புதைப்பதற்கான
வழி"[22அ] (பாப்ரியா)

"கபாடபுரத்தில்
காய்கறி விற்க
பஃறுளி ஆற்றில்
படகுகள் ஓட்ட
தொலகாப்பியனின்

22. பொன்னீலன், பொன்னீலன் கவிதைகள், முன்னுரை
22அ. பாப்ரியா, கண் சிமிட்டும் கல்லறைகள், ப. 19

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



தோள்மேல் ஏறிட
கம்பன் கன்னத்தைக்
கிள்ளி விளையாட
தூது விளையாட
உலாக்கள் சென்றிட
சிலருக்குப் பாடல்கள்
பழம் பஞ்சாங்கங்கள்
ஆனால் எனக்கோ
புதிய வார்ப்புகள்
புத்துலக சிற்பங்கள்''[23] (சுந்தரபாண்டியன்)

நமது இலக்கிய வரலாற்றையே எறிந்துவிடத் துணியும் அளவிற்குத் தன்னம்பிக்கையும், இன்றைய கவிதைக்களத்தின் புதுமையை வரவேற்கும் மனநிலையும், அதனை வெளிப்பட உரைக்கும் துணிவும் இவரிடத்துக் காண்கின்றோம். இதேபோல், இன்குலாப், இளவேனில் ஆகிய இருவரும் தமது கவிதைச் சினம் ஒரு காலமாற்றச் சக்தி படைத்தது என்று நம்புகின்றனர். அதனால் எதிர்ப்புகளை இகழ்ந்து மேற்செல்லும் துணிவைத் தெளிவுபடுத்துகின்றனர்.

"மகாகவிகளே! உம் மாளிகை வாசலில்
நாங்கள் இசைக்கும் புரட்சி ராகங்கள்
அபஸ்வரங்கள் தான்
கூடி நிற்கும் கோடி ஜனங்களுக்கோ
அபஸ்வரமல்ல
அக்கினிஸ்வரங்கள்''[24] (இன்குலாப்)

"இதயத்தின் குரலுக்குச்
செவி சாய்க்க மறுத்த
கவிராஜ குலத்தின்
கண்களைப் பறிக்கும்
மின்னல் பறவை நான்''[25] (இளவேனில்)

23. சுந்தரபாண்டியன், பகல் கனவுகள், ப. 11
24. இன்குலாப், வெள்ளை இருட்டு, ப. 21
25. இளவேனில், இளவேனில் கவிதைகள், ப. 18

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



நமது காலத்துத் தமிழ்ப் பெரியவர்களில் ஒருவராகவும், இலக்கியவாதியாகவும் திகழும் சாலை இளந்திரையன் தமது கவிதைகளைப் புதுக்கவிதைகள் என்று ஏற்றுக் கொள்ளவில்லை. 'உரை வீச்சு' என்றே தமது முன்னுரையில் பகர்கின்றார். எனினும் தமது எழுத்தில் இளைய பரம்பரையின் பண்புகள் பல உற்றவராகவும், சில அற்றவராகவும் காட்சி தருகிறார் தான் பேனா ஏந்துவதன் காரணத்தை உரைக்கையில் ஒரு எழுத்தின் பணி இன்னது என்ற தமது கருத்தையும் உணர்த்தி விடுகிறார். 'பெரிய அறுவடைக்கு ஆயத்தச் செயல்'[26] என்று பேனா ஏந்தும் பணியைக் குறிப்பிடுகிறார் இந்தச் சுய சித்திரிப்புகள் யாவும் விளக்குவதும் உணர்த்துவதும் ஒன்றேயாம் கவிதை, இலக்கியம் ஆகியவை யாவும் கற்பனையும் விற்பன்னத்தன்மையும் சார்ந்தவையாக இருக்கவேண்டுமா, வேண்டாமா என்பதையும் தாண்டி, அவை மக்கள் சார்ந்த இயக்கமாகவும் மக்களிடத்துச் சமூக மாற்றச் சிந்தனையைத் தோற்றுவிக்கும் கருவியாகவும் பயன்பட வேண்டும் என்ற கோட்பாடுதான் இவர்களிடையே நிலவுகிறது. இதைத் தமது முன்னுரையில், வெளிப்படையாகவும், தெளிவாகவும் உரைக்கின்றார் கவிஞர் சுப்பையன்.

"இதுகாலம் வரை முத்தமிடக்கூடச் சக்தியிழந்து போன நரம்பு நோயாளியின் புலம்பலாய் இருந்த புதுக்கவிதை இப்போது மனித நேயமும் நம்பிக்கைவாதமும் செயலூக்கமும் கொண்ட பிரகடனமாய் ஒலிக்கிறது"[27] என்கிறார்.

சமுதாய உணர்வும், சமுதாயப் பிரச்சினைகளைப் பற்றிய சிந்தனையையும் தீர்வுக் கண்ணோட்டத்தையும் கவிதையில் வடிக்கும் ஆர்வமும், அதற்குரிய பின்புலமும், இயக்கச் சார்பும் கவிஞர்களிடையே மிகுந்துள்ளது என்பதைத்தான் மேற்கண்ட நம்பிக்கைவாதப் பேச்சுக்கள் உணர்த்துகின்றன. எனினும், இதே வகையில்தான், எல்லாக் கவிஞர்களும் கவிதைகளைப் பற்றித் தாமே எடுத்துரைக்கின்றனர். என்று கூறமுடியாது. இதனின்று மாறுபடும் சிலரையும் காண்கிறோம்.

26. சாலை இளந்திரயன், நாளுக்கு நல்லபடி, ப. 15
27. சுப்பையன், ஏ. தெ, அறைகூவல், ப 2

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



''இந்தக் கவிதைகள்
யாரையும் திருத்தவோ
யாருக்கும் உபதேசிக்கவோ
எழுதப்படவில்லை
சுதந்திரமான
அகமனத்தின் சிதறல்கள்
அவ்வளவே !! !![28]

என்கிறார் ரோகிணி.

யாவர்க்கும் பயன்படும் நோக்கம் கவிஞர்க்கு உள்ளத் திருந்தும், அதற்குரிய சாரம் கவிதைகளிலிருந்தும், தமது கவிதைகள் பற்றிய அவநம்பிக்கையைக் கவிஞர் தமது முன்னுரையில் வெளிப்படுத்துவது பொருந்தாது நிற்கிறது. உபதேசமோ பிரச்சாரமோ வன்முறையன்று. அது ஒரு செயல். அது இயல்பாகவோ செயற்கையாகவோ கவிஞர்கள் பலரிடம் தொற்றிக் கொள்ளத்தான் செய்கிறது. சமுதாயக் கவிதையை வடிக்கும் கவிஞன் வாசகனைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் இருக்க முடியாது. அந்த வகையில் கவிஞர் ரோகிணியின் கூற்று ஏற்றுக் கொள்வதற்குரியதாக இல்லை.

மேற்கண்ட சுயவிமர்சனங்களால் கவிஞர்கள் பலரும் தமது கவிதையை மக்களியக்க, ஜனநாயகக் கருத்தியல் வெளிப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்த விழைகின்றனர் என்பதை அறிகின்றோம். இன்றைய புதுக்கவிதைகள் இக்காலத்தவை என்பதோடு உள்ளடக்க நவீனத்துவமும் வாய்ந்தவை. நவீனத்துவம் என்பது பழைய மரபிலிருந்து உள்ளடக்கத்திலும் வெளிப்பாட்டு உத்தியிலும் மாறுபடுவதைக் குறிக்கிறது. உள்ளடக்க மாற்றம் என்பது கவிதையை ஜனநாயகப்படுத்தற் சக்தியாகக் கையாளும் தன்மையைக் குறிப்பதாகவும், இதுவரை இலக்கியத்தில் கூறத்தக்கவை இவைதான் என்றிருந்த மரபுடைத்துக் கூறுதலும் ஆகும். உள்ளடக்க மாற்றம் நிகழும் பொழுதே வெளிப்பாட்டு உருவ மாற்றமும் அனிச்சையாகவே நிகழ்ந்துவிடும் வாய்ப்பு மிகுதி, இலக்கியவாதிகளின் கருத்தியலில் வந்த மாற்றம் இலக்கண உடைப்பில் இயல்பாக முடிந்தது.

---

28. ரோகிணி, தேன் முள்ளுகள், முன்னுரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



"முதன் முதலாக, கவிதை இலக்கணப் பிடிப்பிலிருந்து விடுபட்ட, அர்த்தத்தைச் சார்ந்த அமைப்பில் உருவம் பெற்றுச் சுதந்திரமாக இருக்கத் தொடங்கி இருக்கிறது"[29] என்ற ந. முத்துச் சாமியின் கூற்றும் இங்கு அரணாக அமைகிறது.

**இயக்கப்பார்வை** உகைளாவிய ஒரு போக்கிலிருந்தும் நோக்கிலிருந்தும் புகிழ்த்தது இன்றைய புதுக்கவிதை வளர்ச்சி என்பதைப் பலவற்றானும் உணர முடிகிறது. இந்த வளர்ச்சியிலே நாம் காணும் நவீனத்துவம் எதன் அடிப்படையில் விளைந்தது என்பதையும் இக்கவிஞர்களின் வாயிலாகவே உணர முடிகிறது இயக்கச் சார்பும் கவிஞர்களுக்கு ஒரு கருத்துத் துணையாக உள்ளது. கருத்தின் ஊற்றுக் கண்ணாகக் கூட உள்ளது. இதனாலேயே சமுதாயப் பிரச்சினைச் சித்திரிப்பை நோக்கும்போது அவர்களின் பார்வையும் வெளிப்பாட்டு முறையும் வேறுபடுவதைக் காண முடிகிறது. அது மட்டுமின்றி, தமது இயக்கச் சார்பினை இவர்கள் பலவாற்றானும் வெளிப்படுத்தவும் செய்கின்றனர். இன்றைய சூழலில் இது தவிர்க்க முடியாததாகவும், தவிர்க்கவேண்டிய தேவை இல்லாததாகவும், சொல்லியே ஆக வேண்டும் என்ற உணர்வுந்தல் உடையதாகவும் இருக்கின்றது என்று கூடக் கூறலாம்.

'நான் ஒரு சகாப்தம்' என்று கூறிக்கொள்ளும் கவிஞர் தணிகைச் செல்வன்.

"மாதங்களில் நான் நவம்பர்
மாந்தர்களில் நான் மாலெனின்
ஞானங்களில் நான் மார்க்சிசம்"[30]

என்று தன்னை சகாப்தமாக்கும் இயக்கப் பின்னணி எதுவென்பதையும் குறிப்பிடுகிறார். இத்தகைய மார்க்சியச் சார்பும் சிந்தனையும் பல கவிஞர்களிடத்துக் காண முடிகிறது.

29. முத்துச்சாமி, ந., கட்டுரை
நூல்: புதுக்கவிதையும் புதுப்பிரக்ஞையும், ப. 141
30 தணிகைச்செல்வன், தணிகைச்செல்வன் கவிதைகள், ப. 13

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



"செக்கச் சிவந்த
விடியலுக்காக — விழிகள்
சிவந்து நிற்கும் — என்
தோழர்களே!
உங்கள் அக்கினிக்கு
மார்க்ஸ் மார்க் நெய்யை
ஊற்றுங்கள்"[31] (பஞ்சு, ஓர் வேண்டுகோள்)

"பட்டுக்கொண்டே
துளிர்க்கும்
இந்தப்
பாரத பூமிக்கும்
சிவப்பு மழையே
உயிர்ப்புத்
தரலாம்"[32] (அறிவுமதி,

"நோயை நாடி, நோய் முதல் நாடி
நோயைத் தணிக்கும் வாயினை நாடி
செர்மனிக் கிழவன் சேகரித்தெடுத்த
........ கைகண்ட மருந்து"[33] (கனல்,

"தஞ்சை வெங்கடாசலம்
என்ற தனல் சுடரின்
நெஞ்சிலே குடியிருந்த
நேரான வாரிசு நான்"[34] (மணியரசன்,

"செங்குயில் நம் நெருடாவின்
சோதரரில் இளையவன் நான்"[35] (பொன்னீலன்,

31. பஞ்சு, ஒட்டுப்புல், 'ஓர் வேண்டுகோள்'
32. அறிவுமதி, நிரந்தர மனிதர்கள், ப. 124
33. கனல் கீழைக்காற்று, ப 58
34. மணியரசன், மனிதனைப் பாடுவேன், ப. 17
35. பொன்னீலன், பொன்னீலன் கவிதைகள்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



'பரிணாமன் பாரதியின் மகன், மாயா கோவிஸ்கியின் மருமகன்
முதலில் ஒரு கம்யூனிஸ்ட், பிறகுதான் கவிஞர்''[36]
(மீரா, ஆகஸ்டும் அக்டோபரும் முன்னுரை)

மேற்கண்டவாறு பலரும் மார்க்சியம் சார்ந்த இயக்கக் கருத்தும், இயக்கப் பிரச்சாரமும் செய்பவர்களாகவும், தமது இயக்கச் சார்பினை வெளிப்படையாகக் கூறிக் கொள்பவராகவும் உள்ளனர். இவர்களில் பலரும் தமது கருத்து வழிகாட்டியாகக் கருதும் தனி மனிதர்கள் பாரதியார், பெரியார், மார்க்ஸ் ஆகியோரே.

மேற்கூறிய பல்லாற்றானும் மார்க்சியவாதமும் சார்பும் கவிஞர்களிடையே மிகுந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. எனினும் பாரதியார் மீதான கவிதை மதிப்பும் கருத்துக் கவர்ச்சியும் தனி என்றே கூறலாம். பெரியாரின் திராவிட இயக்கச் சார்பு பலரைத் தொடக்க காலத்தில் கவர்ந்திருக்கின்றது. மார்க்சியவாதிகளாகப் பின்னர் அறிமுகப்படுத்திக் கொள்பவர்களிலும் பலர் திராவிட இயக்கத்தால் ஈர்க்கப்பட்டதைத் தங்கள் முன்னுரையிலும், வினா நிரல் விடையிலும் வெளிப்படுத்தியுள்ளனர். இக்கவிஞர்களில் பலர் இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் (1964) ஈடுபட்ட அப்போதைய மாணவர்கள் ஆவர். அவர்களின் அந்தப் போராட்ட காலத்தும் பாரம்பரியத்துடன் கலந்திருந்தது திராவிட இயக்கமும் அது சார்ந்த கட்சிகளுமே. சாதியம், பெண்ணடிமைத்தனம் போன்ற பிற்போக்குக் கலாச்சார எதிர்ப்பில் தமிழகத்தின் தலைசிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்த பெரியாரின் வழியில் பலரும் ஈர்க்கப்பட்டனர். அவர்களில் நமது கவிஞர்களும் பலர் இருந்தனர். தணிகைச்செல்வன், இன்குலாப், காமராசன், வைரமுத்து, தமிழன்பன், அரசுமணிமேகலை அரிமதி, அபி, மீரா போன்றோர் பலரும் இததகையவர்களே.

''தமிழ்க்காதலனாக அரும்பி ஒரு சோசலிஸ்டாக மலர்ந்தவன் நான்''[37] (நா. காமராசன்)

என்றும்,

36. பரிணாமன், ஆகஸ்டும் அக்டோபரும், மீரா அணிந்துரை
37. காமராசன், நா., காமராசன் கவிதைகள், ப. 25

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



"திராவிட இயக்கங்களின் மீதான பக்தி கலைய ஆரம்பித்து சமீபத்தில்தான் அவன் விடிந்தான்"[38] (அறிவுமதி)

என்றும் கூறுவர்.

இங்ஙனம் முன்னர் தொடங்கிய இயக்கச் சாயல் பின்னர் மாறிய ஒரு கால கட்டத்தையும், கவிஞர்கள் பலரிடம் காண முடிகிறது.

ஆனால் பொதுவாகவே மனித நேயம், பொதுவுடைமை வாதம், சமத்துவ நோக்கு ஆகியவற்றைப் பரப்பும் நோக்கம் புதுக்கவிதையில் மிகுந்துள்ளது. சமுதாயத்தில் பாதிக்கப்பட்டோரின் பக்கமாக நின்று குரல் கொடுக்கும் இனமாகத் தம்மை இனங்காட்டும் ஆர்வம் கொண்டுள்ளனர் கவிஞர்கள். சமுதாயப் பிரச்சினைகள் பலவற்றையும் தொட்டு, தோண்டி ஆய்ந்து, வேர் காண விரும்பும் வகையில் கவிஞர்களின் பார்வை விசாலமுற்றிருக்கிறது. இந்த விசாலப் பார்வைக்கும், இயக்கச் சார்புக்கும் தொடர்பு இருக்கவேண்டும். ஆனால், எந்த இயக்கத் தொடர்பும் அற்றவர்களும், அநுபவம், உணர்ச்சி, பாதிப்பு ஆகியவற்றினால் கவிதை எழுதலாம். அதனால் ஃபிராய்டிசமானாலும், மார்க்சியமானாலும் இவற்றின் தாக்கத்தால் எழுதுபவர்களும் இருக்கலாம். தாக்கமின்றி எழுதுபவர்களும் இருக்கலாம். எனினும் இன்றைய புதுக்கவிதைகளில் மார்க்சியச் சார்பு மிகுதியாகவும், வெளிப்படையாகவும் உள்ளது என்பதை மறுக்க இயலாது.

38. அறிவுமதி, நிரந்தர மனிதர்கள், முன்னுரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# வர்க்க எதிர்ப்பு - கவிதை உயிர்ப்பு

## வர்க்கம் — ஒரு விளக்கம்

"வர்க்கங்கள் என்பவை சமுதாயத்தின் ஒரு பகுதி மற்றொரு பகுதியின் உழைப்பை அபகரித்துக் கொள்வதை அனுமதிப்பதாகும். சமுதாயத்தின் ஒரு பகுதி எல்லா நிலத்தையும் அபகரித்துக் கொண்டால், ஒரு நிலவுடைமை வர்க்கம் ஒரு விவசாயிகள் வர்க்கம் ஏற்படுகின்றது. சமுதாயத்தின் ஒரு பகுதி தொழிற்சாலைகளையும் பங்குகளையும் மூலதனத்தையும் தனது உடைமையாகக் கொண்டிருந்தால் மற்றொரு பகுதி இந்தத் தொழிற்சாலையில் வேலை செய்தால், நம்மிடையே ஒரு முதலாளி வர்க்கமும் ஒரு பாட்டாளி வர்க்கமும் தோன்றுகின்றன"[1] வர்க்கம் பற்றி லெனின் உரைத்த கருத்து இதுவாகும்.

இதன் அடிப்படையில் நோக்கும்போது வர்க்கம் என்பதே உற்பத்திச் சாதன உரிமை அடிப்படையில் அமைகின்ற ஒன்று என்பது புலனாகின்றது. "உற்பத்திச் சாதனங்களோடு வர்க்கங்களுக்குள்ள உறவுகள்தான் உழைப்பைச் சமுதாயத்திற்குப் பயன்படுத்துவதில் அவ்வர்க்கங்களின் பாத்திரத்தை நிர்ணயிக்கின்றன"[2] என்று பேராசிரியர் நா. வானமாமலையும் இதனை விளக்குகிறார். அத்துடன் ஒவ்வொரு வர்க்க சமுதாய அமைப்-

---

1. லெனின் கருத்து. ஆளுமை நூல் : வரலாற்றுப் பொருள்முதல் வாதம்
2. நா. வானமாமலை கருத்து. ஆளுமை நூல்: சிவசுப்ரமணியம், ஆ. பொற்காலங்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



பிலும் உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்கள் தான் பொருளாதார வாழ்க்கையிலும், அரசியல் வாழ்க்கையிலும் ஆன்மீகப் பண்பாட்டுத் துறையிலும் ஆதிக்கம் செலுத்துவார்கள். ஆனால், உழைக்கும் மக்கள் தங்கள் உழைப்பைச் செலுத்துவதற்கான உற்பத்திச் சாதனங்களில் உரிமையற்றவர்களாக இருக்கிறார்கள்''[3] என்றும் கூறுமுகத்தான் இரண்டு வர்க்கங்களும் முரண்பட்டு இருக்கும் சூழலைத் தெளிவுபடுத்துகிறார். ஆனால் இவை கால நிலைக்கேற்ப, உற்பத்திச் சூழலுக்கேற்ப, உலக மாற்றத்திற்கேற்ப வெவ்வேறு வடிவங்களில் நிலவுகின்றன. ஆண்டாள் - அடிமை, நிலப்பிரவு - கூலி விவசாயி, முதலாளி - பாட்டாளி என்று வர்க்க அமைப்புகள் வேறுபடுகின்றன. இந்த வேறுபட்ட அமைப்புகள், எந்த அமைப்பிலும் மேல் கீழ் என்னும் இரண்டு முரண்பட்ட வாழ்நிலையை மனிதர்களிடையே உண்டாக்கி விடுகின்றன என்றும் அறியலாம்.

இவை அனைத்தையும் சேர்த்து வர்க்கம் என்பதற்கு நாம் உணர்கிற பொருள் உடையவன், இல்லாதவன், செல்வந்தன், ஏழை என்ற பெரும் வேற்றுமைக்குரிய நிலையே ஆகும். இந்த நிலைக்கேற்ப மேட்டுக்குடி வர்க்கம், உழைக்கும் வர்க்கம், என்று வர்க்கம் இரண்டாகக் கொள்கிறோம். மேட்டுக்குடி வர்க்கம் என்பது உழைப்பிற்குரிய தேவையில்லாத அளவிற்குப் பரம்பரைச் சொத்துடைமையில் வாழ்கின்ற வர்க்கம். இவர்களுக்கு உழைப்புத் தேவையில்லை என்பது மட்டுமின்றி இவர்களின் மிக எளிய உழைப்பும் கூட இவர்களின் நிலையையும் பணத்தையும் மேலும் மேலும் எளிதில் உயர்த்தக்கூடியதாக இருக்கும் உடல் உழைப்பு என்பது இவர்களுக்கு என்றும் தொடர்பில்லாதது. இவர்களையே மேட்டுக்குடியினர் என்று கொள்கிறோம். மற்றொரு வர்க்கம் உழைக்கும் வர்க்கம். இது உழைப்பும் உழைப்புத் திறனும் உழைப்பிற்குரிய சிறுசிறு கருவிகளும் தவிர மூலதனம் ஏதும் அற்ற இனம். உழைத்தாலன்றிப் பிழைப்பு ஏதும் இல்லை என்பதே இவர்களின் நிலை. இவர்கள் தங்கள் உழைப்பிற்காகவும், மேட்டுக்குடி வர்க்கத்தைச் சார்ந்தும் எதிர்பார்த்தும் நம்பியும் வாழ வேண்டியவர்கள். உழைப்பு இவர்கள் கையில் என்றாலும்

3. மேலது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



உழைக்கும் களம் அவர்கள் கையில் இருக்கிறது. சொத்துடைமையின் அடிப்படையில் அமைந்தது இத்தகைய சமுதாயம். அதனால் உழைக்கும் கரம் உழைக்கும் களத்தை நம்பியிருக்கும் சுழற்சியை மாற்றவே இயலாது. இச்சுழற்சியில் வர்க்க வேறுபாடு ஒழியும் வாய்ப்பில்லை இந்த நிலையில் வறுமையும் அந்நியமாதலும் அடக்குமுறையும் சமூகவிரோதங்களும் கிள்ளியெறிய முடியாத தொடர் பிரச்சினைகளாகத் தொடர்கின்றன சுரண்டல், சுரண்டப்படுதல் என்னும் இவையிரண்டுமே இருவேறு வர்க்கங்களிடையே நிகழ்கின்றன. உழைப்பைக் கைப்பற்றிக் கொள்ளும் இந்த அடிப்படைக் காரணமே வர்க்கப் பகைமையின் மூல காரணமாகவும் உள்ளது. இதனால் தான் வர்க்க சமுதாயத்தில் வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாததான சமுதாய வளர்ச்சி விதியாக உள்ளது.

## முந்தைய தமிழிலக்கியத்தில் வர்க்கச் சித்திரிப்புகள்

வர்க்க வேறுபாடு என்பது இன்றைய நிலையில் மட்டும் நாம் காணும் ஒன்றல்ல. உலகம் தோன்றியபோதே தோன்றியதும் அல்ல. உழைப்பினால் உண்டு வாழ்ந்து, புதிது புதிதாக ஒவ்வொன்றையும் உண்டாக்கிக் கொண்டிருந்த தொடக்க கால மனிதர்கள் தங்களுக்கென்று எதையும் உடைமையாக்கிக் கொண்டிருக்கவில்லை. அவர்களின் உறவுகள், உடைமைகள் யாவும் பொதுவாக, இயல்பாக இருந்தன. பின்னர்ச் சமூக அமைப்புகள் தோன்றி உடைமை மனப்பான்மை தோன்றிய பின்னர் ஆளும் மனப்பான்மையும் அடிமை மனப்பான்மையும் இயல்பாகவே தோன்றிவிட்டன. தான் தனது எனும் உரிமையில் பாதுகாப்பு உணர்வும் ஆளும் உணர்வும், அடக்கும் மனப்பான்மையும் தோன்றின உடைமையின் அளவு குறைவு என்ற வேறுபாடு பல வேற்றுமைகளுக்கும் பின்னர் வழிகோலியது. நமது பண்டைய நூல்களும் வர்க்க வேறுபாட்டின் கூறுகளைச் சித்திரித்துள்ளன.

பழைய தமிழ் இலக்கியங்கள் வர்க்க வேறுபாடற்ற சமுதாயத்தைக் காட்டுவதாக நாம் வலிந்துரைப்பது வரலாற்றை மறைக்கும் முயற்சியாகும். தொல்காப்பியர் காலத்தில், தொழில் அடிப்படையில் வேறுபாடுகள் இருந்தன என்று கூறுகிறோம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



அவையும் ஏற்றத்தாழ்வுகளுக்கு வழி கொடுத்திருந்தன என்பதை யும் தொல்காப்பிய நூற்பாக்களின் வாயிலாகவே நாம் உணரலாம். மண், நிலம் என்பது உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத அடிப்படைத் தளம் ஆகும். அதனாலேயே நில அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகைப் பிரிவு தொல்காப்பியத்திலும் காண்கிறோம். மண்ணின் தன்மை, மக்களின் தொழில், பண்பாடு, கலாச்சாரம், வளம், இலக்கியம் அனைத்திலும் எதிரொலிக்கும். மருதமும், நெய்தலும் வளமான நிலங்களாகவும், பிற மூன்றும் தொழிலாளர் குடியிருப்புகளாக-வும் இருக்கவேண்டும். நெய்தலை விட மருதம் வளம் கொழித்-தது. இந்த நிலத்தின் விளைபொருட்கள், அனைத்து நிலங்களுக்கும் தேவையானவை. அதனால் வணிகத்திற்கும் ஏற்றவை. பிற நிலத்துப் பொருட்கள் அடிப்படைத் தேவைக்குரியவை என்று கூற முடியாது. அவை பரிசுக்குரிய உணவுப் பொருட்களாகவும், கூடுதல் தேவைக்கான பொருட்களாகவும், மணப்பொருட்களாக-வும் இருந்திருக்கின்றன. அதனால் வணிகம் செழித்த நிலங்களில் தான் அரசும், அந்தணரும், வணிகரும் வாழ்வு பெற்றனர். நிலத்திலும் நீரிலும் உழைத்தவர்க்குக் கூலி கொடுக்கவும் செய்-தனர். இந்த மருதப் பகுதி மேட்டுக்குடிப் பகுதியாக இருந்-திருக்கிறது இங்கு அரசு, நாகரிகம், கலை, இலக்கியம், அத்தனை-யும் கால்கொண்டன. இங்கு மேல்சாதியினரான அரசர், அந்தணர், வணிகர் மூவரும் வாழ்ந்தனர். தொழில் முறையில் வளத்துடனும், சாதி அடிப்படையில் மதிப்புடனும் இவர்கள் வாழ்ந்தனர். மற்ற நிலத்து மக்கள் தமக்குள்ளே ஒற்றுமையாகவும், ஒரு கூட்டமாகவும், குடியிருப்புகளாகவும் வாழ்ந்திருக்கின்றனர். எனினும் இவர்களின் தொழில் தந்த வளம் எல்லாம் மருத நிலத்திலே விலை போக வேண்டியதாக இருந்தது. இவர்களின் புலமை, இசைத் திறமை அனைத்தும் நகரப்பகுதியாகிய மருதப் பகுதியில் போற்றப்பட்டு விலை போயின. இவர்கள் மலை, காடு, கடல், பாலை போன்ற ஊருக்கு எல்லைப் புறத்தே வாழ்ந்தவர்-கள் ஆவர் வேடர்களாகவும், பரதவர்களாகவும், மறவர்களாக-வும், கள்வர்களாகவும் இருந்தவர்கள் இவர்களே. உடல் உழைப்பினால் வாழ்ந்தவர்கள் இவர்கள். மருத நிலத்திலே சென்று உழைத்தவர்களும் மன்னனிடத்துப் போர்த்துறையில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



ஈடுபட்டவர்களும் இவர்கள். இவர்கள் நிலவரண், நீரரண், காட்டரண், மலையரண் பகுதிகளைச் சார்ந்த மறவர்கள் ஆவர். படையெடுப்புகளினால் தாக்கப்படும் பகுதிகளிலே வாழ்ந்த மறவர்கள். இவர்கள். உழைப்பும், உயிர் ஆபத்தும் சார்ந்த துறையிலே பணிபுரிந்த இவர்கள் தாழ்ந்த சாதியினராகக் கருதப் பட்டனர். அதனால் வர்க்க வேறுபாடு எங்கும், எப்போதும் இருந்திருக்கிறது.

சங்க காலத்தைப் பொற்காலமாகக் கூறுகிறோம். சங்க காலத்தில் சமுதாயம் பலவகையிலும் வளர்ச்சியடைந்திருந்தது என்பதை இலக்கியச் சான்று வழியறிந்தே இங்ஙனம் உரைக் கின்றனர் சான்றோர். ஆயினும், இவ்வளர்ச்சி பேராசிரியர் கா. சிவத்தம்பி உரைப்பது போல "அசமத்துவ வளர்ச்சி"[4] ஆகும். மகரக் குழையால் தினையுண்ண வரும் கோழியை விரட்டும் வளம் ஒரு புறமும், பசித்தழும் குழந்தைக்கு முலைப் பால் ஊட்டும் வளம்கூட அற்றுப்போன, அடுப்படியில் பூனை தூங்கும் வறுமை ஒரு புறமுமாக ஏற்றத்தாழ்வு மிகுந்திருக்கிறது. கலைஞர்கள், புலவர்கள் அனைவரும் வறுமையில் வாடியிருக் கின்றனர் அவர்கள் பிழைப்புக்காக மன்னனைப் புகழ்ந்து பாடி யுள்ளனர். காணாமல் தந்த பரிசிலை மறுத்தும். திறம் உண ராது அளித்த பரிசிலை நிராகரித்தும் புலவர்கள் வறுமையில் செம்மைப் பண்பினை உணர்த்தியுள்ளனர். இருப்பினும் இவர் களின் வறுமை தீர்க்கும் பொருளாதாரம் இவர்களால் ஈட்ட முடியாததாகவும். வள்ளல்களின் புகழ் பாடும் வழியே தீர்வுக் குரிய வழியாகவும் இருந்திருக்கிறது. சாதிப் பாகுபாடுகளும் இருந்திருக்கின்றன. இதேபோல், பொற்காலங்கள் என்று கருதப் பட்ட காலங்களில் எல்லாம் வர்க்க வேறுபாடுகள் இருந்திருக் கின்றன. சமயம், கலை, இலக்கியம் இவை வளர்ந்த சோழ, பல்லவ, பாண்டிய காலங்களில் சாதிக் கொடுமையும், சமயச் சண்டைகளும், அடிமை முறையும இருந்திருக்கின்றன. மகளிர்

4. சிவத்தம்பி, கா., கருத்து. ஆளுமை நூல்: பொற்காலங்கள் ப 34

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



நிலை மோசமாக இருந்திருக்கிறது. மகளிர் இழிவுபடுத்தப்பட்டு உள்ளனர். கலையின் பெயராலும் சமயத்தின் பேராலும் அடிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர். சிறு நிலக்கிழார்களும், பெரு நிலவுடைமைக்காரர்களும், உயர் சாதிக்காரர்களாகவும், உழைக்கும் மக்கள் சிறு கூலி விவசாயிகளாகவும், பணம் படைத்தோருக்குக் கட்டுப்பட்ட தொழிலாளிகளாகவும் இருந்திருக்கின்றனர் என்றே அறிய முடிகின்றது.[5]

இக்காலங்களில் நீதி முறை, வரி வசூலிப்பு இவை யாவற்றினாலும் வருந்தியவர்கள் பொதுமக்களாகிய உழைப்பாளர்களே. செல்வத்திற் சிறந்த அரசர், வணிகர் ஆகியவரும் மதிப்பில் உயர்ந்திருந்த அந்தணர்களும் எதனாலும் துன்பமுறாது வாழ்ந்திருக்கின்றனர். "மேல் வகுப்பாளருக்கு வரலாற்றில் எல்லாக் காலமும் பொற்காலமாகவே இருந்துள்ளது. ஆனால் பொது மக்களுக்கோ ஒன்றும் இல்லை"[6] என்று வரலாற்றறிஞர் டி.என் ஜா. கூறுவது போல, வர்க்க வேறுபாட்டுச் சூழலில், ஒரு வர்க்கத்தாருக்கு மட்டும் என்றும் பொற்காலமாகவே இருந்திருக்கிறது. 'பொற்காலங்கள்' என்னும் தமது ஆய்வு நூலில் ஆ. சிவசுப்பிரமணியன் இக்கருத்தைத் தக்க சான்று காட்டி நிறுவியுள்ளார். வெறும் அரசர்களின் வரலாறாக மட்டும் நோக்காது, மக்களின் வரலாற்றையும் கொண்டு நோக்கும் போது, வர்க்கம் என்பது முந்தைய சமூகத்திலும் இருந்தது என்றே அறிய முடிகிறது.

இங்ஙனம் வர்க்க வேறுபாடு காலங்காலமாக நமது சமுதாயத்தில் இருந்திருக்கிறது. மக்கள், மனிதர்கள் அனைவரும் தோற்றத்தாலும் செயலாலும், வளத்தாலும், நலத்தாலும் பலத்தாலும், குணத்தாலும் ஒன்றேபோல் இருக்க முடியாது என்பது உண்மை. மனிதனுக்கு மனிதன் வேறுபடுவது இயல்பு, ஆனால், வேறுபாடுகள் வேற்றுமைகள் ஆகக்கூடாது. இந்த வர்க்க வேறுபாடு 'வருணாசிரம தர்மத்திற்கும்' பக்கத்துணையாக

5. மேலது
6. ஜா.பி.என். கருத்து. ஆளுமை நூல் சிவசுப்பிரமணியன், ஆ. பொற்காலங்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இருக்கிறது. வர்க்க வேறுபாடு, சாதி, மொழி, மாநிலம், கலை, கல்வி, காதல் இவை அனைத்திலும் தன் கரம் பதிக்கிறது. இதனால் வரும் பிரச்சினைகள், கேடுகள் பலவும் சமுதாய அமைப்பு முறையினாலும், மனிதர்களின் மனநிலையாலும் உண்டாகின்றன. இவ்வாறு எல்லாக் காலத்தும் சமூகச் சிக்கலாக இருந்த வர்க்க வேறுபாடுகள் பற்றிய கருத்து புதுக்கவிதைகளில் எங்ஙனம் அலசப்பட்டுள்ளது என்பதை இனிக் காணலாம்.

## புதுக்கவிதையில் அடித்தள வர்க்க அவலம்

வர்க்க வேறுபாடு என்பது என்றும் இருந்திருக்கிறது என்பதைக் கண்டோம். அது இன்றும் உள்ளது என்பதில் ஐயமில்லை. வர்க்க வேறுபாடு இன்றும் நிலவுகிறது என்பதன் அடிப்படைச் சான்றாதாரம் இன்று நிலவும் வறுமையால் தெள்ளெனத் தெளிவாகிறது. வர்க்க வேறுபாட்டு அமைப்பு முறைகள் காலத்திற்குக் காலம் வேறுபடுகின்றன. பழைய அடிமைச் சமுதாய முறையோ, நிலவுடைமைச் சமுதாய முறையோ இன்று முழுவதும் தலைவிரித்தாடுகிறது என்று கூற முடியாது. ஆனால், நிலவுடைமைச் சமுதாயத் தாக்கங்கள் முற்றிலும் அகற்றப்பட்டுவிட்டன என்றும் கூற முடியாது பெரிய நகர்ப்புறங்களில் முதலாளி தொழிலாளி வர்க்கமும், கிராமப்புறங்களில் பண்ணையார்-விவசாயி வர்க்கங்களும் மிகுந்திருப்பதை இன்றும் காணலாம். இன்றைய நமது சமுதாயப், வர்க்க வேறுபாடுள்ள முதலாளித்துவ சமுதாயம் ஆகும் ஒரு வகை 'பூர்சுவா' சமுதாயம் ஆகும். "பூர்சுவா சமுதாயம் நிலப்பிரபுத்துவச் சமுதாயத்தின் வயிற்றிலிருந்து பிறந்து வருவதால், சட்டத்தின் முன் அனைவரும் சமமே என்று வாயளவில் கூறிக் கொண்டாலும், சமூக வேறுபாடுகளைக் களைவது இல்லை. வர்க்க வேறுபாடுகளை நீக்கிவிட முயல்வதும் இல்லை. வர்க்க முரண்பாடுகளை ஒழிக்க முயல்வதும் இல்லை. பழைய வர்க்கங்கள் இருந்த இடங்களில் புதிய வர்க்கங்கள் வைக்கிறார்கள். புதிய ஒழுங்குமுறைகளையும், போராட்டங்களையும் தான் படைக்கிறது"[7] என்பது மார்க்சியக் கோட்பாடு. இன்று நாம் காணுகிற நிலை இத்தகைய பூர்சுவா அமைப்பேயாகும்.

7. தமிழாக்கம்: பாண்டியன், தா. செல்வி வி. கவல்ஸோன், எம். வரலாற்றுப் பொருள் முதல்வாதம், ப. 214

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



வர்க்க வேறுபாடு வேரூன்றியுள்ள நமது சமுதாயத்தில் பசி, பட்டினி, பலவகை ஏற்றத்தாழ்வுகள், சீர்குலைவுகள் கலாச் சாரச் சிதைவுகள் அத்துணையும் நேர்கின்றன. அதனாலேயே வர்க்க முரண்பாடு பிரச்சினைகளின் காரணவேராகத் திகழ்கிறது. அந்த முரண்பாட்டின் விளைவும் வெளிப்படை உருவமுமான வறுமை புதுக்கவிதைகளில் பேரிடம் பெறுகிறது.

**வறுமை**

வறுமை என்பது ஒரு பிரச்சினை என்பதற்கு மேல் அடிப்படைத் தேவைகள் கூட கிடைக்கப் பெறாத ஒரு கொடுமை ஆகும். வர்க்க வேறுபாட்டுத் தொட்டிலில் வளரும் குழந்தை வறுமையாகும். வாக்குரிமை உள்ள ஒரு மனிதனுக்கு, உணவு கிடைக்க வழியில்லை. பட்டினி கிடப்பது என்பது ஓர் உயிரின் சாத்தியத்திற்குட்பட்டதில்லை. ஆனால் ஆறறிவு படைத்த மனிதன் பட்டினி கிடந்து சாக நேர்கிறது. அரிய, பெரிய சாதனைகள் ஆற்றும் கைகள் மனிதனின் கைகள். மனிதனின் அறிவு மகத்துவமானது ஆனால். மனிதன் இந்தப் பட்டினிக் கொடுமைக்கு ஆளாகும் அளவிற்கு மலிவாய்ப் போகிறான். மண்ணின் மீதொரு சொர்க்கம் எழுப்பியவனாய் இருந்தும் அவனுக்குப் பட்டினிச் சாவு. ஆனால் பிற உயிரினங்கள் பட்டினி கிடந்து சாவதில்லை. அவை தேடுகின்றன. போராடுகின்றன அடைகின்றன. கவிஞர் இளவேனில்.

> ''பட்டினி கிடந்து
> செத்துப் போனதாய்
> புழுவையாகிலும்
> காட்ட முடியுமா?''[8]

என்று கேட்கிறார். பட்டினிக்கு முன்னால், வறுமைக்கு முன்னால் நாடு, இனம், மொழி, மதம், சாதி என்ற அத்துணைக் கூட்டுணர்வுகளும் ஆட்டங்காணும். இந்த வறுமைக்கொடுமை நிகழாத காலம் எதுவுமில்லை எனலாம். மன்னர் ஆட்சி, மக்களாட்சி என்று எந்த ஆட்சியிலும் பசிக்கொடுமை இருந்திருக்கிறது.

8. இளவேனில், இளவேனில் கவிதைகள், ப. 74

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



பொற்காலங்கள் என்று புகழப்பட்ட காலங்களிலும் 'இருவேறு உலகம்' இருந்திருக்கிறது என்று கண்டோம். இதைத்தான் கந்தர்வன்,

"பாண்டவர் ஆண்டபோதும்
பசிதான்
பாபர் ஆண்டபோதும்
பசிதான்"[9]

என்று கூறுகிறார். விடுதலை பெற்ற சுதந்திர பாரதத்தில் வறுமையை விரட்டி விடலாம் என்று நம்பினோம். ஆனால், நிலைமை மாறவில்லை ஏறக்குறைய ஐம்பது சதவிகிதம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் என்ற நிலை நிலவுகிறது. 'பாரத நாடு பழம் பெரும் நாடு, நீரதன் புதல்வர். இந்நினைவகற்றாதீர்' என்று முழங்குகிறோம். அங்ஙனம் சொல்லிக்கொள்வதில் மகிழ்ச்சியும் அடைகிறோம். ஆனால் எல்லோருக்கும் அடிப்படைத் தேவைகளேனும் இங்குக் கிடைக்கின்றதா?

"ஓர் இந்தியன்
செத்துக் கிடக்கின்றான்
இவனுக்கெனக்
காத்துக் கிடந்த
இன்னல்கள் ஏமாற்றத்தில்
தத்தளிக்க
முப்பத்து நான்கு ஆண்டுப் பசி
வயிறு நிரம்பி
அழுகிப் போகின்றது"[10]

(தமிழன்பன்)

என்று நடுத்தெருக் காட்சி ஒன்று சித்திரிக்கப்படுகிறது. பட்டினி கிடந்தே இறந்த ஓர் இந்திய இளைஞனின் காட்சி இது. இன்னல்களைச் சுமப்பதற்கென்றே உள்ள வர்க்கத்துக்குத்தான் இந்தப் பசி, பட்டினிச் சாவு அனைத்தும் நேரும். அவனது இறப்பினால் ஏமாற்றமடைவது அவனைத் தொடரவிருந்த இன்னல்கள் மட்டும்

9 கந்தர்வன், மீசைகள், ப 93
10. தமிழன்பன், ஊமை வெயில், ப. 68

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



தான். பசிக்கொடுமை பொறுத்தற்குரியது அன்று. வள்ளுவரும், 'நெருப்பினும் துஞ்சலும் ஆகும்' என்று பசியைவிட நெருப்பில் உறங்குதல் எளிதென உரைத்ததும் இதனாலேயே ஆகும்.

பிஞ்சுக் குழந்தைகள் கூட வறுமையில் வாடும் நிலை உள்ளது. இது மாபெரும் சமுதாயக் குற்றம் அன்றி வேறு இல்லை. ஒரு குழந்தைக்கு உணவின் நினைவு வராமல் தடுக்கப் பெரியவர்கள் பாடுபடுகின்றனர். அத்தகைய வறுமைச் சூழல். அதனால்,

"ஏழைக்கு வந்து
நிலாக் காட்டாதே
காட்டினால்
எட்டு நாளைக்குமுன்
தட்டினில் பூத்த
இட்டலி ஞாபகம்
அதுக்கு வரும்"[11]

என்று நிலாக்காட்டி அழுகை நிறுத்தவும் முடியாத நிலையைச் சித்திரிக்கின்றார் கவிஞர் கல்யாண்ஜி. இந்த நிலையில் பெற்றோர்களின் மனநிலை எப்படியிருக்கும்? அந்தக் குழந்தை இட்டலி கேட்டு அழுதால் என்ன செய்ய முடியும்? சேர்ந்து அழத்தான் முடியும். 'எல்லோரும் ஏறினால் அழுகைப் பல்லக்கை யார் சுமப்பது?' என்று கவிதையின் அழகும், வறுமைச் சித்திரிப்பும் கைகோர்த்துச் செல்லக் கேட்கின்றார் கல்யாண்ஜி.

இந்த வர்க்கத்தின், வயிற்றுப்பாட்டுக் கொடுமை மேலும் பல பிரச்சினைகளுக்கும் வழிகோலுகிறது. அதில் குறிப்பிடத் தகுந்தது குழந்தை உழைப்பு.

### குழந்தை உழைப்பு :

வறுமைக் கொடுமையால் வீட்டில் மலரும் பூக்களெல்லாம் வீதியில் மலர்கின்றன! மனிதர்களின் வாழ்க்கை தெருவோடு நடப்பதால் குழந்தைச் செல்வங்களும், வீதியில் பிறக்கின்றன.

---

11. கல்யாண்ஜி, புலரி, ப. 6

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



சின்னக் குருத்துக் குழந்தைகள் ஆலைகளில், தொழிற்சாலைகளில் அரங்கங்களில் எல்லாம் பணிக்குச் செல்கின்றனர். உலக அளவிலே வேலைக்குச் செல்லும் குழந்தைகளில் ஐம்பது சதவீதத்தினர் நமது இந்திய நாட்டுக் குழந்தைகள் நாட்டின் சொத்துக்கள், அற்புதங்கள், ரோஜாப்பூக்கள் கண்ணின் மணிகள் என்றெல்லாம் புகழப்படுபவை குழந்தைகள். இந்தப் பிஞ்சு வயதில் கிடைப்பதற்குரிய கொஞ்சல், ஆதரவு, அரவணைப்பு. படிப்பு இவையாவும் கிடைக்கும் வழியை அடைக்கின்ற கல்லாக வறுமை அமைந்துவிடுகிறது. இந்த வர்க்கவேறுபாட்டின், வறுமையின் கிளைப் பிரச்சினைதான் 'குழந்தை உழைப்பும்' (Child Labour) ஆகும். இதனால் தான் 'பொருளாதார அசுரனின் நொறுக்குத் தீனியாக'[12] இந்தக் குழந்தை உழைப்பாளர்கள் பயன்படுத்தப்படுவதாகக் கூறுகிறார் கவிஞர் நீலமணி. முளைக்கும் போதே அடித்தளத்துச் சூழ்நிலையிலிருந்து மீள முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றன இக்குழந்தைகள்.

> ''காலுக்கிடையில் சிறைக்கச் சொல்லும்
> கல்வீட்டாரின் கீழே அமர்ந்து
> அப்பனுக்காக கத்தியைத் தீட்டும்
> அஞ்சு வயதுகள்''[13]
> (தணிகைச் செல்வன்)

இங்ஙனம் தலைமுறை தலைமுறையாக வர்க்கத்தாலும், வர்ணாசிரம தர்மத்தாலும் பாதிக்கப்படும் தொழிலாளி வர்க்கத்தின் பேரவலமான குழந்தை உழைப்பு 'அந்நியமா'தலின் ஓர் அம்சமாகும்.

## கல்வி வாய்ப்புக் குறைவு

குழந்தைகள் உழைப்பதற்குக் காரணமாகும் வறுமையும், சாதியச் சூழலும் உள்ள வர்க்கத்தாரிடையே கல்வி வாய்ப்பும், கல்வி முயற்சியும் குறைவது இயல்பாகவுள்ளது கவிஞர் நீலமணி கூறுவதுபோல, 'சரஸ்வதி பூஜை வயதிலேயே ஆயுத பூஜை

12. நீலமணி, பனி படர்ந்த எரிமலைகள், ப. 43
13. தணிகைச்செல்வன், சமூக சேவகி சேரிக்கு வந்தாள், ப. 57

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



செய்யும்'[14] இக்குழந்தைகள் கல்விச் செல்வத்தை எங்ஙனம் அடைவர்? சிலேட்டில் முத்துக்கோக்க வேண்டிய கைகள் தீக்குச்சி மருந்தில் தீய்ந்து போகின்றன! இந்நிலையில் கல்வி வாய்ப்பும் மேல் வர்க்கத்தாருக்கு உரியதாகிறது.

''கான்வென்ட் கல்வியாயினும்
கல்லூரிக் கல்வியாயினும்
மேற்கல்வியாயினும்
மேனாட்டுக் கல்வியாயினும்
இருப்பவன் வீட்டுப் பிள்ளைகளுக்கே
ஒதுக்கப்பட்ட பிரதேசங்கள்''[15] (தணிகைச்செல்வன்)

சட்டத்தின்படி எல்லோர்க்கும் கல்வி என்பது உண்டு. ஆனால், சமுதாய நியதிப்படி ஏழைக் குழந்தைகளுக்குக் கல்வி வாய்ப்பும் குறைவு. எல்லோர்க்கும் உணவு, எல்லோர்க்கும் உழைப்பு. எல்லோர்க்கும் வேலை என்பது இல்லாமல் எல்லோர்க்கும் கல்வி எங்ஙனம் சாத்தியமாகும்?

வேண்டிய அளவு ஆசிரியர் இல்லாத பள்ளிகள், ஓராசிரியர் பள்ளிகள், கரும்பலகை இல்லாத பள்ளிகள் இவை கிராமங்களில் எத்தனையோ உள்ளன. இவற்றிற்கு வரக்கூடிய பிள்ளைகள், தொழிலாற்றச் செல்லும் பிள்ளைகள். பள்ளிக்கு வருவதற்குமுன் புசிக்க உணவில்லை. உடுத்த உடையில்லை. எழுதுகோலும் இல்லை. கைக்குழந்தையைக் காக்கின்ற ஆயாக்கள் இந்தக் குழந்தைகள். இந்த இளமையில் கல்வியின் முழுப் பயனையும் அடையவோ, முழுப்பெருமையும் உணரவோ இவர்களால் எப்படி முடியும்? 'முளைக்கும்போதே வயிற்றுப்பாட்டால் முதிர்ந்து போன பிஞ்சுக் கைகள் கொண்ட இந்தக் குழந்தைகளின் கையில் பவுண்டன் பேனா ஏறுமா?'[16] என்று கனவு காண்கிறார் தணிகைச்செல்வன். குரோட்டன்சும் குப்பைமேனியும் ஒன்றாகாமல் குழந்தைகள் விழாக் கொண்டாடுவதில் அர்த்தமில்லை என்கிறார். கிராமங்களில்தான் இந்தியாவின் இதயம் இருப்ப

14. நீலமணி, முந்தையது, ப. 45
15. தணிகைச்செல்வன், பூபாளம், ப. 18
16. மேலது, ப. 55

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



தாகக் கூறிக் கொண்டு, 'இந்தியாவின் எதிர்காலச் சிற்பிகள் குழந்தைகள்' என்று கூறிக்கொண்டு கிராமக் கல்வி இந்த வகை-யிலே தொடர்ந்தால் என்ன பயன்? அதனால் கவிஞர் கோகிலா கந்தசாமியும்,

''ஓ காந்தியாரே!
நீ கண்ட கிராமக் கல்வி
ம் ... ... ...
நீ கண்டது
கனவுதானே?''[17]

என்று எல்லாம் வெறும் கனவாய் உள்ளதை வருத்தத்துடன் விமர்சிக்கின்றார்.

இந்த நிலையில் ஏழைக் குழந்தைகள் பலர் பள்ளிக்கு வருகின்றனர். ஆனால் பையில் புத்தகத்திற்கு மாறாகச் சோற்றுத் தட்டுகள். உணவு வீட்டிலும், கல்வி பள்ளியிலுமாக ஒரு நிலை வரவேண்டும் என்பது ஒரு கவிஞனின் கனவாக உள்ளது. இது எப்போது சாத்தியமாகும்? வீடு என்பது வறுமை அறியாததாக இருக்கவேண்டும் தாய் தன் குழந்தைக்கு 'வறுமை என்றால் என்ன?' என்று எடுத்துரைக்க வேண்டும். வீதிகள் குடிசை என்பது அறியாததாக இருக்கவேண்டும் 'குடிசைகள் பழைய சின்னங்களாய்க் கண்காட்சிகளில் மட்டும் இருக்கவேண்டும்' இப்படி எல்லாம் ஒரு நிலை வரவேண்டும் என்று கவிஞர் எ.மு. ராஜன் தன் விருப்பத்தை ஒரு தொலைதூரக் கனவாகக் காண்கிறார்.

''தட்டுக்கள் மட்டுமே
அமர்ந்த பைக்குள்
புத்தகக் கட்டுகள்
தட்டுகள்
வீட்டில்''[18]

என்று ஒரு விமர்சனப் பார்வையோடு விருப்பமும் இங்கு வெளிப் படுகிறது.

17. கோகிலா தங்கசாமி, நீந்தத் தெரியாத மீன்கள், ப. 44
18. ராஜன், ஏ.மு., கிழக்குச் சூரியனின் மேற்கு நினைவுகள், ப. 55

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



### 3. நடுத்தர வர்க்கம் :

நமது இன்றைய சமுதாய நிலையில், வர்க்கம் என்பது மேல்கீழ் என்ற இரண்டொடு இல்லாமல் 'நிர்வாகிகள்' என்ற மற்றொரு அமைப்பையும் கொண்டிருக்கிறது. இவர்கள் நிறு-வனங்களின் தலைவர்களாகவும் இயக்குநர்களாகவும் ஊழியர் களாகவும் நியமிக்கப்படுகின்றவர்கள். இவர்கள் முதலாளிகள் அல்லர். முதலாளிகள் விருப்பத்தை நிறைவேற்றுபவர்கள். அதற் காகச் சம்பளம் பெறுபவர்கள். அவ்வளவே. அதனால் சுரண்டல் தொடருகிறது. இதனால் முதலாளிகள் லாபத்தையும், தொழி-லாளிகள் கூலியையும் பெறுகிறார்கள்.

இத்தகைய நிர்வாகிகள், அறிவு ஜீவிகள். திறனும் தனிப் பயிற்சியும் கொண்டதன் அடிப்படையில் தொழில் புரியும் பொறி யாளர், மருத்துவர், அலுவலர், ஆசிரியர் போன்ற பலரும் ஒரு வகைக்குள் அடங்கப் பெறுவர். இவர்களை 'நடுத்தர வர்க்கம்' எனலாம். இன்றைய தொழில் வளர்ச்சிக் கால கட்டத்தில், கல்வி வளர்ச்சிச் சூழலில் சர்வதேசத் தொடர்புப் பின்னணியில், மக்களாட்சி அரசியலில், இந்த 'நடுத்தர வர்க்கம்' தோன்றி நிலைபேறு பெற்றுவிட்டது. இந்த வர்க்கமும் உழைத்துப் பிழைக்கும் வர்க்கமே. கரத்தால் இல்லையெனில் கருத்தால் உழைக்கும் வர்க்கம் இது. பொதுவாக மாதச் சம்பளம் பெறும் இனம் இது. இவர்களின் வாழ்க்கை பசியிலும், பட்டினியிலும் உழலும் அவல நிலையுடையதன்று. ஆனால், இந்த வர்க்கம் மேல், கீழ் என்ற இரண்டு வர்க்கத்திற்கும் இடைப்பட்டதாக இருப்பது போலவே இதனிடம் குட்டி பூர்சுவாத்தனமும், சிறிது அடிமை மனப்பான்மையும் ஆக இருவகை மனப்பான்மையும் உண்டு அதனால், சூழலுக்கேற்பச் செயல்படுகின்றது இவ்-வர்க்கம்.

### நடுத்தர வர்க்கப் பிரச்சினைகள் :

நடுத்தர வர்க்கப் பிரச்சினைகள், மனப்பான்மைகள் இவற் றைக் கவிஞர்கள் சித்திரிக்கின்றனர். நடுத்தர வர்க்கத்தாரின் வாழ்க்கை சம்பளத்தையே நம்பியிருப்பது. இவர்களின் வாழ்க் கைத்தரம் சம்பளத்திற்கான உழைப்பிலும் சம்பளத்தை மீறிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



செலவிலுமாக ஒரு வட்டத்திற்கு உட்படுகிறது. நடுத்தர வர்க்க எதிர்பார்ப்புகள், செலவினங்கள், இவற்றிற்காகப் போராடுவதிலும், தமது நிலையைத்தக்க வைக்கும் முயற்சியிலும் இவர்களின் காலமெல்லாம் கழிகிறது.

''நாங்கள் என் ஜி.ஓ க்கள்
நாங்கள் போர்வை வாங்குவதற்குள்
குளிர்காலம் போய்விடுகிறது
செருப்பு வாங்குவதற்குள்
கோடைகாலம் போய்விடுகிறது''[19]

என்று ஒரு சிறு நகைச்சுவை உணர்வு மிளிர நடுத்தர வர்க்க நிலையைச் சித்திரிக்கின்றார் கவிஞர் நீலமணி. கவிஞர் நா. காமராசன்.

''மத்திய தர வர்க்கத்தின் கடைசிக் கொழுந்துகள்
முதல் தேதியின் சாயங்கால மயக்கங்கள்
சம்பளத்தின் ரயில் சிநேகிதர்கள்''[20]

என்பார். கவிஞர் சிற்பியும்,

''முதல்தேதிச் சக்கரவர்த்திகள்
மாத நடுவில்
மன நோயாளிகள்
கடைசி வாரத்
தத்துவ ஞானிகள்''[21]

என்பார். இந்த வர்க்கம் சம்பள வர்க்கம், ஒரு சராசரி வர்க்கம்.

நடுத்தர வர்க்கத்தின் மிகப்பெரும் பிரச்சினை பற்றாக்குறை. கல்வி, பதவி, கலை, கலாச்சாரம், புகழ் அத்துணையிலும் போட்டியிடும் வர்க்கம் இது. அத்துணைக்கும் தேவையான பொருளாதாரம் இவர்களுக்கு எட்டாததாகிறது.

19. நீலமணி, தீர்க்கரேகைகள், ப. 7
20. காமராசன், நா., காமராசன் கவிதைகள், ப. 275
21. சிற்பி, புன்னகை பூக்கும் பூனைகள், ப 73

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



"நிலவுக்கு ஒருநாள் மட்டும்
அமாவாசை
ஆனால்
மாதச் சம்பளக்காரனுக்கோ
29 நாட்கள்"[22]

இந்தப் பற்றாக்குறை என்பது ஒவ்வொருவகைப் பணி நிலைக்கும் குடும்ப நிலைக்குமேற்ப விகித அளவு பெறும்.

"பசி
வேட்டை நாயென
குடலைக் குதறுது
புகழ் தீனியாகுமா?
உள்ளத்தில் அரிப்பு
ஊர் சுற்ற வேணும்
சட்டையோ கிழிசல்
புகழைச் சட்டையாக
அணிய முடியுமா?"[23]

அறிவு ஜீவியின் பற்றாக்குறை அவலம் இது. 'வெறும் புகழ்' என்று இக்கவிதைக்கு வல்லிக்கண்ணன் தலைப்பிட்டிருப்பது மிகப் பொருத்தமாகும். பெயரும், புகழும் தரும் எழுத்துப் பணியால் மட்டும் ஓர் எழுத்தாளன் வாழ்ந்துவிட முடியாது. உயிர்ப் பிழைப்பிற்குரிய பொருளாதார வசதியை எல்லா எழுத்துக்களும் கொடுத்து விடுவதில்லை. வியாபாரம் ஆக்கப்படாத கருத்தும், எழுத்தும் பொதுவாகப் பொருளாதார உத்திரவாதம் தருவது இல்லை. இந்நிலையில் ஒரு சிந்தனாவாதியின் வாழ்வு அவலப் படுகிறது.

## நடுத்தர வர்க்க மனநிலை :

நடுத்தர வர்க்கத்துப் பிரச்சினைகள் போலவே நடுத்தர வர்க்கத்து மனநிலைகளும் சில உண்டு. கவிஞர் பலரும் இதனை

22.
23. வல்லிக்கண்ணன், அமர வேதனை, ப. 37

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



எடுத்துரைத்துள்ளனர். கவிஞர் ஆத்மாநாம் இத்தகைய அறிவு ஜீவிகளைப் பற்றி 'என் அறை' என்ற தலைப்பிலே தருகிறார்.

"கற்சுவர்கள்
சுண்ணாம்பின் பின்னே
நாம் நாகரிக குகைவாசிகள்
பேனா எலும்புடன்
சுற்றி வரும் தற்கால மனிதர்கள்
... ... ... ... ...
புரட்சிக்காய்
காத்திருந்து கொட்டாவி விடும்
புத்திசாலி நடுத்தரங்கள்"[24]

என அறைக்குள்ளே முடங்கிக்கொண்டு எழுதுவதும், எதிர் பார்ப்பதுமாய்க் காத்துக் காத்துக் காலங்கழிக்கும் வர்க்கம் இது என்பதை அழகாகச் சித்திரிக்கின்றார் ஆத்மாநாம். அறைக்குள் முடங்கும் சிந்தனைச் சுமை, செயலில் சோம்பலைத் தந்துவிடும் என்று எச்சரிக்கையும் செய்கிறார். அமைப்புகள், செயல்பாடுகள் என்று இவை ஏதுமற்ற சிந்தனைகள் முடக்கத்தையும், அவ நம்பிக்கையையுந் தான் வளர்க்கும்.

நடுத்தர வர்க்கம் ஓரளவு பாதுகாப்புடனும், பட்டினி இல்லாமலும் இருக்கின்ற வர்க்கம். கோபுரமும் இன்றி, குடிசையும் இன்றி இரண்டின் தன்மையும் தெரிந்த வர்க்கம் இது. ஓரளவு பாதுகாப்பில் வாழ்கின்ற வர்க்கம் இது என்பதால், அந்தப் பாதுகாப்பை இழந்து விடத் துணியாத வர்க்கம் இது. தன்னை விடத் துன்பத்தில் உழலும் மக்களின் அவலமும், கொடுமையும் அறிந்தாலும், அதற்காக எதனையும் செய்யும் துணிவைப் பெறாது. தன் நிலைக்குப் பங்கம் ஏற்படாத வகையில், பாதுகாப்பு உணர்ச்சியோடு நடந்துகொள்ளும் மனநிலை இந்த வர்க்கத்திற்கு இயல்பானதாகும்.

"கோபுரத்தால் எரிந்தன குடிசைகள்
இதனை ஓட்டுவீடுகள் ஓயாமல் பார்த்தன

24. ஆத்மாநாம், காகிதத்தில் ஒரு கோடு, ப. 15

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



பார்த்து முகஞ் சுளித்தால் நம்மைப் பற்றி
மாளிகை என்ன நினைக்கும்
ஓட்டுவீடுகள் ஒரு கணம் சிந்தித்தன
பொடிக் குடிசைக்கு நேர்ந்த கதி
நமக்கும் நேர்ந்தால்
நம்மால் தாங்க முடியுமா?
அழவே வேண்டாம்
பெரியவனோடு சேர்ந்தே சிரிப்போம்''[25]

இத்தகைய கண்டும் காணாமற் செல்லும் மனப்பான்மை இவர்களுக்கு வருவது எப்படி? அவர்களின் இரண்டும் கெட்டான் நிலை தரும் அச்சவுணர்வும், இழப்பதற்குச் சில இருக்கின்ற பாதுகாப்பு உணர்வுமே காரணமாகும். 'மாளிகை'யைப் பகைத்துக் கொள்ள முடியாத அச்சம், இயல்பான இரக்கத்தையும் அழித்து விடுகிறது. ஒரு வகையில் இயலாதவர்களாகவும், ஒரு வகையில் பூர்சுவாக்களாகவும் செயல்படுகின்றனர். அதனால்தான், 'பெரியவனோடு சேர்ந்தே சிரிப்போம்' என்று முடிவெடுக்கின்றனர்.

நடுத்தர வர்க்கத்தின் மற்றொரு மனப்பான்மை போலிக் கௌரவம் பார்ப்பது ஆகும். மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று நினைத்துத் தன் செயலை மாற்றிக் கொள்ளும் தன்மை இவர்களிடத்து மிகுதி. ஊருக்காக உலகத்துக்காக, நாலு பேர் மதிப்பதற்காக என்று ஊரார் கண்ணோட்டத்தில் தன்னை உயர்த்திக் கொள்ளும் மனப்பான்மையில் ஊறிப்போகிறது இவ்வர்க்கம். அதற்காகத் தன்னையே வருத்திக் கொண்டு தன் நிலைக்கு மீறிய எதிர்பார்ப்பு, செலவு, கடன், கவலை என்று அனைத்தையும் சுமக்கிறது. 'இந்தப் போலிப் பெருமை யார்க்கும் உதவாது.

''கோழிச் சிறகால் குழவிக்கல்லைத்
தூக்க முடிந்திடுமா? — நம்
குடியைக் கெடுக்கும் போலிப் பெருமை
வாழ்க்கைக் குதவிடுமா''?[26]

25. கனல், கீழைக்காற்று, ப. 32
26. தணிகைச்செல்வன், பூபாளம் ப. 64

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



'இடையினம்' என்ற தலைப்பில் இந்தப் போலி கௌரவ மனப் பான்மையைப் போக்க வேண்டியதன் அவசியத்தை மேலும் மேலும் எடுத்துரைக்கிறார் கவிஞர் தணிகைச்செல்வன். நடுத்தர வர்க்கம் கடைப்பிடிக்கும் அச்சமும், மௌனமும், போலி மதிப்பு மனப்பான்மையும், அவர்களை முன்னேறாமல் தடுக்கும் சக்தி யாகச் செயல்படுகிறது. அத்துடன் சமுதாயத்திற்கே கேடு பயக் கிறது. இதனாலேயே,

"அழுகிய புண்ணை அறுக்காவிட்டால்
எலும்பே புரையோடும் — அதை
அழகிய பட்டுத் துணியால் மூடினால்
எல்லாம் புழுவாகும் — இது
எப்படிச் சரியாகும்"[27]

என்று கேட்கிறார் தணிகைச்செல்வன். பூசி மெழுகி சமாதானம் தேடும் இந்த மனப்பான்மை ஒரு வகையில் அதிகார வர்க்கத்தை ஆதரிக்கும் பணியை நேராகவோ மறைமுகமாகவோ செய்கின்றது எனலாம். இத்துடன், இன்னும் வேறு வகைகளில் வர்க்க அவலம் வளர்வதற்கு வழி வகுக்கும் செய்திகளும் சமூகத்தில் உண்டு.

### வர்க்க நெருப்பை விசிறும் காற்றுகள்

### இயற்கை எதிரியாதல் :

இயற்கையும் செயற்கையுமாகச் சேர்ந்து பல கோடி இன்பங்கள் கிடைக்கக்கூடிய வளர்ச்சியை உலகம் கண்டிருக்கிறது. எனினும் பிரச்சினைகள் ஒரு புறம் குவிந்து போகின்ற நிலையும் உள்ளது. இதனால் வறுமை மட்டும்தான் மனித வாழ்க்கையின் பிரச்சினை என்று கூற முடியாது. எனினும் வறுமை பல பிரச் சினைகளுக்கும் வழி கோலுகிறது என்பதையும் மறுக்க முடியாது. கடற்கரை மணலில் கோவலனுக்கும் மாதவிக்கும் யாழ்மேல் வைத்து வந்த பிரச்சினை வாழ்க்கைப் பிரச்சினை. மிகப் பெரிய பிரச்சினை. ஆனால், அது உயிர்ப் பிரச்சினை அல்ல. அதே கடலில் நாள்தோறும் வயிறு வளர்க்கப் பாடுபடும் மீனவன் ஒருவன் கடலில் செல்லும் உழைப்பு, அவர்க்காகக் கரையில் காத்திருக்கும் குழந்தையின், குடும்பத்தின், எதிர்பார்ப்பு, அச்சம்

27. மேலது, ப. 66

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இவை இன்னும் பெரிய பிரச்சினை. இந்த வேறுபாட்டைக் காட்டுவதுபோல் கவிஞர் இன்குலாப் 'கானல்வரிகள்' பாடியுள்ளார். எத்துணைப் பழக்கமான, பரம்பரைத் தொழிலாக இருந்தாலும் 'ராக்ஷச சவுக்கடிகளாக அலைகள் புரளும் கடலில், மீன் பிடிக்கச் செல்பவர்களின் வாழ்வு நிம்மதியான வாழ்வாக இருக்க முடியாது. நீரில் சென்றவர் மீளும்வரை கரையிலுள்ள குடும்பம் கண்ணீரில்தான். இந்த நிலையிலும், அலையோடு போரிட்டும் வளம் காணாத மீனவர்களின் வாழ்க்கையே போராட்டமாக இருந்தும், அவர்களின் குழந்தைகள் கடல் முழுவதும் தமது பரம்பரைச் சொத்து என்று குழந்தைத்தனமாக எண்ணிக் கொள்கின்றன. புலால் கவுச்சியடிக்கும் கடலின் புதல்வர் யாப்பறியாமல், யாழில்லாமல் கிழிந்த பாவாடையில், கீச்சுக் குரலில்,

"எங்கப்பாவும் உங்கப்பாவும்
கப்ப ராஜா
எங்கம்மாவும் உங்கம்மாவும்
கப்ப ராணி"[28]

என்று பாடுகின்றனர். ஒரு வாழ்க்கையின் உழைப்பு, வறுமை, கவலை, இதற்கிடையே உள்ள குழந்தைத்தனம் அனைத்தையும் படம் பிடித்துக் காட்டுகிறார் கவிஞர் இன்குலாப். மற்றொரு பாடலில் இக்கவிஞரே கூறுவதுபோல, 'மேல் தட்டு வர்க்க'த்திற்காகப் பாடப்பட்ட,

"பத்தினிச் சீமாட்டி கண்ணகிக்கும்
பரத்தைச் சீமாட்டி மாதவிக்கும்"[29] பாடப்பட்ட

சிலப்பதிகா'த்தின் கானல் வரியிலிருந்து மாறுபட்ட வகையிலே கானல்வரிகள் தருகிறார் இவர்.

இயற்கை, மனிதனின் ஆளுகைக்கு உரியதும், அதே சமயம் ஆளுகையை மீறியதும் ஆகும். மனிதன் அதனின்றும் பாதுகாப்புத் தேடிக் கொள்ளாத நிலையில் அது இன்ப நுகர்விற்கு

28. இன்குலாப், வெள்ளை ரோஜா, ப. 22
29. மேலது, ப. 14

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



உரியதாக இல்லாமல் துன்பம் தரும் பேய்த் தன்மை வாய்ந்ததாக ஆகிவிடுகிறது. அடித்தள மக்களின் வாழ்க்கை அன்றாடப் போராட்டமாக இருப்பதால் பாதுகாப்பு வாய்ப்புகள் குறைகின்றன. அப்போது இயற்கையும் எமனாக வாய்க்கிறது. மழை பெய்யாத நிலையில் வறட்சியால் இழப்பு, பசி அத்துணையும் அவர்களை ஆட்கொள்கிறது. மழை அதிகம் பெய்யும் காலத்திலோ பயிர்கள் பாழாகிக் குடிசைகள் நீரில் மூழ்கித் தத்தளிக்கும். மாடமாளிகைகள் இந்த இயற்கையின் சீற்றத்தால் எதையும் இழப்பதில்லை. பஞ்சபூதங்களும் மனிதனுடைய இன்றியமையாத் தேவைகளாக இருப்பினும் ஏழைகளுக்கும் பாடுபடுவோர்க்குமே அவை இழப்பினைத் தருகின்றன. இந்நிலையில் இயற்கையே இவர்களுக்கு எதிரியாகிறது என்பதைப்

> "பஞ்சைகளுக்கு மட்டுமே
> பூதங்களாக இருப்பதால் தான் — இயற்கையை
> பஞ்சபூதங்கள் என்கிறார்களோ?"[30]

என்று சொற்பொருள் விளக்கமாகத் தருகிறார் தணிகைச் செல்வன்.

## இரு வேறுநிலை :

வறுமையும், வர்க்க வேறுபாடும் கண் முன்னே காணத்தக்க நியதியாக நமது சமுதாயத்தில் நிலவுகின்றன. தவிர்க்க முடியாத தீமையாக இந்த நிலை இங்கு ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது. கவிஞர் நீலமணியின் கவிதையில் வருவதுபோல, 'செரிக்க முடியாத பணத்தின் வாந்தியாய்ச் செல்லும் கல்யாண ஊர்வலத்தில், காஸ்லைட் தலைச்சியின் சேலையில் கிழிசல். விளக்கைச் சுமப்பவளின் வாழ்க்கையில் இருட்டு.[31] மலையைக் குடைந்து பாறை பிளந்து வீடு கட்டுகிறான் தொழிலாளி ஆனால் அவன்,

> "உசுரப் பணயம் வைச்சுக் கூட ஐலசா — நம்ம
> உலையில் பானை ஏறலியே ஐலசா"[32]

---

30. தணிகைச் செல்வன், பூபாளம், ப. 26
31. நீலமணி, தீர்க்க ரேகைகள், ப. 59
32.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்று பரிதாபக் குரலில் பாடுகிறாள். மனிதர்களில் மட்டுமல்ல. பிற இனங்களிலும் இந்த வர்க்க வேறுபாடு உண்டு. மச்ச நியாயம் என்று கூறுவர். வலியது வாழும் நிலை, இளைத்தது வீழும் நிலை. பிற உயிரினங்களில் இது சாத்தியமாகலாம். தவிர்க்க இயலாததாக இருக்கலாம். ஆனால் ஆறறிவு படைத்த மனித இனத்தில் இவ்வேறுபாடு ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல ஆனால், இந்நிலை நிலவுகிறது.

வறுமை என்பது அடிப்படைப் பிரச்சினைதான். இதனைக் கவிஞர்கள் பலரும் தமது கவிதைகளில் வெளிப்படுத்துகின்றனர். ஆனால் வறுமை மட்டுமே பிரச்சினை அன்று. அதனை மீறிய பிரச்சினைகளும் உண்டு; வாழ்க்கை பன்முகப்பட்ட பிரச்சினைகள் கொண்டதுதான். எனினும் வழக்கமும், பழக்கமும் செய்து கொள்ள இயலாத பிரச்சினை பசி. பொறுமை என்ற பெயரிலோ, மரபு என்ற பெயரிலோ தாங்கிக் கொள்ள இயலாத பிரச்சினை இது. தனி மனிதன் என்றாலும், ஒட்டு மொத்தச் சமுதாயம் என்றாலும், பட்டினிப் பிரச்சினை, துன்பங்கள் அனைத்திற்கும் அடிப்படையாக அமையக்கூடியது. ஏழையாக ஓர் இனம் இருப்பது என்பதே அதற்கு நேர்மாறாக ஓர் இனத்தையும், சமூக ஏற்றத்தாழ்வையும் ஒத்துக்கொள்ளும் சமுதாய நிலையைக் காட்டுவதாகும். சுரண்டுபவன், சுரண்டப் படுபவன் என்ற இரண்டு வித மனித வாழ்நிலையை மாற்றும் மனப்பான்மையோ நம்பிக்கையோ இல்லாத காரணத்தினால் தான் 'தர்ம உபதேசங்கள்' கூறிச் செல்வந்தர்களை இளகச் செய்ய முயன்றனர் நம் முன்னோர்கள். 'வசதியிருக்கிறவன் தர மாட்டான்' என்பது வரை புரிந்து கொண்டவர்கள் வயிறு பசிக்கிறவன் விடமாட்டான்'[33] என்று நினைக்கவில்லை, அத்தகைய மக்கள் புரட்சியை அவர்கள் கற்பனை செய்யவில்லை. அதனால்தான், உடைமையாளர்களின் வள்ளல்தன்மையும், இரக்கச் சிந்தயும் மட்டுமே பஞ்சமும், பசியும் போக்கும் என்று நம்பினர். வழங்கும் இனம் ஒன்றாகவும், வாங்கும் இனம் ஒன்றாகவும் இருப்பதை ஒப்புக் கொண்டனர். திருவள்ளுவர்,

---

33. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



"இறந்தும் உயிர்வாழ்தல் வேண்டும் பரந்து
கெடுக இவ்வுலகியற்றி யான்"[34]

என்றார். பாரதியும் "ஜெகத்தினை அழித்திடுவோம்' என்றார். இவை கோபாவேசங்களாகக் கொப்புளித்தவை. இறைவனைக் சொல்வதும், ஜெகத்தினை அழிப்பதும் உணர்வு வெளிப்பாட்டில் சிறந்துள்ளன. ஆனால் இதை விட அறிவுப்பூர்வமாகவும் உணர்வுப்பூர்வமாகவும், சமுதாய நினைவுப் பூர்வமாகவும் எடுத்துரைக்கின்றார் தமிழன்பன்.

"இன்னதென்று தெரிந்தே செய்த
வறுமையை
எங்களை முந்திக்கொண்டு
எமது
மரணம் மன்னிக்கலாம்
இறைவனும் மன்னிக்கலாம்
எங்கள்
மரபு
மன்னிக்காது"[35]

என்கின்றார். வறுமை என்பதும் வர்க்க வேறுபாடும் தெரியாமல் நடக்கும் விபத்து அன்று மாற்றுத் தேடாத சமூகச் சோம்பல், மாற்றம் விரும்பாத சமூகக் கோழைத்தனம், மாற்றமின்மையில் பயன் காணும் ஒரு சாராரின் போக்கு இவைதான் வறுமையும் பசியும் தொடர்வதற்குக் காரணம் அதனால்தான், தெரிந்தே செய்த வறுமை என்கின்றார் 'மரபு மன்னிக்காது' என்றும் தீர்ப்புக் கூறுகிறார்.

## அரசியற் சூழல்

இன்றைய நமது சுதந்திர இந்திய சமுதாய அமைப்பில் அரசு என்பதும் ஒரு முதலாளித்துவ உற்பத்திப் பொருளே.

34. திருக்குறள்
35. தமிழன்பன், ஊமைவெயில், ப. 64

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



'வெள்ளையன் ஆண்ட இடத்தில் கொள்ளையன் ஆளு கின்றான்' என்று கவிஞர்கள் பலரும் பல இடங்களிலும் அரசியலை விமர்சிக்கின்றனர்.

"முதலாளிக்கே அரசியல் சட்டம்
மூஞ்சி சிரிச்சிருக்கு — ஏறிக்கிற
முதுகையும் குனிஞ்சிருக்கு"[36]

என்று சட்டமும் சகலமும் முதலாளிகளின் பையில் இருப்பதை உணர்த்துவார் பரிணாமன். இன்றைய முதலாளித்துவ அரசியலை விமர்சிக்கும் வகையில் பழைய மன்னராட்சிகளின் மாயைகளையும் சேர்த்து விமர்சிக்கிறார் கவிஞர் இன்குலாப். நிலவுடைமையின் பிடியிலிருந்தது இராஜராஜனின் ஆட்சி. முதலாளித்துவ மனப்பான்மையில் ஊறிய சூத்திரதாரிகளின் கையில் இருக்கிறது இன்றைய அரசியல் என்பதை உணர்த்துகிறார்.

"கடந்த ஆயிரம் ஆண்டுகளை
அப்படி ஒன்றும்
கைகழுவ முடியாது
ஆயிரம் ஆண்டு மூத்த என் சகோதரியின்
காலில் கட்டிய சதங்கை
இந்தப் பெரிய கோயில்
முற்றத்தில்
அழுது கொண்டிருக்கிறது
இன்னும்"[37]

என்று சோழர்கால அரசியலைத் தொட்டு இறுதியில் "மகுடங்களின் மாயையில் மக்களை மூடும் சூனியக்காரர்களும், சூனியக்காரிகளும் சாம்பலாகட்டும்" என்று முடிக்கின்றார். நிலப்பிரபுத்துவ மன்னராட்சிக்கும், இன்றைய முலாளித்துவ அரசியலுக்கும் வேறுபாடு மிகுதியில்லை. மக்கள் சார்ந்த, மக்களின் நலன் சார்ந்த சமூக சனநாயகம் இன்னும் கிட்டவில்லை என்பதையே உணர்த்துகிறார்.

36. பரிணாமன், ஆகஸ்டும் அக்டோபரும். ப. 82
37. இன்குலாப், கிழக்கும் பின் தொடரும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



வர்க்க வேறுபாட்டை ஒரு வசதியாகக் கருதும் மனப் பான்மை உள்ள அரசியலில், அடிப்படைப் பிரச்சினைகள், ஆழப் பிரச்சினைகள், அவசரப் பிரச்சினைகள், அன்றாடப் பிரச்சினை கள் என்று மக்கள் பிரச்சினைகளைப் பற்றிய கவலை இருப்ப தில்லை. மாறாக, தனது கௌரவம், தனது பதவி, தமது செல்வம், தனது வளர்ச்சி, தனது கட்சி என்ற ஒரு சுயநலமே வேரூன்றி விடுகிறது

''பட்டொளி வீசும்
பளபளப்பு மயக்கம்
பாதை ஓரங்களிலோ
பசியின் கிறக்கம்''[38]

என்று சக்திக்கனல் இந்தியாவின் கதையைக் கூறுகிறார். சமு-தாயத்தில் காணப்படும் அவலங்களுக்கும், வேறுபாடுகளுக்கும், வர்க்கமே அடிப்படைக் காரணம் ஆகும். அரசு என்பதும் இந்த வர்க்க சமுதாயத்தில், வர்க்க ஒழிப்பிற்குப் பாடுபடும் சாதன மாகத் திகழ முடியாது அது ஏகபோக முதலாளிகளின் கைப் பாவையாகவும் அதேபொழுதில் மக்களை ஆட்டிப் படைக்கும், ஏமாற்றும், சுரண்டும் முதலாளியாகவும் திகழ்கின்றது. அதனால் தான், அரசியல்வாதியே பிரச்சினைகளின் பிறப்பிடமாகவும், போலித்தனத்தின் பருவுருவாகவும் திகழக் காணலாம்.

''போதுமென்ற மனமே
பொன் செய்யும் மருந்தென்று
ஹரிகதையின் உபதேசம் செய்வார்கள்
மூலதனக் கருவினிலே பொன்னைப் பெருக்கி
பிஸ்கட் வார்ப்பார்கள்''[39]

என்று கவிஞர் ராஜாராம் இரட்டை முகம் படைத்த இன்றைய அரசியலைப் படம் பிடித்துக் காட்டுகின்றார். சரியான அமைப்-பிலே உருவாகாத அரசும், சரியான அமைப்பினை உருவாக்க முயற்சி செய்யாது என்பது வெளிப்படை.

38. சக்திக்கனல், கனகாம்பரமும் டிசம்பர்ப் பூக்களும், ப 66
39. ராஜாராம், கோ., அலுமினியப் பறவைகள், ப. 13

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



## வர்க்கத்தின் வேர்கள் சொத்துடைமையும் பணிப் பங்கீடும் :

உழைப்புக் கருவிகளும், களமும், பணமும், பதவியும், சிலர் கையில் இருப்பதால், உழைப்பிற்கு மதிப்பு இல்லை. உழைப்பை மதிக்காத சமுதாய அமைப்பிலே மதம், சாதி, சடங்கு, சம்பிரதாயம் இவையும் வர்க்கத்தை வளர்க்குமேயன்றிக் குறைக்காது. வர்க்கமும் இறைவனின் ஏற்பாடு என்றும், விதியின் விளையாட்டு என்றும், வினைப்பயன் என்றும் கருதப்பட்டது. பலரின் உழைப்பில் சிலரின் வாழ்வு என்கின்ற தத்துவச் சூழலே நிலவுகிறது இத்தகைய சமுதாய அமைப்பு எங்ஙனம் தோன்றுகிறது. இந்த ஏற்றத்தாழ்வுக்கான மூல காரணம், எங்கே உள்ளது என்று ஆய்ந்து பார்த்தால், தனிச்சொத்துடைமையும், வேலைப் பங்கீட்டு முறையும் காரணமாக அமைவதைக் காணலாம். ''உண்மையாக உழைக்கும் மக்கள், அவர்களது அவசியமான உழைப்பில் ஈடுபட்டிருக்கிற வரையில், அவர்களுக்குச் சமூகப் பிரச்சினைகளில் கவனம் செலுத்த ஓய்வு நேரம் கிட்டுவதில்லை. அரசு விவகாரங்கள், சட்ட விஷயங்கள், கலை, விஞ்ஞானம், போன்றவற்றில் கவனம் செலுத்த முடிவதில்லை. இந்த நிலை நீடிக்கிற வரையில், ஒரு தனி வர்க்கம் தொடர்ந்து நீடிக்கவேண்டியது அவசியமாயிற்று. அதாவது, அது யதார்த்த உழைப்பிலிருந்து விடுவிக்கப்பட்டதாக, இத்தகைய காரியங்களை நிர்வகிப்பதாக இருக்க வேண்டியது தேவைப்பட்டது. இந்த வர்க்கம் எப்போதும் தோற்கவே இல்லை. அதனுடைய சொந்த ஆதாயத்திற்காக, உழைக்கும் பெருவாரி மக்கள்மீது மேலும் மேலும் அதிகமான சுமைகளைச் சுமத்த அது தவறியதே இல்லை. எனவே, வேலை பங்கீட்டிலிருந்துதான் வர்க்கங்கள் தோன்றுகின்றன''[40] என்ற எங்கெல்ஸின் விளக்கம் இந்தக் கவிதைகளில் சிந்திக்கப்பட்டு, சித்திரிக்கப்பட்டுள்ளது.

---

40. பிரடரிக் ஏங்கல்ஸ் - கருத்து- ஆளுமை நூல் : வரலாற்று-பொருள்முதல் வாதம் ப. 221

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


நமது சமுதாயத்தில் உழைக்கின்ற நோக்கமே சிலருக்கு இல்லை. உழைப்பவர்க்கோ உழைப்பின் பயன் கிட்டுவதில்லை.

"உழைக்கிற நோக்கம் உறுதியாயிட்டால்
கெடுக்கிற நோக்கம் வளராது"[41]

என்பார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். "கெடுக்கிற நோக்கம் என்பதில் பலவகைத் தீமைகள் அடங்கியுள்ளன. சுரண்டுதல், அடக்குதல், வாழ்க்கையைப் பறித்தல், கொல்லுதல், வாழ்விடங்களையே எரியூட்டி நாசமாக்குதல் என்று எத்தனையோ உண்டு. இங்ஙனம் தாக்குதலுக்கு ஆட்பட்ட தனிநபர்கள் பலர். சேரிகள் பல.

"பணக்காரர்களுடைய
வியர்வையும்
ஏழைகளே
சிந்துகிறார்கள்.
அதற்குப்
பிரதி உபகாரமாக
ஏழைகளின் இன்பங்களையும்
பணக்காரர்களே
அனுபவிக்கிறார்கள்"[42]

இங்ஙனம் உழைக்க ஓரினமும், உழைப்பில் பிழைக்க ஓரினமுமாக இருக்கின்றது. முதலாளிக்கும் உழைப்பில் பங்கும், பொறுப்பும் இருப்பதாக நினைக்கின்றோம். ஆனால் மார்க்ஸ் கூறுவதுபோல, "ஒரு முதலாளி தொழில் நுட்பத்தை நிர்வாகம் செய்வதால் முதலாளியாக இருப்பதில்லை. ஆனால், முதலாளியாக இருப்பதாலேயே தொழிலை நிர்வாகம் செய்கின்றான்"[43] திறமைகள் பல விரயமாகும் இன்றைய சமுதாயச் சூழலிலிருந்தே இதை நாம் உணர முடியும்.

41. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள்
42. தேனப்பன், வ., கனவு அன்னங்கள், ப. 26
43. கார்ல் மார்க்ஸ் - கருத்து. ஆளுமை நூல்: வரலாற்றுப் பொருள்முதல் வாதம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



## ஏமாற்றும் அறியாமையும்

உழைப்பாளர்களின் குருதியை உறிஞ்சிக் குடிக்கும் கொள்ளையர்கள் மதத்தின் பெயராலும், தானதர்மத்தின் பெயராலும் தங்கள் வஞ்சகத்தையும் மறைக்கின்றனர்.

"ஏழைக் குமருகள் ஈடேறுவதற்குத்
தட்டாமல் கொடுக்கும் தருமப்பிரபு
மரைக்காயர் வீட்டு மஞ்சத்திலேதான்
சம்மட்டி காசிமின் நாளைய மனைவி
சுலைகா இன்று சோர்ந்து கிடக்கிறாள்"[44]

என்பார் கவிஞர் இன்குலாப். தருமங்களுக்குப் பின்னணியாகும் 'கருமங்கள் உண்டு' என்பதை உணர்த்துகிறார். தானதர்மத்தின் வாயிலாகத் தமது சுயலாப நோக்கத்தையும், போலித்தனத்தையும் வக்கிர சிந்தையையும் மறைக்க முயல்கின்றனர். மேல் வர்க்கத்தார். ஏழைகளின் சூழலும், ஏமாளித்தனமும், மூட நம்பிக்கைகளும் இவை யாவும் ஏழைகளை வஞ்சிக்கின்றன. ஏழைப் பெண்களின் கற்பைச் சூறையாடிவிட்டு அவர்கள் வாழ்வையும் நாசப்படுத்திவிட்டுப் பேயடித்து விட்டதாகக் கதையளப்பார்கள் மிட்டா மிராசுகள். இந்த ஏழைக்குலமோ, 'கஞ்சி குடிப்பதற்கிலார், அதன் காரணம், இவையெனும் அறிவுமிலார்' என்ற நிலையிலே இருப்பது. அதனால், வெந்ததைத் தின்று வேடிக்கை பார்த்தே காலங்கழித்துவிடும். அதற்கு மேலே சிந்திப்பதற்கும், செயல்படுவதற்கும் அவர்களின் நிலையும், நம்பிக்கைகளும் இடங்கொடுப்பதில்லை. மூட நம்பிக்கை என்பது இரு வர்க்கத்தாரிடமும் இருப்பது. அதிலும், தான் மிகக் கொடுமையாகத் தாக்கப்பட்டாலும், அதன் காரணமறிய இயலாத மூட நம்பிக்கை இந்த ஏழைகளுக்கேயுரியது. இதனை ஒரு கவிதையில் கவிஞர் அறிவுமதி சித்திரிக்கின்றார்.

44. இன்குலாப், வெள்ளை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



''எங்கள் சேரிச்
சோதரிகளை
மிராசுகள்
பனம்பழங்களைப்போல்
கடித்துக் குதறித்
துப்பிய
பிணங்களைப்
பேயடித்துச்
செத்தவர்கள் என்கிற
பொய்யில் போர்த்தி''ச்[45]

சுமப்பதாகக் காட்டுகிறார் கவிஞர்.

## சாதிப் பிரிவினை

வர்க்கமும், சாதியமும் கைகோர்க்கும்போது ஏழைகளின் நிலை மேலும் கொடுமையானதாகிறது. தொழில் காரணமாக, வருமானம் காரணமாக, வாழ்க்கைச் சூழல் காரணமாக, நாலு சாதியும், இரண்டு வர்க்கத்தில் அடங்குவதற்குரிய சாத்தியப்பாடுகள் மிகுதி. ''குலத்திலே விலக்கி, கல்விக்கூடததிலே விலக்கி, கோயில் தலத்திலே விலக்கி ...... எங்கள் பலத்தை விலைக்கு வாங்கிப் பாதுகாத்தார்கள் தம்மை''[46] என்று தணிகைச்செல்வன் கூறுவதுபோல் அத்துணைத் துறையிலும் ஏழை வர்க்கம் விலக்கப்பட்டது. சுரண்டும் வர்க்கம், மேலும் மேலும் பணமும், பதவியும் அதிகாரமும் பெற்றது.

நமது இலக்கியங்களும் கூட 'தன்னேரில்லாதவன்' என்றும் இலக்கியத் தகுதி படைத்தோரென்றும், வருணித்ததெல்லாம் மேட்டுக்குடி வர்க்கத்தையே ஆகும். வறுமை பாடப்பட்டபோதும், அதில் வர்க்க வேறுபாட்டின் அடித்தளக் கொடுமை அலசப்படவில்லை. வறுமை ஒரு நியதி போலும், அதன் தீர்வு

45. அறிவுமதி, நிரந்தர மனிதர்கள், ப. 76
46. தணிகைச்செல்வன், ஒரு துண்டு இந்தியாவும் நானும், ப. 53

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



ஒரு அரசனின், ஒரு தலைவனின், கையில்தான் என்ற உணர்வினையே பரப்பினர். அது ஒரு தனிமனித வழிபாட்டின் அடிப்படையில் பிறந்த தீர்வுச் சிந்தனை.

'ஈரும் பேறும் இருந்திறை கூடும்' குந்தலுடையினின்று 'கொட்டைக்கரைய பட்டுடை'க்கு மாறும் விந்தை ஒரு வேந்தனின் கடைக்கண் அருளால்தான் நிகழ்ந்தது. வேறு வழியில்லை.

மக்களைச் சார்ந்த காப்பியம் என்று சிலம்பினைப் போற்றுகிறோம். ஒரு மன்னனைச் சாகடிக்கவும், ஒரு பெண்ணினைத் தெய்வமாக்கவும் துணிந்த துணிச்சலைப் பாராட்டுகிறோம். ஆனால் அதிலும் ஒரு வர்க்கப் பார்வை இருந்திருக்கிறது.

''பரத்தைச் சீமாட்டி மாதவிக்காகவும்
பணக்காரச் சீமாட்டி கண்ணகிக்காகவும்
உங்கள்
சிலம்புப் பரல்கள் புலம்பிக் கிடந்தன
கண்ணீரில் மூழ்கிய வேர்வைக் குலங்கள்
தலை காட்டினவா உங்கள் ஓவியத்தில்''[47]

என்று இலக்கியங்கள் காட்டிய பாரபட்சத்தைச் சுட்டிக்காட்டுகிறார் கவிஞர் இன்குலாப். இலக்கியத் தகுதி என்பது கூடக் காசுக்கும், கலைக்கும் தாலி கட்டிக்கொண்ட பத்தினியாக இருந்திருக்கிறது. இதனால்தான், வர்க்க வேறுபாடுகள் பொருளாதாரத்தில் வேர்விட்டு நின்றாலும், சமுதாயத்தின் பல துறைகளிலும் பரவிபிருக்கின்றன என்பதை உணர முடிகின்றன.

## வர்க்கமும் சாதி, மொழி, கூட்டுணர்வும்

வர்க்கங்கள் போலவே சாதியமும், நமது நாட்டில் காலங்காலமாகப் பிறப்பிலேயே ஏற்றத்தாழ்வு முத்திரை குத்தியது. இந்த சாதியக் கலாச்சாரமும், மத மூட நம்பிக்கைகளும் நமது சமுதாயத்தை ஆட்டிப் படைத்த பிசாசுகள்தான். உடையவன்

47. இன்குலாப், வெள்ளை இருட்டு, ப. 14

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இல்லாதவன் என்ற வர்க்க வேறுபாட்டுடன் சாதிக் கலாச்சாரமும் நமது பிரச்சினைகள் பலவற்றிற்கும் காரணமாக இருந்தது என்பது உண்மை. ஆனால் அதுவும், பொதுவாக வர்க்க முரண் பாட்டோடு ஊடுருவியே இருந்திருக்கிறது. வர்க்க முரண்பாட்டு உடைப்பினால் அன்று சாதீய முரண்பாட்டு உடைப்பு சிறிதும் சாத்தியமில்லை. இரண்டும் ஒன்றினோடு ஒன்று பிணைந்தே சாத்தியமாகும். சாதிகள் ஒழிபா முன்னம் சேரியும், ஊரும் ஒன்றாக முடியாது என்றுரைப்போர்க்குக் கூறும் வகையில்,

"பெரிய பண்ணையினை எதிர்த்துப்
போரிடும் போரிலேதான்
பறையனின் தோள்களோடு
படையாச்சியின் தோள்கள் சேரும்"[48]

என்பார் தணிகைச் செல்வன். சாதி முரண்பாட்டு ஒழிப்பு எப்போது சாத்தியம் என்பதைத் தெளிவுபடுத்துகிறார் கவிஞர்.

"பொருளாதாரப் பூட்டுக்கள்
தெறிக்கப்படும் வரை
சாதியின் சல்லிவேரைக் கூட
அசைக்க முடியாது"[49]

என்று கவிஞர் வைரமுத்துவும் இதனை ஆணித்தரமாக எடுத்துக் கூறுகிறார். சாதியின் ஆணிவேர், சல்லிவேர் என்பதெல்லாம் 'வர்க்க விதை'யின் மீதிகள் தான்.

சாதீயம் போலவே மொழியும் கூட வர்க்கம் பார்க்கும் தன்மை உடையதுதான்.

"அரசோச்சும் தமிழனுக்கும்
அடித்தளத் தமிழனுக்கும்
முரண்பாடு மோதும்போது
மொழிகூட வர்க்கம் பார்க்கும்"[50]

48. தணிகைச்செல்வன், பூபாளம், ப. 31
49. வைரமுத்து, இன்னொரு தேசிய கீதம், ப. 38
50. தணிகைச்செல்வன்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்பார் தணிகைச்செல்வன். மொழியால் ஓரினம் ஆயினும் நிலையால் இனம் பிரிகிறது. இதனால்தான், அனைத்திற்கும் முடிவாக,

> "ஒழைக்கிற சாதி
> ஒழைக்கிற சாதியை
> ஏமாத்திப்
> பொழைக்கிற சாதி"[51]

என்று சாதி இரண்டொழிய வேறில்லை என்ற முடிவுக்கு வருகிறார் கவிஞர் அறிவுமதி.

## வர்க்க எதிர்ப்புச் சிந்தனை

வர்க்க சமுதாயத்தில் பொருளாதார நிலையே வாழ்க்கையின் ஆதார நிலையாக இருக்கிறது. அதனால் திறனுக்கேற்பவும் தேவைக்கேற்பவும் பொருள் பங்கீடில்லாமல், சொத்துக்குவிப்பு தொடர்கிறபோது பொருளாதார நிலையே அதிகார நிலையாகவும் மாறுகிறது. இது மக்களின் அனைத்து நிலையையும் வாழ்வையும், சாவையும் கூட நிர்ணயிக்கிறது. பணத்திற்கு மதிப்பு மிகும் சமுதாயச் சூழலில் மக்களின் மனநிலை, வாழ்நிலை அத்துணையும் பொருளாதாரத்தின் அடிப்படையிலேயே அமைகிறது. இந்நிலையில் சுரண்டுபவனின் வாழ்க்கையும் சுரண்டப்படும் மனிதனின் வாழ்க்கையும் இரண்டுமே அர்த்தம் இழக்கிறது. மனிதன் மனிதனாக வாழ்ந்து, வாழ வைத்துச் சிறப்பதற்குரியதே வாழ்க்கை. வாழ்க்கை பல முகம் கொண்டது. பல களம் கொண்டது. அத்தனையிலும் சிறப்பதற்குரிய அறிவும் திறனும் வலுவும் இயற்கையிலேயே மனிதனிடம் உண்டு. ஆனால் வர்க்கப் பிரச்சினையால் மனிதனை மனிதன் அடக்கி, ஒடுக்கி, இழுக்குறச் செய்து தன் மனிதத் தன்மையிலிருந்து இழிந்து அர்த்தத்தையே மாற்றுகிறான்.

"உற்பத்திச் சாதனங்களில் தனியார் உடைமை இருப்பது தான் சமுதாயத்தின் பொருளாதார அடிப்படையாக அமைந்து,

---

51. அறிவுமதி, நிரந்தர மனிதர்கள், ப. 104

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



அதன் காரணமாக வர்க்கங்களாகப் பிளவுபடுவதும், உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர் உழைக்கும் வர்க்கத்தை அதலடிப் படையில் சுரண்டுவதும், அதனடிப்படையில் வர்க்கங்களிடையே சமூக முரண்பாடுகள் எழுவதும் நிகழ்கிறது''[52] என்று கார்ல் மார்க்ஸ் தெளிவுபடுத்துவது இங்கு ஒப்புக் கொள்ளத்தக்கது. இதனால் நாம் உணர்வது. யாதெனில் சம உடைமையும், சம அந்தஸ்தும் உள்ள சமுதாயத்தில் வர்க்கமும் இருக்காது மனிதனை மனிதன் சுரண்டுவதும் இருக்காது என்பதாகும். இத்தகைய சமுதாய அமைப்பு உண்டாக்க முடியும் என்று நம்பிக்கை உண்டாக்க வேண்டும் என்ற எழுத்து முயற்சி, அதற் குரிய எழுச்சியை விதைக்க வேண்டும என்ற நோக்கம் ஆகியவை தம் கவிஞர்களிடையே இருக்கிறதா என்று நோக்கும்போது இன்றைய சமுதாயத்தின் கண் விழிப்பிற்கு இவர்கள் பூபாளம் இசைக்கத் தொடங்கி விட்டார்கள் என்றே கூற வேண்டும். அந்த வகையில் காரண காரிய ஆய்வோடு, அடிப்படைப் தகர்வு முயற்சியாகவே இக்கவிஞர்களின் எழுத்து துலங்குவதைக் காணலாம்.

''சிலர்க்கு மட்டும் எச்சில் துப்ப
இளம்பிறைக் கிண்ணம் எப்படிக் கிடைத்தது
புளித்த கஞ்சி பொத்தல் போட்ட
தகரக் குவளை ஏன் பலரிடத்தில்?
இன்னும் அதிக நாள் நடக்காது,
இன்னும் அதிக நாள் நடக்காது''[53]

வர்க்க வேறுபாட்டின் எதிர்ப்புணர்ச்சி இங்குக் கிளம்பியுள்ளது.

வர்க்க வேறுபாடு களையக்கூடியதா இல்லையா என்று பட்டிமன்றம் வைத்து முடிவெடுக்க இயலாது. வர்க்க வேறுபாடு என்பது மனித சமூகத்திற்கு முரணானது. கொடிய விளை வினைத் தருவது. இதைத் தகர்த்த முடியாது, கூடாது என்று கருதுபவர்கள் தன்னம்பிக்கையும், உழைக்கும் நோக்கமும் அற்ற

52. கார்ல் மார்க்ஸ் கருத்து. ஆளுமை நூல்: வரலாறுப் பொருள் முதல்வாதம் ப. 217
53. சாலய் இளந்திரயன், நாளுக்கு நல்லபடி, ப. 45

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



வர்கள் என் தோடு சுரண்டலிலே சுகம் காணுபவர்களும் ஆவர். அதனால் சமுதாயத் துரோகிகள், மனிதகுல விரோதிகள் என்று கூறலாம். இதனாலேயே,

''நாட்டுப் பசுவைச்
சீமைப் பசுவாக்க முடியுமாம்
ஆனால்
ஏழையைப்
பணக்காரனாக்க முடியாதாமே''[54]

என்று எரிச்சலோடு சினங்கொள்கிறார் கவிஞர் தேனப்பன்.

வர்க்கங்கள் இருந்தால் என்ன? எல்லோரும் வாழ முடியும் என்று கருதும் மனப்பான்மை நம்மிடையே பலருக்கு உண்டு. வாழ்க்கை என்பதற்கு அவர்கள் வழங்கும் நியாயம் அது. ஆனால் இந்த மனப்பான்மை ஒரு நோயாகப் பீடித்திருக்கிறது என்பதை உணர்த்துகிறார் கவிஞர் தமிழன்பன். இந்த நோயைத் தீர்க்கும்வரை வர்க்கங்கள் தீர்க்க முடியுமா?

''குசேல புரியும் குபேர புரியும்
இங்கே
இருக்கலாம் என்னும் வாதம்
இளம்பிள்ளை வாதம்''[55]

என்பார் கவிஞர். இளம்பிள்ளை வாதம் போல் சமுதாயத்தை முடமாக்கிவிடும் விபத்து இந்த மனப்பான்மையிலுள்ளது அது மட்டுமா? ''ஐந்து விரல்களும் ஒன்றா என்பார்கள். அவர்களுக்கு இரண்டு கண்களும் நிகரென்று எடுத்துச் சொல்வோம்'' என்பார் அதனால் வர்க்க ஒழிப்புச் சிந்தனையை நமது மக்களிடையே எடுத்துச் சொல்ல வேண்டிய கடமையும் இந்தச் சந்ததிக்கு உண்டு. வர்க்க ஒழிப்பு நிகழ்ந்தாலன்றி வர்க்கக் கலப்பு என்பது

---

54. தேனப்பன், வ., கனவு அன்னங்கள், ப. 66
55. தமிழன்பன், அந்த நந்தனை எரிச்ச நெருப்பின் மிச்சம், ப. 56

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



சாத்தியமில்லை சாத்தியமென்று கருதுவது அறியாமையே யன்றி, நடைமுறையாக முடியாது.

''பழைய சோறும்
பாதாம் கீரும்
ஒரு வயிற்றுவாய்
ஒரு நாளும் ஆவதில்லை
அப்படியே போனாலும்
வர்க்கச் சண்டை
வயிற்றுள்ளும் நடக்கும்' [56]

என்கிறார் கவிஞர் கந்தர்வன். இதையே மு. மேத்தாவும், 'செல்வம் ஏழ்மையைச் சேர்த்துக் கொள்ளாது; சேர்த்துக் கொண்டாலும் சமமாக நடத்தச் சங்கடப்படும்'[57] என்பார்.

வர்க்க முரண்பாடு பொறுமையுடன் ஏற்றுக் கொள்ள வேண்டியதன்று. ஏனென்றால், வர்க்க முரண்பாட்டின் விளைவுகள் மிகக் கொடியவை. உயிர் பறிக்கும் கொடுமைவரை கொண்டு செல்பவை. மனித வாழ்வியல் அர்த்தத்தையே மாற்றி விடுபவை. அதனால்தான், ஒரு சிறு நிகழ்ச்சியின் வாயிலாகக் கூட, ஒரு வரலாற்று மாற்றத்தின் இன்றியமையாமையை உணர்த்துகின்றார் கவிஞர் தணிகைச் செல்வன்.

''சேலைகள் நூறு நெய்து
தந்த சகோதரிகள் ஒற்றைச்
சேலை இனாமுக்காய் மோதி
மதுரையில் திண்டுக்கல்லில்
ஆவியை இழந்த சேதி
ஆறிப்போய்விடலாம். ஆனால்
வரலாற்றுத் தீர்வு எங்கே?''[58]
வாழ்வின் இம்முரண்பாட்டுக்கு

56. கந்தர்வன், கிழிசல்கள், ப. 26
57. மேத்தா, மு., வெளிச்சம் வெளியே இல்லை, ப. 46
58. தணிகைச்செல்வன், ஒரு துண்டு இந்தியாவும நானும், ப. 56

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


என்று கேட்கின்றார். ஒரு நிகழ்ச்சித் சித்திரிப்போடு வர்க்க முரண்பாட்டு விளைவாக அந்நியமாதலும், வறுமையும், உயிர் இழப்பும் காட்டுகின்றார். நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கண்டறியும் முன் நிகழ்ச்சிகளே மறக்கடிக்கப்படுகின்றன. ஏழைகளின் உயிர் அத்துணை மலிவாகிறது. அதனால்தான், தீர்வுகள் கிடைப்பதில்லை. ஒரு நிகழ்ச்சி என்பதோடு நில்லாது, ஒரு அடிப்படை நிலையின், அடிப்படைப் பிரச்சினையின் பிரதிபலிப்பு இது என்று கொள்ளாத வரையில் இத்தகைய உயிரிழப்புகள் நிகழவே செய்யும் இதனைக் கருத்திற் கொண்டே 'வரலாற்றுத் தீர்வு' காண வேண்டுமென்று வலியுறுத்துகிறார் தணிகைச் செல்வன்.

இத்தகைய வர்க்க வேறுபாட்டை 'அந்தஸ்துகளின் திணை மயக்கம்' என்று குறிப்பிடும் கவிஞர் ரோகிணி, இதைக் காந்திகளும், அம்பேத்கார்களும் கண்டுகொள்ளத் தவறினர் என்று துணிந்து குற்றஞ் சாட்டுகிறார். இதனால்தான்,

''உழைக்கும்
குரோம்சோம்களில்
கறுப்பு நிறம் மட்டுமே
நிரந்தரமானது''[59]

என்பதையும் தெளிவுபடுத்துகிறார். இத்துணைக் கொடுமைகளின், முரண்பாடுகளின் மூலவேர் எங்கே இருக்கிறது? வியர்வை ஆற்றைத் தவழவிட்டுக் கண்ணீர் ஆற்றில் குளிக்கும் கறுப்பு மலர்களை நிர்மூலமாக்கும் நெருப்பாறு எங்கே பிறக்கிறது?

''ஓ .........
நிலக்குவிப்பு நெருப்பு மலையில்தான்
இந்த ஆறு பிறப்பெடுத்ததோ''[60]

என்று இடம் சுட்டிக் காட்டுகிறார் மேலூர் மாவேந்தன்.

---

59. ரோகிணி, தேன் முள்ளுகள், ப. 57
60. மேலூர் மாவேந்தன் ,சின்ன விடுதலை,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இன்றைய மக்களாட்சி சமுதாயத்தில், வர்க்க வேறுபாடு ஒழியவேண்டும் என்ற உணர்வு வளர்ந்த இந்த நாட்களிலும் வர்க்கக் கொடுமைகள் நடக்கின்றன. அதற்கும் காரணம் அதிகார வர்க்கத்தின் அதிகாரக் குவிப்புத்தான்,

"அவர் எந்தப் பயமும் இல்லாமல்
அநீதிசளைச் செய்வதற்குக் காரணம்
அவரிடம்
பல கோடிகளும்
சில கேடிகளும்
இருப்பதுதான்"[61]

என்பார் தேனப்பன். கோடிகளும், கேடிகளும் என்ற வார்த்தை ஜாலத்திற்கு மேல் இது எதார்த்தமான உண்மையாகும். பெரிய மனிதப் போர்வையில் பல கொள்ளைகளும் கொடுமைகளும் தான் நடக்கின்றன. வன்முறைக்கும், சட்டத்தின் கண்ணை மறைப்பதற்கும், அனைத்திற்கும் பணம் பக்கபலமாய் நிற்கிறது. இந்தப் பெரிய மனிதர்களின் கையிலே அரசியலும் அடைக்கலம் அடைகிறது. அதனால்தான், இவர்களுக்கு எதைப் பற்றிய அச்சமும் இருப்பதில்லை கவிஞர் நீலமணி உரைப்பது போலத் தொழிலாளர் புரட்சி தோன்றி வளர்ந்துவரும் இந்நாளில் அடக்குமுறை அவிழ்க்கப்படுவதற்கும் இதுவே காரணமாகும்.

"ஒரு கம்யூனிஸ்ட்
கொடியேந்திக் கோஷமிட்டார்
ஒரு இன்ஸ்பெக்டர்
துப்பாக்கிச் சத்தமிட்டார்
மந்திரி சமாதான
விளக்கம் சொன்னார்
முதலாளி எங்கோ
சிரித்துக் கொண்டான்"[62]

(நீலமணி)

---

61. தேனப்பன், வ., கனவு அன்னங்கள், ப. 55
62. நீலமணி, தீர்க்க ரேகைகள், ப. 10

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



சுயநல அரசியல்வாதிகள் ஒரு வகையில் அடக்குமுறைக்காரர்களாகவும், ஒரு வகையில் அடிமைகளாகவும் இருக்கின்றனர். ஆனால் இந்த ஏகபோக முதலாளிகள், எந்த வகையிலும் பாதிக்கப்படாதவர்களாகப் பணபலத்தால் எல்லோரையும் விலைக்கு வாங்குபவர்களாகவும், ஆட்டிப் படைப்பவர்களாகவும், அழித்து மாய்ப்பவர்களாகவும் உள்ளனர்.

## வர்க்க ஒழிப்புச் சாத்தியங்கள்

வர்க்க முரண்பாட்டின் விளைவுகள் மிகக் கொடியவை என்ற புரிதலின் அடிப்படையிலேயே வர்க்க ஒழிப்புச் சிந்தனையும் தோன்றியே தீரும். இந்தச் சிந்தனையின் பொறியாகவே வர்க்கப் போராட்ட உணர்வு தெறிக்கிறது. இது தவிர்க்க இயலாதது.

"ஒடுக்கப்பட்ட வர்க்கங்களும், ஒடுக்கும் வர்க்கமும் தவிர்க்க முடியாமல் ஒருவரை எதிர்த்து ஒருவர் போராட நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். ஏனெனில், அவர்களது நலன்கள் முரண்பட்டிருக்கின்றன. எனவேதான், வர்க்கப் போராட்டம் என்பது சமுதாயம், வர்க்கங்களாகப் பிளக்கப்பட்டதிலிருந்து எழுகிறது"[63] என்கிறது 'வரலாற்றுப் பொருள் முதல்வாதம்'. இந்த உண்மைக்கேற்ப, சுரண்டலின் சிரஞ்சீவிவிட்ட சமுதாயம்தான் சிரஞ்சீவியாக வாழ முடியும். அந்தச் சாதனையை முடித்தன இரஷ்யாவும், அண்மையிலே சீனாவும் என்று எடுத்துக்காட்டும் சாலை இளந்திரையன்,

"சுமந்து களைத்தவன்
சுறுசுறுப்பு அடையும்போது
சுமந்தே அறியாதவர்கள்
துடுக்கு அடங்குவார்கள்"[64]

என்று பொறுமை போக்கிப் பொறுப்போடு தொழிலாளர் வர்க்கம் போராடினால் சமத்துவம் சித்தியாகும் என்பார்.

63. வரலாற்றுப் பொருள்முதல் வாதம், ப. 234
64. சாலை இளந்திரையன், நாளுக்கு நல்லபடி, ப 45

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



வர்க்கப் பாதிப்புச் சித்திரிப்புகளோடு, வர்க்க உடைப்புச் சிந்தனைகளும், வர்க்கப் போராட்ட முழக்கங்களும் கவிதைகளில் நிறையக் காணலாம்.

மேலும் இக்கவிஞர்கள் தமது கவிதைகளில் வெறும் பிரகடனமாக மட்டுமின்றிக் காரண காரிய ஆய்வுகளோடு வர்க்க ஒழிப்புச் சிந்தனையைத் தூவியிருப்பதையும் காணலாம். அத்துடன் வர்க்க பேதமற்ற ஒரு சமுதாயம் படைக்க முடியுமா என்ற வினாவிற்கு ஒரு முற்றுப்புள்ளி பதிலாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் தருகின்றனர்.

> "வர்க்கப் பகைமையின்
> ரத்தக் கறைகளைப்
> பூமியிலிருந்தே
> துடைக்கப் போகிறோம்"[65]

என்று கவிஞர் இளவேனில் முற்றுப்புள்ளி வைக்கிறார். இந்த நம்பிக்கை, அதிலும் நமது சமுதாயம், நமது நாடு, நமது மக்கள் என்ற வரையறைகளை உடைத்து மொத்த மானுட வர்க்கத்திலிருந்தே இந்த வர்க்கப் பகைமையைத் துடைப்போம் என்ற நம்பிக்கைக் குரல் கொடுக்கிறார். வர்க்க ஒழிப்புச் சிந்தனையின் வீச்சும், விசாலமும், நிச்சயமாக மானுடம் தழுவியதாகத்தான் ஒரு சிறந்த கவிஞனால் எதிர்பார்க்கப்படும். குறுகிய நோக்கமும், குட்டைச் சித்தாந்தமும் இல்லாத கவிஞர்களால்தான் வர்க்க ஒழிப்புச் சிந்தனையும் பெற முடியும் அத்தகைய சிந்தனையும், நம்பிக்கையும் நமது கவிஞர்களிடையே வளர்ந்து வருகிறது. வலிமையோடு எடுத்துரைக்கப்படுகிறது. கவிஞர்களின் இத்தகைய நம்பிக்கைகள் காலச் சுழற்சியில் உண்மைகள் ஆகின்றன என்பதை வரலாறு உணர்த்தும்.

65. இளவேனில், இளவேனில் கவிதைகள், ப.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# அடக்குமுறை - அது அடங்கும் வரை

## அடக்குமுறை — விளக்கம்

வர்க்க சமுதாயத்தில் பெரும்பான்மை மக்கள் அந்நியப்படும் அவலத்திற்கு உட்பட்டவராகின்றனர். அரசியல், மதம், கலை இலக்கியப் பிற்போக்குத்தனம், ஏமாற்று, போலித்தனம் இவை எவற்றினாலும் இவர்களே பாதிக்கப்படுகின்றனர். இந் நிலையில் சனநாயகம் என்பது அரசியல் வடிவத்தைப் பொறுத்த பெயராக இருக்குமேயன்றித் தன்மைகளில் அது வேறுபட்டு இருக்கிறது. அதனால் இது மார்க்சீயவாதிகளால் குறிப்பிடப்படும் 'பூர்சுவா சனநாயகமாக உருவாகிறது. இத்தகைய சனநாயகம்என்பது சமூக சனநாயகமாக மாற்றப்படவேண்டியது. இன்றியமையாததாகும். உலக முழுவதும் முந்தைய வரலாற்றுக் காலகட்டங்களில் இருந்த சர்வாதிகார முறையோடு ஒப்பிடும் போது இந்தப் பூர்சுவா சனநாயக முறை ஒரு முன்னேற்றமே எனலாம். ஏனெனில் தொழிலாளர்களின், பொதுமக்களின் இழப்புகள் அவர்களை விழிப்புணர்வு கொண்டவர்களாக மாற்றும் ஒரு சூழ்நிலையை இது வழங்குகிறது. அதற்குரிய போராட்ட உணர்வுகளையும் ஊக்கங்களையும் இது தோற்றுவிக்கிறது. ஸ்தாபன ரீதியான அமைப்புக்களின் வாயிலாக, சோசலிச சன நாயக வாதத்திற்கான போராட்ட வித்தூன்ற உதவுகிறது. இன்றைய காலகட்டம், இத்தகைய போராட்டக் காலமாகும். இதனாலேயே இதன் எதிரிகளான முதலாளிகள், தம்மைப் பாது காத்துக்கொள்ளும் முயற்சியில் மேலும் தீவிரம் காட்டுகின்றனர். இந்நிலையில் அடக்குமுறை தவிர்க்க முடியாதது ஆகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



அடக்கும் மனப்பான்மை என்பது வர்க்க முரண்பாடுள்ள ஒரு சமுதாயத்தில் முதலாளி-தொழிலாளி உறவில் மட்டுமின்றி ஏற்றத்தாழ்வுள்ள வேறு வகை உறவுகளிலும் இயல்பாக வந்து விடுகிறது. எடுத்துக்காட்டாகச் சாதியம், இனம், பதவி இவற்றின் அடிப்படையிலும் அடக்குமுறை உருவாகிறது.

அடக்குமுறை மனப்பான்மையின் மூல காரணம் வர்க்க சமுதாய அமைப்பு மட்டுமன்று. ஏற்றத்தாழ்வுகளை இயற்கை என்றெண்ணிக்கொள்ளும் பகுத்தறிவற்ற மனப்பான்மையும், அடிமைத்தனத்தில் சுகங்காணும் சோம்பல் மனப்பான்மையும் கூடக் காரணங்களாகும். அடக்குமுறையின் கொடுமைகளையும் அதனால் அதை ஒழிக்கவேண்டிய எதிர்ப்புச் சிந்தனைகளையும் புதுக்கவிதைகள் எங்ஙனம் சித்திரிக்கின்றன என்பதைக் காணலாம்.

## முதலாளி வர்க்க அடக்குமுறை

சிறுபான்மையாகிய முதலாளி வர்க்கம், அதிகார வர்க்கமாகவும் சுரண்டும் வர்க்கமாகவும் உள்ளது. மக்களாட்சியிலும், இந்த வர்க்கமே நாடாளுமன்றம், அரசாங்கம் ஆகியவற்றின் பின்னால் நிற்கிறது. அது எப்போதும் பாதுகாப்பாகவும் இருக்கிறது. அதனால்தான் அதன் பாதுகாப்பிற்குக் கேடு விளைவிக்கக்கூடியதாகிய, விழிப்புள்ள தொழிலாளி வர்க்கத்தை அடக்குவதிலும், அழிப்பதிலும் அது கவனம் செலுத்துகிறது. அதற்காகப் பல வகை உத்திகளைக் கையாளவும் செய்கிறது.

தமிழன்பன் கூறுவது போல்,

''உறிஞ்சி வாழும் உளுத்தரின் உப்பிய
தொப்பையைத் தோண்டிப் பார்த்தால்
ஏழையின் கற்பனை எலும்புகள் கிடைக்கும்''[1]

ஏழைகளின் கனவுகள், இன்பங்கள், மட்டுமல்ல வயிறு வாடாமல் வாழுதற்குரிய வாய்ப்புகளும் அவர்களுக்குத் தொலைந்து போன

1. தமிழன்பன், தீவுகள் கரையேறுகின்றன, ப. 13

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



நிலையில் எஞ்சுவது விரக்தி அல்லது வீரம் ஆகும். விரக்தி எஞ்சினால் மேலும் மேலும் தன்னையே அழித்துக் கொள்ளும் குடி போன்ற போதைப் பொருள்களின் பழக்கங்களுக்கு ஆளாகின்றனர். வீரம் எஞ்சினால் உரிமைப் போராட்டப் பாதை கையக் கைக்கொள்கின்றனர்.

"அவனின் வாழ்க்கைத் தோணியை
விழுங்கிடும் கள்ளச் சாராயம்
அதை விற்பவர் யாரோ வாழ்க்கையில்
அடைவார் பெரும் ஆதாயம்"[2] (தனஞ்செயன்)

என்று சாராயத்தால் சீரழியும் கட்டுமரத் தொழிலாளரைக் காட்டுவார் கவிஞர். இழப்பதற்கு எதுவும் இல்லாத நிலையில், அந்த நிலையையே மறக்கடிக்க முயலும் விரக்தியின் எல்லை இது. இன்னுமோர் பாதையோ போர்ப்பதாகை தூக்கும் போராட்டப் பாதை. நசுக்கப்படும்போது புழுவும் கூட எதிர்ப்புத் தெரிவிக்கிறது. உழைக்கும் மனிதனுக்குப் போராட்டம் என்பது தவிர்க்க முடியாதது.

இத்தகைய போராட்ட உணர்வைப் புராணச் செய்தியோடு தொடர்புபடுத்தி உரைக்கிறார் கவிஞர் சக்திக்கனல்:

"ஒரு மழைக்காலத்தில்
வைகை சீறி வெள்ளம் பெருக
மதுரைச் சொக்கன் என்ற ஒரு தொழிலாளி
அணைக்கட்டுக்கு மண் சுமக்க மறுத்து
வேலை நிறுத்தம் செய்ததற்காக
பாண்டியன் அடித்த சவுக்கடி
'சுரீர்' எனப்பட்டு
ஜீவராசிகள் உடலெல்லாம்
சுவடு பதித்தது
சொரணை கொடுத்தது"[3]

2. தனஞ்செயன், கட்டுமரங்கள், ப. 50
3. சக்திக்கனல், கனகாம்பரமும் டிசம்பர்ப் பூக்களும், ப. 21

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்று பழைய செய்தியில் புதிய பார்வையைச் செலுத்தியுள்ளார் கவிஞர். ஒரு தொழிலாளியின் மீது விழும் அடியை அனைத்துத் தொழிலாளர் வர்க்கமும் தன் மீது பட்டதாகச் 'சொரணை' பெறவேண்டும் என்பதை நன்கு உணர்த்துகிறார். அடக்குமுறையின் உத்திகளில் ஒன்று, தனித்தனி மனிதர்களை ஒடுக்குவதும் முடக்குவதும் ஆகும். இதை முறியடிக்கும் அறிவும் உணர்வும் தொழிலாளர்களிடம் தோன்ற வேண்டும் என்பதை உணர்த்துகிறார் தனி ஒருவனுக்கு உணவில்லையென்றால், 'பரந்து கெடுக இவ்வுலகியற்றியான்' என்று வள்ளுவரும், 'ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாரதியாரும் கொதித்ததுபோல ஓர் உணர்வு பூர்வக் கொதிப்பை எதிர்பார்க்கிறார் கவிஞர்.

கவிஞர் ஏன்? கனல் கூறுவதுபோல நாரையை எதிர்த்து மீன்களும், நரியை எதிர்த்து ஆடுகளும் எழுந்தால், 'அமைதி போச்சு' என்று நாரையும் நரியும் கூச்சலிடும். மக்கள் சமூக சனநாயகத்தின் எதிர்ப்பாளர்களே சனநாயகம் அழிவதாகவும், வன்முறை வளர்வதாகவும் கூச்சலிடுவார்கள்.[4] 'சனநாயகத்தைக் காப்போம்' என்ற மந்திரத்தையே இவர்கள் கவசமாகவும் கொள்வார்கள்.

> "வன்முறை கூடாது என்று உபதேசித்தவனின்
> வாயிலிருந்து தெறித்தது என்
> தோழனின் ரத்தம்"[5]

என்று இந்த மேல்தட்டுக் கூட்டத்தின் முகமூடியைக் கிழித்துக் காட்டுகிறார் இன்குலாப். சனநாயக அமைப்பில், முதலாளிகள் சமத்துவத்தை உச்சரித்தாலும், தொழிலாளிகளின் விரிவான உரிமை தங்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் என்று அஞ்சுகிற காரணத்தால், நேரடியான சர்வாதிகாரத்தைக் காட்ட இயலாமல், சிற்சில சமயங்களில் மறைமுகமாகச் செயல்படுகிறார்கள். சட்டம், ஒழுங்கு இவற்றைத் துணைக்குக் கொள்கிறார்கள். அவை தயக்குச் சாதகமாக இல்லாதபோது அவற்றைத் தூக்கியெறிந்துவிட்டு, ஒடுக்கு முறைகளைக் கையாளுகின்றார்கள்.

4. கலை, கீழைக்காற்று, ப. 36
5. இன்குலாப், வெள்ளை இருட்டு, ப. 58

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



"கூலிகேட்டு ஓலமிட்டோம் ராமையா – நம்மைக்
கொளுத்திப்புட்டான் குடிசையோட ராமையா
வேலைகேட்டு நின்றபோது ராமையா – டிராக்டர்
வழி மறிச்சு நிக்குதடா ராமையா"[6]

என்று தணிகைச்செல்வன் விவசாயிகளின் கூலி உயர்வுப் போராட்டத்தைச் சுட்டிக் காட்டுகிறார். வேலை கொடுக்கின்ற தகுதி வாய்ந்தவனாகவும், அதற்குரிய களமும் கருவியும் உடையவனாகவும் இருப்பதனால் நிலவுடைமைக்காரன் எந்த அளவிறகும் அடக்குமுறையைக் கையாளுகிறான். ஏனென்றால் கவிஞர் பஞ்சு குறிப்பிடுவதுபோல,

''உழைத்து உருக்குலைந்து
போன பின்னும்
அவன் அடுப்பில்தான்
நாங்கள் சாம்பலாகவேண்டும்''[7]

என்ற நிலையில் உழைப்பாளர்கள் இருப்பதால், உடைமை வர்க்கம் ஒடுக்குமுறையையே ஆயுதமாகக் கொள்கிறது. வாண வேடிக்கை நடத்துவது போலக் குடிசைக்குத் தீ வைத்தல், அவர்களுக்குப் பொழுது போக்காகக் கூட ஆகி விடுகிறது.

இதேபோல் நெசவாளர் வாழ்க்கையிலும், விசைத்தறிகள் விஷத்தறிகளாக வந்து கைத்தறியை ஓட்டியதால் நெசவாளர் குடும்பங்கள் வேலை இழந்து, வேலைக்கேற்ற கூலியிழந்து, கூலி உயர்வுப் போராட்டத்தில் குடிசை இழந்து ஒடுக்கப்படுவதைச் சுட்டிக் காட்டுகிறார் கவிஞர் தணிகைச்செல்வன்.

உழைக்கும் வர்க்கத்தின் வரலாற்றில் மறக்க முடியாத வரலாற்றுச் சான்றாக வெண்மணி நிகழ்ச்சி இடம்பெறுகிறது. இந்நிகழ்ச்சியைக் கவிஞர்கள் பலரும் பல்வேறு உணர்ச்சி வெளிப்பாட்டில் பாடியுள்ளனர். இக்காலக் கவிதைகளிலேயே பெரும்

6. தணிகைச்செல்வன், சமூக சேவகி சேரிக்கு வந்தாள், ப. 6
7. பஞ்சு, ஒட்டுப்புல் 'கட்டுமரங்களும் கழு மரங்களாகும்'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



பான்மையான கவிஞர்களால் எடுத்தாளப்பட்ட நிகழ்ச்சிகள் வெண்மணியும் இலங்கைத் தமிழர் நிலையுமே ஆகும். இக்கால கட்டக் கவிதைகளில் இவற்றின் சித்திரிப்புத் தருகின்ற உயிர்த்துவம் தனி என்று உறுதியாகக் கூறலாம்.

விடுதலைப் போராட்ட கால 'ஜாலியன் வாலாபாக் படுகொலை' போல, வெண்மணி நிகழ்ச்சி ஒரு கொடிய நிகழ்ச்சியாக ஆற்றொணாத் துயரும் அவமானமும் ஆக்ரோஷமும் நல்கும் நிகழ்ச்சியாகச் சித்திரிக்கப்படுகிறது. இதில் கவிஞர் ஏ.தெ. சுப்பையனின் கனல் வரிகள் அந்தக் கொடுமையின் தாக்கத்தைப் படிப்பவர் மனதில் கிளப்பும் திறன் மிக்கவை ஆகும்.

> ''பழி வாங்க விரும்புகிறேன் — வெண்மணியில்
> படுகொலைகள் செய்தவரை
> ...... ...... ......
> அரைப்படி நெல்லுக்கு ஐம்பது உயிர்கள் என்ற
> நிலப்பிரபுக் கணக்கை நினைத்ததும் அவர்களுடன்
> கணக்குத் தீர்ப்பதற்குக் கருதுகிறேன்
> ...... ...... ......
> தானிய லட்சுமிகளைத் தந்த உழவருக்கு
> நெருப்புத் தண்டனையே நிறைவேறு மென்றால்
> பிச்சைக் காரர்களை வேசைகளை ரவுடிகளை
> உற்பத்தி செய்த நிலவுடைமை வர்க்கத்தை
> எந்தவிதம் தண்டிப்பதென்று நினைக்கையிலே
> பழி வாங்க விரும்புகிறேன்''[8]

வெண்மணியின் நிகழ்ச்சிக்காலக் கவிஞனின் வெளிப்பாடு இது. இதையே சற்று மாற்றி, கவிஞர் தணிகைச்செல்வன் இந்த அடக்குமுறையின் ஆணிவேரை எடுத்துக் காட்டுகிறார்.

> ''வயிறெரிந்தான் நிலவுடைமைக் கொடுமையாலே
> வாழ்வெரிந்தான் நிலவுடைமைச் சுரண்டலாலே
> ...... ...... ......

8. சுப்பையன், ஏ.தெ, அறைகூவல், ப. 49
9. தணிகைச்செல்வன், தணிகைச்செல்வன் கவிதைகள், ப. 40

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



உயிரெறிந்தான் கொலைகாரன் இட்ட தீயாலே
ஊனெரிந்தான் எலும்பெரிந்தான் சுடுகாடானான்''[9]

கூலி உயர்வு கேட்டுச் சாம்பலான வெண்மணிக் கதையை ஒரு இரங்கற்பா போல உரைக்கின்றார்.

நிலவுடைமையும் சொத்துடைமையும் ஒரு புறம் குவியு- மானால், வயிற்றுப் பசியும் வாழ்க்கைப் போராட்டமும் மற்- றொரு புறம் தொடர்கின்றன. இதில் மாற்றம் காணும் நோக்- கம் சமூகத்தில் முகிழ்க்கும் போது ஒரு பெரும் போராட்டம், குழப்பம், கூச்சல், வன்முறை, அத்துணையும் நிகழ்கின்றன. இதில் வலியவர் மெலியவரை அடக்குவது எளிதில் நடந்தேறு- கிறது. கிராமங்களில், சேரிகளில் இது இன்னும் எளிதாக நடக்- கிறது. அறிவு சார்ந்தும், உளம் சார்ந்தும் அத்துணை ஏற்றத்- தாழ்வுகளையும் ஏற்றுக் கொள்ளும் மனநிலை கிராமங்களில் பீடித்திருக்கிறது. அதிலும் சேரிகள் கவிஞர் நீலமணி வர்ணிப்- பது போல் 'கிராமங்களின் சிரங்குகளாக' உள்ளன. இங்கே நடக்கும் எரியூட்டல் வலியவர் வாடிக்கை ஆகும்.

''மிட்டா மிராசுகள்
எங்கள்
ஆடவரை எரிப்பார்கள்
அவர்
பெண்டிரை அணைப்பார்கள்''[10]

என்று முரண்தொடையில் வர்ணிக்கிறார் கவிஞர் நீலமணி எரிப்பதும் அணைப்பதும் வலியவர்க்கு எளிமையாக ஈடேறுகிறது.

## அரசியல் அடக்குமுறை

மக்களாட்சியில் அரசு என்பது பெருவாரியான மக்களைப் பாதுகாக்கும் ஓர் அமைப்பு என்று நம்பப்படுகிறது. ஆனால் சுரண்டல் அமைப்பில் முளைத்து வர்க்க வேறுபாட்டின் உர- மிட்டு வளர்க்கப்படும் சூழ்நிலையில் செழிக்கும் அரசுகூடப்

10. நீலமணி, பனி படர்ந்த எரிமலைகள், ப. 71

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



பொருளால் சமூகத்தை ஆளும் வர்க்கத்தின் நலன்களைப் பேணும் கருவியாகவும், அதற்கு எதிரான போராட்டங்களையும் புரட்சிகளையும் ஒடுக்கும் ஆயுதமாகவும் செயலாற்றுகிறது. அதனால் மக்களின் போராட்ட உரிமைகள் மறுக்கப்படுகின்றன. பேச்சுரிமை, எழுத்துரிமை ஆகியவை யாவும் பறிக்கப்படுகின்றன.

கவிஞர் இளவேனில், 'இந்திய தேசத்தை எங்கே போய்ப் பார்க்கின்றீர்' என்று வினாக் கேட்டு,

''பூஞ்சை இந்தியரைப் பைத்திய விடுதியிலே
பூகம்பமானோரைப் பூட்டிட்ட சிறைகளிலே''[11]

பார்க்கலாம் என்று விடையிருக்கிறார். சமுதாயச் சீரழிவுக்கும் சுரண்டலுக்கும் கொடுமைக்கும் எதிர்ப்புக் காட்ட முடியாதவர்கள் மனத்தில் புழுங்கிக் கலங்கிப் பைத்தியம் பிடித்துச் செயல் இழக்கின்றனர். எதிர்ப்புத் தெரிவிக்கும் அஞ்சாமையும் உணர்ச்சியும் வீரமும் படைத்தவர்களை அரசு சிறையில் பூட்டிச் சித்திரவதை செய்கிறது. தீய சக்திகள், தீவிரவாதிகள் என்று பெயர் சூட்டிக் கொடுமைப்படுத்துகிறது. அரசின் செயல் எதுவும் நியாயமானது, சட்டப்பூர்வமானது என்ற மனப்பான்மை வளர்ந்த நாட்டில் ஊழலின் எதிர்ப்பாளர்கள் எளிதாக ஒடுக்கப்படுகிறார்கள். நாங்கள் ஒரு நாயைக் கொல்வதாயினும் சட்டப்படி கொல்வோம் என்று சட்டதிட்டம் பேசிய காலனி ஆதிக்க ஆங்கில அரசினைப் போலக் கொல்லவேண்டும் என்பதற்காகவே சட்டமியற்றும் இயல்பு அடக்குமுறை அரசுக்கு உரியது.

''பகல்பூர் சிறைக்கைதிகளின் கண்களைப் பறித்தார்கள்
என்பது பழைய கதை
இப்போது கண்களை மட்டுமல்ல
நாக்கையே வெட்டுகிறார்கள் என்ற
நற்செய்தி கிட்டியிருக்கிறது''[12]

11. இளவேனில், இளவேனில் கவிதைகள், ப. 30
12. தணிகைச்செல்வன், ஒரு துண்டு இந்தியாவும் நானும் ப. 10

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்று ஒடுக்குமுறைக்கு ஒரு வடிவமாகப் பேச்சுரிமை கூட அடக்கப்பட்ட நெருக்கடி நிலைக் காலத்தைக் கவிதைச் சுவை யோடு படம்பிடிக்கிறார் தணிகைச்செல்வன்.

பேச்சுரிமை போல எழுத்துரிமைப் பறிப்பும் அரசுக்குச் சாத்தியமாகிறது. சட்டத்தின் பெயரில் மக்களுக்கு இழைக்கப் படும் அநீதி, சட்டத்திற்கும் நீதிக்கும் வரும் முரண்பாட்டைக் காட்டுகிறது. பத்திரிகைச் சுதந்திரம், பேச்சுரிமை யாவும் பாதிக் கப்பட்டுக் கேள்வி கேட்கும் உரிமையே ஒடுக்கப்படுவதைச் 'சுதந்திரச் சுவடுகள்' என்ற தலைப்பில் கவிஞர் தமிழன்பன் எடுத்துரைக்கின்றார்:

''மக்கள் ஆட்சி
மணித்தேர்ப்பாட்டையிலும்
பிடுங்கப்பட்ட
நாக்குகளே தொடுக்கப்பட்ட
தோரணங்கள்
யாரது
என்று கேட்டவர் தலைகளே
தூரம் காட்டும் கற்கள்''[13]

மக்களாட்சியில் இத்தகைய அடக்குமுறைகள் மிகச் சாமர்த்திய மாக நடக்கின்றன. ஆட்சியாளர்களையே நம்பும் மக்களுக்கு ஆட்சியாளர்கள் வஞ்சகம் செய்கின்றனர்.

''காய்ந்து வெடித்த
இந்த
வறட்டு இதழ்களை
ஈரப்படுத்துங்கள் என்றால்
ஈரமான நாக்குகளே
ரத்தவெறி பிடித்து இதழ்களைக்
கடிக்கும்''[14]

---

13. தமிழன்பன், தீவுகள் கரையேறுகின்றன, ப. 25
14. பாப்ரியா, கண் சிமிட்டும் கல்லறைகள், ப. 95

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்று கவிஞர் டாப்ரியா, மக்களை ஏமாற்றுவதோடு மக்களை மாய்க்கவும் துணியும் அமைச்சர்களின் மனநிலையை எடுத்துக் காட்டுகிறார்.

கவிஞர் மீரா சற்றே நகைச்சுவையும் கலக்க, மேயரின் அடக்குமுறையை அம்பலப்படுத்துகிறார். இரண்டு பையன்களின் உரையாடலில் மேயரின் மகன்,

"என்னைப்பெற்ற தந்தைக்கு
இந்த ஊரையே
அடிக்கத் தெரியும்"[15]

என்று பெருமை பேசுவதாகக் காட்டுகிறார். ஒவ்வொரு தந்தையும் தன் மகனிடம்தான் ஆதிக்கம் செலுத்திட முடியும். அவனைத்தான் அடிக்கவும் முடியும். ஆனால், மேயர் மகனுக்கோ தன் தந்தையால் ஊரையே அடிக்க அடக்க முடிகிறது என்பதில் பெருமை. அரசியல் அடக்குமுறைக் கருத்தை இங்ஙனம் புதிய உத்தியில் வழங்குகிறார் கவிஞர் மீரா.

### காவல்துறை அடக்குமுறை

காவல்துறை என்பது அரசு சார்ந்த பணி அமைப்பாகும். அரசின் பணிகளுக்கு உதவுவதோடு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இத்துறை இன்றியமையாத பணியாற்றும் துறையாகும். சமுதாய நலனும் மக்கள் பாதுகாப்பும் கருதியே குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் பணி இத்துறையைச் சார்ந்த பணியாக வழங்கப்படுகிறது. ஆனால் இங்ஙனம் பாதுகாப்பு வழங்குவதற்காக உருவாக்கப்படுகின்ற காவல்துறை, மக்களுக்குக் காவலாக இல்லாமல் அதுவே மக்களை ஒடுக்கவும் இழிவுபடுத்தவும் செய்வது சமுதாயத்திற்குப் பெரும் பிரச்சினை ஆகும். தமது அதிகாரத்தையும் வலிமையையும் எளிய எதிர்க்க இயலாத மக்களிடம் காட்டுகிறது இது. அடக்கும் அதிகாரவினத்துடனும் ஒடுக்கும் அரசுடனும் சேர்ந்து எதிர்ப்புகளைத் தடுக்கும் செயலில் ஈடுபட்டு எளிய மக்களைத் துன்புறுத்துகிறது

15. மீரா, ஊசிகள், ப. 17

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



"நலிந்த துகளை
நையப்புடைப்பதும்
வலிந்தவனை
வலிய வணங்குவதும்
உன்
நடைமுறையாயிருக்கும்போது
நீ
தூக்க முடியாத
ஆயுதங்களைத்
தூக்கிக் கொண்டு
சுமக்க முடியாத
சொக்காயைச் சுமந்துகொண்டு
யாரைக்
காவல் செய்கிறாய்
என்பது ஒன்றும்
புரியாத புதிரல்லவே"[16]

என்ற கவிதையில் கவிஞர் மேலூர் மாவேந்தன் காவல்துறையின் செயல்பாட்டுக் குறையைச் சுட்டிக் காட்டுகிறார். பாதுகாப்பற்றவர்களுக்குப் பாதுகாப்புத் தருவதற்கு மாறாகப் பாதுகாப்போடு வாழ்கின்றவர்களுக்குக் கேடு வராமல் காவல் செய்கிறது. அதற்காகவே நலிந்தவர்களை நையப் புடைக்கவும் செய்கிறது. சட்ட திட்டம் இவற்றின் பெயரிலும், அவற்றைச் செயலாற்றும் போக்கிலும் காவல்துறை அநாகரிகமாகவும் இதயமற்ற வன்முறையோடும் நடந்துகொள்வது பற்றியும் கவிஞர்கள் பாடியுள்ளனர்.

பெரிய நகரங்களில், வாழும் இடமின்றியும் பிழைக்கும் தொழிலுக்காகவும் தெருவோரத்தில் இடம் பிடிப்பவர்களைக் காவல்துறை அடக்கி ஒடுக்குவதோடு அவர்களின் பொருளையும் சூறையாடுகிற கொடுமையைக் கவிஞர் க.வை. பழனிச்சாமி,

"நடைபாதை நமதென்று
கடை விரித்தோம்

16. மேலூர் மாவேந்தன், கனவின் விலை ஒரு ரூபாய், ப. 86

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



கண்டிப்புக்குப் பெயர் போன
காவல்துறையினர்
எங்களின் பொருள்களை
எடுத்துச் சென்றார்கள்
நாங்கள் ......
கடை வீதியின்
கலை அழகைக்
கெடுப்பதாகக் கூறி''17

என்ற வரிகளில் நன்கு எடுத்துரைக்கிறார்.

''கண்டிப்புக்குப் பெயர் போன காவல்துறை'' என்பதில் கண்டிப்பு என்ற பண்பினை அராஜகமாகப் பயன்படுத்தும் காவல் துறையின் போக்கினைச் சுட்டிக் காட்டுகிறார் கவிஞர். இந்தக் கண்டிப்பு நெறியைச் சமுதாயத்தைச் சுரண்டும் மேல்மட்டத்து மக்களிடம் காவல்துறை கடைப்பிடிப்பதில்லை என்பதை மறைமுகமாக உரைக்கிறார் கவிஞர்.

அத்துடன் காவல்துறையினரே பெண்களைக் காவல் நிலையத்தில் கற்பழித்துக் கொல்லவும் துணிகின்ற கொடுமையைச் செய்திச் சித்திரிப்புடன் விவரிக்கின்றனர் கவிஞர்கள்.

''பன்னிரண்டே வயதான நயனதாராவைக்
கற்பழித்துக் கொன்ற காவல் நிலையங்களில்
பறக்கும் கொடியில் சுழல்வது என்னவோ
தருமத்தைக் காக்கும் அசோகச் சக்கரமாய்.''18

என்று கவிஞர் இன்குலாபும்,

''ஊர் காக்க உடுப்புப் போட்டவனின்
உடும்புப் பிடிக்குள்ளும்
பெரியதனக்காரர்களின்

17. பழனிசாமி, க. வை, பொற்கைப் பாண்டியன் இல்லை, ப. 105
18. இன்குலாப், வெள்ளை இருட்டு, ப. 15

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



சின்னத்தனங்களில்
சிக்கிக் கிழிந்த தனலட்சுமிகளே''[19]

என்று கவிஞர் மீனாட்சியும், காவல்துறையின் அடக்குமுறைக் கொடுமையை எடுத்துரைக்கின்றனர்.

இங்ஙனம் ஏழைகளை, இயலாதவர்களை பெண்களை ஒடுக்குவதிலும் அழிப்பதிலும் தனது அதிகாரத்தைப் பயன்படுத்துகிறது காவல்துறை.

## அதிகார ஒடுக்குமுறை

பொருளாதாரச் சமத்துவம் சாத்தியமாக இயலாத சூழலில், சமத்துவ மனப்பான்மையும் அரிதாகின்றது. அதனால், ஆளும் இனம், அடக்கும் இனம் என்பது ஒரு தனி இனமாக இல்லாமல் அவரவர் தத்தம் நிலையில், தன்னிலும் மெலியாரை அடக்கும் மனப்பான்மை பரவலாக வளர்கிறது. இது அனைத்து மட்டத்திலும் திகழ்கிறது. வெள்ளைச் சட்டைப் பட்டதாரிகள் பணிபுரியும் அலுவலகங்களிலும் இந்நிலை உள்ளது. கவிஞர் கந்தர்வன் நகைச்சுவை கலந்த பாங்கிலே இந்த நடைமுறையைக் கூறுகிறார். பல ஆண்டுகள் தோழமையோடு அலுவலர்களுடன் பழகியிருந்தாலும், அதிகாரி என்ற பதவிக்கு வந்ததும் எங்ஙனம் மனிதன் மாறுகிறான் என்பதைக் கூறுகிறார். பணம் போலவே பதவியும் அடக்குமுறைக்குத் தூண்டுகோல் ஆகின்றது.

''செய் என்று சொல்லாதே
ஏன் செய்யவில்லை என்று
எடுத்த எடுப்பிலேயே கேள்
பின் சிரிப்பை ஒழி
கோபம் கண்ணில்
கொப்பளித்து வரட்டும்''[20]

என்று அதிகாரியின் தோற்ற இலக்கணமும், பேச்சு முறையும் விவரிக்கப்படுகின்றன. மற்றவர்கள் தன்னைக் கண்டு அஞ்ச

19. மீனாட்சி, இரா., தீபாவளிப் பகல், ப. 11
20 கந்தர்வன், மீசைகள், ப. 47

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



வேண்டும் என்று எதிர்பார்க்கிற மனப்பான்மையும் ஆணவமும் பதவி இலக்கணமாகக் கருதப்படுவதைச் சுட்டிக் காட்டுகிறார் கவிஞர். அது மட்டுமல்ல. அலுவலர்களால் பிரச்சினை வந்தால் என்ன செய்ய வேண்டும் என்பதை எடுத்துக் கூறும் கவிஞர், நடைமுறை இப்படித்தான் இருக்கிறது என்பதை உணர்த்துகிறார். 'கூலி உயர்வு, வேலை நிறுத்தம் என்று ஏதேனும் பிரச்சினை வந்தால் அவசரமாய் தீர்க்க அவஸ்தைப்படாமல் அதைத் தூக்கி நடுவில் வைத்துச் சுற்றிச்சுற்றி வரவேண்டும்'. அப்போது தான் பிரச்சினைகளை ஆறப்போட்டு மழுங்கடிக்க முடியும். மேலும் பேச்சு வார்த்தை என்றும், வழக்கு என்றும், கமிஷன் என்றும் கூறிக் காலந் தாழ்த்திப் போராட்டம் வலுவிழந்து தொய்வடையச் செய்ய வேண்டும். அத்துடன் சங்கங்களை முறியடிக்கவும் பிரித்தாளவும் தெரிய வேண்டும். அதற்கும் ஒரு வழி உண்டு.

> "அலுவலகம் எங்கும்
> ஆறேழு சங்கங்கள்
> ஒரு சங்கத்தைத் தூக்கி
> உன் பைக்குள்ளே போடு
> உளவறிந்து வரச் சொல்"[21]

தொழிற் சங்கங்களில் உள்ள சபல மனம் படைத்த சுயநலவாதி களைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, சங்கங்-களையே சிதைப்பதும், ஒரு அதிகார மனப்பான்மையாகும்.

> "எம்.எல்.ஏ வந்தால்
> எழுந்து நில்
> எம்.பி வந்தால்
> குனிந்து நில்
> மந்திரி வந்தால்
> மண்டியிட்டமர்"[22]

21. மேலது, ப. 48
22. மேலது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



சுயநலம் ஒன்றே நோக்கமாகக் கொண்டு வலியவரிடம் மண்டி-யிட்டு மெலியவரை அடக்கியாளும் அதிகாரி வர்க்க அடக்கு முறையை நன்கு சித்திரிக்கிறார் கந்தர்வன்.

## சாதீய அடக்குமுறை

சமுதாயத்தில் ஏற்றத்தாழ்விற்கு உட்படும் எந்த அமைப்-புக்களிடையேயும் அடக்குமுறை நடைமுறைக்கு வருவது இயல்பு. சாதீயம் என்பது நமது சமுதாயத்தில் வேரூன்றி நிற்கின்ற ஒன்று. பொருளாதாரத்தைப் போலவே சாதீய ஏற்றத்தாழ்வும் பல பிரச்சினைகளையும் உண்டாக்கியுள்ளது. ஒரு அடக்குமுறையின் உச்ச கட்டத்தில் எதிர்ப்பு வெடிக்கிறது. அந்த எதிர்ப்பை ஒடுக்க மீண்டும் ஒடுக்குமுறையே கையாளப்படுகிறது.

''போடா போ புலைப்பயலே அந்த
நந்தனை எரிச்ச நெருப்பின் மிச்சம்
இன்னும் இருக்கு
எகிறினால் எரிந்து போவாய்''[23]

என்று சாதீயத் தீயில் தாழ்ந்த சாதி சாம்பலாகும் சரித்திரம் தொடர்கிறது என்பதையும், அரசியலும் அதற்குத் துணை போவதையும் உணர்த்துவார் கவிஞர் தமிழன்பன். மேல் சாதி யினரின் அடக்குமுறைக்குச் சான்றுதான் நந்தனாரின் கதை என்று உணர்கின்றனர் கவிஞர்கள்.

''பெரிய சாதி கும்பிடுகிற சிதம்பரசாமி — அதைப்
பறைய சாதி பார்த்ததாலே வந்தது தீமை
எரிய வச்சான் நந்தனாரின் உசிரையே
கொன்று — பிறகு
எழுதி வச்சான் ஜோதியிலே கலந்துட்டாருன்னு''[24]

என்று கவிஞர் தணிகைச்செல்வன் தெளிவுபடுத்துகிறார். இத்த தகைய சாதீய அடக்குமுறைகள் நமது பண்பாட்டில் ஊறிப் போயிருக்கின்றன என்பதையும் கவிஞர்கள் ஒத்துக் கொள்கின்-றனர்.

---

23. தமிழன்பன், அந்த நந்தனை எரிச்ச நெருப்பின் மிச்சம், ப. 15
24. தணிகைச்செல்வன், தணிகைச்செல்வன் கவிதைகள், ப. 62

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



''சாதி மேன்மை வரிசைப்படி
ஒன்றை ஒன்று அடங்க
ஒன்றுக்கொன்று அடங்க
பள்ளர் பறையரும் வண்ணாரை அடக்க
பரம்பரையாய்ப் புகழ் பெற்ற
தமிழினத்து நாகரிகம்''[25]

என்று எள்ளல் குறிப்பில் கவிஞர் சீனிச்சாமி கூறுவதுபோல் ஒருவரை ஒருவர் அடக்கும் மனப்பான்மையை 'வீரம்' எனக் கருதியது தமிழினம். உழைத்துப் பிழைக்கும் கூட்டமாக இருக்கும் இரண்டு சாதியினருக்குள் தாமிருவருமே உழைக்கும் சாதியினர் என்ற மனப்பான்மை தோன்றுவதில்லை. தங்களை உறிஞ்சிக் கொழுக்கிற சாதியைச் சாய்க்க வேண்டும் என்று தோன்றுவதற்கு மாறாகத் தமக்குள்ளே ஏற்றத்தாழ்வுகளும் சடங்கு வேறுபாடுகளும் கருதி மூர்க்கத்தனமாய் எதிர்த்துக் கொள்கின்றனர். 'சாதி வெறி' குருதி சிந்தும் களத்தை உருவாக்குகிறது.

காலங்காலமாய் ஒடுக்கப்படும் ஊஞ்சனைப் பள்ளன் தனக்கும் சமுதாய மதிப்பும் உரிமையும் வேண்டும் என்று சிந்திக்கத் தொடங்கினான் இந்தச் சிந்தனை எப்படி இயல்பாக, ஒரு அடக்குமுறையின் வெப்பத்தில் வெடித்தது என்பதை

''எரிமலை வெடிப்பதற்குத்
திரி வைக்க வேண்டுமா?
ஊஞ்சனைப் பள்ளன்
அப்படித்தான் வெடித்தான்''[26]

என்று சித்திரிக்கிறார் கவிஞர் இன்குலாப். ஊஞ்சனைப் பள்ளனின் சிந்தனையில் வந்த மாற்றம், 'அம்பலம் போல் வேட்டி கட்டணும், மறத்தியைப் போலவே மாரை மறைக்கணும், தேவனைப் போலவே செருப்போடு நடக்கணும், அய்யனார் விழாவில் கள்ளனைப் போலவே புரவி எடுத்து ஊர்வலம்

25. சீனிச்சாமி, துரை., அந்தி, ப. 16
26. இன்குலாப், கிழக்கும் பின் தொடரும், 'ஊஞ்சனை' ப. 16

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



போகணும் இவைதான் இந்த உரிமைகள், ஒரு மனிதனுக்குரிய மிகச் சாதாரண எளிய ஆசைகள், இவற்றையே மறுத்து ஒடுக்கி வைத்ததனால் ஊஞ்சனைப் பள்ளன் ஒரு நாள் வெடித்தான். காலங்காலமாய் இவற்றை மறுத்துவிடும் அதிகாரத்தைக் கைக் கொண்டிருந்தவன் அதனை இழக்கத் துணிவதில்லை. இருவரும் சமம் என்று ஏற்றுக்கொள்ள அவன் மனம் இசைவதில்லை. அதனால் அடக்குமுறையைக் கையாளுகிறான். வீரப் காட்டுவ தாய் ஊரை வளைக்கின்றனர் மறவர்கள். இறுதியில் இன்குலாப் சொற்களின்படி,

"கள்ள ரத்தமும் பள்ள ரத்தமும்
மனித ரத்தம் போலவே சிவப்பாய்"[27]

வடிகிறது. குருதியின் நிறத்தில் வேறுபாடு இல்லை மனித நிறம் தான் இருக்கிறது. மனங்களில்தான் சாதிச் சாயம் மாறுவதில்லை. மாறுகின்ற காலச் சூழல் கனியும்போது வன்முறைகள் தவிர்க்க முடியாதவையாக உருவாகின்றன.

இந்த அடக்குமுறைகள் இவற்றின் பாதிப்பு, இவற்றால் விளையும் உயிர் இழப்பு. குருதிப் பலி முதலியன பற்றிய கவலை இல்லாமல் மேல் வர்க்கத்து மேல் சாதியினரால் விளையாட்டுப் போலவும் நிகழ்த்தப் பெறுவதாகக் காட்டுகிறார் கவிஞர் வண்ண நிலவன். 'இந்தியா 1981' என்ற தலைப்பில்,

"நாட்டுப்புற வயல்வெளியில்
நாயுடன் மனிதர் பொருதுகிறார்
முதலில் மடிவோர் பரிசை
முந்திப் பெறுவார்.
ஹரிஜனங்களை எரிக்கும்
வீர விளையாட்டும் உண்டு"[28]

எனுமிடத்து, சாதிய வெறி, 'மனிதனை மனிதன் எவ்வளவு துச்சமாக நினைக்கச் செய்துள்ளது' என்பதைத் தமக்கேயுரிய ஓங்கியொலிக்காத நடையில் உணர்த்தி விடுகிறார்.

27. மேலது
28. வண்ணநிலவன், மெய்ப்பொருள், ப. 17

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



## ஆண்-பெண் அடக்குமுறை

அடக்குமுறையும் இழி கண்ணோட்டமும் வேறு பகுதிகளைப் போல, ஆண்-பெண் பகுப்பிலும் இடம் பெறுகின்றது. ஆண் வலியவன், ஆளுபவன், பெண் மெலியவள் அடங்குதற்குரியவள் என்ற கண்ணோட்டத்தை வளர்த்துள்ளது நமது சமுதாயம். அதனால் பெண்மை பலவீனப் பிறவியாகக் கருதப்படுகிறது. பெண்ணின் பிறப்பு ஒரு முழுமையான பிறப்பாகக் கருதப்படுவதில்லை. அதனால் முதலாளிகளைச் சார்ந்தே வாழ வேண்டிய தொழிலாளிகளைப் போலவே, ஆண்களைச் சார்ந்தே வாழ வேண்டிய ஓர் இனமாகப் பெண் கருதப்படுகிறாள். தொழிலாளியின் உழைப்பு, முதலாளியின் வாயிலாக அங்கீகரிக்கப்பட வேண்டி உள்ளது போலப் பெண்ணின் உழைப்பு ஆணின் வாயிலாக அங்கீகரிக்கப்பட வேண்டி உள்ளது. உழைப்பை மதிக்காத சமுதாயச் சூழலில் பெண்ணின் உழைப்பும், இருப்பும், திறமும், உரிய மதிப்பைப் பெறுவதில்லை. அதனால் அவள் மரபுகள், சடங்குகள் போன்றவற்றினாலும் ஒடுக்கப்படுகின்றாள்.

"சுகத்தை ஆணுக்கும்
சோகத்ததைப் பெண்ணுக்குமாய்ப்
பங்கு பிரித்திருக்கிறார்கள்
அபலை என்பதற்கு
ஆண்பாற் சொல்லில்லை"[29]

என்று கூறும் கந்தர்வன், ஒரு பெண் மிக எளிதாக அபலை என்ற நிலைக்குத் தள்ளப்படுவதை உணர்த்துகிறார். 'மனு'வில் உரைத்ததுபோல், 'பிறந்தது முதல் தந்தையைச் சார்ந்தும், திருமணத்திற்குப் பின் கணவனைச் சார்ந்தும், கணவனின் மறைவுக்குப் பின் மகனைச் சார்ந்தும், வாழ வேண்டியவளாக இருப்பதால்', பெண் ஆண்களினால் கைவிடப்படும்போது 'அபலை' ஆகிறாள். ஒரு ஆண் என்றைக்கும் அபலை ஆக மாட்டான். மேலும் கவிஞர் தணிகைச்செல்வன் கூறுவது போல்,

29. கந்தர்வன்' கிழிசல்கள், ப. 18

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



"அகலிகை அருந்ததி நளாயினி நல்ல தங்காள் என்று
கிழித்த கோட்டையே கிழித்துக் கிழித்து,
இறகுகள் இழந்த ஈக்களைப் போல"[30]

அடக்கி முடக்கப்படுகிறார்கள், இவர்கள். இவர்கள் இங்ஙனம் அடக்கி ஒடுக்கப்பட்ட நிலையின் வெளிப்பாடுதான் 'நாணம்' என்கிறார் கவிஞர் ஏ.தெ. சுப்பையன்.

"இருட்டுக்குள்ளே கிடந்து
எழுந்து வரும்போது கண்கள்
வெளிச்சத்தைப் பார்த்தவுடன்
கூசுகின்றது — நம்
வீட்டில் கிடக்கும் பெண்கள்
நாணுகின்றனர்"[31]

இருட்டில் கிடக்கும் இந்தப் பெண் இனத்திற்கு விடுதலை எங்கிருந்து கிடைக்கும்? ஆணும் பெண்ணும் எதிர் எதிர் இனமல்ல. எனினும் ஆளும் வர்க்கத்தின் ஆதிக்க மனப்பான்மை ஆண்களிடம் ஒட்டிப் பிறக்கிறது. இதற்குக் காரணம் சமுதாயத்தில் இருவரின் நிலையும் எதிரெதிரானதாகவே நிச்சயிக்கப்படுகிறது. ஆளுவதும் அடக்குவதுமாக இருவருக்கும் நிலை பிரிக்கப்பட்டுள்ளதால் இருவருக்கும் இரண்டு வகையில் மனப்பான்மைகள் வந்துவிடுகின்றன. அதனால்தான், பெண் விடுதலை ஆண்களினால் கிடைக்கும் சாத்தியம் இல்லை என்று வலியுறுத்திய பெரியார் 'பூனைகளிடமிருந்து எலிகளுக்கு விடுதலை கிடைக்காது' என்றார். அதே போல் கவிஞர் வைரமுத்துவும்,

"பூனைகளிடம்தான்
கிளிக் கூண்டுகளைத்
திறந்துவிடத்
தேதி கேட்டோமா"[32]

என்று பாடுகிறார். அத்தனை வகையான அடக்குமுறை ஒழிப்பிலும் தான் பெண் விடுதலையும் சாத்தியமேயன்றி இது ஆண்-

30. தணிகைச்செல்வன், சமூக சேவகி சேரிக்கு வந்தாள், ப. 41
31. சுப்பையன், ஏ.தெ., அறைகூவல், ப. 54
32. வைரமுத்து, இன்னொரு தேசிய கீதம், ப. 46

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



களால் வழங்கப்பட்டுப் பெண்களால் வாங்கப்படும் பொருளல்ல. ஏனென்றால், சமுதாயத்தின் தீ நாக்குகள் வன்முறைச் செயல்கள், பொருளாதார கலாச்சாரச் சீரழிவுகள், சமய சாத்திர விலங்குகள் என இவை யாவும், பெண்களை அடக்கி ஒடுக்கப் பயன்படும் சாட்டைகளாகத்தான் உள்ளன. பெண் இனமே அத்தனை வகைக் கொடுமைகளுக்கும் ஓர் அடிமை இனமாக உள்ளது. ஒரு சொல்லிலே களங்கம் கற்பித்துத் தூக்கியெறியப் படுவதற்குரியதாகப் பெண்மை கருதப்படுகிறது. இந்தச் சூழலில் பழிக்கு அஞ்சும் நோக்கிலேயே இவள் முடக்கப்படுகிறாள். ஏனென்றால், எந்த மனிதனுடைய வீழ்ச்சிக்கும் அவன் மட்டுமே காரணம் என்று கருதப்படுவதில்லை. ஆனால் ஒரு பெண்ணினுடைய அவல நிலைக்கு அவள் பிறப்பு மட்டுமே காரணம் என்று கற்பிக்கிறது சமுதாயம். இந்த நிலையே பெண்ணை எழ முடியாமல் வீழ்த்தும் அடக்குமுறை ஆயுதமாகிறது.

'பர்மா அகதி பச்சையம்மாள்' ஊர் விசாரணைக்கு அழைக்கப்படும் காட்சிச் சித்திரிப்பில், பெண் என்பதால் பழி சுமத்தப்பட்டு இழிவுபடுத்தப்படும் நிலையைச் சித்திரிக்கிறார் கவிஞர் சுப்பையன்.

"அவுசாரிச் செருக்கிக்கு அழுகையிலே கொறச்சலில்லே
பிச்சைகேட்டு ஊருராய்ப் பிழைக்கலாமே — தோசிமுண்டே
தேவடியாத்தனம் பண்ண தேடுவது எங்க ஊரா
இதுவரைக்கும் ஒங்கிட்டே எவனெவன் வந்துபோனான்"[33]

என்று மிரட்டிக் கேட்கின்றனர் பஞ்சாயத்துத் தலைவர்கள். அவள் உண்மையை உரைக்கின்றாள், மணியக்காரர் மகனும், பஞ்சாயத்துத் தலைவர் தம்பியும் பட்டியலில் இடம்பெறுகின்றனர். ஆனால், விடிவதற்குள் பச்சையம்மாள் ஊரை விட்டு ஓடவேண்டும் என்று பஞ்சாயத்துத் தீர்ப்பு வழங்குகிறது. பாவம் செய்யப் பலர் என்றாலும், பழி சுமக்க ஒருத்தியாகத் தனித்து விடப்படுகிறாள். 'தேவடியாத்தனம்' என்பது அவள் ஒருத்தி மட்டுமே விரும்பி நடத்தத் தகுந்த தொழில் அன்று. ஊரும்

33. சுப்பையன், ஏ.தெ., முந்தையது, ப. 54

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இதனோடு தொடர்புடையது. ஆனால், அவள் பெண் என்பதற்-காக அதிலும் 'அசதி' என்பதற்காக எந்தப் பாதுகாப்பும் அளிக்காத ஊர், விசாரணைக்குப் பின்பும், அவளுடைய பசி, பாதுகாப்பு, வாழ்க்கை பற்றிய கவலை எதுவும் இல்லாமல் அவளை விரட்டுகிறது. அவளை விரட்டிவிடுவதால் தமது ஆண் களுக்குப் பாதுகாப்பு எனக் கருதுகின்றது.

இங்ஙனம் பூட்டி வைப்பதற்குரிய பத்தினித்தனம் அல்லது விரட்டி அடிப்பதற்குரிய வேசைத்தனம் என்னும் இரண்டிற்-குள்ளும் பெண்மையை அடக்கி ஆள்கிறது ஆண் இனம். அது ஆளும் இனமாகவே செயல்படுகிறது.

## இன, மொழி, தேசிய அடக்குமுறைகள்

அடக்குமுறைக் கொடுமைகளைப் பாடும்போது கவிஞர்-களின் பார்வை உலகளாவிய விரிந்த நோக்கில் செல்கிறது. உலக வரலாற்று நிகழ்ச்சிகள் அதிலும் சமகால நிகழ்ச்சிகளின் ஆதாரத்தோடு இன, மொழி, தேசிய ஒடுக்குமுறைக் கொடுமை களைச் சித்திரிக்கின்றனர். இதில் மிகுதியாகவும் பலராலும் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினை இலங்கைப் பிரச்சினையே ஆகும்.

இலங்கையில் தமிழினம் படுகொலை செய்யப்படுவதையும், அதனால் அங்குள்ள மக்கள் சொந்த மண்ணில் அந்நியர்களாகித் தவிப்பதையும், கவிஞர்கள் பாடியுள்ளனர்.

> "அடிமைத்தனமும் வெறித்தனமும்
> மானிட வாழ்க்கையில்
> புதியதில்லை
> பிறந்த மண்ணிலேயே
> நாடு கடத்தப்படவில்லையா
> நாங்கள்" [34]

---

34. பாப்ரியா, கண் சிமிட்டும் கல்லறைகள், ப. 37

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்று இலங்கைத் தமிழர் அவலமும், சிங்களர் வெறித்தனமும் சுட்டிக்காட்டுகிறார் கவிஞர் பாப்ரியா. இதையே 'கண்ணீர்த் துளிகளி'ன் குரலில்,

"தமிழன் விழிகளில்
ததும்புகிறோம்
நாங்கள்
சிந்தி விழ எங்கே
ஒரு
சொந்த பூமி"[35]

என்று பாடுகிறார் கவிஞர் நிர்மலா சுரேஷ். இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு அவர்கள் கிளர்ந்த போது அவர்களின் உயிர், உடைமைகள் அனைத்தும் மிகக் கொடுமையாகப் பறிக்கப்பட்டு அவர்கள் உயிருக்கும் பெண்களின் மானத்திற்கும் அஞ்சி அகதிகளாக மண்ணைவிட்டுப் புறப்பட நேர்ந்தது. இந்நிலையில் விடுதலைப்புலிகளின் அமைப்புத் தீவிரம் அடையத் தொடங்கிய போது, குட்டிமணி, ஜெகன் போன்ற பல வீரர்கள் மனிதாபிமானமற்ற முறையில் சிங்கள இராணுவத்தாரால் கொல்லப்பட்டனர். தனி ஈழம் ஒன்றே வழி, அதைக் காணுவதே தனது குறிக்கோள் என உரைத்த குட்டிமணியின் கண்கள் பறிக்கப்பட்டு, இராணுவத்தாரின் காலடிகளில் நசுக்கப்பட்டன. இத்தகைய கொடுமைகளும், இராணுவ அடக்கு முறைகளும் தமிழின வரலாற்றிலும், உலக வரலாற்றிலும் அழியாத நினைவுகளாக இருக்கும். அத்தகைய செய்திகளைக் கவிஞர்கள் இராணுவ அடக்குமுறையின் கடூமைத்தனம் வெளிப்படப் பாடியுள்ளனர். 'குட்டிமணி' என்ற தலைப்பில் கவிஞர் இன்குலாப்,

"அந்த விழிகள்
இறப்புக்குப் பின்பும்
விழித்துக் கொண்டிருக்கும்
என்றா தோண்டி எறிந்தாய்
— ... — ... ......
— ... .. ... ......

35. நிர்மலா சுரேஷ், தென்றலும் தலைமை ஏற்கும், ப. 35

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



உனது கோர நகங்கள்
நீளுமுன் உயிர்த் திருந்த
அந்த விழிச் சுடரில்
ஒளி வார்த்துக் கொண்டவை
ஒன்றிரண்டு அல்ல''[36]

எனுமிடத்துக் குட்டிமணிக்கும் அவன் தோழர்களுக்கும் இழைக்கப்பட்ட கொடுமையில், உணர்ச்சி பெற்ற தமிழர்கள் மிகப் பலர் என்பதைத் தெளிவுறுத்துகிறார். இதேபோல், கவிஞர் தமிழ்நாடன், சர்வதேசியக் கவிதைத் தொகுப்பாகத் தாம் எழுதிய 'அம்மா அம்மா' என்ற நூலில் 'பொலிவியா' (Boliv ia வைத் தாயாக வைத்துப் பாடும்போது,

''தோழன் குவேரா
கைகளைக் கொன்று
பத்திரப்படுத்தினாய்
அவன் காலரேகையோ
புரட்சி இதயங்கள்மீது
இலச்சினையாய்ப் பதிந்து
மண்ணெங்கும் மின்னுகிறது''[36அ]

என்று பாடுகிறார்.

அடக்குமுறையால் ஒரு இனத்தை அழிக்க நினைக்கும் அராஜகம். என்றைக்கும் வெற்றி அடையாது. ஏனென்றால், ஒடுக்கப்படும் இனம் மேலும் மேலும் உயிர்த்தெழுமேயன்றி ஒடுங்கி விடாது. தலைமுறை தலைமுறையாக எதிர்க்குமேயன்றி அடங்கி விடாது. கவிஞர் மு. மேத்தா இக்கருத்தை நன்கு வலியுறுத்துகிறார். இலங்கைத் தமிழ்க் குழந்தைகள் தமது பெற்றோரின் எரிந்து கருகிய சாம்பலில் பல் துலக்கிக் கொண்டிருக்கின்றன. ஏனென்றால், எங்கும் தமிழர்களைச் சுட்டு வீழ்த்தலும், அவர்கள் வாழும் பகுதிகளை எரியூட்டலும், அவர்களின் உடமைகளைக் கொள்ளையடித்தலுமே நிகழ்ந்தன. இந்நிலையில் இலங்கைத் தமிழ்க் குழந்தைகள் என்ன செய்யும்?

36. இன்குலாப், கிழக்கும் பின் தொடரும், 'குட்டிமணி' ப. 9
36அ. தமிழ்நாடன், அம்மா அம்மா, 'பொலிவியா' ப. 29

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



"அந்தக் குழந்தை
கொஞ்சம் வளர்ந்ததும்
படிப்பதற்குப்
புத்தகம் கேட்காது
பிடிப்பதற்கு
துப்பாக்கி கேட்கும்"[37]

என்கிறார் கவிஞர் மேத்தா.

இலங்கைப் பிரச்சினையைப் போலவே வங்கப் பிரச்சினை யும் அதன் விடுதலையும் கவிஞர்கள் பலரால் பாடப்பட்டுள்ளன.

"அழுத கண்ணீரில் அக்ரமங்கள் எரியுமென்று
பழைய தாலாட்டில் பலனில்லை என்பதால்
துப்பாக்கி ஏற்கத் துணிந்தாய் வங்கமே உன்
சிப்பாய் நடை கண்டேன் சிந்தை கிளர்ந்ததடி"[38]

என்று வங்க எழுச்சியைப் பாடுகிறார் கவிஞர் இளவேனில்.

"இதோ மதத்தை வைத்துத்தான்
வங்காளிகளைத்
தன்னோடு இருபத்தைந்து ஆண்டுகள்
முடிச்சுப் போட்டுப் பார்த்தும்
முடியாமல் போயிற்று
ராவல்பிண்டிக்கு
வங்கதேசப் பிரசவம்
வரலாற்றுக் கட்டாயமாயிற்று"[39]

என்று மதத்தின் பெயரில் ஏமாற்றப்பட்டு ஒடுக்கப்படுதலைப் பொறுக்க முடியாமல் வங்கம் கிளர்ந்ததைப் பாடுகிறார் கவிஞர் தணிகைச்செல்வன்.

உலக அரங்கில் ஆயுத பலம் கொண்டும், இராணுவத் துணை கொண்டும் நிகழ்ந்த ஒடுக்குமுறைகளைக் கவிஞர்கள்

37. மேத்தா, மு., திருவிழாவில் தெருப்பாடகன், ப. 88
38. இளவேனில், இளவேனில் கவிதைகள், ப. 62
39. தணிகைச்செல்வன், ஒரு துண்டு இந்தியாவும் நானும், ப. 49

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



பலவாறாகப் பாடியிருக்கின்றனர். கவிஞர் பாப்ரியா, நறுக்கப்படும் பிஞ்சுக் காயைப் போல் குழந்தைகள் கூட இத்தகைய அடக்குமுறைக் கொடுமைகளுக்கு பலியாவதைப் பாடுகிறார் :

''நீ நறுக்கிய போதெல்லாம்
என் கவிதைகள்
புலம்பியிருக்கின்றன
இப்படித்தானே
வியட்நாமிலும், கம்போடியாவிலும்
குருத்தெலும்புப் பிள்ளைகள்
ஆயுதங்களால்
நறுக்கப்பட்டிருக்கவேண்டும்''[40]

என்று போரின் விளைவுகளைச் சுட்டிக் காட்டுகிறார் எந்த நிலையிலும் போர் என்பது கொடுமையானதும், துன்பமானதும், துக்ககரமானதும் ஆகும். யுத்த அபாயம் என்பது மனிதனின் பிறக்கின்ற உரிமையையே பறிக்கக் கூடியதுமாகும்.

''புத்தனைப் போல் ஏசுவைப் போல்
நபிகளைப் போல் பேசிக்கொண்டு
யுத்த மதம் பரப்பியொரு
ரத்த நயாகராவை
இந்து மகாசமுத்திரத்தில்
ஏற்படுத்த நினைப்போரே
சிந்தியுங்கள் வரும் போரில்
வெற்றி தோல்வி ஏதுமில்லை''[41]

என்பார் கவிஞர் பரிணாமன். யுத்தம் என்பது முழு அழிவிற்கான மூர்க்கத்தனக் கொடுமை ஆகும். அதனால் இத்தகைய ஆயுதக் குவிப்பும், உலகையே தன் குடைசகீழ் ஆள நினைக்கும் ஆணவ வல்லரசுகளின் போக்கும், எதிர்க்கப்பட வேண்டும் என்ற கருத்தைக் கவிஞர்கள் உணர்த்துகின்றனர்.

40 பாப்ரியா, கண் சிமிட்டும் கல்லறைகள், ப. 31
41. பரிணாமன், ஆகஸ்டும் அக்டோபரும், ப. 49

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



## அடக்குமுறை எதிர்ப்புச் சிந்தனைகள்

அடக்குமுறை என்பது மனிதாபிமானமற்ற மனத்தின் வெளிப்பாடு ஆகும். அதனால் மனிதாபிமானத்திற்கும், மனித ஒற்றுமைக்கும் சமத்துவத்திற்கும் இது எதிரானது ஆகும். ஒரு நிலையிலிருந்து சமூகம் மற்றொரு நிலைக்கு மாறும் போது சமூகப் புரட்சிகள் தோன்றுகின்றன. அப்போது இந்தப் புரட்சி களை எதிர்க்கின்ற சிறுபான்மையினர் அடக்குமுறையைக் கையாளுகின்றனர். இந்த அடக்குமுறைகள் மேலும் தொடரும் போராட்டங்களால்தான் முறியடிக்கப்படும் என்று நம்பிக்கை கொள்கின்றனர் கவிஞர்கள்.

"முதலாளித்துவத்தின்
தூர்க்க குணங்களை எதிர்த்துப்
போராடும்
எந்நாட்டு மக்களுடனும்
தோளோடு தோள் சேர்ந்து
போராடுகின்றவன் நான்"[42]

என்று தன்னையே இனங்காட்டிக் கொள்கிறார் கவிஞர் பொன் மணி.

சங்கம், புரட்சி, போராட்டம் என்ற சொற்களைக் கேலிக்குரிய தாக்குவதன் மூலம் அதன் திறனையையும் சாதனையையும் செயலிழக்கச் செய்யவும் மக்களைத் தொழிலாளர்களுக்கு எதிராகத் திசை திருப்பவும் முயற்சி செய்வது ஆளும் வர்க்கத்தின் அறிவார்ந்த தன்மையாகும். ஆனால் கால மாறுபாட்டில் உழைக்கும் வர்க்கத்தின் ஒரு கண் விழிப்பில் கவிஞர் கந்தர்வன் கூறுவதுபோல, 'மயில் ஆடுவதுகூட ஆர்ப்பாட்டம் போல, குயில் கூவுவதுகூட கோரிக்கைக்காக' என்று தோன்றத் தொடங்கி-விட்டது. அதனால்,

"புரட்சி என்பது
பிள்ளை பிடிப்பது போல்

24. பொன்மணி, விடியும், ப. 62

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



கொடுமையல்ல
பிள்ளை பெறுவது போல்
புனிதமானது''[43]

என்று உணரப்பட்டு வருகிறது.

எந்தத் தொழில்முறையிலும் தொழிற் சங்கம் அமைக்கப் படுகிறது. இது அடக்குமுறையின் எதிர்ப்பில் வந்த இயக்கமே ஆகும். தொழிற் சங்கங்களில் குறைகள் இருக்கலாம். ஆனால் தொழிற் சங்க அமைப்பு எனும் கருத்தியலின் தேவையை இன்று யாரும் மறுக்க முடியாது ஏனென்றால் தொழில் முறையில், எத்துணை உயிர்ப்பலிகள் வேண்டியிருப்பினும், சமரசம் செய்ய இயலாது என்று கூறும் அளவிற்குக் குருதி வெய்மையுறுகின்றனர் வெண்மணி நெருப்பினில் வெந்து சாம்பலான ஓர் உழவனின் குரலாக இதைக் கவிஞர் மணியரசன்,

''... ... ... ...... நாளும் என்
சதைச் சோற்றைச் சாப்பிட்டு ரத்தமது பருகியதால்
மதமெடுத்த வர்க்கமே ஆதிக்க மணற்குன்றே
நெருப்புக்கு விறகானேன் என்றென்றும் நீசனேநான்
வர்க்கப் போர் கேள்விக்கு நெய்யானேன் மறக்காதே''[44]

என்று பாடுகிறார். உழவனின் உழைப்பைச் சுரண்டுபவன், 'உழவனின் சதைச் சோற்றைச் சாப்பிடுபவன்' என்று குறிப்-பிடுவது சுரண்டல் அமைப்பின் கொடுமையைச் சரியாக உணர்த்துவதாகும்.

கவிஞர் நா. விச்வநாதனும்,

''உரிமைக்காய் முழக்கமென்று
ஓராயிரம் மனங்கள்
ஓலமிட்டாலும்
எட்டுமிடத்தின்
செவிப்பறைகள்

43. கந்தர்வன், கிழிசல்கள், ப. 21
44. மணியரசன், மனிதனைப் பாடுவேன், ப. 7

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



செவிடாய்த் தூங்கும்
சிறுமைகளைப் பொறுப்பேனா"[44]அ

என்று அடக்குமுறைச் சிறுமைகள் பொறுத்தற்குரியவை அல்ல என்பதை உணர்த்துகிறார்.

அடக்குமுறைகளுக்குத் தீர்வு தருவது, சங்க அமைப்பே ஆகும். தனிமனித அராஜகத்தை எதிர்க்கும் வலிமை தொழிற் சங்கத்திற்கு அன்றித் தனித்தனித் தொழிலாளர்களுக்கு இடலக் கூடியது அன்று. கவிஞர் தனஞ்செயன், "சிவப்பு மலர்கள்' என்ற தலைப்பில்,

"ஒன்றுபட்டுப் பூமாலைச் சங்கம்
அமைத்த பின்
எந்தப் பெரிய வணங்காமுடியும்
மேடைத் திருவிழாக்களில்
பலருக்கு முன்னால் தலைவணங்கிச் செல்கிறான்"[45]

என்பார். பூக்களின் தொகுப்பான மாலையைத் தொழிலாளர் களின் கூட்டமைப்புச் சங்கத்தோடு ஒப்பிடுகிறார். உழைப்பாளர் களின் உழைப்பில் தனது மூலதனத்தைப் பல மடங்காகப் பெருக்கிக் கொள்ளும் முதலாளிகள் உழைப்பவர்களுக்கு எந்த அடிப்படை உரிமையும், பொருள் பங்கும் தருவதில்லை. ஆனால், உழைப்பாளர்களைப் பாராட்டுதல் மூலம், அவர்களைப் பகைத்துக் கொள்ளாததன் மூலம், தங்களை மேலும் நிலை நிறுத்திக் கொள்கின்றனர். அடக்குமுறையின் வேறொரு வடிவம் இது. ஓர் எளிய கவிதையில் வன்மையான சொற்கள் எதுவுமின்றி, ஆழமான இப்பொருளை உணர்த்தி விடுகிறார் கல்யாண்ஜி.

"பேசும் பார் என் கிளி — என்றான்
கூண்டைக் காட்டி
வாலில்லை
வீசிப் பறக்கச் சிறகில்லை
வானம் கைப்பட வழியில்லை

45. விச்வநாதன், நா., சுதந்திரம்
45. தனஞ்செயன், கட்டுமரங்கள், ப. 67

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



பேசும் இப்போது பேசும் என
மீண்டும் மீண்டும் அவன் சொல்ல
பறவையென்றால்
பறப்பதெனும்
பாடம் முதலில் படியென்றேன்''[46]

அடிப்படை உரிமைகளைப் பறித்துக் கொண்டு அடிமையாய் ஆட்டி வைக்கும் இனம் எதுவுமே இத்தகைய வித்தை காட்டிப் பிழைக்கும் இனமாக உள்ளது. அடிமைப்பட்ட எதுவும் சிறகு முறிக்கப்பட்டுக் கூண்டில் அடைக்கப்பட்டு வேடிக்கைக்குரிய-தாக்கப்பட்டுவிடும் கிளியின் நிலையிலேயே உள்ளது அடிப்படை மனிதாபிமானம் இல்லாமல் ஓர் இனத்தை ஒடுக்கும் மற்றோர் இனம் வாய்ச்சொல் வித்தையில் மக்களை ஏமாற்றிப் பிழைத்துக் கொள்கிறது என்பதையும் இங்குக் கவிஞர் உணர்த்தி விடுகிறார்.

மற்றவர்களை அடக்கி ஒடுக்கி உயர்கின்றவன் எந்த நிலையில், எந்த வகையில் பெருஞ்சாதனைகளைப் புரிந்தவனா-யினும், அவன் பெருமைக்கு உரியவன் அல்லன். எளியோரை அடக்கிச் செல்லுமிடத்துச் சினங்காட்டித், தன்னை உலகம் புகழ உருவாக்கிக் கொள்கிறவன் மற்றவர் வாழ்க்கையை உறிஞ்சுபவன் ஆவான். அடக்குமுறையால் கொழுப்பவன் ஆவான். அவனது பெருமைகளும் சாதனைகளும் போற்றற்குரியவை அல்ல. இகழ்-தற்குரியவை ஆகும். இந்தப் பேருண்மையைத் தனிமனிதப் புகழ் பாடும் தன்மையில் ஊறிய நமது சமுதாயம் உணருமாறு கவிதை நயத்துடன் உரைக்கிறார் கவிஞர் தேனரசன். பெருமைக்குரிய தாகக் கருதப்படும் ஆலமரத்தினைப் பற்றிக் கூறி, அடக்குமுறை யால் சாதனையாளனாக உயரும் முதலாளியை இனங்காட்டு-கிறார் கவிஞர்.

"விதை அணுவொன்றில்
விசுவரூபம் நீ
.........
எல்லாம் சரிதான்
உன் அடி நிழலில்

46. கல்யாண்ஜீ, புலரி, ப. 61

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



ஒரு செடி முளையாதாமே
ச்ச்சேனஏ ......"[47]

என்று வெறுத்து உமிழ்கிறார். எளியோரை உணராதவன் சொந்தங்களைத் தன் இனத்தை மதியாதவன் எவ்வளவு பலசாலியாக இருந்தாலும் பெருமையில்லை என்பதைச் 'ச்ச்சேனஏ' என்ற சொல்லிலேயே உணர்த்திவிடுகிறார்.

'அமெரிக்கா'வைத் தாயாக வைத்துப் பாடும்போது, கவிஞர் தமிழ்நாடனும்,

"ஆ! அம்மா
எழுதுப் பேனா
எண்ணி மாளாத
புதுமைக்குத் தாய் நீ. ...
வைது முடியாத
கொடுமைக்கும்தான்'[48]

என்று அதன் பெருமையோடு அதன் சிறுமையையும் காட்டுகிறார். அமெரிக்கக் காலடிபட்ட கொரியா, லாவோஸ், வியத்நாம் யாவும் 'இரண்டுபட்ட' வரலாற்று நிகழ்ச்சியை எடுத்துக்காட்டி அமெரிக்காவின் அடக்குமுறையை வெறுத்து உமிழ்கிறார்.

மனிதாபிமானமற்ற அடக்குமுறைகள் வெறுக்கப்படவேண்டும் என்ற சிந்தனையை விதிக்கின்றனர் கவிஞர்கள். எஜமான விசுவாசம் என்ற பெயரில் வலியவர்களால் மெலியவர்கள் மேலும் மேலும் ஒடுக்கப்பட்ட தான நிலைகள் மாறி வருகின்றன என்பதையும் தெளிவுபடுத்துகின்றனர். வீழ்ந்து கிடந்தவன்; வினாக்குறியாக வளைந்து கிடந்தவன் எல்லாம் நிமிர்ந்து பார்க்கும் காலம் உதயமாகிறது என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றனர்.

"செருப்புக் காலால்
உதைபடும்போது
ஐயோ

47. தேனரசன், வெள்ளை ரோஜா, ப. 35
48. தமிழ்நாடன், அம்மா அம்மா, 'அமெரிக்கா' ப. 18

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



அய்யாவின் கால்
அழுக்கப்படுமே
என்பது மட்டுமா
எஜமான விசுவாசம்?
ஐயோ ஐயாவின் கால்
முறிபடுமே
என்பது கூடத்தான்
எஜமான — இல்லை
நிஜமான விசுவாசம்''[49]

என்ற கவிதையில் கவிஞர் தென்னகன் மாறிவரும் சூழலைக் கோடிட்டுக் காட்டுகிறார். உதைக்கின்ற கால்கள் முறிபடலாம் என்று எச்சரிக்கிறார் கவிஞர்.

## உலகளாவிய பார்வை

அடக்குமுறைக்கு எதிரான குரல் கொடுக்கும் கவிஞர்கள் சிறிய வட்டத்தோடு நில்லாமல் உலகளாவிய பார்வையோடும் பாடுகின்றனர். மனிதன், எங்கே இருப்பவனாயினும் மனிதன் தான். அதனால், ஒடுக்கப்படும் மனிதன் எவனுக்காகவும் குரல் கொடுக்கும் மனித நேயப்பார்வை விரிவடைந்து வருகிறது. ஒரு மனிதனோ, ஒரு இனமோ, ஒரு மொழியோ, ஒரு நாடோ எதுவும் மற்றொன்றை அடக்குவதை அனுமதிக்க இயலாது என்ற உணர்வை ஊட்டுகின்றனர் கவிஞர்கள். தோழமையும் சமத்துவமும் மட்டுமே இனிச் செல்லுபடியாக வேண்டுமேயன்றி அடக்குமுறை ஒடுக்கப்பட வேண்டும் என்று உரத்து உரைக்க விரும்புகின்றனர். கவிஞர் இன்குலாப் இதை மிகத் தெளிவாகக் கூறுகிறார்.

''சிங்களத் தோழனே
இந்தித் தோழனே
உன்னோடு கைகுலுக்கி
நடப்பேன் சரிசமமாக

---

49. அரிமதி தென்னகன், வேலங்காடு, ப. 41

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



ஆனால்
ஒருபோதும் உன்னை
என் தோளில் உட்கார விடமாட்டேன்"[50]

என்கிறார்.

அடக்குமுறைக்கு எதிரான செயல்பாடுதான் புரட்சி எனப் படும். இது நியாயவுணர்வின் வெளிப்பாடாக வெடிப்பதாகும். இனியும் பொறுப்பதில்லை என்ற நிலையில் உதிப்பதாகும். மாவோவைப் பற்றிப் பாடும்போது கவிஞர் தமிழன்பன் இதைச் சிறப்பாக உணர்த்துகிறார்.

"உன் நெஞ்சில் பளிச்சிட்ட
ஜீவகாருண்யமே
உன்
கைத்துப்பாக்கியாக
வெளிப்பட்டது"[51]

என்பார். அதனால் அடக்குமுறைக்கு எதிரான குரல் என்பது ஒரு சமுதாய உணர்வின், சமுதாய அக்கறையின் வெளிப்பாடு என்பது தெளிவாகிறது.

50. இன்குலாப், கிழக்கும் பின்தொடரும், ப. 19
51. தமிழன்பன், தீவுகள் கரையேறுகின்றன, ப. 118.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# 'தனி மனிதம்' - தனி மனிதமா?

## தனிமனிதம் — ஒரு விளக்கம்

சமுதாயம் என்பது தனிமனிதர்களால் ஆகியது. தனி மனிதப் பிரச்சினைகள் சமுதாயப் பிரச்சினைகள் ஆவது போலவே சமுதாயப் பிரச்சினைகள் தனிமனிதனைத் தாக்கும் பிரச்சினைகளாகின்றன. தனிமனிதனையும் சமுதாயத்தையும் பிரிக்க முடியாது. எனினும், தனித்தனி மனிதர்கள், தனித்தனி மனநிலைகள், தனித்தனிச் சூழ்நிலைகள், தனித்தனிக் குடும்ப நிலைகள் இவை யாவும் மனிதர்களைத் தனிப்பட்ட மனிதர்களாகவும், தனிப் பிரச்சினை கொண்டவர்களாகவும், தனிப்பட்ட மனநிலை வாய்ந்தவர்களாகவும், தனித் தீவாகவும் ஆக்குகின்றன. மனித மனம் பல கோணங்களையும் பல கோணல்களையும் பல தேவைகளையும் பல தெளிவின்மைகளையும் பல ஏக்கங்களையும் பல எதிர்பார்ப்புகளையும் உடையது. மனிதனுக்கு ஏற்படும் மாற்றங்கள், துன்பங்கள், இழப்புகள் இவையாவும் மனிதனுக்கு அவனுடைய அவ்வப்போதைய மனநிலைகளை உண்டாக்குகின்றன. சில சமயம் அவனை அந்த மனநிலையின் பாதிப்புக்கு நிரந்தரமாக உள்ளான மனிதனாகவே மாற்றிவிடுகின்றன. மனிதனின் வசீகரங்களுக்கும் சாதனைகளுக்கும் அவனும் அவனது சூழ்நிலையுமே காரணமாவது போலவே, அவனது வக்கிரமங்களுக்கும், அவனும், அவனது சூழ்நிலையுமே காரணமாகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



மனிதன் மகத்தானவன் என்பது எவ்வளவு உண்மையோ அதே அளவிற்கு அவன் நிர்க்கதியானவன் என்பதும் உண்மை. இதனைப் பொதுவாகச் சமுதாயப் பிரச்சினைகளாகப் பார்க்கும் போது நாம் உணர்வதை விட அதே பிரச்சினைகளைத் தனித்-தனி மனிதர்கள் வாயிலாக, அவர்களின் உணர்ச்சிகளின் வாயி-லாகக் காணும் போது உணரலாம். அது மட்டுமின்றி, எந்தச் சமுதாயப் பிரச்சினையும் பிரச்சினை எனும்போது பொதுவான தாகத் தோன்றும் எனினும் பாதிப்பு எனும்போது தனிமனிதத் தாக்குதலாகப் போய்ச் சேருகிறது. இதனாலேயே தனிமனித உணர்ச்சிகள் கவிதைகளில் இடம்பெறுகின்றன. இவை சிறப்பும் பெறுகின்றன.

## பாதிக்கப்பட்டோர் மனநிலை

கவிஞன் எத்துணைப் பரந்த அறிவும் ஆற்றலும் கவித்-துவமும் கற்பனைத் திறமும் கொண்டவனாக இருந்தாலும் அவனுக்குக் கவிதைக் கருப்பொருள் தருபவை சின்னச்சின்னக் காட்சிகளும் அன்றாட நடைமுறைச் சிக்கல்களும் சந்திப்புகளும் தான். உலகளாவிய, நாடு தழுவிய, செய்திகளும் நிகழ்ச்சிகளும் மட்டுமே அவனைத் தாக்குவதில்லை. அவனது இயல்புக்கேற்ப அவன் நிகழ்ச்சிப் பாதிப்புகளாலும் இயக்க உணர்வுகளாலும் எதையும் சிந்திக்கின்றான், சித்திரிக்கின்றான். அந்த வகையில், எந்தப் பொருளும் காட்சியும் மனவியலும் அவனது கவிதைக்குள் வரும், பலவகை மனிதர்களின் உளச்சிக்கல்களையும் உணர்ந்து உரைக்கக் கவிஞனால் முடிகிறது.

## சந்ததிப் பிழை

கவிஞர் நா. காமராசனின் கறுப்பு மலர்கள் கவிதைத் தொகுப்பு சமுதாயப் பிரச்சினைகளைச் சந்தித்த தொடக்ககாலப் புதுக்கவிதைத் தொகுப்பாகும் இதில், தனி மனிதச் சிக்கல்களை-யும் இவர் பரிவோடும் மனிதாபிமான உணர்வோடும் நிறையப் பாடியிருக்கின்றார். அலிகள், மனித இனத்திலே மிகச் சிறு-பான்மையினர். அலிகளால் சமுதாயத்திற்குப் பிரச்சினையா? அலிகளின் பிரச்சினை சமுதாயப் பிரச்சினையா என்று பார்க்க முடியாது ஆனால் அலிகளுக்கு, மனித சமுதாயத்தின் ஒரு சிறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



பகுதியினராகிய தங்கள் நிலையே, தங்கள் தன்மையே, ஒரு பிரச்சினை ஆகிறது. அது தவிர்க்க இயலுமா இயலாதா என்பதை விட, இது அவர்களின் உணர்ச்சிகளில் எத்தகைய தாக்கம் கொண்டிருக்கும் என்பதை உணர்ந்து கவிதை எழுதியுள்ளார் நா. காமராசன். 'காகிதப்பூக்கள்' என்று தலைப்பு வழங்கியதே ஒரு கவித்துவம் ஆகும். தோற்றத்தில் மலர் என்றாலும் தன்மையில் இயற்கை மலர் ஆவதில்லை. அதுபோலவே, அலிகளும் தோற்றத்தில் மனிதராயினும், பால் உணர்விலே ஒரு புறமும் சாராதிருக்கின்றனர்.

"காலமழைத் தூறலிலே
களையாகப் பிறப்பெடுத்தோம்
தாய்ப்பாலின் சரித்திரத்தில்
சதிராடும் புதிரானோம்
சந்திப் பிழை போன்ற
சந்ததிப் பிழை நாங்கள்"[1]

என்றும், மூங்கையனின் பாட்டாகவும், முடவன் கை எழுத்தாகவும், இயலாதவர்களாகிப் போகும் சோகத்தைக் கவிதையிலே வடிக்கின்றார் கவிஞர். வெறும் கேலிக்கும் வேடிக்கைக்கும் அவமானத்திற்கும் உரியவர்களாக அலிகளை மதிக்கும் சமுதாயத்தில் இந்தக் கவிதை, பாதிக்கப்பட்டவரின், பரிவுக்குரியவரின் பக்கம் நிற்கும் மனப்பான்மையை வளர்க்கும். இதேபோலவே கவிஞர் 'பாப்ரியா'வும் பாலியற் சிக்கலுக்கு ஆளாகும் அலிகளைப் பற்றி,

"நாங்கள்
மூப்படைந்த மொட்டுகளாய்
முகம் கூம்பித்
திரிகிறோம் பயனில்லாமல்
பக்குவமாய்ச் சமைக்கப்படாத
பதார்த்தங்கள்
பரிமாறப்படாதது போல"[2]

1. காமராசன், நா., காமராசன் கவிதைகள். ப. 94
2. பாப்ரியா, கண் சிமிட்டும் கல்லறைகள், ப. 20

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்று அவர்களின் உடற்கூறியல் பிரச்சினைக்கு வழிகோலுவதை எடுத்துரைக்கிறார். முகம் கூம்பித் திரியும் சோகம் படிப்பவர் யாவரும் உணரத்தக்க வகையில் உரைக்கப்படுகிறது.

## அரைக்கிறுக்கு அவலம்

இதேபோல் மனநோயாளியான பைத்தியக்காரி ஒருத்தியின் நிலையையும் பரிவுப் பார்வையோடும், அவளே அவளுக்குப் பிரச்சினையாகும் சித்திரிப்போடும் உரைக்கிறார் நா. காமராசன். வயது வந்த ஒருத்திக்குரிய மனவளர்ச்சி இல்லாமல், ஆனால் உடல் வளர்ச்சியோடு திரிகின்ற பெண்ணைக் கண்ணின் முன் நிறுத்துகிறார் கவிஞர். ''சிறுவர்களை நேசித்துக் கொண்டும், விறகு பொறுக்கிக் கொண்டும், ஒரு முட்டைக் கோழியைப் போல் முனகிக் கொண்டும் வாழ்ந்த அவள் ஒரு நாள் செத்துப் போனாள்'' என்று அவளது இறப்புப் பற்றி ஒரு கையறுநிலையே பாடுகிறார். ஒரு பைத்தியக்காரியின் இறப்பு மிகப் பெரிய இழப்பு என்பதல்ல. ஆனால் பைத்தியக்காரியின் வாழ்க்கைச் சோகம் அவளது இறப்பிலே மிகுதியாகவும் உணரப்படுகிறது. யாருக்கும் துன்பம் தராத, யாரையும் நோகடிக்காத, யாரையும் பாதிக்காத, யாருக்கும் சுமையாகவும் இருக்காத அவளது வாழ்வு, பரிதாபத்திற்குரியதாக இருந்திருக்கிறது,

''ஆடையெல்லாம் கிழிசல்கள்
அவள் நாக்கின் புரட்டலைப் போல்
அரைக்கிறுக்குப் புன்னகையும்
ஆளில்லாச் சொற்பொழிவும்
சிரிப்பும்
சிணுக்கலுமாக
... ... .. ...
அவளோ ஒரு கிராமத்துப் பறவை
அவளுக்கும் இவளுக்கும் தனிமை''[3]

என்று ஒரு வாழ்க்கை தன் உணர்வில்லாமல் வாழ்ந்து முடிந்த சோகம் நன்கு உணர்த்தப்படுகிறது.

---

3. காமராசன், நா., முந்தையது, ப 303

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



## ஊமைத் தாளங்கள்

ஒரு பெண் தாய்மை அடைதற்குரியவள் என்பது இயற்கை தந்த உடற்கூறு அமைப்பு ஆகும். அவள் எப்படி, எப்பொழுது, எங்ஙனம் குழந்தைப்பேறு அடைய வேண்டும் என்பதெல்லாம் சமுதாய நியதி, அவளது சூழ்நிலை காரணமாக நிர்ணயிக்கப்படுகிறது. திருமணமும் தாய்மையும் தொடர்புடையதாக இருக்க வேண்டும் என்பதே சமுதாய நியதியாக உள்ளது. அதிலும் நமது இந்தியப் பண்பாடு இதனை மிகவும் வலியுறுத்தி, வற்புறுத்தி இதற்கு மாறானதைப் பெரிதும் எதிர்த்து, அழித்து, ஒடுக்கி வந்திருக்கிறது. இதனால் திருமணம் என்ற சடங்கிற்கு முன், உடல்கூறு இணைவு காரணமாகக் குழந்தைப் பேற்றிற்கு ஆளாகும் ஒரு பெண், தனது தாய்மைப்பேற்றை ஒரு பெரும் குற்றமாக, சோகமாக, பாவமாக உணர வேண்டியுள்ளது. தான் ஈன்றெடுக்கும் குழந்தையையும் இயற்கையான தாய்மைப் பாசத்தையும் மீறி அவள் ஒதுக்கித் தூக்கி எறிய வேண்டியுள்ளது. பல சூழ்நிலைகளில், பல பெண்களின் பல மனநிலைகளில், இங்ஙனம் தூக்கியெறியப்பட்டு, அநாதையாகிப் போகும் 'கள்ளக் குழந்தைகளின்' மனநிலை எங்ஙனம் இருக்கும்? அந்தக் குழந்தைகள் விரும்பிப் பிறப்பதில்லை. ஆனால் அவை விருப்பத்தோடு வளர்க்கப்படுவதில்லை.

''நாங்கள்
ஊமைத்தாளங்கள்
இளமையின் நிலங்களிலே
அனுமதியில்லாமல் அத்துமீறி
பிரவேசம் செய்கிறவர்களுக்கும்
மன்மத பாடத்தை
முடித்துவிட்டு
மனம் குலுங்க
அழுபவர்களுக்கும்
நாங்கள்
ஆறுதல் சொல்ல
முடிவதில்லை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



ஆனால்
காட்டிக்கொடுப்போம்''[4]

இந்தக் குழந்தைகளின் பிறப்பிற்குக் காரணமானவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் அனுபவிக்கிறார்கள்; அழுகிறார்கள். குழந்தைகளை அநாதையாக்குகிறார்கள். குழந்தைகள் தத்தம் மனநிலையில் விரும்பினாலும் பெற்றவருக்கு ஆறுதல் சொல்ல முடியாது. வேண்டாத பிறவியாய்ப் பிறப்பெடுத்துவிடுகின்றார்கள்.

## கட்டாய மயில்

'கள்ளக் குழந்தைகள்' போலவே ஆடிப் பிழைக்கும் கட்டாய மயில்களும்' பிரச்சினைக்குரியவர்கள். அவர்களின் வாழ்க்கை முறையே அவர்களின் பிரச்சினை,

''தாஜ்மகால் போல
ஒரு சோகம்கூட இங்கே
உல்லாசிகளால்
வேடிக்கை பார்க்கப்படுகிறது.
இங்கே நான்
நீச்சலுடையில் நின்றாலும்
நிற்பது நீரிலல்ல
நெருப்பில் என அறியமாட்டார்''[5]

கவிஞர் நீலமணியின் உவமை மிகப் புதுமையாகவும், திர்க்கமாகவும் உரைக்கப்பட்டுள்ளது. தலைப்பும், கவிதை வரிகளும் ஆடிப்பிழைக்கும் நிலையிலுள்ள பெண்ணின், நிலையை அவளது உள்ளம்படும் வேதனையை உணர்த்துகின்றன. சூழ்நிலைக் கைதியாக, வாழ்க்கைக்காக, வயிற்றுப் பிழைப்புக்காக ஆடும் பெண்ணின் அவலம், அவளது வாழ்க்கை முறையே அவளுக்குப்

4. பாப்ரியா, முந்தையது, ப. 21
5. நீலமணி, பனி படர்ந்த எரிமலைகள், ப. 8

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



பிரச்சினையாகவும், மனநிலையைப் பாதிப்பதாகவும் உள்ள துன்பநிலை சித்திரிக்கப்படுகிறது.

## உறவு இழப்பு

கவிஞர் பஞ்சு இளம் மனைவியை இழந்த கணவனின் மனநிலையைத் துயரம் தோயச் சித்திரிக்கிறார்.

"கனி விழுந்தால்
கலக்கம் இல்லை
காய் விழுந்தால்
காம்பு அழாதோ"[6]

ஒரு மனித இழப்பு, ஒரு துணையின் இழப்பு என்பது மிகப் பெருந்துன்பம் ஆகும். ஒரு கணவனின் மறைவு ஒரு மனைவிக்கு எவ்வளவு துயரமோ, அதே அளவிற்கு ஒரு மனைவியின் பிரிவும் ஒரு கணவனுக்கு மிகப் பெருந்துயரமாக, மனப்பாதிப்பாக அமையக்கூடும். இது இருவருக்குமிடையேயுள்ள அன்பு, உறவு-முறை, சார்பு இவற்றைப் பொருத்தது. அதிலும் இளம் மனைவி-யின் இழப்பு, ஒரு வாழ்க்கையின் தொடக்கமே முடிவாகிப் போன சோகத்தைத் தருகிறது. இது கவிஞரின் சித்திரிப்பு மட்டுமல்ல, அனுபவமும் கூட, ஒரு கணவனின் இந்தச் சோகத்தைப் பொதுவாகக் கவிஞர்கள் பாடுவது இல்லை. காதலி-யின் இழப்புப் பாடப்படும். ஆனால், மனைவியின் இழப்புப் பொதுவாகப் பாடப்படுவதில்லை. பாடியிருந்தாலும் அச்சில் ஏற்றப்படாமல் இருந்திருக்கலாம். இதற்கு நேர்மாறாக ஒரு கணவனின் மறைவு மனைவிக்கு எத்தகைய இழப்பு என்பதைப் பல கவிஞர்கள் பாடி உள்ளனர். இதன் காரணத்தை ஆய்ந்தால் ஒரு குறிப்பினை உணரலாம் கணவனை இழந்த பெண்ணின் நிலை, அந்தப் பெண்ணினால் மட்டும் உருவாக்கப்படுவதில்லை. நிர்ணயிக்கப்படுவதில்லை. அவளுக்கு இயல்பாக வரத்தக்க

6. பஞ்சு, ஒட்டுப்புல் 'அந்த அக்கினிப் பனிச்சிலையின் நினைவாக', ப. 12

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இழப்பு, சோகம் இவற்றுக்கு மேலே சமுதாயம் அவளுக்கு விதவை என்ற ஒரு நிலையைத் திணிக்கிறது. அவளுக்கு அந்த முத்திரை குத்தி, அதை அவள் தன் நடைஉடை பாவனைகள் அனைத்திலும் வெளிப்படுத்தி, ஒரு சோகத்தைக் காலமெல்லாம் சுமந்து திரிய வேண்டும் என்று எதிர்பார்க்கிறது எச்சரிக்கிறது. ஆனால், துணையிழந்த ஒரு ஆடவனுக்கு இந்த நிர்ப்பந்தம் இல்லை. அவனது இயற்கையான உளப்பாதிப்புகளும், குடும்பப் பாதிப்புமே நிகழ்கிறது.

"அத்தனையும் பார்த்து
அரைத்ததால் சிவந்த
கை பார்த்து —
யாரும் பார்க்குமுன்
கிணற்றடி சென்று அழுவாள்
அத்தை.
வெள்ளைக்குள்
விரைய வைத்த
விதி குலுக்க
விறைத்த முலை குலுங்க"[7]

கவிஞர் கலாப்ரியாவின் இந்தக் கவிதை வரிகள், இளம் விதவை நிலையை, அவருடைய சின்னச்சின்ன ஆசைகள் கூட மறுக்கப் பட்டு அவள் எதுவுமே அனுபவிக்க அருகதையற்றவள் என்று ஆக்கப்பட்டுக் 'கோரிக்கையற்றுக் கிடக்கும் நிலையை' அருமை-யாக எடுத்துரைக்கின்றன. மருதாணி அரைப்பதற்கு உரியவள் மருதாணி இடுவதற்கு இயலாதவளாக இருக்கிறாள். இது ஆசை தீர்ந்த, ஆசையற்ற சோகம் அல்ல. ஆசைகள் மறுக்கப்பட்டு மறக்கப்படவேண்டும் என்று எதிர்பார்க்கப்படும் சோகம். அதனாலேயே இது மனைவி இழந்த ஒரு கணவனின் சோகத்தை விடக் கொடுமை வாய்ந்ததாகவும், சமுதாய ரீதியானதுமாகக் கருதப்படுகிறது

7. கலாப்ரியா, எட்டயபுரம், ப. 12

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



## வேலையில்லா இளைஞர் மனநிலை

வேலையின்மை என்பது இன்றைய இளைஞர்கள் சந்திக்கும் மிகக் கொடிய பிரச்சினை ஆகும். இது பல வகையிலும் சமுதாயத்தைப் பாதிக்கிறது. அதனால் ஒரு சமுதாயப் பிரச்சினையே ஆகும். இருப்பினும் வேலை கிடைக்காமல், ஒவ்வொரு நாளும் வேலை கிடைக்காதா என்ற எதிர்பார்ப்பிலும் ஏக்கத்திலும் வேதனையிலும் திரியும் இளைஞன் ஒவ்வொருவனும் அடையும் துன்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவனுக்கே உரியவையாக உணரப்படுகின்றன. வேலை கிடைக்காத துயரத்தை ஒரு இளைஞன் எல்லோருடனும் பகிர்ந்து கொள்ள முடியாது. மற்றவர்களின் பரிதாபமும், பச்சாதாபமும் அவனை வாழ வைக்கவும் முடியாது. அதனால் வேலை கிடைப்பது ஒன்றே அதற்குத் தீர்வாக இருக்கும். வேலை தேடித்தேடி ஓய்ந்து, இறுதியில் வேலைக்குப் போன ஒருவன் கூறுவதுபோலக் கவிஞர் கல்யாண்ஜி எழுதிய கவிதை இந்த இளைஞர்களின் பிரச்சினையை உளவியல் முறையில் நன்கு சித்திரிக்கிறது.

"என்ன செய்து கொண்டு
இருக்கிறாய் இப்போ?
என்று நானும்
இனிமேல் கேட்கலாம்
எனக்கு வேலை கிடைத்துவிட்டது"[8]

வேலை கிடைக்கும்வரை 'என்ன செய்துகொண்டு இருக்கிறாய்' என்று கேட்டால் கூட இளைஞர் மனம் எவ்வளவு புண்படுகிறது என்பதை இக்கவிதை எடுத்துரைக்கிறது. செய்வதற்கு ஒன்றும் கொடுக்காமல், கேட்கப்படுவதாக உணர்கிறார்கள், இவ்விளைஞர்கள். இதேபோல் கவிஞர் விக்ரமாதித்யனும்,

"ஏன் தாடி வளர்க்கிறாய்
என்று கேட்கின்ற நண்பர்களே
இழப்பதற்கும்
வளர்ப்பதற்கும்

௮. கல்யாண்ஜி, புலரி, ப. 25

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



வேறென்ன இருக்கிறது
வேலையில்லா இளைஞனுக்கு"[9]

எனும்போது நகைச்சுவை கலந்த விரக்தி மனப்பான்மை தெரிகிறது.

### உறவுமுறைச் சிக்கல்கள்

**குடும்ப அமைப்பில்** "மனச்சுமைகள்
அதிகமாகும் போது
தாங்க முடியாத
தாலிப் பாலங்கள்
தகர்ந்து போகின்றன"[10]

என்ற கவிதை வரிகளில் கவிஞர் மு. மேத்தா குடும்பம் என்ற அமைப்பு குலைந்து போகின்ற மனவேறுபாடு, மனமுறிவு இவற்றின் வேதனையை உரைக்கிறார். இதை ஆடவன் ஒருவனின் அவலமாகச் சித்திரிக்கின்றார்.

### காதல் எதிர்பார்ப்பில்

இதேபோல், காதல் என்பதும் இளமைக்கு உரியதாக மட்டுமில்லாமல், இன்னலுக்கும் மனப்பாதிப்புக்கும் உரிய பிரச்சினையாகவும் ஆகிவிடுவதைத் தன் புலப்பலில் உணர்த்துகிறார் கவிஞர் சந்திரமோகன்.

"இந்தக் கவிதைகளை
நீ
ஏற்றுக்கொள் அல்லது
எரித்துவிடு
ஏற்றுக்கொண்டால்
ஆசியை அனுப்பு
எரித்துவிட்டால்
சாம்பலை அனுப்பு"[11]

---

9. விக்ரமாதித்யன், ஆகாசம் நீலநிறம், ப. 22
10. மேத்தா, மு. கண்ணீர்ப்பூக்கள், ப 38
11. சந்திரமோகன், நெஞ்சம் மட்டும் உன்னோடு, ப. 12

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்பது காதல் ஏற்றுக்கொள்ளப்படுமா இல்லையா என்ற முடிவுக்கு வர இயலாத மனநிலையை, அதன் வேதனையை இக்கவிதை நன்கு உணர்த்துகிறது. காதலின் இன்பங்களைப் போலவே அதன் ஐயம், ஏக்கம், ஏற்றத்தாழ்வு மனப்பான்மைகள் வெற்றி தோல்வி முடிவுகள் இவையாவும் காதலர்களாலேயே முழுமையாக உணரவும், அனுபவிக்கவும் முடியும். அனுபவம் என்பது வேறு. அறிவு பூர்வ ஆய்வு என்பது வேறு. கவிஞர் சந்திரமோகனின் கவிதைகள் யாவும் ஓர் அனுபவ வெளிப்பாடாகவே உள்ளன.

## உறவுப் பிரிவில்

பிற உயிரினங்களுக்கு இல்லாத வகையிலும், அளவிலும் உறவு, சுற்றம் இவை மனிதனிடத்து அதிகம் தாக்கம் பெறுகின்றன. உணர்வுகளின் உணர்ச்சிகளின் கூட்டுத்தொகையாகவும் சமுதாய நியதிகளுக்கு கட்டுபட நடைமுறைகளுக்கும் வேண்டியவனாகவும் மனிதன் திகழ்கின்றான். ஒவ்வொரு செயலும் காட்சியும், நிலையும் நினைப்பும் அத்தனையும் மனிதனுக்குள் ஏதேனும் விளைவை உண்டாக்கிக் கொண்டே இருக்கின்றன. கவிஞர் ஆத்மாநாமின் (வெளியேற்றம்) கவிதையொன்றில் 'உறவுகள் பற்றிய ஆதங்கம்' மிக இயல்பாக, துல்லியமாக உரைக்கப்படுகிறது. சிகரெட்டிலிருந்து வெளியே செல்லும் புகை போலத் தப்பித்துச் செல்லும் உறவுகள் செல்லும் போது பிரிவு பற்றிய உணர்வு கூட இல்லாமல் பிரிந்து செல்வதைப் பற்றி ஆதங்கப்படுகின்றார். மனிதர்கள் ஏன் இத்துணை உளம் ஒட்டாத, பிறர் உணர்வினை, எதிர்பார்ப்பினை மதிக்கத் தெரியாதவர்களாக உள்ளனர் என்ற வேதனையைக் கவிஞர் என்ற முறையில் உணர்ச்சி வயப்பட்டு உரைக்கிறார்.

''சிகரெட்டிலிருந்து
வெளியே
தப்பிச் செல்லும்
புகையைப் போல்
என் உடன்பிறப்புக்கள்
நான்
சிகரெட்டிலேயே புகை
தங்க வேண்டுமெனக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



கூறவில்லை
வெளிச் செல்கையில்
என்னை நோக்கி
ஒரு புன்னகை
ஒரு கையசைப்பு
ஒரு மகிழ்ச்சி
இவைகளையே
எதிர்பார்க்கிறேன்
அவ்வளவுதானே''[12]

'அவ்வளவுதானே' என்ற இறுதிச் சொல்லிலே மனித எதிர்பார்ப்பு, ஏக்கம், மனக்குறை யாவும் ஒருங்கே தொனிக்கின்றன.

## பெற்றோர்-பிள்ளை மனநிலையில்

உறவுகளிடையே எதிர்பார்ப்புகளும் மிகுதியாக உள்ளன. அச்சமும், மிகுதியாக உள்ளது. பல்லாண்டுகளாகக் காதல் உணர்வுகள் போற்றப்பட்டு இலக்கியங்களில் வரிந்தும் விதந்தும் உரைக்கப்பட்டாலும் நடைமுறையில் காதல் ஒரு சோதனையாகவே இருந்திருக்கிறது. ஊர் உலகம் முழுவதும் பலர் தூற்றினாலும், உற்றாரிடம் தன் காதலை எடுத்துரைக்கக் காதலியால் முடிவதில்லை. 'உடன்போக்கு என்பது நிகழ்ந்ததும் இதனால் தான். உடன்போக்கு என்பது இலக்கியத் தரம் வாய்ந்த சொல் எனினும் உடன்போக்குச் செயல் சமுதாயத்தில் இழிவானதாகக் கருதப்படுகிறது. இதனாலேயே காதல் ஒரு பிரச்சினையாகவே இத்தச் சமுதாயத்தில் அமைந்துவிடுகிறது. 'காதல் கொள்வது உயிரியற்கை' என்றாலும், 'செம்புலப் பெயல் நீர்போல் அன்புடை நெஞ்சம் கலக்கின்றன' என்றாலும், காதல் ஆயிரம் விசாரணைகளுக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் தண்டனைகளுக்கும் உரியதாகத் தான் ஆக்கப்படுகிறது. இதனாலேயே பெற்றோரிடம் தன் காதலை மறைக்கும் மனப்பான்மை இளைய சந்ததிக்குத் தோன்றுகிறது. அதேபோல், எத்துணை முற்போக்குப் பேசும் பெற்றோரும் தங்கள் பிள்ளைகளின் காதலில் முழு நம்பிக்கை வைப்பதில்லை. அதனை ஆய்வுக்கு உட்படுத்திக் குறை காணும் மனநிலையே வாய்க்கப் பெறுகின்றனர்.

12. ஆத்மாநாம், காகிதத்தில் ஒரு கோடு, ப. 33

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



ஒரு மழைநாள் இரவில் காதலனோடு வீட்டை விட்டுச் சென்ற மகளை ஈன்ற தாயின் வருத்தம் தமிழன்பனின் கவிதையில் புதுக்கோணத்தில் விவரிக்கப்படுகிறது. மகளின் அறையில் திறந்த பேனா, விரிந்த புத்தகம், கலைந்த போர்வை எல்லாம் இருந்தன. ஆனால்,

"எனக்கென
அவள்
விட்டுச் செல்ல மறந்த
இரு சொட்டுக்
கண்ணீர்த் துளிகளைத்
தவிர
எல்லாம் இருந்தன"[13]

என்று வருந்துகிறாள் தாய். இது அவளுடைய இன்றைய பிரச்சனை மட்டுமல்ல. தான் தனது இளமைப் பருவத்தில் இதே போல் ஒரு மழைநாள் இரவில் தன் வீட்டை விட்டு வந்த நினைவுகளின் மீட்சியில் மேலும் மருகுகிறாள்.

"என்னைப் போல்
என் தாய் துடிக்க
இவரோடு நான்
புறப்பட்டுப் போனதும்
இதுபோல்
ஒருமழைநாள் இரவு"[14]

என்று நினைக்கையில் தன்னுடைய பல தவறுகளும் பொறுப்புகளும் அவள் மனச்சாட்சியை வாட்டுகின்றன. தான் இதே செயலைச் செய்தபோது தன் தாய் எவ்வளவு வருந்தியிருப்பாள் என்று இப்போதுதான் அவளுக்குப் புரிகின்றது. அது மட்டுமல்ல. தான் ஒரு தலைமுறைக்கு முந்திச் சொல்லாமல் வீட்டை விட்டு வந்த நிலையையே தன் மகளுக்கும் ஏற்படுத்திவிட்ட தவறும் அவளுக்குப் புரிகிறது. காதலிக்கும் ஒரு மகளின் நிலையில்

13. தமிழன்பன், காலத்திற்கு ஒரு நாள் முந்தி, ப.
14. மேலது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இருந்த தான், தன் பெண்ணின் காதலைப் புரிந்துகொள்ளாமற் போன அறியாமையும் பொறுப்பின்மையும் புரிகின்ற துக்கமும் அவளை வாட்டுகின்றன. தலைமுறைகள் மாறினாலும் சில தவறுகள் மாறாமல் தொடர்வதை இந்தக் கவிதை உணர்த்து-கின்றது. இந்தச் சமுதாயச் சூழலின் ஒரு பகுதியே இது. பெற்-றோர்களிடம் ஆளுமையுணர்வும், வயது மதிப்பு பற்றிய அநாவசிய எதிர்பார்ப்புகளும் முளைத்துவிடுகின்றன. பிள்ளை-களிடம் தேவை இல்லாத அச்சங்களும், வயதுக்குத் தரும் மதிப்பு என்ற பெயரில் மறைக்கின்ற மனப்பான்மையும் தோன்றி வரு-கின்றது. இதனால் இந்தக் கவிதை, காதல் ஒரு பிரச்சினையா யாக்கப்படும் சமுதாயத்தை மட்டுமல்ல, ஒரு குடும்பத்தில் வரும் உறவுமுறைப் பிரச்சினைகளையும் எடுத்துரைக்கிறது. தன் தாயை அழ வைத்த நினைவு வருத்தும் ஒரு புறமும், தன் மகள் தன்னை அழ வைத்துப் பிரிந்த நடப்பு வருத்தம் ஒரு புறமுமாக ஒரு தாயின் மனப்போக்கு நன்கு சித்திரிக்கப்படுகிறது.

## உள் மன உணர்வுகள்

மனித மனம் மிக விந்தையானது. அதனால்தான் 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்ற தத்துவட் உண்மையாகிறது. மனிதனின் எல்லாப் பிரச்சினைகளுக்கும் அவனது சூழ்நிலையும் சமுதாய நிலையும் மட்டும் காரணமல்ல. அதேபோல் மனிதனின் எல்லாத் துன்பங்களுக்கும், பிரச்சினைகளுக்கும் அவன் மனநிலை மட்டுமே காரணமுமல்ல. இவை இணைந்தும் பிணைந்தும் இருப்பதால் தான் சமுதாயப் பிரச்சினைகள், தனிமனிதப் பிரச்-சினைகள் என்று பிரிக்க இயலாமல் அவை ஒரே சமயத்தில் பிணைந்தும் பிரிந்தும் உள்ளன.

''வெள்ளை வெள்ளையென்று
மனதைத் திறந்து போட்ட
நாளெல்லாம்
கறுப்பு நாளாச்சு''[15]

இது ஒரு மன வெளிப்பாடு. மனிதன் நல்லவனாக, நன்மையே நாடுபவனாக, யாருக்கும் தீமை கருதாதவனாக, யாருக்காகவும்

15 விசுவநாதன், சுதந்திரம், ப. 62

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



போலித்தனம் காட்டாதவனாக, வெள்ளை மனத்தோடு வாழ விரும்பினால், சோதனைகள் மிகுதி. அவன் தன் பண்புகளை நிலைநிறுத்திக் கொள்ள நேர்மையோடும், பொய்ம்மை இல்லாதவனாகவும், தன் மன இயல்புப்படி வாழ விரும்பினால், நிறையத் துன்பம் நேர்கிறது. கள்ளத்தனம் புகாத உள்ளம் கறுப்பு நாட்களைச் சிந்திக்க வேண்டி உள்ளது. இதனால், மனநிலைக்கும் சமுதாயச் சூழ்நிலைக்கும் இடையே போராட்டம் நிகழ்கிறது. உளம் நிறையப் பிரச்சினைகளும் துன்பங்களுமே மிஞ்சுகின்றன. ஊரொடு ஒத்துப்போகாத காரணத்தால் நன்மைகளும், புரட்சிகளும் புறக்கணிக்கத்தான் படுகின்றன. இங்கு ஒரு நன்மையே தீமையாக, பிரச்சினையாக மாறிவிடும் உலக இயல்பினைத் தனி மனிதக் கண்ணோட்டத்தில், விரக்தியில் உரைக்கிறார் கவிஞர் நா. விச்வநாதன்.

இன்னும் மனித மனத்தின் அச்சங்களும், உள் மன நிலைகளும் பல கவிதைகளில் துல்லியமாகக் காட்டப்படுகின்றன.

''தூரத்தில் வரும்
மனிதர்கள் எல்லாம்
நண்பர்களாய்த்
தெரிகிறார்கள்
அருகில்
வரும் வரை . ...''[16]

ஒரு மனிதன் தன் வாழ்க்கையில் குறுக்கிடாதவரை, விமர்சனம் செய்யாதவரை தொலைவிலேயே நிற்கும்வரை எல்லோரையும் நண்பர்களாய் நேசிக்கின்றான். ''யாவரும் கேளிர்'' என்று அவனால் கருத முடிகிறது. ஆனால், நெருங்கி வந்தால் உறவுகள், நட்புகள் பற்றிய அச்சம் கொள்கிறான். இந்த அச்சங்களுக்கு ஒரு தனிமனித மனம் மட்டுமே காரணமல்ல. பொருளாதாரச் சூழல், எந்திர வாழ்க்கை நிலை போன்ற பலவும் காரனமாகின்றன. மனிதன் எல்லோரையும் நேசித்து, நெகிழ்ந்து, மகிழ்ச்சியாக வாழ விரும்புகிறான். ஆனால் வாழ்க்கை அப்படி அமைவதில்லை. அத்துணை உறவுகளும் அச்சுறுத்துவது போன்ற மனத்தோற்றமே கொள்கின்றான்.

16. விஷ்ணு நாகராஜன், புதிய திசை, ப. 7

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



மனித மனத்தின் ஆழத்தில் அச்சமும், தனக்குத் துன்பமே நேருமோ என்ற ஐயப்பாடும் தங்கியிருக்கின்றன. அதனாலேயே மனிதர்களைக் கண்டு மனிதன் அஞ்சுகிறான். தன்னைத்தானே தனிமைப்படுத்திக் கொள்கிறான். எதனாலும், யாராலும் தனக்கு தீங்கு வந்து விடலாகாது என்று விழிப்பாக இருக்க நினைத்து நிம்மதி இழக்கிறான். தன்னால் மட்டுமே தனக்குப் பிரச்சினை வராது என்று நினைத்துத் தனித் தீவாகி விடுகிறான். எதையும் எதிர்நோக்கும் இயல்பை இழந்து விடுகிறான். இந்த அச்சமும் தனிமையுமே அவனுக்குள் ஒரு பிரச்சினையாகி விடுகிறது.

"பள்ளம் வீழ்ச்சி மரணம்
எந்த வார்த்தைகளைக் கேட்டாலும்
என் உடல் நடுங்கியது
ஒரு நாள்
எங்கோ எரிந்து வீழ்ந்தேன்
என் உள்ளம் நடுங்கவில்லை
பேராழத்தில் மூழ்கித்தான்
புதுமண்டலத்தின்
மகத்துவம் அறிந்தேன்"[17]

எதிர்நோக்காதவரைதான் எதுவும் பிரச்சினை. எதிர்நோக்கி விட்டால் அச்சம் விலகிவிடும். தீர்வு கிடைத்துவிடும் என்பதை அறிவுறுத்துகிறார் கவிஞர் விஷ்ணு நாகராஜன். மனிதன் பற்றற்றவனாக இருக்கவேண்டும் என்பதற்கு மாறாகப் பற்றுகளைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்ற அறிவுரையே இன்றைய கவிதைகளில் மிகுதி. தனக்குள் தானே மூழ்கி அவன் தடுமாறி விடக்கூடாது. உலகமே வெறுத்துப் போய் அவன் காணாமற் போய்விடக்கூடாது அவனுக்குச் சில வெளிப்பாடுகள் தேவை. இதனையே,

"எதையேனும் சார்ந்திரு
கவித்துவம்
தத்துவம் காதல்

17. பேலது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



எதன் மீதேனும் சாய்ந்திரு
இல்லையேல் உலகம்
காணாமல் போய்விடும்[18]

என்ற கவிஞர் வண்ணநிலவனின் இக்கவிதை உணர்த்துகிறது

வாழ்க்கை மிகப் பரந்தது. உலகம் மிக விரிந்தது. எனினும், மனிதனின் வாழ்நாள் ஓர் எல்லைக்குட்பட்டது. அந்த எல்லைக்குள் அவன் வாழ விரும்பும், வாழ முடியும், வாழும் வாழ்க்கை அவனைச் சார்ந்ததும் அவன் சூழ்நிலையைச் சார்ந்ததும் ஆகும். அதனால்தான், சமுதாயப் பிரச்சினையில் தனிமனிதப் பிரச்சினையும் உட்படுகின்றது. மனித வாழ்க்கை கண்ணாடி வீட்டிற்குள் வாழும் வாழ்க்கை போன்றது ஏனென்றால், அவன் சமுதாய மனிதன். அதே சமயம் அது சிலந்தியின் வலைப்பட வாழ்க்கையும் ஆகும். தனக்குத் தானே பின்னுவதும் பாதுகாப்பதும் வெளியேற முடிந்தும், முடியாமலும் தவிப்பதும் ஒதுங்குவதும் ஆக வாழ்க்கை வலைப்பட்டதும் ஆகும்.

உள்மன உணர்வுகள், உள்மனச் சிக்கல்கள், சிதறல்கள் இவை மனிதர்கள் அனைவர்க்கும் இருக்கும். அதைக் கவிதையாக வெளிப்படுத்த முடிவது சிலருக்கே சாத்தியமாகிறது. கவிஞர் பசுவய்யா, விக்ரமாதித்யன், அபி, கலாப்ரியா, சி. மணி தி. சோ. வேணுகோபாலன், விஷ்ணுநாகராஜன், காசியப்பன் ஆகியோர் இதைச் சிறப்பாகச் செய்கின்றனர் எனலாம். 'பிரமைகள்' என்ற தலைப்பில்,

''சில சமயம் இன்று ரோஜா பூத்திருக்குமென
கண் விழித்ததும் நினைவில் நிச்சயமாய் மின்ன
கட்டிய பாத்தியின் வெறுமை காட்சியைத் தாக்க,
நினைத்துக் கடத்தியதன்றி
ஊன்றாத செடியை நினைவு கொள்ள
விசனித்துத் திரும்புவேன்.
சிலசமயம் மனதில் பால் கொதிக்க
தேடிப் பின்கட்டு சென்று
மூடிய பாத்ரூம் கதவு முன்
அசைவில் பிசுபிசுக்கும்

...ed free of Cost, and with the Compliments of the Department of Education, Government of India, New Delhi

18. வண்ணநிலவன், மெய்ப்பொருள், பிரமைகள், ப. 33

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



ஈரத்துணி ஈர்ப்பு மனநிழலாட
கொட்டும் நீரின் ஓசைக்குச்
செவி தந்து காத்திருப்பேன்.
காற்றும் கதவைத் திறக்க,
உலர்ந்த தரையும் வெளிப்பட்டு நிற்க,
ஏதோ விதம் வருவாள் என
அப்போது நினைப்பதன்றி
பிரிவுற்றது நினைவு கொள்ள மறுக்கும்''[19]

எனும்போது உள்மன ஓட்டங்களை, மனதிற்குள் பிரமை தட்டி மனிதன் மயங்குவதை, நன்கு கவிதையாக்கியுள்ளார் கவிஞர் பசுவய்யர்.

கவிஞர் வல்லிக்கண்ணனும்,

''பிறப்புக்கு முன்னும் இருட்டு
இறப்புக்குப் பின்னும் இருட்டு
இடையில்தான் எத்தனை இருட்டு''[20]

என்று வாழ்க்கை முழுவதும் அச்சுறுத்தும் அவலங்களைக் குறித்துப் பாடுகிறார். நேரடி வாழ்க்கையின் உண்மையை மறைக்காமல் வெளிப்படுத்துகிறார்.

''பின்னாலும் போகவில்லை
முன்னாலும் போகவில்லை
நடுக்கிணற்றில் நிகழ்காலம்''[21]

எனும்போது கவிஞர் சி. மணியும் இங்ஙனமே வாழ்க்கையின் நிலைப்பாடு இல்லாத அவலத்தைக் குறிப்பிடுகிறார்.

இங்ஙனம் தனிமனித அவலங்கள், மனக்குறைகள், விரக்திகள் இவை யாவும் புதுக்கவிதைகளில் நன்கு சித்திரிக்கப்படுவதைக் காண முடிகின்றது. 'தனிமனிதம்' என்பது சமூகவியல்வாதத்திற்கு எதிரானது அன்று. அதே பொழுதில் அது சமூகவியல் பார்வை கொள்வதே நியாயமாகும்.

---

19. பசுவய்யா, நடுநிசி நாய்கள்,
20. வல்லிக்கண்ணன், அமர வேதனை, ப. 31
21. மணி, சி., வரும்போகும், ப. 5

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# புதிய உத்திகள் - புதிய சக்திகள்

## பகுப்பு விளக்கம்

முந்தைய கட்டுரைகள் யாவும் புதுக்கவிதைகளின் உள்ளடக்கம் தொடர்பானவையாக அமைய, இக்கட்டுரை மட்டும் உள்ளடக்கத்திற்கு வெளிப்பாட்டு முறைகள் உதவும் வகை பற்றியதாக அமைந்துள்ளது. அதனால் இக்கட்டுரை வடிவம் சார்ந்த ஆய்வாக அமைந்துள்ளது. சமுதாயத்தின் சகல பிரச்சினைகளையும் சித்திரிப்பதற்கு இக்கவிஞர்கள் எத்தகைய வெளிப்பாட்டு முறைகளைக் கையாண்டுள்ளனர் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

இலக்கியத்தின் பொதுப்பண்பான அனுபவ வெளிப்பாடாக மட்டுமின்றிப் புதுக்கவிதைகள் கருத்துப் பகிர்வுச் சாதனங்களாகவும், பிரச்சாரக் கருவிகளாகவும் உள்மன உணர்வின் வெளிப்பாட்டு வீச்சாகவும் இங்ஙனம் பல்வேறு புதிய விதங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. புதுக்கவிதையின் கருத்து வெளிப்பாட்டு முறைகள் தொடர்பாகப் பல்வேறு கோணங்களில் இதுவரை வெளிவந்துள்ள விமர்சனக் கண்ணோட்டச் சார்புகள் இன்றி, ஆய்வுத் தலைப்புத் தொடர்பில் மட்டும் நோக்கின், பத்து வகையாக வெளிப்பாட்டு முறைகளைப் பிரிக்கலாம். இப்பத்துப் பிரிவுகளுக்குள், சட்டம் போட்டு அடக்கிவிடத்தக்க பண்புகள் உடையவை இக்கவிதைகள் என்று கூறமுடியாது. எனினும் கவிஞர்கள் தம் கருத்துக்களைக் கவித்துவத்தோடு உரைக்கும் முறைகள் பொதுவாக இந்தப் பத்து வகைக்குள் அடங்குகின்றன

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



எனலாம். அவையாவன, (1) முரண் உத்தி, (2) எதிர்மறை உத்தி, (3) இறுதி வரி விளக்கமுறை, (4) நகைச்சுவை, (5) எள்ளல் உத்தி, (6) பழைய-புதிய இணைப்பு, (7) சிறிய அமைப்பு, (8) உவமை, (9) பிரகடன முறை (10) புதுமை யாக்கம் ஆகியவை.

முரண் உத்தி

சொல், கருத்து இவற்றின் முரண் தொடை அமைப்பு, பழைய இலக்கிய முறை ஆகும். எனினும், அம்முறையிலே, புதுக்கவிதைகள் புதிய செய்திகளைச் சொல்லுவதைக் காண முடிகிறது.

"பட்டொளி வீசும்
பளபளப்பு மயக்கம்
பாதை ஓரங்களிலோ
பசியின் கிறக்கம்"[1]

இங்குக் கருத்து முரணில் 'இந்தியாவின் கதை' அலசப்படுகிறது

'நண்பகல் கூட்டத்துக்கு
நடுராத்திரி வந்த
பெரிய வர் பேசினார்
நேரம் பொன்னானது"[2]

என மேடைப் பேச்சாளர்களின் போலித்தனம் விமர்சிக்கப்படுகிறது.

"அரை நிர்வாணப்
பக்கிரி என்றான்
முழு நிர்வாணத்
தெய்வம் என்பேன்"[3]

இங்ஙனம் மகாத்மாவின் மகத்துவம் பேசப்படுகிறது.

1. சக்திக்கனல், கனகாம்பரமும் டிசம்பர்ப் பூக்களும், ப 66.
2. அழகர்சாமி, அலையும் நுரையும், ப. 54
3. மேலது பக். 19

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



"சுகங்களில் பிறந்த
துக்கங்கள் இவர்கள்"[4]

எனும்பொழுது கவிஞர் நீலமணி எளிய முரண் தொடையில் உழைக்கும் குழந்தைகளின் நிலையையே சித்திரித்து விடுகிறார். இந்தக் குழந்தைகளும் ஒரு சுகத்தின் வெளிப்பாடுகள்தான். ஆயினும் இவர்களின் வாழ்க்கை மட்டும் அவலமாகவே இருக்கிறது.

மேற்கூறப்பட்டவை முரண்தொடை எனும் இலக்கணச் சட்டம் எதிர்பார்க்கப்படாமல் அமைந்த கவித்துவ வரிகள். இந்த இலக்கணம் பழையது. எனினும், கருத்துக்களும், வெளிப்பாட்டு முறைகளும் புதிதாக இருக்கின்றன. சமகாலப் பிரச்சினைச் சித்திரிப்புக்குத் துணை செய்கின்றன. கவித்துவ அழகையும் கெடுக்காமல் இருக்கின்றன.

"ஆயுத வேள்விகளுக்கு
சாத்வீக உரைகள்
தப்பாகத்தான் எழுத
முடியும்"[5]

இதில் யுத்தகாலத் தத்துவத்தையே விளக்கி விடுகிறார் கவிஞர் பாப்ரியா.

## 2. எதிர்மறை

கவிஞர்கள் தாம் சொல்ல விரும்பும் கருத்துக்களை எதிர் மறை உத்தியைப் பயன்படுத்தி உரைப்பதைப் பல கவிதைகளில் காண முடிகிறது. "என் தேசம் வளர்கிறது" என்ற தலைப்பில் கவிஞர் பொன்னீலன்,

"அரசியல்வாதிகள் பொய்யை விதைக்கிறார்கள்
தப்பித் தவறி விளைந்த கதிர்களை
முதலாளிகள் பொறுக்கிக் கொள்கிறார்கள்

4. நீலமணி, பனி படர்ந்த எரிமலைகள், ப. 47
5. பாப்ரியா, கண்சிமிட்டும் கல்லறைகள், ப. 55

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



நியாயவாதிகள் குட்டையைக் குழப்புகிறார்கள்
சந்தர்ப்பவாதிகள் மீன் பிடிக்கிறார்கள்''[6]

இங்குத் தேசம் வளர்வதற்குரிய சாட்சிகள் எதுவுமில்லா நிலையைக் காட்டி வளர்வதாகச் சொல்லும் எதிர்மறை உத்தி அருமையாகச் செயல்படுகிறது.

இதேபோல், மெல்லியல் என்று வர்ணித்துப் பெண்களை பலவீனர்களாக ஆக்கும் சமுதாயச் சூழலில், உழைக்கும் வர்க்கத்துப் பெண்களின் வலிமையையும் வாழ்வையும் சித்திரிக்கிறார் கவிஞர் ஏ. தெ. சுப்பையன்.

''வட்டுக்கூடையிலே
மண்சுமக்கும் இவள்தானே
மெல்லியலாள்.
கட்டுக் கதிர் தூக்கி
விட்டெறியும் அவள்தானே
பூங்கொடியாள் — ஆமாம்
பூங்கொடியாள்''[7]

இந்தக் கவிதைக்குக் கவிஞர் 'வீக் செக்ஸ்' என்று தலைப்பிட்டது எதிர்மறை உத்தியை இன்னும் விளக்கமாக உணர்த்துகிறது. அலங்கார வார்த்தைகளுக்கும், மெல்லியல் போர்வைகளுக்கும் அகப்படாத இனமான உழைக்கும் மகளிரின் உன்னதத்தை உணர்த்துகிறார் கவிஞர்.

மேற்கண்ட கவிஞர்கள் நடப்பியலைச் சித்திரித்தனர் ஏ.மு. ராஜனோ எதிர்பார்ப்பை விளக்குமுகத்தான், நிகழ்காலத்தை எதிர்மறை உத்தியால் விளக்குகிறார். நமது நாடு எதிர்காலத்தில் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்கிறார் கவிஞர்.

''கொள்ளை கொலை
கற்பழிப்பு எல்லாம்
காவலர்க்கே

6. பொன்னீலன், பொன்னீலன் கவிதைகள், ப. 3
7. சுப்பையன், ஏ. தெ, அறைகூவல், ப. 24

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



திரைப்படமாய் —
நேரத்தில் ஓடும்
வண்டிகள்
அவற்றில்
காலத்தில் சேரும்
அலுவலர்கள், அதிகாரிகள்
மேற்கு நாடுகள்
மூக்கில் விரல் வைத்து
மேற்கோள் காட்டுகின்ற
நாட்டு முன்னேற்றப்''[8]

என்ற அருமையான கற்பனையில் அவற்றின் சுவடுகளற்ற இன்றைய சூழ்நிலையைச் சித்திரித்து விடுகிறார் கவிஞர்.

## இறுதி வரி விளக்கமுறை

கவிதைக் கருத்து ஒரு போக்கில் சென்று இறுதியில் கடைசி வரியில் கவிதையின் முழு வெளிப்பாட்டுப் பொருளும் விளங்கக் கூறப்படும் உத்தியும் புதுக்கவிதைகளில் உண்டு. பிரச்சினைச் சித்திரிப்பிற்கு இந்த உத்தியும் பயன்படுகிறது. அழகையும் கூட்டு-கிறது. எனினும், இது ஒரு தீர்வுச் சிந்தனையையோ, ஒழிப்புக் குரலையோ கொடுக்கவில்லை என்பதையும் காணலாம்.

"உலகம் உண்டான
விதம் பற்றி
உண்மையொளி பாய்ச்சி
உவப்புற்றிருந்த வேளையில்
ஜன்னலுக்கு வெளியே
மனிதக் கூட்டம்
சோறு தேட''[9]

நமது நாட்டில் ஒரு புறம் அறிவியல் வளர்ச்சியும், மற்றொரு புறம் வறுமைக் கொடுமையுமாக இருக்கின்ற நிலையினை சித்திரிக்கின்றார் கவிஞர் வண்ணநிலவன். இந்தக் கவிதையின்

8. ராஜன், ஏ. மு., கிழக்குச் சூரியனின் மேற்கு நினைவுகள் ப. 63
9. வண்ணநிலவன், மெய்ப்பொருள், ப. 24

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



உயிர்த்துவமே இதன் இறுதி வரியான, 'சோறு தேட' என்பதில் தான் இருக்கிறது. இந்தக் கவிதைக்கு 1+1=2 என்றொரு தலைப்பும் வழங்கியிருக்கிறார் கவிஞர். இரு வேறு நிலையில் இரண்டுமாக வளர்கிறது நமது நாடு என்பதை இதன் வாயிலாகவும் உணர்த்துகிறார் கவிஞர்.

இதேபோல், கவிஞர் மீராவும், சுரண்டல் சமுதாய அமைப்பை வெளிப்படுத்து முகத்தான் இவ்வுத்தியைப் பயன்படுத்தியுள்ளார். இரவில் உறங்குகையில் சுண்டுவிரலைக் கடிச்கு பாச்சாவைப் பார்த்துக் கேட்கின்றார் கவிஞர்.

''மெலிந்திருக்கின்ற
சுண்டு விரலைச்
சுரண்டலாமா?
சுரண்டலாமா?
சுரண்டலாமா?''10

கட்டை விசல் இருக்கச் சுண்டுவிரலைக் கடிக்கும் பூச்சியைப் போல ஏழைகளைச் சுரண்டும் முதலாளிகளைச் சுட்டிக் காட்டுகிறார் கவிஞர் மீரா.

கவிஞர் கொ ச. பலராமனின் கவிதைகள் பலவற்றில் இவ்வுத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது.

''ஆரூடம் பார்க்கும்
ஆதிசேசன்
தன் மகள் கல்யாணத்தைத்
தடபுடலாய்
முடித்த
மூன்றாம் நாள்
அவள்
விதவை''11

என்று ஆரூடம் பார்த்தலெனும் மூடநம்பிக்கையைச் சாடும்முகத்-தான் இக்கவிதை எழுதப்பெற்றுள்ளது. அந்தக் கருத்து 'மூன்றாம்

10. மீரா, ஊசிகள், ப. 15
11. பலராமன், கொ. ச., புதுக்கணக்கு, 'ஆருடம்'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



நாள்'' என்றும் கூறும் வரை வெளிப்படுத்தப்படாமல் கடைசியில் 'அவள் விதவை' என்பதில் உரைக்கப்படுகிறது. இதேபோல்,

''நாற்பது நாட்கள்
விரதம்
நெற்றியில் விபூதி வேடம்
காலை மாலை
குளியல்
சரணம் சரணம் சத்தம்
கொஞ்சம்
பட்டைச் சாராயம்
இவ்வளவுதான்
பக்தி''[12]

என்ற கவிதையிலும் அதே கவிஞர் இறுதி வரியில் 'பக்தி'யில் உள்ள போலித்தனத்தை விளக்கி விடுகிறார். கவிஞர் வலம்புரி ஜானும்,

''குடிசைகள்
நிலமுகத்தில் வந்த
அழகு தேமல்கள்
அண்டர் கிரவுண்டுகள்
அம்மைத் தழும்புகள்
பல மாடிகள்
பருக்கள்
கூடங்கள்
கட்டிகள்
கோபுரங்கள்
கொப்புளங்கள்
ஒரே மருந்து
சிவப்பு டப்பாவில் இருக்கிற
வெள்ளை பைசால்''[13]

12. மேலது, 'பக்தி'
13. வலம்புரிஜான், காற்றின் சுவாசம், ப. 42

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



எனும் கவிதையில், 'சோலிச சமுதாய அமைப்பு' ஒன்றே சமு-தாயத்தின் அனைத்து நோய்களுக்கும் ஏற்றத்தாழ்வுகளுக்கும் மருந்து என்பதைக் கடைசி வரிக் கருத்தால் உணர்த்தி விடுகிறார்.

இவ்வுத்தி சில கவிஞர்களுக்கு நன்கு கை வருகிறது. இக் கவிதைகளில் நேரடிச் சாடுதலோ பாடுதலோ எதுவுமற்ற ஒரு கவித்துவம் மட்டுமே மிஞ்சுகிறது. அதனால் கருத்தைவிடக் கவித்துவ உத்தி சிறப்புப் பெறுகிறது எனலாம்.

## 4 நகைச்சுவை

அனைத்துவகை இலக்கியங்களிலும், அனைத்துக் காலங்-களிலும் பயன்படுத்தப்படும் இலக்கிய உத்தி நகைச்சுவை ஆகும். புதுச்கவிதைகளில் இவ்வுத்தி மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டு உள்ளது. இதன் மிகுதி காரணமாகவும், ஒரே மாதிரி அமைப்புக் காரணமாகவும் சில இடங்களில் நகைச்சுவை அலுப்புத் தருவ-தாயினும் மிகச் சிறப்பான வெளிப்பாட்டு முறையாகவும், இவ் வுத்தி இக்கவிதைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆழமான கருத்தையும், எரியும் பிரச்சினையையும் கூட நகைச்சுவையோடு கூறும் திறன் இக்கவிதைகளில் மிளிர்வதையும் காண முடிகிறது.

வறுமையின் கொடுமையைப் பலவாறாகப் பல கவிஞர்கள் பாடி உள்ளனர். எனினும், ஒரு துன்பக் கொடுமையை எளிய இரண்டு வரிகளில் நகைச்சுவையோடு தருகிறார் கவிஞர் கோ.மா. கோதண்டம். ஒரே வேட்டி வைத்திருக்கும் ஒருவன் மாற்றி மாற்றிக் கட்டுவதற்கு அந்த ஒரே வேட்டிக்கு இரண்டு பக்கம் தானே இருக்கும். அதன் பிறகு என்ன செய்வது? இந்தப் பற்-றாக்குறை வறுமையை,

> "என் வேட்டிக்கு என்ன
> மூன்று பக்கமா இருக்கிறது"[14]

என்னும் கேள்வியில் நகைச்சுவையும் விளங்கக் கூறிவிடுகிறார் கவிஞர். கவிஞர் கதைப்பித்தனும் வறுமையை விமர்சிக்க நகைச்

14. கோதண்டம், கோ.மா, கோழிக்குட்டிகளும் பன்றிக்குஞ்சு களும், ப. 17

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



சுவையைக் கையாளுகிறார். மூன்று காலம் பற்றிய இலக்கணம் கற்பிக்கும் ஆசிரியர், கற்பிக்கும் ஆசிரியர், கற்பித்த பின் இறுதியில்,

"ஏழுமலை நீ, சொல்!
நீ குடிசையில் வசிக்கிறாய்
இது என்ன காலம்?"

என்று கேட்க, மாணவன்,

"அதுவா, சார்
அது என் போதாத காலம்"[15]

என்கிறான். இத்தகைய உரையாடல் நகைச்சுவையில் வறுமை பற்றிப் பேசுகிறார் கவிஞர். இதே போல், கவிஞர் கந்தர்வன்

"ரேஷன் கடையில்
அரிசி வாங்கிக்
கல்லையும் நெல்லையும்
பொறுக்க நினைத்து
அரிசியைப்
பொறுக்கி முடித்தோம்"[16]

என்பார். கலப்படக் கொடுமையை இங்ஙனம் எளிதான நகைச் சுவையில் விளக்கிவிடுகிறார். இதே கவிஞர், விடுகதை போலவும் நகைச்சுவையைத் தருகிறார்.

"இந்தத் தேசத்திலேயே
மிகவும் உயர்ந்தவன்
கிராமவாசியா
நகரவாசியா
இல்லை விலைவாசி"[17]

என விலைவாசிப் பிரச்சினையை இங்ஙனம் சித்திரித்துவிடுகிறார் கவிஞர்.

---

15. கதைப்பித்தன், எங்கள் சகாரா இங்கே இருக்கிறது, ப. 78
16. கந்தர்வன், கிழிசல்கள், ப. 55
17. மேலது, ப. 52

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



அரசியல் என்பது கேலிக்கும் நகைச்சுவைக்கும் உரியதாக ஆக்கப்படுகின்ற காலம் இது. அரசியல்வாதிகளின் போலித்தனம், பொய், புரட்டு, இவற்றை விமர்சிக்கும் நோக்கத்தில் கவிஞர்கள் சிலருக்கு நகைச்சுவை உத்தி நல்ல வெளிப்பாடாக அமைகிறது.

''மந்திரிக்கு
அழகு
வருபொருள்
உரைத்தல்
சரியாத்தான்
சொன்னார்கள்''[18]

'வருபொருள் உரைத்தல்' என்பதில் இரண்டு பொருள் பொதிந்து அரசியல்வாதிகளின் லஞ்ச ஊழலைச் சித்திரிக்கிறார் கவிஞர். இதேபோல் கவிஞர் மீராவும் மக்களைச் சுரண்டும் மேயரை அம்பலப்படுத்துகிறார். நடு இரவில் தன் மனைவியைச் சுரண்டு-கிறார் மாஜி மேயர். அவர் மனைவி,

''ஏன்தான் உங்களுக்கு
இன்னும் அந்தப்
பொல்லாப் பழக்கம்
போகவில்லையோ''[19]

என்று கேட்கின்றாள். மக்களைச் சுரண்டிய பழக்கத்தைக் குறிப்-பிடும் உத்தி நகைச்சுவை கலந்ததாய் மிளிர்கிறது. கவிஞர் வலம்புரிஜான், 'வேகாத பிணம்' என்னும் தலைப்பில்,

''எங்கள் பஞ்சாயத்தில்
தலைவர் இறந்தார்
சந்தனக் கட்டையில்லாமல்
அந்தப் பிணம்கூட
வேகமாட்டேன் என்று
தகராறு பண்ணியது''[20]

18. சுந்தரபாண்டியன், பகல் கனவுகள், ப. 23
19. மீரா, ஊசிகள், ப. 19
20. வலம்புரிஜான், காற்றின் சுவாசம், ப. 28

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்னும்போது, மேடையில் மட்டும் சோசலிசம் முழங்கிய அரசியல்வாதியின் பிணம் அவன் பண்பினைக் காட்டிக்கொடுத்ததாக நகைச்சுவையுடன் பாடுகிறார். கவிஞர் நீலமணி நகைச்சுவை உத்தியை மிகுதியாகக் கையாண்டிருப்பதை அவர் தம் 'தீர்க்க ரேகைகளி'ல் காணலாம்.

''ஒண்டிக் குடித்தனக்
கூட்டுக் குடும்பி
கண்டுபிடித்தது
ரப்பர் வளையல்''[21]

ஒரு வறுமைப் பிரச்சினை, இடப்பற்றாக்குறைப் பிரச்சினை, பெரிய குடும்பப் பிரச்சினை இவை அனைத்தையும் ஒரு நகைச்சுவையில் மடக்கி விடுறார் கவிஞர்.

இவ்வாறு நகைச்சுவை வாயிலாகவும், பிரச்சினைகள் பேசப்பட்டு உள்ளன. எனினும், இவற்றில் நகைச்சுவை ரசிக்கத் தகுந்ததாக இருக்கிறதே அன்றிக் கருத்து அதன் ஆழத்தை இழந்து விடுகிறது என்றே கூறலாம். இருப்பினும், நகைச்சுவை என்பது கவித்துவத்திற்கு அழகூட்டும் உத்தி ஆகும். எத்துணைத் தீவிர கருத்துக் கவிஞர்களும் நகைக்சுவையைப் பயன்படுத்தியிருப்பதையும் காணமுடிகிறது. கவிஞர் தணிகைச்செல்வன் கவிதைகள் தீவிரமான வெளிப்பாட்டில் வருபவை. அத்துணை பிரச்சினைகளையும் தத்துவரீதியாகச் சிந்தித்து வடிக்கும் திறனும், தன்மையும் கொண்டவர் அக்கவிஞர். இத்தகைய தன்மைகள் கொண்ட இக் கவிஞர் கூட, ஒரு துயரமான நிகழ்ச்சியைப் பாடுகையில் நகைச்சுவை இழையோடக் கூறுவதைக் காண முடிகிறது. ரம்ஜான் மாதத்தில் தர்மம் என்ற பெயரில் வழங்கப்படும் சேலை பெறும் பொருட்டுக் கூட்டத்தில் நசுங்கி இறந்த பெண்களை வைத்துப் பாடிய கவிதையில் கவிஞர்.

''மதவேற்றுமை மறையவேண்டும் என்று
மந்திரிகள் சொன்னதை
இப்படித்தான் புரிந்துகொண்டீர்களா?
மறையும்போது

21. நீலமணி, தீர்க்கரேகைகள், ப. 12

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



மதவேறுபாடில்லாமல்
காமாட்சியும்
காணிக்கை மேரியும்
கைத்தூண் பீவியும்
கை கோர்த்துச்
செத்திருக்கிறீர்களே''[22]

என்கின்றார். ஒரு கொடிய நிகழ்ச்சி இந்த நகைச்சுவையால் அர்த்தம் இழக்கிறது. இருப்பினும் கவித்துவம் என்பது பல்வேறு உத்திகளால் வெளிப்படுவது என்பதும் மறுக்க முடியாதது.

இதேபோல் கவிஞர் சிற்பியும் மதச்சடங்குகள், கூட்டங்கள் இவற்றில் விளையும் குழப்பங்களைச் சித்திரிக்கின்றார்.

''பால் காவடி பன்னீர்க் காவடி
பரவசத்தில் காவடி
ஒரு பதற்றம் --
ஆட்டத்தில் சிறு குழப்பம்
ஜேப்படி
காவடிக் கூட்டத்தில்
ஜேப்படி''[23]

காவடியும் ஜேப்படியும் ஒருங்கே நிகழ்வது நகைச்சுவையோடு சித்திரிக்கப்படுகிறது.

இத்தகைய நகைச்சுவை உத்தி பலராலும் கையாளப்படுகிறது. எனினும், அத்தனையும் வெற்றி தரும் என்று கூற இயலாது. சில அலுப்புத் தருகின்றன என்று கூறலாம். எடுத்துக்காட்டாக, மின்சார வெட்டுக் காரணமாக ஆலையில் வேலை இல்லாமல் பட்டினி கிடந்து, இறுதியில்,

''செத்துத் தொலையலாமே என்று
மின்சாரக் கம்பியில்
கையை வைத்தேன்
இதிலும் தோல்வியா''[24]

22. தணிகைச்செல்வன் பூபாளம், ப. 84
23. சிற்பி, சர்ப்பயாகம், ப. 25
24 கோதண்டம், கோ.மா., கோழிக்குட்டிகளும், பன்றிக் குஞ்சுகளும், ப 20

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்று கேட்கும் கவிஞர் கோ. மா. கோதண்டம் மின்சாரப் பற்றாக்குறையை விமர்சிக்கிறார். எனினும் இதில் நகைச்சுவை சுவையாக அமையவில்லை.

### எள்ளல் உத்தி

எள்ளல் உத்தி புதுக்கவிதையில் தனித்துவம் பெற்று விளங்குகிறது எனலாம். சாட வேண்டிய கருத்துக்களை எள்ளல் பாணியில் எளிதாக உரைக்கின்றனர் கவிஞர்கள். இவ்வுத்தியில் சுருக்கமாகவும் உரைக்க முடிகின்றது.

''பாத்தியா ஓதியாயிற்று
இனிப் பாவமில்லை
மாட்டை வெட்டுவோம்
பாவமன்னிப்புப் பெற்றாயிற்று
இனி கவலையில்லை
விபச்சாரம் பண்ணுவோம்''[25]

என்ற கவிதையில் கவிஞர் பொன்னீலன் மதமும் மந்திரமும் மயக்கம் தரும் பொருளாகவும், மனச்சாட்சியை மறைக்கும் கவசமாகவும் திகழ்வதையே இங்ஙனம் உரைக்கின்றார். பாத்தியாவும், பாவமன்னிப்பும் ஒரு மூட நம்பிக்கையே. ஏனெனில், வெறும் சடங்காக அன்றி மனிதனின் மனநிலையை அவை மாற்றுவதில்லை. இதையே எள்ளல் பாணியில் உரைக்கின்றார் கவிஞர்.

சுதந்திரம் வந்தும் மக்களுக்கு விடுதலை வாய்க்கப் பெறவில்லை என்பதைக் கவிஞர் மணியரசன்.

''மறக்காதீர் ஆகஸ்ட் மலடிக்கு வளைகாப்பு
பிறக்காத குழந்தைக்குப் பெயர் சூட்டுவிழா''[26]

என்று எள்ளல் சுவையோடு பாடுகிறார். இந்திய சுதந்திர நாளின் வெள்ளி விழாவைக் கவிஞர் இங்ஙனம் எள்ளல் பாணியில் சித்திரிக்கின்றார்.

---

25. பொன்னீலன், பொன்னீலன் கவிதைகள், ப. 5
26. மணியரசன், மனிதனைப் பாடுவேன், ப. 70

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இதேபோல், 'முன்னும் பின்னும்' என்னும் தலைப்பில் கவிஞர் கந்தர்வன்,

"சுதந்திரத்துக்கு முன்னால்
சுதந்திரம் என் பிறப்புரிமை
சுதந்திரத்துக்குப் பின்னால்
சரண்டுதல் என் பிறப்புரிமை"[27]

என்று மக்களாட்சியின் மகத்துவத்தை எள்ளி நகையாடுகிறார். இதையே சற்று மாற்றி,

"இப்போது
சுரண்டுதல் மனிதனின்
ஏழாவது அறிவாகிவிட்டது"[28]

என்பார் கவிஞர் நீலமணி.

எள்ளல் உத்தியில் நுண்ணிய நகைச்சுவையும் இழையோடுதல் இயல்பாக உள்ளது. கவிஞர் தமிழன்பனின் இச்சுவைப்பாடல் ஒன்று அரசியல்வாதிகளின் தன்மையை எடுத்தியம்புகிறது.

"எங்கள் ஊரில் ஒருவர்
ஊராட்சி உறுப்பினரானார்
ஒன்றியத் தலைவரானார்
சட்ட மன்ற
உறுப்பினரானார்
அமைச்சரானார்
அயல்நாட்டுத்
தூதரானார்
இறுதி வரை
மனிதராகாமலேயே
மரணமானார்"[29]

என்ற இந்தக் கவிதைக்கு 'வைராக்கியம்' என்று தலைப்புக் கொடுத்திருப்பது இன்னும் சுவையாக இருக்கிறது. மனிதனாகக்

---

27. கந்தர்வன், கிழிசல்கள், ப. 29
28. நீலமணி, பனி படர்ந்த எரிமலைகள், ப. 6
29. தமிழன்பன், காலத்துக்கு ஒரு நாள் முந்தி, 50

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



கூடாது உன்ற வைராக்கியத்தோடு வாழ்ந்ததுபோல் அவர் கடைசி வரை அப்படி ஆகவில்லை என்பதை எள்ளல் குறிப்போடு சிறப்பாக உரைக்கிறார் கவிஞர் தமிழன்பன்,

## சிறிய அமைப்பு

புதுக்கவிதைகள் அடி வரையறை கொண்டவை அல்ல. எனினும், பொதுவாகவே, நகைச்சுவை, எள்ளல்பாணி கொண்ட கவிதைகளும் வேறு சிலவும் சிறிய அமைப்பு உடையவையாகத் தமிழ்ப் புதுக்கவிதைகளில் பெரும்பாலும் அமைந்துள்ளன. இத்தகைய சிறிய அமைப்புக் கொண்டவையாக ஜப்பானிய ஹைக்கூ கவிதைகள் அமைந்துள்ளன எனக் கூறுவர் புதுக்கவிதையியலார். பொதுவாகத் தமிழில் இந்த முயற்சி வெற்றியடைந்துள்ளது என்று கூறமுடியாது. எனினும் சிறிய சிறிய கவிதைகள் பல, எளிதாகக் கருத்து விளக்கம் தரும் வகையில் நமது கவிஞர்களால் எழுதப்பட்டுள்ளன. அவற்றில் பிரச்சினைச் சித்திரிப்புகளும் உள்ளன.

"உழைத்தால் உயரலாம்
உழைத்தால் உயரலாம்
அது சரி
யார் உழைத்தால்
யார் உயரலாம்"[30]

என்று இந்தக் கவிதையில் கவிஞர் நீலமணி வர்க்க வேறுபாட்டையும், வாய்ச் சொல் வீரம் கொண்ட ஆளும் வர்க்கத்தையும் விமர்சிக்கின்றார். பத்துச் சொற்களில் ஒரு பெரிய கருத்தைச் சுவைபடத் தருகிறார். இதேபோல் அவரே,

"தட்டினால் திறப்பாராம்
தாராளக் கடவுள்
சாத்தி வைப்பானேன்"[31]

என்னும்பொழுது குரலும் கருத்தும் குறைந்த சொற்களில் நிறையச் சாதிக்கிறது கவிதை. இயல்பாக வருகின்ற இந்தச் சிறிய சிறிய அமைப்புகள் அழகாக உள்ளன. கவிஞர் முத்துவீரப்பனும்,

30. நீலமணி, தீர்க்கரேகைகள், ப. 46
31. மேலது, ப.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



''வெளிச்சத்துக்கு நடுவே
நடக்கும்
விபச்சாரம்''[32]

என்று நேர்முகப் பாராட்டினைக் கூறும்போது குறைந்த சொற்கள் நிறைந்த ஆழம் கொள்கின்றன.

கவிஞர் கலாப்ரியாவின்,

''அழகாயில்லாததால்
அவள் எனக்குத் தங்கையாகிவிட்டாள்''[33]

என்ற கவிதை அதிக விமர்சனத்திற்குட்பட்ட சிறிய கவிதை ஆகும். இது இளைஞர்களின் மனநிலையை உணர்த்துகிறது. ஒவ்வொரு இளைஞனும், இப்படித்தான் நினைக்கிறான் என்று கூற முடியாது. அதனால்தான், கவிஞர் இளவேனில் அழகாயிருந்தால் தாயையும், துகிலுரிப்பார்களோ என்ற முறையில் இந்தக் கவிதை பற்றிச் சினக்கிறார்.[34] ஆனால் இந்த மனநிலையும் ஒரு எதார்த்தமாகச் சில இளைஞர்களிடம் இருப்பது என்பதையும் மறுக்க முடியாது. இதனாலேயே தமிழவன், ''நினைக்கலாம் சொல்லக்கூடாது, எழுதக்கூடாது என்கின்ற ஒரு போலி இன்று உடைக்கப்பட்டுள்ளது''[35] என்று இக்கவிதையைப் பாராட்டுகிறார். இத்தகைய இரண்டு வகை விமர்சனத்திற்கும், இக்கவிதை உட்பட்டிருந்தாலும். இக்கவிஞரின் பல கவிதைகள் எளிதில் விளங்கும் தன்மையற்றிருக்க, இக்கவிதை மட்டும் எளிதாக விளங்கும் தன்மை கொண்டிருப்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

## பழைய—புதிய இணைப்பு

பழைய சொற்களோ, தொடர்களோ இலக்கிய வரிகளோ, புதிய கோணத்தில் விமர்சிக்கப்பட்டிருக்கின்றன அல்லது புதிய செய்தியோடு இணைக்கப்பட்டுள்ளன. இந்த வகை உத்தியும், புதுக்கவிதைகளின் பிரச்சினைச் சித்திரிப்பிற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளதைக் காணலாம்.

---

32. முத்துவீரப்பன், மௌனச் சிறகுகள், ப. 74
33. கலாப்ரியா, மற்றாங்கே, ப. 6
34. இளவேனில், இளவேனில் கவிதைகள் · முன்னுரை - பக். 87
35. தமிழவன், நாலு கட்டுரைகள், ப.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பது தொல்காப்பிய இலக்கணம், இதையே சற்று மாற்றிச் சமுதாயமே வியாபாரத்தனமாகிக் கொண்டிருக்கும் நிலையைச் சித்திரிக்கிறார் கவிஞர் வண்ணநிலவன்.

"எல்லாம் விலை குறித்தனவே
..........................
மியூசிக் அகாடமியில் கலைவிற்பனை
கந்தவிலாஸ் கடையில் ஜவுளி விற்பனை
அரபு தேசத்தில் இளைஞரும்
சீரணி அரங்கில் அரசியலும்"[36]

பழைய சொற்களோடு புதிய கருத்தை, சமுதாயப் பிரச்சினைச் சித்திரிப்பைத் தொடர்புபடுத்தி விடுகிறார் கவிஞர்.

'செத்தாலும் மேன்மக்கள் மேன்மக்களே ........' என்ற பழைய நீதியைப் புதிய சமுதாயப் பார்வையோடு விளக்குகிறார் கவிஞர் மீரா. வர்க்க வேறுபாட்டுச் சமுதாயத்தையே இதில் உணர்த்தி விடுகிறார். மூட்டை தூக்கிப் பிழைக்கவும் முடியாத ஏழை, மூட்டைப்பூச்சி மருந்து உண்டு இறக்கிறான். வைர வியாபாரி, வைரக்கடுக்களை நுணுக்கி உண்டு மடிகிறான். சாவிலும் ஏழ்மையும், செல்வமும் தெரிகிறது என்பதை நகைச் சுவையும் உட்பட,

"ஓ..........
செத்தாலும்
மேன்மக்கள் மேன்மக்களே"[37]

என்று கூறுகிறார் கவிஞர்.

பாஞ்சாலி சபதத்தை மனத்திற் கொண்டு, விலைவாசி உயர்வுப் பிரச்சினையை அத்துடன் இணைத்துப் பாடுகிறார் கவிஞர்.

"விலைவாசித் துரியோதனன்
எங்களை

36. வண்ணநிலவன், மெய்ப்பொருள், ப. 34
37. மீரா, ஊசிகள், ப. 32

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



(வரு)மானபங்கம் செய்யும்போது
ஹே, கிருஷ்ணா காப்பாற்ற வரமாட்டாயா?''[38]

எனும்போது துகிலுரிக்கப்படும் அவமானத்தை விலைவாசி வழங்குகிறது என்பதை உணர்த்தி விடுகிறார் கவிஞர்.

இதேபோல், பாரதியார், பாரதிதாசன் இவர்களின் கவிதை வரிகளும் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

''தாயின் மணிக்கொடி
தயாரிப்பதற்காக
இடுப்புத்துணியும்
இவர்கள் இழந்தனர்
மண்ணில் இவர்கள் மானமும்
விண்ணில் கொடியும்
பட்டொளி வீசிப் பறப்பது பாரீர்''[39]

என்று கவிஞர் தமிழன்பனும்,

''போகிற போக்கைப் பார்த்தால்
திருமணம் என்பதே
மூட நம்பிக்கைகளின்
பட்டியலில் சேர்க்கப்படலாம்
ஒரு வகையில்
புதியதோர் உலகம் செய்வோம்
என்ற கனவு கூட
இந்த நாட்டில்
நனவாகத்தான் செய்கிறது''[40]

என்று பாரதிதாசனின் வரியைக் கோகிலா தங்கசாமியும் பயன் படுகின்றனர்.

பெரிய பிரச்சினைச் சித்திரிப்பிற்குக் கூட இந்த உத்தியும் ஒருவகையில் துணைபுரிகிறது. '(அ) விபச்சாரம்' என்ற தலைப்பில் கவிஞர்,

---

38. தேனப்பன், வ., கனவு அன்னங்கள், ப. 44
39. தமிழன்பன், தீவுகள் கரையேறுகின்றன, ப. 73
40. கோகிலா தங்கசாமி, நீந்தத் தெரியாத மீன்கள், ப. 67

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



''நாங்கள்
பொருள்பாலுக்காக
காமத்துப் பாலை
விற்பனை செய்கிறோம்.
அறத்துப்பால் ஏன்
அழுதுவடிகிறது?''[41] (சுந்தர பாண்டியன்)

எனும்போது கற்புப் போதனைக்கும், வறுமைச் சோதனைக்கும் இடையில் தவிக்கும் பெண்களின் நிலை சித்திரிக்கப்படுகிறது. முப்பாலையும் சேர்த்து ஒரு புதிய கண்ணோட்டம் தருகிறார் கவிஞர். இதேபோல், இலங்கைப் பிரச்சினையையும் ஒரு பழைய இலக்கியச் செய்தியாகிய சிபியின் வாழ்க்கையோடு இணைத்துப் பார்க்கிறார் கவிஞர் நிர்மலா சுரேஷ்.

''நினைத்துப் பார்க்கிறேன்
தன் காலில் வந்து விழுந்தது
அயல்நாட்டுப் புறாவாக
இருந்திருந்தால் சிபி
பருந்தின் விவகாரத்தில்
தலையிடாமல் இருந்திருப்பானோ?''[42]

என இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட மறுத்த போது அது பற்றி எழுந்த சிந்தனையை இங்ஙனம் புதிய பாணியில் பழைய கதை சேர்த்துத் தருகிறார் நிர்மலா சுரேஷ்.

## உவமை

தமிழில், உவமை என்பது பழங்காலந் தொட்டு இலக்கிய அணிகளின் முதல் கருவியாகக் கருதப்பட்டு வந்துள்ளது. இயல்பிலேயே மனிதனுக்கு உள்ள ஒப்பீட்டு இயல்பு, இலக்கியத்தில் உவமையாகப் பரிணமிக்கிறது. அதனால், இவ்வணி பழமையானதாகவும், இயல்பானதாகவும் தோன்றியது எனினும், இன்றைய இலக்கியங்களில், புதுக்கவிதைகளில், உவமைகளும் காலச் சித்திரிப்பாகவும், கவிஞனின் கண்ணோட்ட விரிப்பாகவும் இருக்கக்

41. சுந்தரபாண்டியன், பகல் கனவுகள், ப 14
42. நிர்மலா சுரேஷ், தென்றலும் தலைமை ஏற்கும், ப. 15

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



காண்கிறோம். உவமை அணி, புதுக்கவிதைகளில் எங்ஙனம் பிரச்சினைச் சித்திரிப்பிற்குப் பயன்பட்டுள்ளது எனக் காணலாம்.

ஒரு சாதாரண இயற்கைக் காட்சியாக ஓடையில் மீன்கள் நீந்திச் செல்வதைக் காணும் கவிஞர் பஞ்சு,

''எதிர்த்து நடப்பதில்தான்
எத்தனை இன்பம்
என்றுரைக்கும்
சீர்திருத்தவாதியாய்க்
கெண்டை மீன்கள்''[43]

என்றி பாடுகிறார்.

ஓர் இயற்கைக் காட்சியின் உவமையில்கூடப் போராட்ட உணர்வை வெளிப்படுத்துகிறார் கவிஞர். அதே போல் கவிஞர் சூர்யகாந்தன்,

''உன் கண்களில்
கண்ணீரைக் கண்டதும்
என் கைகள்தான்
முந்திக் கொள்கின்றன......
ஒரு இலட்சிய பூமியில்
மக்களில்
எவருக்குத் துன்பமென்றாலும்
துடைத்துவிட
எல்லாக் கைகளும்
ஒன்றாய் முந்துவது பேரல''[44]

எனும்போது, ஒரு இலட்சிய பூமி காதலை மதிக்கும், பெண்மையை மதிக்கும், மனிதாபிமானத்தைக் கொண்டிருக்கும் என்பதை இவ்வுவமையின் வாயிலாக உணர்த்துகிறார் கவிஞர்.

''கண்ணுக்கெட்டிய வரை பச்சை சிரிக்கிறது
ஆனாலும் என் பார்வையோ
மாச முடிவில்

43. பஞ்சு, ஒட்டுப்புல், 'அந்த ஓடை அருகே'
44. சூர்யகாந்தன், சிவப்பு நிலா, ப. 14

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



பலசரக்குக் கடையின் முன் நிற்கும்
பாட்டாளித் தோழனின் இதயம்போல்
பாழ்பட்டுக் கிடக்கின்றதே''[45]

என்கிறார் கவிஞர் பொன்னீலன். மனிதனின் சூழ்நிலையைப் பொறுத்துத்தான் மனநிலையும் அமைகிறது. மன நிலையைப் பொறுத்துத்தான் சுவையுணர்வும் வருகிறது. பற்றாக்குறையில் வறுமையில், அடுத்த வேளைக் கஞ்சிக் கவலையில் உழலும் மனிதனின் ஏக்கமும் துக்கமும் உவமையில் நன்கு சித்திரிக்கப்படுகின்றன.

கவிஞர்கள் தேச, சர்வதேசச் செய்திகளோடு தொடர்பு படுத்தியும், உவமை கூறியுள்ளனர். 'எங்கள் தளபதி என்.வி.' என்ற தலைப்பில் அமைந்த கவிதையில் கவிஞர் சுப்பையன்,

''அமெரிக்க ஏகாதிபத்திய வெளியுறவு இலாகாவாய்
செயல்புரியும் சி ஐ.ஏ. தீவட்டிப் படை அன்று
கியூபாவின் தளபதி செ-குவேராவைக் கொலை செய்து
மனித மாம்சத்தில் வக்கிர ருசி கண்டது போல்
.. ...................................
அந்த
உழுபடை தளபதியை உயிரோடு விழுங்கி விட்டார்''[46]

என செகுவேராவின் கொலையோடு என்.வி.யின் கொலையையும் ஒப்பு நோக்கும் கவிஞரின் உவமையில் இயக்கப் பார்வையும், சர்வதேசியப் பார்வையும் விளங்குகிறது.

இன்னும் சில கவிஞர்களின் சில உவமைகள், வித்தியாசமாக இருக்கின்றனவேயன்றிச் சிறப்பாக இல்லை.

''தனியறைக் குளியலில்
சுய
தரிசனத்திற்கு மட்டுமே
உரியதாகிற ஒரு

45. பொன்னீலன், பொன்னீலன் கவிதைகள். ப. 38
46. சுப்பையன், ஏ தெ, அறைகூவல், ப. 69

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



விதவைச் சகோதரியின்
நிர்வாணம் போல''[47]

என்று சிலரது கவிதைகளில் புதைந்திருக்கும் இருண்மையைச் சுட்டிக்காட்டி யாருக்கும் உதவாமற் போவதை உவமிக்கிறார் கவிஞர் அறிவுமதி. எந்தவகை நன்மையும் பயக்காத வகையி- னாலும் அழகோ, அறிவார்த்தமோ, சிறப்போ, இல்லாத வகை- யினாலும் ஒரு மோசமான உவமை என்றே இதனைக் கூறலாம். இதே போல் கவிஞர் நாரணோ ஜெயராமனின்,

''வெளிறி மரித்த பிணக்குவியலென
சோற்றுப் பருக்கைகள்''[48]

என்ற உவமையிலும், பொருத்தம் சிறப்பாக இருப்பினும், ஒரு குரூரமும் கொடுமையும் தான் மேலிடுகின்றன.

## பிரகடன வெளிப்பாடு

புதுக்கவிதைகளின் தோற்ற வளர்ச்சிச் சூழலோடு நோக்- கும் போது அதன் வெளிப்பாட்டு முறைகளில் பிரகடன மொழி- யும் ஒன்றாக அமைவது தவிர்க்க இயலாததாகும். இலக்கியம் என்பது மக்கள் சார்ந்த குரலாக உருவாகும் காலத்தில், பிர- கடன மொழி இலக்கியத்தில் பரவியிருப்பது இயல்பு. இன்றைய புதுக்கவிதைகள் பிரச்சாரச் சாதனங்களாகவும் பிரகடன சாத- னங்களாகவும் உள்ளன. இன்றைய கால இலக்கியங்கள், இன்- றைய மனிதனோடு, மனிதப் பிரச்சினைகளோடு, மக்கள் இயக்- கங்களோடு தொடர்பு கொண்டுள்ளன. மக்களுக்கு உணர்த்த விரும்பும் கருத்துக்களை, மக்களைச் செலுத்த வேண்டிய திசை- களை, உணர்த்துவதற்குரிய கருவியாகக் கவிதைகள் பயன்படுத்- தப்பட்டுள்ளன. கவிஞன் என்பவன் வேறுபட்ட, தனித்துவம் வாய்ந்த, தனிமையில் தன்னோடு கற்பனை வானில் நீந்துகின்ற ஒரு கற்பனை உலகை உருவாக்குகின்ற, வாசகனை ஒரு தனி உலகிற்கு அழைத்துச்சென்று இன்பம் நல்குகின்ற ஒருவன் என்ற இலக்கணம் இன்று ஒத்துக் கொள்ளப்படுவதில்லை. 'கவிஞன்

47. அறிவுமதி, நிரந்தர மனிதர்கள், ப. 80
48. தேவதேவன், மின்னற் பொழுதே தூரம், ப. 20

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



பிறக்கின்றான்' என்ற கருத்துக் கூட இன்று பல கவிஞர்களா லேயே ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

ஏனென்றால், கவிஞனும் மிகச் சாதாரண மனிதனாக வாழ்க்கையில் பல பிரச்சினைகளில் உழலும் ஒருவனாக, தொழிலாளியாக, அலுவலகப் பணியாளனாக ஆசிரியனாக, மாணவனாக வேலை தேடும் வட்டத்தைச் சேர்ந்தவனாக —இங்ஙனம் அன்றாடப் பொதுமக்களில் ஒருவனாக இருக்கிறான். அவனும் ஒரு கட்சியைச் சார்ந்தவனாக, ஓர் இயக்கத்தைச் சார்ந்தவனாக, ஒரு தத்துவச் சார்பு உள்ளவனாக அல்லது இவற்றை எல்லாம் வெறுப்பவனாக, விமர்சிப்பவனாக —இங்ஙனம் அன்றாட நிகழ்ச்சிகளில் எதிர்வரும் ஒருவனாக இருக்கின்றான். அதனால் தான் இன்றைய கவிதைகளில் இதைத்தான் பாடவேண்டும். இப்படித் தான் பாடவேண்டும் என்ற எண்ண வரையறைகள் மீறப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. உள்ளடக்கம் உருவம் இரண்டிலும் பழைய இலக்கிய மரபுகளைத் தாண்டி வந்துள்ளன இக்கவிதைகள்.

கவிதைகளில் பிரகடன மொழி என்பது பாரதி பாரதிதாசனிடமும் காண முடிந்திருக்கிறது.

> "தனியொருவனுக் குணவில்லை யெனில்
> சகத்தினை அழித்திடுவோம்"[49]
>
> "புதியதோர் உலகம் செய்வோம் — கெட்ட
> போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்"[50]

போன்ற கோஷ மொழிகளை இவ்விரு கவிஞர்களும் பயன்படுத்தியுள்ளனர். இருபதாம் நூற்றாண்டின் முன்பகுதிக் கவிஞர்களில் இவ்விருவரும் இணையற்றவர்களாகத் திகழ்வதற்கு இவர்களின் இத்தகைய ஆவேசங்களும் ஒரு காரணமாகும். முற்கால நீதி நூல்களும் ஒரு வகையில் பிரச்சார மொழி கொண்டு இருந்தன. எனினும், இவற்றின் உள்ளடக்கமும் சொல் முறையும்

---

49. பாரதியார், பாரதியார் கவிதைகள், 'பாரத சமுதாயம்'
50. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



முற்றிலும் வேறுபட்டதாகும். அவையும் ஒரு வகையில் சமூகச் சிந்தனையோடு எழுதப்பட்டனவே. ஆனால், அவை அன்றைய சூழலுக்கு ஏற்ற கருத்துக்களை, அன்றைய சிந்தனை முறையைப் பறை சாற்றும் வகையில் இருந்தன. இன்றைய கவிதைகள் இன்றைய சமகாலப் பிரச்சினைகளை அலசுவதோடு அவற்றின் அடிவேரைத் தோண்டும் ஆவேசத்தையும் வெளிப்படுத்துகின்றன. ஒரு சிந்தனை வெம்மையை இக்கவிதைகள் தாங்கி வருவதோடு, ஒரு சமுதாய மாற்றச் செயல்பாட்டிற்கு அழைப்பு விடுவதாகவும் எழுச்சியூட்டுவதாகவும் இவை அமைந்துள்ளன.

"கவிஞனின் பணி கவிதை மட்டுமா — ஒரு போராட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தவும் வேண்டும்"[51] என்ற ஹோ-சி-மின் கருத்தை இப்பிரகடன மொழியால் இக்கவிஞர்கள் தெளிவுபடுத்துகின்றனர். போராட்ட அழைப்பு விடுக்கின்றனர்.

"சிவிகையேறிய காவியராணியைத்
தெருப்புழுதிக் கிழுத்திடுவோம்
கவிதை ராட்சச வாள்களினால் நிகழ்
கால முக்காடு கிழித்திடுவோம்
மானுட வேள்விக்குச் சிவப்பு ரத்தங்கள்
வார்க்கும் நெருப்புப் பறவைகள் நாம்
வானிடம் சொர்க்கமில்லாத தனால் அதை
வாழ்கிற மண்ணின் சமைப்பவர் நாம்"[52]

(தேனரசன்)

"தீப ஆராதனைகளைப்
பாடியது போதும்
குடிசைக் குழந்தைகளின்
கோப ஆராதனைகளைப் பாடு"[53]

(கோகிலா தங்கசாமி)

51. ஹோ-சி-மின் கருத்து. ஆளுமை நூல்: கோகிலா தங்கசாமியின் 'நீந்தத் தெரியாத மீன்கள்', ப. 24
52. தேனரசன், வெள்ளை ரோஜா, ப. 42
53. கோகிலா தங்கசாமி, நீந்தத் தெரியாத மீன்கள், ப. 11

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



"தேம்புகிற பாடல்களைத்
தீயிட்டுப் பொசுக்குங்கள்
தீப்பந்தம் துப்பாக்கித்
தோட்டவாய்ப் பாடுங்கள்"[54] (பரிணாமன்)

"மக்களை நேசித்தல் ராஜதுரோகமாம்
மறுமுறை மறுமுறை துரோகம் செய்வோம்"[55]
(இளவேனில்)

இங்ஙனம் கவிதை என்பதே இந்த எழுச்சிக்காகத்தான் என்பதைக் கவிஞர்கள் பலரும் கவிதைகளிலும் தமது முன்னுரைகளிலும் தெளிவாகக் கூறுகின்றனர்.

"வியர்வையும் கவிதையும் உடல் உழைப்பு (Physical Labour) பிரசவித்த இரட்டைக் குழந்தைகள். வியர்வைக்கான நியாயங்கள் மறுக்கப்படுகிறபோது அதனால்தான் கவிதைகள் கோபங் கொண்டாடுகின்றன. அது இயல்பான விஷயந்தான்"[56] என்று ஒரு கவிஞர் தமது முன்னுரையில் உரைக்கின்ற அளவிற்குக் கவிதையின் தோற்றக் காரணம் பற்றிய கண்ணோட்டம் மாறுபட்டுள்ளது இந்த மாறுதலால், பிரச்சாரமும் பிரகடனமும் இயல்பாகத் தோன்றும் சூழலும் உருவாகிவிட்டது என்பதை மறுக்க முடியாது.

பிரச்சினைகளைப் பிரச்சினைகளாகச் சித்தரிப்பதோடு மட்டுமல்லாமல் அதை ஒழிக்கக் குரல் கொடுக்கும்போது தான் கவிதை பிரகடன ஒலி பெறுகிறது. ஒழிக்க வேண்டும் என்ற ஆவேசத்தில் எழுகின்ற கவிஞனுக்கு இந்தப் பிரகடன முறை தவிர்க்க முடியாதது ஆகும்

'காலமெனும் பெருவெளியில்
காற்றைப் போல்
நீரைப் போல்

---

54 பரிணாமன், ஆகஸ்டும் அக்டோபரும், ப. 75
55. இளவேனில், இளவேனில் கவிதைகள், ப. 51
56. அறிவுமதி, நிரந்தர மனிதர்கள், முன்னுரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



சோறிடுவோம்
எங்கள் சபதம் இது
ஏழைகளின் அடுப்பெரிப்போம்
இல்லையெனில் சூரியனில்
தீக்குளிப்போர்ய்''[57]

என்பது தொடக்க கால சோசலிசக் கவிஞரான நா. காமராசனின் உறுதிமொழி. வறுமை ஒழிப்புப் பற்றிய ஆவேச உணர்ச்சிக் கொந்தளிப்பு இது.

"படைப்புத் தொழில் செய்யும்
பாட்டாளி வர்க்கமே
உனது லட்சியம் உன்னதமானது.
ஆயிரம் இயந்திரங்களை இயக்கும் உன்கைகள்
அரசியல் இயத்திரத்தை இயக்கும் ஓசைதான்
பூமிக்கு நீதரும்
பூபாள ராகம்
எழுக! சூரியனே! எழுக! உன்னைப்
பிணிக்கும் மேகச் சங்கிலிகளைத் தவிர
இழப்பதற்கு உனக்கு என்ன இருக்கிறது?''[58]

என்று பாட்டாளிகளுக்குக் குரல் கொடுக்கிறார் கவிஞர் இன்குலாப். இந்தத் தத்துவப் பிரகடனங்களை விட்டு வேறு பொருளில் கவிதையாக்கும் சிந்தையே அற்ற கவிஞர் இவர்.

போர்க்காலக் கட்டளை முழக்கமே இவர் கவிதைகளின் தனித்தன்மையாக விளங்குகிறது.

"பாறையை
ஊற்றுத் தண்ணீர்
பிளக்கும்
மரத்தில்
நெருப்பு விழிக்கும்

57. காமராசன், நா., காமராசன் கவிதைகள், ப. 164
58. இன்குலாப், வெள்ளை இருட்டு, ப. 84

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



எல்லாம் போராடும்
நீயும் போராடு''[59]

என்று இன்குலாப் நேரடி அழைப்பு விடுக்கிறார். ஏன் போராட வேண்டும் என்ற காரணங்களையும் தெளிவுபடுத்துகிறார் மனிதர்களின், மக்களின் வாழ்க்கையே களவாடப்படும் அவலத்தை உணர்ந்து உரைக்கும் இவர் சுரண்டலை ஒழிக்கும் உன்னதப் பணிக்குரிய அறைகூவல் விடுக்கிறார். இவரைப் போலவே இத்தகைய கனல் தெறிக்கும் போராட்ட முழக்கம் விடுக்கும் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் கவிஞர் தணிகைச்செல்வன், மணியரசன். பரிணாமன், ஏ. தெ. சுப்பையன், பொன்னீலன், பொன்மணி, குத்தாலம், ஜீவபாரதி, இளவேனில் முதலியோராவர். இவர்களுக்குப் பின் கந்தர்வன், மேலூர் மாவேந்தன். அறிவுமதி, சக்திக்கனல் போன்றோர் பலரிடமும் இம்முழக்கத்தின் சாயலைக் கேட்க முடிகின்றது. இத்தகைய பிரகடனக் குரல் தரும் பலரும் பொதுவாக மார்க்சியவாதிகள் என்று தம்மைத் தாமே இனங்காட்டிக் கொள்வதில் பெருமை கொள்பவராகவும், மார்க்சியக் கட்சிச் சார்பு உடையவர்களாகவும், அக்கட்சித் தொடர்புடைய இலக்கிய இயக்கங்களில் பணிபுரிகின்றவர்களாகவும் உள்ளனர் என அறியமுடிகின்றது.

''அழுகிக் குளுகுளுக்கும்
அசிங்கச் சமூகத்தைப்
புதிதாக்க வந்த என்
புரட்சித் தோழனே
... ... ... .. ...
திசைகள் நான்கல்ல
திசைகள் இரண்டுதான்
சோசலிச திசை ஒன்று
சுரண்டல் திசை ஒன்று
இருப்பவன் தலைக்கு
நெருப்பாகவா

59. இன்குலாப், கிழக்கும் பின் தொடரும், ப.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இல்லாதான் காலுக்குச்
செருப்பாக வா ........
இன்றே வா .......
இப்போதே வா''[60]

என்று கவிஞர் கந்தர்வனும் பாட்டாளிகளை ஒன்றுசேர அழைக்கிறார்.

''சமாதானத்தைச்
சமாதானமாய்ச்
சமைப்போம்
இன்றேல்
போரைப்
போரால்
பொசுக்குவோம்''[61]

என்று சர்வதேசப் பிரகடனம் செய்கிறார் கவிஞர் மேலூர் மாவேந்தன்.

இங்ஙனம் கவிஞர்கள் பலரும் புரட்சிக்கும் போராட்டத்திற்கும் முழக்கமிடும் குரல்களைப் புதுக்கவிதைகளில் மிகுதியாகக் காண முடிகிறது. இத்தகைய பிரகடன ஒலிப்பினால் கவிதைகளில் கவித்துவப் குறைந்துவிடுவதாகக் கருதுகின்றனர் சிலர். முழக்கக் கவிதைக்கு எதிரானவர்கள் மட்டுமில்லாமல், வரவேற்போரும் அதில் குறை காண்கின்றனர்.

உள்ளடக்கத்தில் நிறைவு கொண்டுள்ள இத்தகைய கவிதைகள் அழகியல் துறையில் இன்னும் வெகுதூரம் முன்னேற வேண்டியுள்ளது என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது''[62] என்று வி.பி. சிந்தன் கவிஞர் மணியரசனின் கவிதைகள் பற்றி ஒரு குறிப்பினைத் தருகிறார். இக்குறிப்பில் உள்ளபடி மிகச் சிறந்த கவிஞர்கள் கூடச் சிற்சில கவிதைகளில் இப்பிரகடன

60. கந்தர்வன், மீசைகள், ப. 116
61. மேலூர் மாவேந்தன், சின்ன விடுதலை, ப. 18
62. சிந்தன், வி.பி., கருத்து - முன்னுரை, ஆளுமை நூல் : மணியரசன், மனிதனைப் பாடுவேன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



மொழியால், வெறும் விளக்கம் போலவும், வார்த்தைச் சேர்க்கை போலவும் கவிதை வரிகளை எழுதி விடுகின்றனர்.

"தோழர்களே
பூமி முழுவதையும் உரிமையாக்கிக் கொள்வோம்
உழைக்கும் உரிமையைப் போராடிப் பெறுவோம்
தலைவிதியைச் சாசுவதப்படுத்துவோம்"[63]

என்று கவிஞர் பொன்னீலனும்,

8383

"கடல் நீரை
மேகங்கள் முகந்து சென்று
உலகத்திற்கு வழங்குகிறது.
மூலதனத்தை
தொழிலாளியும் கையிலெடுத்து
உலகத்திற்கு வழங்குமா"[64]

என்று கவிஞர் கனலும் எழுதிய வரிகளில் தத்துவ விளக்கம மட்டுமே தெரிகிறது. எனினும், இதனால் பிரகடனக் கவிதைகள் சிறக்கவில்லை என்ற முடிவிற்கு வர இயலாது. சரோஜ்தத் என்னும் மேற்கு வங்கக் கவிஞர், "கவிதை முழக்கமாக மாறிக் கொண்டிருக்கிறதே என்று நீங்கள் சோகமடைகின்றீர்கள். நானோ கவிதை முழக்கமாக மாறத் தவறிக் கொண்டிருக்கிறதே என வாட்டம் கொள்கிறேன்"[65] என்று கூறுகிறார். இந்தக் கூற்றிலே உள்ள சாரமானது உண்மையான சமுதாய மாற்றத்திற்கும் பொதுவுடைமைக்கும் அவல ஒழிப்பிற்கும் குரல் கொடுக்க விரும்பும் கவிஞன் நேரடியாக, அதே உணர்வோடு எழுதும்போது அது முழக்கமாகவே அழகாக இருக்கும். அது அலங்கரிக்கப்படாமலேயே அதில் கவித்துவம் இருக்கும். என்பதாகும் கவிதை என்பது ஒரு சிருஷ்டி. அது உள்ளுணர்விலிருந்து, உணர்வு சார்ந்த நல்லறிவிலிருந்து தோன்றும்போது அது அழகாக இல்லாமல் இருக்க முடியாது.

63. பொன்னீலன், பொன்னீலன் கவிதைகள், ப. 22
64. கனல், கீழைக்காற்று, ப. 52
65. சேரன், இரண்டாவது சூரிய உதயம், முன்னுரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



சரோஜ்தத் கருத்துப்படி, சித்தாந்தங்களில், சமூக மாற்றங்களில் வாசகனுக்கு உள்ள ஈடுபாடும் கவிதைகளைப் பற்றிய கணிப்பை நிர்ணயிக்கிறது. நல்ல கவிஞன் நல்ல கவிதைகளைச் சிறந்த முழக்க வடிவத்திலும், பிரகடன மொழியிலும் வழங்க முடிகிறது. ஆனால், நீண்ட கவிதைகளில் சிற்சில இடங்களில் அலுப்புத் தட்டுதல் தவிர்க்க இயலாததாயிருக்கிறது என்பதையும் மறுக்க முடியாது.

இதன் வாயிலாகப் பொதுவாகப் புரிந்து கொள்ளத்தகுந்த முடிவு இதுவேயாகும். மக்களுக்குப் புரியும் மொழியில் மக்கள் இடையே போய்ச் சேர வேண்டிய கருத்தை, மக்களுக்காகப் பாடவேண்டும் என்று எண்ணும் கவிஞர் கூட்டம் மிகுந்து வருகிறது. உரத்துக் கூவுதல்தான் தமது விருப்பமும் பணியும் என்று எண்ணுகின்றனர் இவர்கள். கவிதையை ஒரு ஞானமாகவும் இன்பமாகவும இல்லாமல் ஒரு தொழிலாகச் செயலாற்றுபவர்கள் இவர்கள். 'எமக்குத் தொழில் கவிதை' என்றுரைத்த பாரதியின் உள்நோக்கம் இவர்களுக்கு இருக்கிறது. இமைப்பொழுதும் சோராதிருந்து நாட்டிற்கு உழைக்கும் பணிக்குப் பயன்படும் ஒரு தொழிற் கருவியாகக் கவிதையைப் பயன்படுத்தும் நோக்கம் மிகுந்துள்ளது. இதனாலேயே உள்ளடங்கிப் பேசும் கவிதைகள் ஒரு புறம் இருக்க, உரக்கப் பேசும் கவிதைகள் ஒரு புறம் வளர்கின்றன.

இத்தகைய உரத்த குரல்கள் பெரும்பாலும் மார்க்சீய இயக்கக் குரல்களாக உள்ளன எனவும் அறிய முடிகிறது.

"மகத்தான இலக்கியம் என்பது எந்த நாட்டிலும், எந்தக் காலத்திலும் தனது காலத்திய சமுதாய வளர்ச்சியைத் தடை செய்த கூட்டத்தின் மீது மனச்சாட்சியோடு தொடுக்கப்பட்ட மாபெரும் கண்டன இலக்கியமாக உள்ளது"[66] என்ற நவபாரதியின் கூற்றுப்படி நோக்கின், இன்றைய கவிதைகளில் இத்தகைய கண்டனக் கவிதைகள் நிறைய உள்ளன. அவை அதனாலேயே மகத்தானவையாகவும் உள்ளன. 'மனச்சாட்சியோடு தொடுக்கப்பட்ட' என்ற சொற்களில் உள்ள உண்மை, கவிஞனின் ஆத்ம

66. நவபாரதி - கருத்து, அணிந்துரை, ஆளுமை நூல்: ஆகஸ்டும் அக்டோபரும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



வெளிப்பாடான கவிதைகளில் தெரிந்துவிடுகிறது. எதனாலும் விலைக்கு வாங்க முடியாத கவிஞர்களையும், கவிதையே இனம் பிரித்துக்காட்டி விடுகிறது.

"கட்சித் தலைவர்களின் திறனாய்வு என்னும் சாட்டையடிக்கு அஞ்சி அவர்கள் காட்டிய பாதை கல்லானாலும் முள்ளானாலும் அவ்வழியில் ஓட வேண்டிய கடிவாளம் பூட்டிய குதிரைகளாக அரசியல் நோக்கக் கவிஞர்கள் விளங்குகிறார்கள். அவர்கள் சொந்தமாகச் சிந்திக்க வேண்டிய தேவையுமில்லை கட்சித் தீர்மானங்களை உரக்க ஒலிக்கும் ஒலிபெருக்கிகளாக மட்டுமே அவர்கள் செயல்பட முடியும்"[67] என்று டாக்டர். சி.இ. மறைமலை தன் நூலில் குறிப்பிடுவதில், உண்மையின் அளவிற்கு மேல், வீண் குற்றச்சாட்டு தெரிகிறது. கட்சி சார்ந்து இயக்கஞ் சார்ந்து, கட்சியின் அங்கம் ஆனவன், கட்சிக் குரலில் பேசுதல் இயல்பே ஆகும். அவன் தனது கருத்துக்களாகிய கட்சிச் சார்புக் கருத்துக்களைத் தனது இலக்கிய மொழியில் உரைக்கின்றான். தனது கருத்துக்களை, ஒரு தெளிவு என்றும் காலத்தின் தேவை என்றும், அவன் சுர்வமாகவே இருக்கின்றான். இது இக்கால மாற்றத்தின், அரசியல் சார்ந்த சமூக அமைப்பின் ஒரு பிரதிபலிப்பு ஆகும். இது தமிழில் மட்டுமின்றி உலக இலக்கியங்களிலும் பிரதிபலிக்கின்றது. இந்தப் பிரகடன மொழி நடைதான் கவிதை வரிகளின் உணர்ச்சியை விரைவாகச் செயலாக்கத் தூண்டும் என்பது உறுதி.

## புதுமைகள்

மேற்குறிப்பிட்ட ஒன்பது வகை வெளிப்பாட்டு முறைகள் ஓரளவு இனம் பிரிக்கத்தக்கவை ஆகும். எனினும் புதுக்கவிதையில் பரவலாகவும் பொதுவாகவும் உள்ள தன்மைகள் சில, புதுக்கவிதைக்கே உரிய புதுமைகளாக உள்ளன. புதுக்கவிதையில் தான் இவ்வாறு சொல்ல முடியும் என்ற எண்ணத்தைக் கொடுக்கின்ற புதுமைகளாகவும் உள்ளன. அத்தன்மைகள் அனைத்தையும் ஒரு வகையான வெளிப்பாட்டு முறையாகக் கொள்ளலாம்.

---

67. மறைமலை, சி.இ., புதுக்கவிதையின் தேக்க நிலை, ப. 160

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



**படிமமும் குறியீடுகளும்:**

இதில் புதுமையான சொற்படிமங்களும் குறியீடுகளும், முதலாவதாகக் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

''பிள்ளைகள் கூடி
ஒரு தாயைப் பெற்ற நாள்''[68]

என்று சுதந்திர நாளையும்,

''வியர்வைப் பூ அர்ச்சிப்பாய்
வேண்டுகின்ற வரம் கிடைக்கும்''[69]

என்று உழைப்பையும் கவிஞர் அப்துல் ரகுமான் புதிய சொற்படிமத்தோடு உரைக்கின்றார்.

''கடல்நீரில் மூழ்கிவிட்ட செம்மீனே
உறுப்பெல்லாம் கனி சுமந்த
ஊர்வலமே கண்ணீரின் உற்சவமே''[70]

என்று 'கறுத்தம்மா' வையும்,

''நான் மௌன ஊர்வலம்
நாக்கின் மயான பூமி''[71]

என்று ஊமையையும் பாடும்போது கவிஞர் நா. காமராசனும் இப்படிமங்களைப் பயன்படுத்துகிறார்.

''தோகை அரியப்பட்ட
இந்தக்
கட்டாய மயில்
நெருப்பு வண்டுகள் மொய்க்கும்
மதுப்பூ''[72]

---

68. அப்துல் ரகுமான், நேயர் விருப்பம், ப. 54
69. மேலது - ப. 42
70. காமராசன், நா., காமராசன் கவிதைகள், ப. 97
71. மேலது, ப. 129
72. நீலமணி, பனி படர்ந்த எரிமலைகள், ப. 78

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்று கட்டாய மயில்'களான விலைமகளிரைக் கவிஞர் நீலமணி யும் அழகிய படிமங்களோடு கூறுகிறார்.

புதுக்கவிதைகளின் தொடக்க காலத்தில் இப்படிமங்கள் புத்துணர்ச்சியூட்டும் வகையில் அமைந்து கவிதைக்கு நல்ல வரவேற்பை நல்கின. ஆனால் காலப்போக்கில் இவை சுற்றி வளைத்துச் சொல்லப்படும் சுமையாகத் தோன்றத் தொடங்கி உள்ளன. படிமம் போலவே குறியீடும் ஒரு வகையில் நேரடி-யாகக் கூறாத தன்மையைக் கொண்டதாகும். படிமம் என்பதை Imagery என்றும், குறியீடு என்பதை Symbolism என்றும் குறிப்-பிடுவர்.

இவையிரண்டும் ஒரு வகையில் உவமையும் உருவகமும் சேர்ந்த அழகிய வெளிப்பாட்டு முறைகள் எனலாம். அழகாகக் கூறவேண்டும் என்ற நோக்கில் வடிவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் உத்திகள் இவை எனலாம்.

"விண்வெளிக் கப்பலில்
வெகு தூரம் சென்றேன்
காலை வலித்தது
ஓய்வு எடுக்க வேண்டிக்
கிராமத்தில்
என் வீட்டுக்கு வரப்பார்த்தால்
அடையாளம் தெரியவில்லை"[73]

என்கிறார் கவிஞர் தி. சோ. வேணுகோபால். நாகரிக வளர்ச்சி-யால், அறிவியல் வளர்ச்சியால் சொந்த பந்தமெல்லாம், மண்ணின் சாராம்சமெல்லாம் மறக்கப்படும் சூழல் உருவாகி விடுவதைக் கவிஞர் இங்கு உணர்த்துகிறார்.

"பிணம் தின்று கொழுத்த
எலியொன்று செத்தது
ஓநாய்கள்
வறண்ட கண்களைக் கசக்கி
இரண்டு கைகளால் துடைத்தன

73. வேணுகோபாலன், தி. சோ., 'மீட்சி விண்ணப்பம்-நாகரிகம்'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



பத்திரிகை அதிபர்கள்
பக்கங்களில் பத்திகள் ரொப்பி
நாடெல்லாம் நாற்றம் பரப்பினர்''[74]

என்று கவிஞர் காசியபனும் 'தலைவர் மரணம்' என்ற தலைப்பில் பாடுகிறார்.

"நாள் அறியா
என் வீட்டு மேற்கூரை இடுக்குகளை
மழைக்கால மின்னல்
வெளிச்சம் போட்டுக் காட்டும்''[75]

எனும்போது கவிஞர் நாரணோ ஜெயராமன் மற்றவர் பழித்தலில் நம் குறை நமக்குத் தெரிய வரும் தன்மையும் இருப்பதை உணர்த்துகிறார். 'பழித்தல்' என்ற தலைப்பு கவிதைப் பொருளை விளங்க வைக்கிறது.

இத்தகைய குறியீடுகளில் கவிஞர்கள் பொதுவான கருத்துக்கள் பற்றிப் பாடுகின்றனர். அதிலும் நேரிடையாகக் கருத்துத் தெரிவிக்காமல், மற்றொன்றைக் கூறி அதன் வாயிலாகப் பொருள் உணர்த்துவதால் தலைப்பைக் கொண்டுதான் கருத்துத் தெளிவு காண வேண்டியுள்ளது ... அதுவும் இயலாதபோது, சில கவிதைகளில் பொருள் புரிவது இல்லை. அதனால் ஒரு வகையில் அழகாகவும் மறைமுகமாகவும் உள்ள இத்தகைய கவிதைகளில் சில இருண்மை (obscurity) உடையனவாகவும் உள்ளன. பசுவய்யா, சி. மணி, தேவதேவன், தி. சோ. வேணுகோபாலன், நாரணோ செயராமன், காசியபன், கலாப்ரியா, அபி ஆகியோரின் கவிதைகளில் இத்தன்மை மிகுதியாகத் தெரிகின்றது.

கவிஞன் தன் புரிதலின்றிக் கவிதை எழுத முடியாது. அவனது கற்பனைத் தொடர்ச்சியை அவன் அப்படியே அவனது நினைவு மொழியில் வெளிப்படுத்தும் போது அது எல்லாருக்கும் புரிகின்ற மொழியில் அமையாமற் போவதுண்டு. துண்டு துண்டான நினைவுச் சிதறல்களும் அதில் உள்ளன. அதனாலும் சில கவிதை-

74. காசியபன், பேசாத மரங்கள், ப. 11
75. நாரணோ ஜெயராமன், வேலி மீறிய கிளை — 'பழித்தல்'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



கள் புரிவதில்லை. அத்துடன் சில சொற்களில் பொதிந்துள்ள சில உள்ளர்த்தங்களைக் கவிஞன் தன் மனத்திற்கொண்டு பாடும் பொழுது, அச்சொற்பொருள் எல்லா வாசகர்களுக்கும் புரிவ-தில்லை. அத்தகைய கவிதை வட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் வாசகர் வட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் மட்டுமே விளங்கு-கிறது. அதனால் வட்டார வழக்குப் போல் வட்டாரக் கவிதை-யாக இருக்கிறது. இதனால் கவிதை வாசகர்களில் இருபிரிவின-ராகக் கிளைத்துள்ளனர் எனலாம். 'எழுத்து' வில் வெளிவந்த பல கவிதைகள் இத்தகைய இருண்மை பெற்றிருந்தன. ஆனால் அதில் உள்ள புதுச்சொல்லாக்கமும், புதிய வெளிப்பாட்டு முறை அழகும் வாசகர்களில் ஒரு பகுதியினரைக் கவர்ந்து, புதுக்-கவிதையை நிலைநிறுத்தியது. எனினும், யாப்பில் அடைய முடியாத கருத்து எல்லைகளை அடைவதற்கு இத்தகைய கவிதைகள் பயன்பட முடியாது.

"துறைவாரியாகப் பிரிக்கப்படாத உணர்வின் மூலம் உட்கொள்ளப்படவென பிரசன்னமாவதே வாழ்வு என்ற அனுபவம். இந்த போதம் சித்திக்கப் பெறாதவன் கவிஞனாக முடியாது"[76] என்று தேவதேவனைப் பாராட்டும் பொழுது கவிஞர் நாரணோ செயராமன் கூறுகிறார். கவிதைக்குரிய பொருள் இன்னதெனக் கவிஞர் தனித்தனியாகப் பிரித்துப் பார்க்க முடியாது என்பது உண்மை. ஆனால், பிரச்சினைவாரியாகப் பிரித்துப் பாடவில்லை-யென்றாலும், விளங்குதற்குரிய முறையில் எதனையும் பாடலாம். கவிஞர் கல்யாண்ஜி, வண்ணநிலவன், விச்வநாதன் இவர்தம் கவிதைகளில் நேரிடையான அணுகுமுறை இல்லை. தீர்ப்புக் கூறும் நோக்கமோ தத்துவச் சார்போ, கட்சிச் சார்போ கொண்டவை அல்ல இவை. ஆனால் கருத்துப் பகிர்வில் இவர்-களின் கவிதைகள் புரிதல் உடையனவாக உள்ளன. அப்படியும் அமையாத போது தான் 'இருண்மை' தெரிகிறது.

புதுக்கவிதைகளில் இருண்மை உண்டு என்பதைக் கவிஞர்களில் பெரும்பான்மையோர் ஏற்றுக் கொள்கின்றனர். பிரச்சினையை சித்திரிப்பிற்கோ அவற்றைக் களையும்

76. தேவதேவன், மின்னற்பொழுதே தூரம், முன்னுரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



சமுதாய மேம்பாட்டுச் சிந்தனைக்கோ இத்தகைய இருண்மைக் கவிதைகள் அதிகம் உதவுவதில்லை என்பது தெளிவு. இத்தகைய கவிதைகள் ஆழம் மிக்கவை என்று பறைசாற்றுபவர்களும் உண்டு. தமிழவன் தனது 'புதுகவிதைகள் நாலுகட்டுரைகள்' என்னும் நூலில் வானம்பாடிக் கவிஞர்களான நா. காமராசன், மு. மேத்தா, இன்குலாப், மீரா போன்றோர் யாவரையும் அனுபவமற்ற வார்த்தைகள், வார்த்தை ஜாலங்கள், உண்மையும் சமத்காரமும் தனித்தனியாக நின்று பல்லிளிக்கும் வெளிப்பாடுகள் உடையவர்கள் என்று விமர்சிக்கின்றார். அதே பொழுதில் வைத்தீஸ்வரன், ஞானக்கூத்தன், தேவதேவன், சி. மணி, வண்ணநிலவன், கலாப்ரியா, இவர்களின் கவித்துவத்தைப் புகழ்ந்துரைக்கின்றார். இவர் குறிப்பிடுகின்ற அளவிற்கு இத்தகைய 'ஆழமான' கவிதைகளில் அழகும் இல்லை. அவை பெரும்பாலும் எளிதில் புரியவும் இல்லை. அதே போல் தமிழவனின் சாடுதலுக்கு உட்படும் கவிஞர்கள அவர் குறிப்பிடுகின்ற அளவிற்குக் கவித்துவம் அற்றவர்களும் இல்லை. இக்கவிஞர்களின் ஈரணியும் ஒவ்வொரு வகை வெளிப்பாட்டைக் கொண்டு உள்ளது. ஆனால் சமுதாய நோக்கில், நேரடித் தாக்கத்தில் 'இருண்மை' உதவ முடியாது. கவிதையில் அழகியல், கலை நுணுக்கம், போலித்தனம் இன்மை இவை யாவும் சமுதாயப் பயன்பாட்டுக் கருத்து வெளிப்பாட்டிற்குத் துணை நிற்கும் வகையில் அமைதல் வேண்டும். மனிதனின், மக்களின் உளவியல் பாங்கறிந்து கவிஞர்கள் பல்வேறு உத்திகளிலும் உரைக்கலாம். ஆனால், கவிதையில் எளிமையும் புரிதலும் இன்றியமையாதது ஆகும்.

## 10 2. காட்சி சித்திரிப்பு :

புதுக்கவிதைகளின் புதுமையில் இன்றியமையாச் சிறப்பிடம்பெறுவது 'காட்சிச் சித்திரிப்பு' முறையாகும். இந்த வகையில் கவிஞர்கள் பலரும் வெற்றி பெறுகின்றனர் எனலாம். கவிஞர் நாரணோ ஜெயராமனின் 'பேய்த்துயில் என்னும் கவிதையில்.

"நிழலும் ஒளியும்
இயைந்து மினுக்க
வேலி மீறும் கிளை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



யமன் கையில்
... ... ... பாசக்கயிறென
மருட்சியூட்ட - எங்கோ கத்தும்
எருமையும் துணைபோகும்
... ... ... ... ... ...
இருட்டைச் சொல்லி
எனக்குப் பாடம் சொன்ன
பேய்கள்
உறங்குகின்றன போர்வைக்குள்''77

என்னும்போது திண்ணைப் பேச்சுக்காரர்கள் பேய்க்கதை பேசி அச்சத்தை வளர்த்துவிட்டுத் தாம் போர்வைக்குள் பேய்த்துயில் தூங்குவதைச் சித்திரிக்கிறார்.

'தேம்பல்ல' என்ற கவிதையில் கவிஞர் பரிணாமனும்.

''கருவேல மரத்தடியில்
கதறும் பிள்ளைக் குரல்கேட்கும்
கரையில் நிற்கும் பண்ணை மிருகக்
கண்களுக்குப் பயந்துக்கிட்டு
பால் சுரந்த தனமிரண்டைப்
பயிர் வருடத் தலைகுனிந்தே
மகவுதான் உறிஞ்சுதுன்னு
மண்ணுறிஞ்சக் களையெடுக்கும்''78

என பாமர பாரதப் பாட்டாளிப் பெண்ணைச் சித்திரிக்கிறார். ஒரு பண்ணைக் களக் காட்சியையே சித்திரிக்கிறார்.

சொல்லாட்சி :

இந்தப் புதுக்கவிதைகளில் குறிப்பிட்டு உரைக்கும் அளவுக்குச் சில சொல்லாட்சிகள் இடம்பெறுகின்றன. இரத்தம்' தீப்பந்தம், தோட்டா, அக்கினி, ஆயுதம், வேள்வி, சிவப்பு, மகரந்தம், மானுடம், ஜீவிதம் முதலிய சொற்கள் மிகுதியாகப்

77. நாரணோ ஜெயராமன், முந்தையது, 'பேய்த்துயில்'
78. பரிணாமன், ஆகஸ்டும் அக்டோபரும், ப. 75

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் ஆங்கிலச் சொல்லாட்சியும் உண்டு.

> "நடந்தே தீரவேண்டிய வரலாற்று விதியினை
> நடத்திக் காட்டிய முதல் நடைவண்டி
> மேநாள் — எனவே அது must! நாள்"[79]

என்பார் கவிஞர் தணிகைச்செல்வன்.

> "சிலி தந்த கம்யூனிஸ்ட்
> கவி தந்த புருஷன்
> கட்சியின் சென்ட்ரல்
> கமிட்டியின் ஆன்மா"[80]

என்று பாப்லோ நெருடாவைப் பாடுகிறார் கவிஞர் பரிணாமன்.

கவிஞர் பசுவய்யாவும், 'கொள்கை'களைப் பரிகசிக்கும் போக்கில்,

> "மேற்கே ரோமண்டிசம்
> நாச்சுரலிசம்
> ரியலிசம் அப்பால்
> இம்பிரஷனிசம்
> என் மனைவிக்குத்
> தக்காளி ரசம்"[81]

என்று ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துகிறார்.

ஆங்கிலச் சொற்களைப் போலவே சில வன்முறைக் கொடிய சொற்களும் பயன்படுத்தப்படுகின்றன.

> "அக்ரமநாசன் விஷ்ணு
> அபலைகள் நேசன் ஏசு
> மெக்காவின் தூதன் எல்லாம்
> மேல்வர்க்க நலனுக்காக

79. தணிகைச்செல்வன், சமூக சேவகி சேரிக்கு வந்தாள், ப. 11
80. பரிணாமன், முந்தையது, ப. 32
81. பசுவய்யா, நடுநிசிநாட்கள், 'கொள்கை'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



மக்களைக் குதறிப்போடும்
மாளிகைக் காவல்நாய்கள்''[82]

என்று இளவேனிலும்,

''பாட்டாலடித்தேன்
பாதகங்கள் குறையவில்லை
இப்போது
ஜோட்டால் அடிக்கவா
சொல்லுங்கள் ஜெகத்தீரே''[83]

என்று பாரதி கேட்டதாகக் கந்தர்வனும் கேட்கும் இடத்தில் கொடூரமான சில சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

**தலைப்புப் பொருத்தம் :**

இக்கவிதைகளில், குறிப்பிடத்தக்க மற்றொரு பண்பு, கவிதைகளின் தலைப்பு ஆகும். பல கவிதைத் தலைப்புகளில் அழகும், ஆணித்தரக் கொள்கை வெளிப்பாடும் சிறப்பாக அமைந்துள்ளதைக் காண முடிகின்றது. மேத்தாவின் 'தாலாட்டுக் கேட்காத தொட்டில்கள்', பரிணாமன 'வானம் பார்த்த பூமியும் தேசம் பார்க்கும் தோழனும்', தணிகைச்செல்வனின் 'சமூக சேவகி சேரிக்கு வந்தாள்', மேலூர் மாவேந்தனின் 'வண்ணச் சீறடி விண்மகன் அறிந்தனள்', நீலமணியின் 'கட்டாய மயில்கள்', வைரமுத்துவின் 'வித்தியாச அன்னங்கள்' போன்று பல கவிதைகள் பொருத்தமான, சிறப்பான தலைப்புகளைப் பெற்றிருக்கின்றன.

**ஓசை ஒழுக்கு :**

புதுக்கவிதைகள் யாப்புடைத்த கவிதைகள் என்று பெயர் பெற்றாலும் அவற்றில் பெரும்பான்மையான கவிதைகள் ஓர் ஓசை ஒழுக்கு பெற்றுள்ளன. இயல்பான பேச்சுத் தொடர்களில் நாட்டுப்புற இலக்கிய மொழியில், செறிந்த தமிழ் நடையில் என்று எந்த நடையிலும் ஓர் ஓசை ஒழுக்கைக் காண முடிகிறது.

---

82. இளவேனில், இளவேனில் கவிதைகள், ப. 63
83. கந்தர்வன், மீசைகள், ப. 38

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



"வந்தாக போனாக
வாசலுல நின்னாக
வாக்குறுதி மந்திரத்த
வா கிழிய சொன்னாக
வா கிழிய சொல்லிக்கிட்டு
வாக்குக கேட்டாக
வாக்குகள வாங்கிக்கிட்டு
வந்தவழி போனாக
போனவுக காணவியே
போட்டதெல்லாம் பொய்யாச்சே"[84]

எனும்போது, நாட்டுப்புற நடையில், தேர்தல் அரசியலை ஓசை அழகுடன் தருகிறார் கவிஞர் சுந்தரபாண்டியன்.

"குப்பன் தொட்ட
சொம்பில் நீரைக்
குடிக்க மறுத்த
சாஸ்திரிகள் —
ரவிக்கையில்லா
குப்பியை நினைத்து
ராத்திரி பூராத்
தூங்கவில்லை"[85]

இச்கவிதையில் குப்பன் தொட்ட செம்பிலும் நீரிலும் சாதி வேறுபாடு பார்க்கின்றவன், குப்பியைத் தொடுவதற்கு சாதி பார்ப்பதில்லை. இதை அழகாகவும் நகைச்சுவையாகவும் ஓர் ஓசை ஒழுக்குடன் பாடியுள்ளார் கவிஞர் அழகர்சாமி.

"இதயம் குமுறும் நீக்ரோ கையில்
ஏந்தும் கறுப்புத் துப்பாக்கியால்
ஆஞ்சலா டேவிஸ் புகைக்கின்றாள் வெள்ளை
ஆதிக்க முகத்தில் உமிழ்கின்றாள்"[86]

84. சுந்தரபாண்டியன், பகல் கனவுகள், ப. 52
85. அழகர்சாமி, அலையும் நுரையும், ப. 20
86. இன்குலாப், வெள்ளை இருட்டு, ப. 34

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்று வெம்மையுறப் பாடும் கவிஞர் இன்குலாபின் கவிதை-களிலும் ஓசை ஒழுங்கு உண்டு. இந்தச் சந்தங்கள் வலிந்து வர-வழைக்கப்பட்டன. அல்ல. அதனால் அழகு தருகின்றன.

## 10.5. அழகியல் புதுமை :

மேற்கூறிய பல கருத்துக்களுடனும் புதுக்கவிதைகள் சொல்ல வந்த கருத்துக்களை உணர்ச்சிகரமாகவும் அதேபொழு-தில் அழகியல் குன்றாமலும், புதிய கற்பனை நயத்துடனும் உரைப்பதில் வெற்றியடைந்துள்ளன. இவற்றின் இருப்பிற்குக் கருத்துப் புதுமையைப் போலவே உரைத்தற் பாணியில் உள்ள சுவையும் ஒரு காரணம் ஆகும்.

விடுதலைக் காலப் போராட்டங்களும் தியாகங்களும் மகத்-தானவை. ஆனால் இத்தனைக்கும் பின்னால் இந்தியாவின் வளர்ச்சி முறையாக இல்லையென்பதைக் கவிஞர் ஜீவபாரதி புதிய நயத்துடன் விளக்குகிறார்.

> "முப்பத்திரண்டாண்டு
> முடிந்தபின்னாலும் சுதந்திரதேவி
> வளர்ந்தாளே தவிர
> வயதுக்கு வரவில்லை"[87]

என்பார் கவிஞர்.

இதேபோல், சுதந்திரம் வந்ததில் பலருக்குச் சுரண்டும் பண்பும் பாட்டாளிகளுக்குப் போராட்டப் பாதையுமே கிடைத்-ததைப் பற்றிப் பாடுகிறார் கவிஞர் கந்தர்வன்.

> "சுதந்திரம் வந்ததும்
> சிலர்தம் சட்டைகளில்
> பை தைக்கப் போனார்கள்
> பாட்டாளிகள் நாங்கள்
> பதாகை தைக்கப் போனோம்'[88]

87. ஜீவபாரதி, களத்தில் பிறந்த கவிதைகள், ப 40
88 கந்தர்வன்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



விடுதலை என்பது பலருக்குப் பொருளாதார விடியலாகப் பூக்க வில்லை என்பதையும் சுரண்டல் அமைப்புத் தொடருவது பற்றி-யும் விளக்கிவிடுகிறார்.

"மண்புழுவைக் காட்டிலும்
இந்த மண்ணை நேசித்தவன்"[89]

என்று பாரதியும்,

"அவன் இழுத்தது
செக்கல்ல
இந்த நாடு"[90]

என்று வ.உ.சியும் போற்றப்படும் வரிகளில் அவ்விருவரின் புகழ் முழுவதும் பொதிந்துள்ளது.

கவிஞர் தமிழன்பன் பாப்லோ நெருடாவைப் பற்றிப் பாடும் போது, இன்னும் அழகாகவும், ஆழமாகவும்

"விடிவது எப்படி என்று
விண்ணுக்குக் கற்றுக் கொடுத்தவன் நீ"[91]

என்கின்றார்.

"உன் காலடிபட்ட
கொரியா

லாவோஸ்
வியத்நாம்
வீடுகள் இரண்டுபட்டன
நிலா என்னாகுமோ"[92]

என்று அமெரிக்கத் தாயிடம் கேட்கின்றார் கவிஞர் தமிழ்நாடன். ஓர் அரசியல் செய்தியை, உலகளாவிய செய்தியை, அழகான கற்பனையில் உரைக்கின்றார் கவிஞர்.

89
90. சுந்தர்வன் - மீசைகள் - ப. 42
91. தமிழன்பன், தீவுகள் கரையேறுகின்றன, ப. 52
92. தமிழ்நாடன், அம்மா அம்மா, ப 18

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



மெக்காலேயின் கல்வித் திட்டத்திற்கும் ஊரிலுள்ள பழைய நுழைவாயில் வளைவு ஒன்று இடிக்கப்பட்டதற்கும் தொடர்பு எதுவும் இல்லை. ஆனால், இத்தகைய தொடர்பற்ற இரண்டையும் இணைத்துக் கற்பித்துப்பாடுகிறார் கவிஞர் விக்ரமாதித்யன்.

"இன்னும் மெக்காலே கல்வித்திட்டம்
இருந்து கொண்டு
எங்கள் தலைமுறைகளின் மனசுக்குள்
மரத்தூளைத் திணித்துவர
எங்கள் ஊர் 'ஆர்ச்' மட்டும்
என்ன பாவம் செய்தது?"[93]

என்று கேட்கின்றார். ஊரில் நடக்கும் ஒரு நிகழ்ச்சிச் சித்திரிப்போடு, கூற விரும்பும் கருத்து ஒன்றினையும் சமுதாயத்திற்குக் கூறி விடுகிறார் கவிஞர்.

## உத்தியும் கவித்துவமும்

இங்ஙனம் பல்வேறு வகை உத்திகளிலும், பல்வேறு புதுமைகளிலும் கவிதைகளில் பிரச்சினைச் சித்திரிப்புகள் இடம் பெறுகின்றன. எந்த உத்தியில் எத்தகைய கருத்துச் சிறப்பாகச் சொல்லப்படுகிறது என்று வரையறுக்க இயலாது. எனினும், மனித நேய உணர்வோடு, இயல்பாக, எளிமையாக எடுத்துரைக்கப்படும் கருத்துக்கள் நல்ல கவித்துவ அழகுடன் இணையும்போது கவிதை சிறக்கிறது. உத்திப் பெருக்கங்களால் கவிதைகள் அலுப்பூட்டுகின்றன என்று சில பாடல்களால் அறிய நேர்ந்தாலும் புதிய புதிய உத்திகளில் புதிய கருத்துக்கள் வழங்கப்படும்போது அது அலுப்பூட்டுவதில்லை. கவிஞர்கள் பலரும் இக்கருத்தினையே கொண்டுள்ளனர்.

"உள்ளத்தில் உண்மை ஒளியுண்டாயின்
வாக்கினில் ஒளியுண்டாம்"[94]

என்னும் வரிகளுக்கேற்ப, உண்மைகள் எளிமையாக எடுத்துரைக்கப்படும்போது அதில் ஓர் அழகியல் தானே உருவாகிறது.

93. விக்ரமாதித்யன், ஊருங்காலம், ப. 25
94. பாரதியார், பாரதியார் கவிதைகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



சிந்தையில் கருத்துக்கூர்ப்பும், பார்வையில் கூர்மையும், சொற்களில் வலிமையும் உடைய கவிஞனுக்கு இது எளிதில் சாத்தியமாகிறது. இதில் ஏதேனும் குறையும்போது கவிதை இறுகிப் போகிறது அல்லது நீர்த்துப் போகிறது. இயல்பாக இருப்பதில்லை.

"தேர்ந்தெடுத்த சொல்லாட்சியை மட்டுமே எளிய ஆடையாகப் பூண்டு, வேறுவித அணிகள் அலங்காரங்கள் என்ற வேஷங்கள் இல்லாமல் 'சத்தியப்' நடந்துவரும்போது, அதன் அழகு தீட்சண்ய சக்தியோடு சென்று மக்களை அரவணைக்கிறது"[95] என்று தணிகைச்செல்வன் கருதுகிறார். இந்தக் கூற்றில் உள்ளது போல ஒரு 'தீட்சண்யச் சக்தி' பெறும் கவிதைகள் எந்த உத்தியிலும் சிறப்புறுகின்றன.

புதுக்கவிதைகளில் பெரும்பாலானவை ஊக்கமூட்டும், உரமூட்டும், வேகமூட்டும் தன்மைகள் கொண்டனவாக உள்ளன என்றே அறிகிறோம். பல்வேறு வகை உத்திகளிலும் பிரச்சினைச் சித்திரிப்பிற்கே கவிஞர்கள் முதலிடம் தருகின்றனர். இறுக்கக் கவிதைகளை விட, உரத்தக் கவிதைகள் தான் பிரச்சினைகளைப் பற்றிப் பாடுவதில் வெற்றி காண்கின்றன. இறுக்கக் கவிதைகள் தமது அழகியலிலும் ஆழத்திலும் கவிதைக் கருத்தின் முக்கியத்துவத்தைத் தொலைத்து விடுகின்றன. சொல்லாட்சி அழகு மட்டுமே அங்கு முன்னிற்கிறது.

உணர்ச்சியூட்டுப், சிந்தனைத் தெளிவைத் தரும் மனிதாபிமானத்தையும் மனித உணர்வுகளையும் ஒருங்கே உணர வைக்கும். செயல்பாட்டிற்குத் தூண்டும் வெளிப்பாட்டு முறை எதுவும் மிகச் சிறந்த பயன்பாட்டு முறை என்பதை மறுக்க முடியாது. எனினும் கவிஞனின் கவித்துவமும் இதனுடன் துணை போகின்றது என்பதே உண்மை அந்தக் கவித்துவம் என்பது கவிஞர்களின் தனிச் சாத்தியப்பாடு ஆகும். கவிஞன் கலையுணர்வும், மொழி ஆளுமையும், உள்ள உந்துதலும் உணர்ச்சியும் அனைத்தும் இதில் இடம்பெறும்.

95. தணிகைச்செல்வன் - சிலப்பதிகாரம், முன்னுரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# மக்கள் தொகை - ஒரு கணக்கீடு

மக்கள் தொகை என்பது குறிப்பிட்ட நிலப், குறிப்பிட்ட ஆட்சி இவற்றிற்குட்பட்ட மக்களின் எண்ணிக்கையைக் குறிப்பதாகும். மக்கள் தொகை என்பதையே மக்கள் அடர்த்தியைக் கொண்டு கணிக்கும் வழக்கு வையத்துப் பொது வழக்காக இன்று கருதப்படுகிறது. ஆனால் மக்கள் தொகை பற்றிய ஓர் உணர்வும் கோட்பாடும் பண்டைய தமிழரிடத்து இருந்ததா என்பது ஆய்ந்து காண வேண்டிய ஒன்றாகும்.

பண்டைய காலம் முதற்கொண்டு நமக்குக் கிடைக்கின்ற தமிழகம் பற்றிய சான்றாதாரங்களைச் சீர்தூக்கிப் பார்த்தால் மக்கள் தொகை பற்றிய கணிப்பு 1870-இல் மயோபிரபு (Lord Mayo) தொடங்கும் வரை இருந்ததாகத் தெரியவில்லை. இந்தியா முழுமைக்குமான கணக்கெடுப்பு (காஷ்மீரமும் நேபாலும் தவிர்த்து) 1884-இல் ரிப்பன் பிரபுவால் முறையாகச் செய்யப்பட்டது.[1] அதுவரை முறையான கணக்கெடுப்பு இல்லை. இதற்கு முதற்-காரணம் வரலாறு என்பதே தமிழகத்தில் மன்னர் வரலாறாக இருந்திருக்கிறது. மக்கள் வரலாறாக இருந்ததில்லை. மன்னர்கள் மண்ணைப் பற்றிக் கவலைப்பட்ட அளவிற்கு மக்களைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அதனால்தான் நிலம் பற்றிய அளவை இருந்தது. ஆனால் அங்கு வாழ்ந்த மனிதர்கள் பற்றிய அளவை இருந்ததாகத் தெரியவில்லை.

---

1. Four Authors 'History of India' p. 454

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



தொடக்க காலம் முதலே - சொத்துரிமச் சமுதாய அமைப்புத் தோன்றிய காலம் முதலே மக்கள், குடிமக்கள் (அதாவது மேலோர் கீழோர்) என்ற பாகுபாடு வந்துவிட்டது. மேலோர் என்பார் அரசராய், அந்தணராய், வணிகராய் வாழ்ந்த வர்க்கத்தினராகவும், பிறர் 'கீழோர்' எனும் வர்க்கத்தில் உழுதும் தொழுதும்வாழ்ந்தவர்களாகவும் இருந்திருக்கின்றனர் இந்தப் பெரும்பிரிவினை முழுமையான மக்கள்தொகைக் கணிப்பிற்குத் தடையாக இருந்திருக்கலாம். பிற்காலத்தில் கிடைத்த கல்வெட்டுச் சான்றுகளுக்கு முன் நமக்குக் கிடைக்கும் சிறந்த சான்றாதாரங்கள் இலக்கியங்கள் மட்டுமே. இலக்கியங்கள் அனைத்தும் பொருளாதார ரீதியான மக்கட் சமுதாயத்தையே காட்டுகின்றன அரசன், கிழான், சேர்ப்பன், நாடன், ஊரன், எனும் உடைமைப் பெயர் கொண்டவர்களே அக இலக்கியத்தில் கூட தலைவன் தலைவியாக உள்ளனர். புற இலக்கியங்களிலும் இவர்களே ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும் அறிவும் கொண்டவர்களாகப் பாராட்டப் பெற்றனர். எளியோரை மதியாத இந்த மனப்பான்மையே முழுமையான கணக்கீடு இல்லாமற் செய்திருக்கலாம்.

அரசர்களுக்குரிய அன்றைய ஆட்சிப் பகுதி என்பது மக்கள் வாழும் நகரப்பகுதி, விளை நிலப்பகுதி, விளைவிப்போர் வாழும் புறநகர்ப்பகுதி எனும் மூன்று திறத்ததாக இருந்திருக்கிறது. போரும் கொடையும் சிறப்பிக்கப்பட்ட அந்தக் காலத்தில் போருக்குரிய பறந்தலை, களம் என்ற பகுதிகளிலும் விளைச்சல் இல்லாத சுரங்களிலும் இந்தக் குடிமக்கள் மிகுதியாக வாழ்ந்திருக்கின்றனர், விளைநிலங்கள் நகர மாந்தரின் உடைமைகளாகவும், குடிமக்களின் உழைப்பிற்குரிய களங்களாகவும் இருந்திருக்கின்றன. பெரும்பான்மையினரான உழைக்கும் கரங்களிடத்துக் களங்கள் இல்லை. சிறுபான்மையினரான உழைக்காத மக்கள் இடத்தே களங்களும் கருவிகளும் இருந்தன. இந்நிலையில் இந்த விளை நிலங்களே அளக்கவும்பட்டு, தானமாக வழங்கப்பட்டிருக்கின்றன. இதனால் பொதுவாகவே உடைமைகள் எல்லாம் மன்னர்கள், வணிகர்கள், அந்தணர்கள் இவர்களிடையே கை மாறியிருக்கின்றன. ஆனால் களங்களின் இழப்பால் வறுமை எய்தியவர்கள் கீழ்க்குடிமக்களே ஆவர் அதுமட்டுமின்றி எரியூட்டப் பெற்ற, கொள்ளையடிக்கப்பட்ட, பாழாக்கப்பெற்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



பகுதிகள் எல்லாம் குடிமக்கட் பரப்பாகவே இருந்திருக்கிறது. உழைப்போருக்கும் போரிலே உயிர் கொடுத்தவர்களுக்கும் மன்னர்கள் கொடுத்த கூலியே 'கொடை' என்ற பெயரிலும் 'வள்ளன்மை' என்ற வகையிலும் மன்னனின் புகழுக்குப் பறை சாற்றலாக அமைந்தது சமூக ஏற்றத்தாழ்வை, வர்க்கப் பிரிவினையை ஏற்றுக் கொள்ளும் சமுதாய அமைப்பில்தான் கொடை என்ற சொல் கொடிகட்டிப் பறக்க முடியும். இந் நிலையில் குடிமக்களின் பிரச்சினைகள் பரிசீலிக்கப்படும் எண்ணம் அரசிடம் இருந்திருக்க முடியாது. நாடி வந்தவர்களுக்குப் பரிசில் கொடுக்கும் மனப்பான்மைதான் பெரிதுபடுத்தப்பட்டு வந்தது. வறுமைக்கு விடைகொடுக்கும் தீர்வுச் சிந்தனை தேடப்பட வில்லை. இந்நிலையில் போர், பஞ்சம், சீற்றம் எதனாலும் பாதிக்கப்பட்டவர்கள் புறநகர் குடிமக்களே ஆவர்.

விளைநிலங்களில் உழைத்தவர்களின் உழைப்பு அதிகமான போது வணிகர்கள் செழித்தனர். செல்வாக்குப் பெற்றனர். உழைத்தவர்கள் எத்தனை பேர் செல்வம் துய்த்தவர்கள் எத்தனை பேர் என்பதற்குக் கணக்கு இல்லை. எனினும் உழைத்தோர் மிகுதியாகவும், செழித்தவர்கள் குறைவாகவும் இருந்ததனால் தான் வணிகர்குலம் செழிக்கவும், வணிகர்கள் போற்றிய சமயங்கள் தழைக்கவும் முடிந்திருக்கிறது.

மன்பதை, குடி என்ற சொற்கள் எல்லாம் ஒரே பொருள் தருபவை போல் தோன்றினும், அவை மதிப்புப் பற்றிய அளவு கோலில் பொருள் வேறுபாடு தருகின்றன. 'மன்பதை' என்பது உயர்குடிச் சமுதாயத்தைச் சித்திரிக்கிறது. 'நிலைத்த உயிர்கள்' என்ற பொருளே இவர்கள் பெருமைக்குரியவர்கள், குலநலம், வளஞ்சிறந்தவர்கள் என்ற குறிப்பைக் கொண்டு விளங்குகிறது. 'குடி' என்பது நிலைபேறு அற்ற, பெருமை குறைந்த தன்மையைக் கொண்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

> ''படைகுடி கூழ் அமைச்சு நட்புஅரண் ஆறும்
> உடையானாம் அரசருள் ஏறு''

என்றார் வள்ளுவரும். இதில் படையும் அரணும் பாதுகாப்புக்குப் பயன்பட்டது. அமைச்சும் நட்பும் அறிவுத்துறையில் பயன்பட்டது. கூழும் குடியும் தான் உயிர் வாழ்க்கைக்குத் தேவையான

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



உணவு வழங்கியது. நால்வகைப் படை, நால்வகை அரண் என்ற எண்ணிக்கை அளவு உண்டு. அமைச்சர்களும், நண்பர்களும், ஐம்பெருங்குழுவிலும், எண்பேராயத்திலும் தான் இருந்திருக்க வேண்டும். கூழ் என்பது பயிர் விளையும் நிலம். அது கூட அளந்திருக்கப்படும் வேலி, நிலம், தோட்டம், யோசனை காவதம் என்ற அளவைப் பெயர்கள் உள்ளன. ஆனால் 'குடி' மக்கள் எத்தனை பேர் என்ற அளவை இல்லை இங்ஙனம் குடிமக்கள், அவர்களின் உழைப்பு இவை புறக்கணிக்கப்பட்ட காலத்தில் நாட்டின் தரம் என்பது குறைவான மக்கள்தொகை கொண்ட நிறைந்த வளம் பொருந்திய நகரப் பகுதிகளால் நிர்ணயிக்கப்பட்டது. இலக்கியங்கள் போற்றும் பதியெழுவறியாப் புகாரும், மதுரையும் வஞ்சியும் மக்கள் விருப்பி உறைகின்ற இடங்களாகத் திகழ்ந்தன. இங்கு வாழ்ந்த மக்களும் சமுதாய மதிப்பும், சமய மதிப்பும், சாதி உயர்வும், செல்வச் செழிப்பும், பாதுகாப்பும் நிரம்பிய வாழ்க்கைச் சூழலில் இருந்தனர். நமக்குக் கிடைக்கும் இலக்கியச் சான்றுகளில் மேட்டுக் குடியில் ஒரு கண்ணகி ஒரு மாதவி, ஒரு கோவலன், ஒரு மணிமேகலை என்று சிறிய குடும்ப அமைப்பைக் காண்கிறோம். கண்ணகி மதுரையை எரிக்கும் போது,

"பார்ப்பார் அறவோர் பசு பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி என்றிவரை விட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க"

என்று சாபமிடுகிறாள். இத்தகைய அழிவுகளினால் துன்புற்றவர்கள் 'தீத்திறத்தார்' என்று உரைக்கப்பெற்ற தாழ்ந்த குடியினரே. கூடார் முனை கொள்ளை சாற்றி வீடறக் கவர்ந்த நிலைக்கு ஆளானவர்களும் இத்தாழ்ந்த குடியினரே. ஒரு புறம் செல்வம் கல்வி, சமூக மதிப்பு பாதுகாப்பு ஆகியவையும் சிறு குடும்ப அமைப்பு, மற்றொருபுறமும் இவற்றிற்கு மாறான பாதுகாப்பு, பொருளாதார, கல்வி, சமூக மதிப்பு இவை இல்லாத, உழைக்கின்ற மிகுதியான அளவு கொண்ட மக்கள். இந்த அமைப்பிலே நமக்குத் தெளிவாகப் புரிவது சிறுகுடும்ப அமைப்பும் வாழ்க்கைத் தரமும் தொடர்பு கொண்டிருக்கின்றன என்ற உண்மையாகும். உழைக்கும் பிரிவினரிடையே உழைக்கும் கரங்களை உருவாக்கும் வேகம் ஒரு தொழில் ஆயுத உற்பத்தியைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



போன்ற வேகத்தில் நடக்கும். ஆனால் உயர்ந்த சமுதாயமாகக் கருதப்பட்ட சமூகத்தில் வாரிசுக்கருத்தியல், குலப்பெருமை, குடும்ப நலம், கௌரவ வளர்ப்பு, பொருள் பாதுகாப்பு என்ற தன்மைகளைக் கருத்தில் கொண்டு உருவாக்கங்கள் குறைவாகவே இருக்கும்.

மக்கள் தொகை ஆராய்ச்சியில் இன்றியமையாத செய்தி இடமாற்றம் (migration) ஆகும். நமது தமிழகத்தில் அகவலசை தான் ஓரளவு இருந்திருக்கிறது. புறவலசை இல்லை. அந்தணர்களும், பிற நாட்டினரான மகத வினைஞரும் மராட்டக் கம்மரும் அவந்திக் சொல்லரும் யவனத்தச்சரும் விருப்பி அழைக்கப்பட்டனரேயன்றி, மிகுதியாக வரவில்லை.[2] அதனால் இடமாற்றங்கள் ம. தொ-யில் நிர்ணய சக்தியாய் இருந்திருக்க முடியாது. எனினும் போர், பஞ்சம், நோய் என்பவற்றின் தாக்குதலால் இடப் பெயர்வு நிகழ்ந்திருக்கும். பாண்டியன் காலத்தில் பன்னீராண்டு வற்கடத்தில் மன்னனே மக்களை நிலம் பெயர்ந்து சென்று பிழைத்துக் கொள்ளச் சொன்ன செய்தி உண்டு.[3]

பண்டைத் தமிழரிடத்து உயிரைப் பற்றிய கவலை இருக்கவில்லை. மண்ணாசையாலும், மானப்பிரச்சனை என்பதாலும் பல உயிர்கள் போரில் பலியாயின. போரில் துறந்த உயிர்களின் எண்ணிக்கை கணக்கில் இல்லை. 'தொகைநிலை' என்ற புறத் துறையில் 'ஒழிவின்று களத்தொழிதல்' சிறப்பிக்கப்படுகிறது. களத்திலே படுவது மன்னரும் மறவரும் என்றால் அவருடன் நெருப்பிலே படுகின்ற பெண்டிரும் இருந்தனர். 'தன்னை

2. Srinivasa Iyengar Tamil Studies p. 60
We have neither heard nor read any extensive inmigrations within historic times, of other races from outside the Tamil Country. Of course we leave out of consideration the handful of skilled artisan from Magadha, mechanics from Maratta, smiths from Avanti and carpenters from Yavana".

3. இறையனாரகப் பொருள் — உரையுடன் கழக வெளியீடு பக். 6

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



வேட்டல்' என்னும் துறையில் 'மன்னன் விசும்படைந்தமைக்-காக, வெம்முரணான் உயிர் வேட்ட' செய்தி கூறப்படுகிறது. உயிர்க்கொலை என்பது சாதாரண செய்தியாக நிகழ்ந்துள்ளது. மக்கட்தொகைக்கு மிக இன்றியமையாத பிறப்பு இறப்பு புள்ளி-யியல் (Vital Statistics) எதுவும் கிடைக்கப் பெறவில்லை.

பிறப்பு விகிதம் இறப்பு விகிதம் எச்ச விகிதம் என்ற எந்தக் கணக்கெடுப்பும் இல்லை. ''குழவி இறப்பினும் ஊண் தடி பிறப்பினும்'' (புறம் 7) என்ற பாடல் அரச பரம்பரை வீரத்தைப் பறை சாற்றவே ஒர் எடுத்துக்காட்டாக வருகிறது. தாய் சேய் மரணம் பற்றிச் செய்திகள இல்லை.

**மக்கட்பேறு**

மக்கட் செல்வம் பெருஞ் செல்வம் எனக்கருதப்பட்ட நிலை இருந்திருக்கிறது. நன் மக்கள் பேறு பற்றிய ஆவல் இருந்திருக்-கிறது. 'புதல்வரைப் பெறுதல்' என்றொரு அதிகாரமே வள்ளு-வத்தில் உண்டு. அதியமான் தன்மகனைக் காணவரும் காட்சியை ஔவையார்,

> ''செறுநர் நோக்கிய கண்கள் தன்
> சிறுவனை நோக்கியும் சிவப்பானாவே[4]''. (புறம் 100)

என்று வர்ணிக்கிறார். 'பெர்லிவு மங்கலம்' என்று ஒரு துறை பாடாண் திணையில் போற்றப்படுகிறது.

> ''வேல் வேந்தன் உள்மகிழ
> பாலன் பிறப்ப பலர் புகழ்ந்தன்று[5]''. (பு.பொ.வெ)

என்கிறது அத்துறை.

> ''மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறை
> இல்லைதாம் வாழும் நாளே (புறம் 3)

என்ற உணர்வு இருந்திருக்கிறது.

மக்கட் செல்வம் என்பது இறைக்கொடை என்ற நம்பிக்-யால், மக்கட்செல்வம் தேவை, தேவையில்லை என்ற உணர்வே இல்லாத, கணக்கீடு கூட இல்லாத நிலை இருந்திருக்கலாம். அது மட்டுமின்றி, வாழ்க்கைத்தரம் பற்றிய உணர்வு அனைத்துப்பகுதி மக்களுக்கும் உரியதாக அரசு கருதவில்லை. அதனால் தான் ஏற்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



தாழ்வுகள் நிறைந்திருந்தன. பாலுக்கு அழும் குழந்தைக்குப் பாலூட்ட இயலாத வறுமையைக் கொண்ட தாய் ஒருபுறம் காட்டப்படுகிறாள். இட்டும் தொட்டும் துழந்தும் மெய்பட விதிர்த்தும் உண்ணும் குழந்தை ஒரு புறம் காட்டப்படுகிறது. இந்த இரு வேறு நிலை இருந்திருக்கிறது. ஒவ்வொரு குடிமகனுக்கும் உணவு, உடை, உறையுள் என்னும் அடிப்படைத் தேவைகளேனும் கிடைக்க வேண்டும் என்ற கோட்பாடு இல்லை. பொருளியல் தொடர்பான ஒரு தெளிவான கண்ணோட்டம் இன்மையான் மக்கட் தொகைபற்றியும் சரியான கணக்கீடு இல்லை.

நமது வரலாறுகளும், இலங்கியங்களும் மன்னனைச் சார்ந்தவையாக இருப்பதால் மக்கள் பற்றிய செய்திகள் கிடைத்தில. அதில் பெண் மக்கள் பற்றிய செய்திகள் சிறிதும் இல்லை. மக்கள் என்பது இங்கு ஆண்மக்களைக் குறிக்கும் சொல்லாக இருந்தது. தந்தைக்கு வீடுபேறு கிடைக்க வழிவகுப்பவன் தனயனே என்ற நம்பிக்கை இருந்தது. அதனால்தான் ஆண் குழந்தை அற்றவர்களை இயலாதவர் பட்டியலில் சேர்த்தனர்.

"ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புலம் வாழ்நருக்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர் பெறாதீரும்"[6] (புறம்-9)

என்ற வரிகள் இவற்றை உணர்த்துகின்றன.

குழந்தை வேண்டும் என்ற உணர்வுடன், கருவதை கொடிய செயலாகக் கருதப்பட்டதும் அறிய முடிகிறது.

"ஆண்முலை அறுத்த அறனிலோர்க்கும்
மாணிழை மகளிர் கருச் சிதைத்தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கில் கழுவாயும் உளவென"[10]
(புறம்-34)

எனும் போது மகளிர் கருச் சிதைத்தல் குற்றம் என்ற உணர்வு வெளிப்படுகிறது அதனால் குழந்தைக் குறைப்புப் பற்றிய நோக்கம் இருந்திருக்காது. அதே பொழுதில் கணவன் மனைவி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



உடலுறவு என்பது குழந்தைப் பேற்றுக்கானது என்ற எண்ணம் இருந்திருக்கிறது. அதனால் ஒரு ஆடவனின் உறவு அவனது தேவைகளுக்கேற்றவாறு மனைவி, காமக்கிழத்தி, கணிகை இவர்களோடு பரந்துபட்டதாக இருந்தது.

"பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலையானே"

(தொல். அகத்திணை)

பரத்தையிற் பிரிவு மிகச் சாதாரண வழக்கில் இருந்தமையால் தலைவன் மனைவியிடத்து எப்போதெல்லாம் நீங்காதிருப்பான் என்ற இலக்கணமே வகுக்க முடிந்தது. தன் மனைவி குழந்தைப் பேற்றுக்கு உரிய பக்குவம் அடையத்தக்க காலங்களில் அவன் அவளிடத்தில் வந்து விடுவான் என்ற செய்தி தெரிகிறது. இங்ஙனம் மனைவியைப் பிள்ளைப் பேற்றுக்குரிய எந்திரமாகப் பயன்படுத்திய சூழல் இருந்திருக்கிறது. என் எனில், மனைவி என்பவளின் நிலை, பத்தினி என்ற தகுதியில் இயல்பான பெண்ணாக இருக்க இடங்கொடுக்கவில்லை. அனைத்துக் கட்டுப் பாடுகளிடையே பாலியல் உணர்வுகூட அவளுக்குக் குறிப்பிட்ட காலங்களுக்காக, பயன்பாடு கருதப்பட்ட எல்லைக்குட்பட்டதாக இருக்கிறது. இதில் பெண்ணின் பாதிப்பு, உணர்வு பற்றி எவரும் கவலைப்படவில்லை. பத்மினி என்ற பெயரால் அவள் பேசா-திருந்தாள். ஆனால் ஆடவனோ தனது தேவைகளுக்காக எங்கும் செல்லும் உரிமை பெற்றிருந்தான். உடலுறவு பற்றிய சரியான கண்ணோட்டம் இன்மையால் விலைமகளிரிடம் செல்லும் வழக்கு பொதுவாக இருந்தது. உடலுறவு பாவம் என்பது பெண்களுக்-கான போதனையாக இருந்தது. குலமகளுக்கோ விலைமகளுக்கோ எத்தனை குழந்தை என்பது செய்தியில் வரவில்லை. ஆனால் இலக்கியம் என்பது உணர்வு ரீதியான ஆக்கம். அதில் நமக்குத் தேவையான கணக்கெடுப்புகளைத் தேடினால் கிடைக்கும் வாய்ப்பு இன்மையை ஒரு குறையாகவும் கொள்ள இயலாது.

மக்கள் தொகை பற்றிய, அறிவியல் ரீதியான ஆய்வுகள் இன்றைய நாட்களில் நடைபெறுகின்றன. ம.தொ. கணக்கீடு என்பது தேவையா என்ற வினா எழலாம். கணக்கீடு என்பது பிரச்சனைகள் எழுந்தபின் தோன்ற வேண்டியது அன்று. பிரச்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



சனைகள் எழாதவண்ணம் காக்கும் கருவியும் இதுவே ஆகும். முன்னைய நாட்களில் தமிழரிடையே ம தொ பற்றிய கோட்பாடு இல்லை ம. தொ. என்பது எவ்விடத்தும் என்றைக்கேனும் ஒரு பிரச்சினையாகவே இருந்திருக்கும். ஏனெனில் அடர்த்திக் குறைவு, கூடுதல் இரண்டுமே ஒவ்வொரு வகையில் பிரச்சினையே ஆகும். மக்கள் அடர்த்தி என்பது பொருளாதார வளம் நிறைந்த பகுதியில் மிகுதியாக இருக்கும் அல்லது வளம் இல்லாத நிலையிலும் குறைவான தரத்திலே மக்கள் வாழப்பழகி விடும்போது மிகுதியாக இருக்கும். மக்கள் விரும்பி உறைவதால் கூடலாம் அல்லது வேறு வழியின்றி உறைவதால் கூடலாம்.

'அக்காலத் தமிழகத்தில் ம. தொ. அடர்த்தி குறைவாக இருந்திருக்க முடியாது. ஏனெனில் நாம் ஏராளமான புலவர்கள் படைகள், சுறுசுறுப்பான அங்காடிகள், அலுவலர்கள், படை ஆகியவற்றைப் பற்றி அறிகிறோம். மேலும் செங்குட்டுவன் காலத்தில் ஒற்றர்கள் மட்டும் ஆயிரம் பேர் இருந்தனர் என்று காண்கிறபோது ம. தொ. நிறைந்த நகரங்கள் பற்றி அறிகிறோம். தொடர்ந்து ஏற்பட்ட போர்கள் பொருளாதாரத்தில் எதிர் மறையான விளைவுகளை ஏற்படுத்தினாலும் அதன் அமைப்பின் எளிமை, வளைந்து செல்லக்கூடிய தன்மை ஆகியவை இந்த அளவிற்குப் போரின் அழிவுகளிலிருந்து காப்பாற்றியது.''[4] என்கின்றார் ந. க. மங்கள முருகேசன். நகர்புறத்து நாகரிகக் காட்சிகளும், அரசியல் நடவடிக்கைகளும், அங்குள்ள விழாக் காலக் கூட்டம் என்பதும் நிலையான ம. தொ. ஆகாது. மேலும் இந்த நகரும் ம. தொ. கொண்ட (floating population) நகர்ப்புறத்துச் சிறப்பு மட்டுமே முழுமையான ம.தொ. ஆகாது. போரினால் பாதிக்கப்படாத வளைந்து செல்லத்தக்க பொருளாதார நிலை என்பது மேட்டுக்குடியினர் எதனாலும் பாதிக்கப்படாத நிலையையும், கீழோரின் அழிவு பற்றிய அக்கறை இன்மையையும் எடுத்துக் காட்டுகிறது. மொத்தத்தில் முழுமையான மக்களைப் பற்றிய அக்கறை செலுத்த இயலாத அரசியல், சமூக நிலை முழுமையான ம. தொ கணக்கெடுப்பு பற்றியும் கவலைப்படவில்லை.

4. ந க மங்கள முருகேசன் 'தமிழர் ஆட்சி முறை' ப. 75

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



ம. தொ. கணக்கெடுப்பு என்பது முதன்முதலில் பிரான்ஸ் நாட்டில் தோன்றியது. ம.தொ. பற்றி ஆய்வு ரீதியான ஒரு நிலை 'ம. தொ. யின் தத்துவம்' (The Principle of Population) என்ற பெயரில் ராபர்ட்மால்த்யூஸ் வெளியிட்டார் ம. தொ. கணக்கெடுப்பு என்பது ஓர் அரசின் அலுவல் மட்டுமன்று. நாட்டின் சமூக, பொருளாதார, சுகாதார, மருத்துவத் துறை-களுடனும் தொடர்புடைய அடிப்படைத் தேவையாகும். இது மக்களைப் பற்றிய சிந்தனையும் அக்கறையும் உடைய அரசு தன் கடமைகளைச் செயலாற்ற இவ்வாய்வு முதல் தேவையாகும்.

ம. தொ. கோட்பாடு எளியோர்க்கு உரிய வாழ்வு தரும் சிந்தனையில் தோன்றும். மக்களின் தரம் பற்றிய அக்கறையில் பிறக்கும். ம. தொ. கட்டுப்பாடற்றுப் பெருகும் போது அதனைத் தவிர்க்க வழியும் வாய்ப்பும் பற்றிச் சிந்திக்கும். ம. தொ. கோட்-பாடு பொருளியல் அடிப்படையிலும், சமூகவியல் அடிப்படை-யிலும் பிறக்கும். ஆனால் ம. தொ. பெருக்கம் என்பது இடத்-திற்கு இடம் மக்களின் மனநிலை, அரசின் நிலை, சமூக அமைப்பு இவற்றைப் பொறுத்து வெவ்வேறு தாக்கம் தரலாம்.

மால்த்யூஸ், உணவு கணித விகிதத்தில் பெருகும். மனிதன் ஜியோமதி விகிதத்தில் பெருகுவான் என்றார். நிலம் எல்லைக் குட்பட்டது வளம் குறையும் தன்மை வாய்ந்தது. இந்நிலையில் எந்தநாட்டிலும், இயற்கையான உடல் ரீதியான குழந்தைப் பேற்று வாய்பபுக் குறைவாக இருந்தால் ஒழிய ம.தொ. பெருகவே செய்யும். இந்த வகையில் அகிலமெங்கும் ம.தொ. பெருக்கம் என்பது தவிர்க்க முடியாதது. எனினும் நாட்டின், சமுதாயத்தின், குடும்பத்தின் தனி மனிதனின் வாழ்க்கைத்தரம், தேவைப்பூர்த்தி, இவற்றை ஒரு சமுதாயம் கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது. ம.தொ. பெருக்கம் ஒரு எல்லைக்கு உட்படுத்தப்பட வேண்டியது அடிப்படை ஆகிறது. போர், பஞ்சம் நோய் இவை மனிதப் பெருக்கத்தை அழிக்கும் சக்திகள். ஆனால் இவை விரும்-பத்தக்க சக்திகள் அல்ல. பகுத்தறிவு படைத்த மனிதன் இந்த அழிவுகளிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளவும் வேண்டும், அதே பொழுதில் சிறந்த வாழ்விற்கேற்ற ம.தொ. கணக்கீடு கொண்டவனாகவும் இருக்க வேண்டும். திருமணமின்மை, காலந் தாழ்ந்த திருமணம் இவை ம.தொ. பெருக்கத்தைக் கட்டுப்படுத்-தும். ஆனால், இவை சிறந்தவழிகள் என்று கூறமுடியாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



முந்தைய நாளில் ம. தொ. கோட்பாடு இல்லாமைக்குக் காரணம் ஊழில் நம்பிக்கை. சமத்துவ சமுதாய அமைப்பின்மை, பொதுமக்கள் பற்றிய கருத்து வெளிப்பாடு இன்மை, வாழ்க்கைத் தரத்திற்கும் ம. தொகைக்குட் தொடர்பு உள்ளது என்ற எண்ணம் இன்மை, ம. தொகைக்கும் பெண்களின் நிலைக்கும் உள்ள தொடர்பு பற்றிய அக்கறை இன்மை, பெண்களின் பாதிப்புகள் பற்றிய எண்ணமே இன்மை, கடைக்குலத்து மனித உயிர் பற்றிய மதிப்பு (values) இன்மை, இவையனைத்தும் காரணமாக இருக்கலாம். அது மட்டுமின்றிப் பிறப்பு இறப்பு பற்றிய மதிப்பீடுகளே (values) சரியான வகையில் இல்லை

நமது சமுதாயம் சாதி அடிப்படையிலான அமைப்பு உடையது. அதனால் நமது ம. தொ. கணிப்பும் இதன்படியே அமைய முடியும். தமிழசத்துக்கு முதன்முறையாக நடந்த கணக்கெடுப்பில் இருந்த சாதிவாரியான அளவையும், பண்டைய நாட்களில் இந்த மக்கள் எந்த நிலப்பிரிவு மக்களாகக் கணிக்கப் பட்டனர் என்பதையும் தொடர்புபடுத்தும் பட்டியல் தருகிறார் வரலாற்றாசிரியர் எம். ஸ்ரீநிவாச ஐயங்கார். பண்டைய நிலப் பாகுபாடுகளில் ஐந்து நிலத்து மக்களும் உழைப்பாளர் குடிமக்களாகவே காட்டப்படுகின்றனர். காடுறை உலகம், தீம்புனல் உலகம், மைவரை உலகம், பெருமணல் உலகம் எனும் உலகங்கள் தொழில்ரீதியான சாதியைக் கொண்டிருந்தன. தொல்காப்பியரும் 'திணைநிலைப் பெயர்கள்' என்று அகத்திணைக்கு உரிய கருப் பொருள்களில் இவர்களையே குறிப்பிடுகிறார். எம். ஸ்ரீநிவாசா ஐயங்கார் காட்டும் பட்டியலின்படி,

| | | | | |
|---|---|---|---|---|
| அந்தணர் | — | 3% | | |
| வேளாளர் | — | 15% | | மருதம் |
| வலையர் | — | 3% | | நெய்தல் |
| பள்ளர் | — | 5% | } — மள்ளர் | மருதம் |
| ஷானார் | — | 5% | | |
| இடையர் | — | 5% | | முல்லை |

9. Srinivasa Iyengar — Tamil Studies p. 58.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



| | | | |
|---|---|---|---|
| மறவர் | — 2% | மறவர் | |
| அகம்படியார் | — 2% | | |
| பறையர் | — 14% | எயினர் | |
| கம்மாளர் | — 3% | | |
| கைக்கோளர் | — 2% | | பாலை |
| வள்ளியர் | — 17% | குறும்பர் | |
| கள்ளர் | — 3% | | |
| அம்பலகாரர் | — 2% | | |
| குறவர் | — 2% | | குறிஞ்சி |

மேலே கூறப்பட்ட ஐந்து நிலம் சார்ந்த இன்றைய சாதிப் பிரிவினரே 80%. மக்களாக இன்று உள்ளனர்.

1871-இல் தமிழகத்தில் மக்கள் அடர்த்தி 317-ஆகவும் 1981-இல் 372-ஆகவும் இருக்கிறது. ஏறக்குறைய 10ஆண்டு-களுக்கு ஒருமுறை கணக்கெடுப்பு நடக்கிறது. நமச்குக் கிடைத்த கணக்குப்படி, தமிழகத்து ம.தொ.

| | | |
|---|---|---|
| 1891 இல் | 1,66,47,000 | 1.66 |
| 1971-இல் | 4,11,99,198 | 4.1 |
| 1981-இல் | 4,84,08,077 | 4.8 |

ஏறக்குறைய ஐந்து கோடி மக்கள் வாழும் தமிழகத்தில் இன்றும் ம.தொ. பெருக்கம் ஒரு பிரச்சனையாக உள்ளது.

கணக்கெடுப்புகள் இல்லாத காலம் ஒரு அறியாமைக் காலம் என்றால் கணக்கெடுப்புகள் இருந்தும் தீர்வுகள் இல்லாத இன்றைய நிலையும் துயரமானதே. மக்களுக்கு விழிப்புணர்வும், சமுதாயச் சிந்தனையுமே ஒரு கல்வியாகப் புகட்டப்பட வேண்-டும். ம.தொ.ப் பெருக்கம் என்பது ஒரு தனித்த பிரச்சனை அன்று. பெருக்கமே ஒரு துயரமாக இருப்பதாலேயே சலுகைகள் பற்றிய சிந்தனையும் தோன்றுகிறது. ம.தொ. பெருகியும் சமுதாயநிலை தாழ்ந்தும் இருக்கும் மக்கள் அடித்தளத்து மக்-களாக இருக்கின்றனர். அவர்களும் சமநிலை அடையும்வரை பாகுபாடுகள் தவிர்க்க இயலாதவை. சமயரீதியாக இப்போது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



ம.தொ.ப் பெருக்கம் குறிப்பிட்ட சமயத்தவரால் சமய நம்பிக்கை காரணமாகத் தடைப்படுத்தப்படாமை ஒரு பிரச்சனையாக இன்று எழுந்துள்ளது. எனினும் இது, ஒரு சிறு வாதமே. சமய மொழி சாதிய நம்பிக்கைகளைக் கடந்து சமுதாய உணர்வு, நாட்டுணர்வு, சொந்த நலன், வாழ்க்கை வசதி, இவை காரண மாகவே மக்கள் குடும்ப எண்ணிக்கையை நிர்ணயிக்கின்றனர்

இறுதியாக நமது சிந்தனைக்கு எட்டுகின்ற அளவு முன்னும் பின்னும் சென்று நோக்குகையில் ஒரு சமனற்ற வளர்ச்சித் தன்மை கொண்ட சமூக அமைப்பின் பிரதிபலிப்பாகவே ம.தொ. பற்றி சிந்தனையும் இருக்கிறது எனலாம். ம. தொ என்பது ஒரு பிரச்சினையாக அமைவதும் பிரச்சினைகளின் மையமாக அமை-வதும், மக்களின் உழைப்பாற்றல், சிந்தனை, சமூக அமைப்பு இவற்றைப் பொறுத்தும் இருக்கும். தமிழகத்து மட்டுமின்றி உலக அளவிலே மக்கள் தொகைக் கணக்கீடு என்ற கோட்பாடு மிகப் பிற்காலத்தில் தோன்றியதுதான் என்பதும் நாம் நினைவிற் கொள்ளலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

## பயன்படுத்திய நூல்கள்


1. தி.வை. சதாசிவ பண்டாரத்தார். 'பிற்காலச் சோழர் வரலாறு'—மூன்றாம்பகுதி
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1971.

2. இரா. நாகசாமி, காசிநாதன், கு. தாமோதரன் க. ஹரிஹரன் கல்வெட்டியல்' தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறை

3. M. Srinivasa Iyengar. "Tamil Studies" Asian Educational Service, New Delhi. 1987

4. K K Dewett 'Modern Economic Theory' S. Chand & Co. Ram Nagar. New Delhi

5. ந.க. மங்கள முருகேசன் தமிழர் ஆட்சி முறை சங்க காலம்

6. கோ. கேசவன் 'மண்ணும் மனித உறவுகளும்' சென்னை புக் ஹவுஸ்

7. 'கலைக் களஞ்சியம்' தமிழ் வளர்ச்சிக் கழகம் தொகுதி எட்டு 1961.

8. Manorama - Year Book 1981 Kothayam Kozhikodu.

9. C. Vira Raghavan 'States of Union' - Tamil Nadu Publication Division. Govt of India Oct. 1973

10. 'Tamil Lexicon' Vol. V Part I-1982.

11. Four Authors 'History of India'

12. திருக்குறள்

13. புறப்பொருள் வெண்பாமாலை

14. சங்க இலக்கியங்கள்

15. இறையனார் களவியலுரை கழக வெளியீடு

16. சிலப்பதிகாரம்.


குறிப்பு : இக்கட்டுரையில் ம.தொ. என்ற சுருக்கக் குறிப்பு 'மக்கள் தொகை'யைக் குறிக்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 14 | 34 | தொழிற்காக | தொழிற்சங்க |
| 19 | 29 | என்கிறார் | என்கிறாள் |
| 21 | 16 | பெண்ணைச்சாட்சி | மௌனசாட்சி |
| 28 | 17 | மனத்தக்க | மனைத்தக்க |
| 33 | 6 | பின் | பிறன் |
| 34 | 30 | இம்மகளிடம் | இம்மகளிரிடம் |
| 35 | 6 | அளது | அளறு |
| 36 | 10 | தெளிந்தரிய | தெளிந்தறிய |
| 38 | 32 | இவ்வினைச் சொற்கள் | இவ்விளிச்சொற்கள் |
| 39 | 13 | ஆறு நூல்கள் | ஆறுநூல்கள் அடிக்குறிப்பில் உள்ள ஆறுநூல்கள் |
| 42 | 9 | உணவுப்பிரச்சனை | உணர்வுப்பிரச்சனை |
| 49 | 16 | பாவித்திட | பாலித்திட |
| 52 | 10 | தன்னலமே | தன்மையே |
| 58 | 5 | மதிப்பேன் | பதிப்பேன் |
| 58 | 20 | வானோடும் | வாளோடும் |
| 69 | 10 | ஆண்டாள் | ஆண்டான் |
| 70 | 25 | அளவு குறைவு | அளவுமிகுதி குறைவு |
| 97 | 4 | பேறும் | பேனும் |
| 110 | 12 | ஏன் | — |
| 129 | 15 | காலரேகை | கால்ரேகை |
| 133 | 18 | கேள்விக்கு | வேள்விக்கு |
| 142 | 26 | இவளுக்கும் | இருப்பதோ |
| 155 | 13 | வலைப்பட | வலைப்பட்ட |
| 155 | 20 | காசியப்பன் | காசியபன் |
| 157 | 1 | யாவும் | — |
| 186 | 4 | கிறந்த | சிறந்த |
| 208 | 20 | பத்மினி | பத்தினி |
| 212 | 6 | வள்ளியர் | வன்னியர் |

8383

पुस्तकालय

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"Forwarded free of Cost,
and with the Compliments of
the Department of Education,
Goverment of India, Ne—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar